1973 ஆகஸ்ட் 10]

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த இரண்டு மசோதாக்களை இங்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த மசோதாக்களின் காப்பி எங்களுக்குக் கிடைக்கவில்லை. சமீபத்தில் விதிகளைத் திருத்துகின்றபோது அறிமுகம் செய்யப்படும்போதே எங்களுக்கு காப்பி கொடுக்க வேண்டுமென்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அது எப்போது அமுலுக்கு வர இருக்கிறது?

Two Bills have been introduced now, but in the Rules Committee it has been decided that whenever Bills are introduced, copies of the Bills would be circulated. Even to oppose the Bills, it will be helpful to us if we are supplied with copies of the Bills We would like to know whether copies of the Bills would be supplied to us and in future whenever Bills are introduced copies would be circulated to us even at the time of introduction itself.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் திருத்தம் இன்னும் இந்த அவையின் ஒப்புதலுக்கு வைக்கப்படவில்லை. அதன் பிறகுதான் அமுலுக்கு வரும்.

(6) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம்	2 மணி 10 நிமிடம்
காங்கிரஸ் (அமைப்பு)	37 நிமிடம்
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	30 நிமிடம்
ஃபார்வார்டு பிளாக்	20 நிமிடம்
முஸ்லீம் லீக்	35 நிமிடம்

காங்கிரஸ் கட்சி ஏற்கனவே அதிகமான நேரம் எடுத்துக் கொண்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு கட்சி	2 நிமிடம்
சுதந்திராக் கட்சி	30 நிமிடம்
தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சி	10 நிமிடம்
தமிழரசுக் கழகம்	10 நிமிடம்
சுயேச்சை	10 நிமிடம்
நியமன உறுப்பினர்	10 நிமிடம்

இந்த நேரத்தையும் விட கூடுதலாக அவரவர்களுக்குக் கொடுக்க இருக்கிறேன். ஆகவே, இருக்கின்ற நேரத்தை அனுசரித்து உறுப்பினர்கள் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாயார் : பிரதான எதிர்க்கட்சியாகிய எங்களுக்கு 37 நிமிஷங்கள் இருக்கிறது என்று சொன்னார்கள். இது மிகவும் குறைவாக இருக்கிறது. குறைந்தது ஒரு மணி நேரமாவது தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : தலைவர் அவர்களே, நேற்று என்னுடைய பேச்சின் தொடர்ச்சியாக இன்று என்னுடைய பேச்சைத் துவங்குகிறேன்.

நேற்று பேசிய சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் "முதலமைச்சர் அவர்கள் பிறந்த நாள் விழாவின்போது ஏழை எளியவர்கள் நன்மை அடைகிறார்கள், ஆண்டுக்கு ஒரு முறை வருகின்ற பிறந்த நாள் மாதத்திற்கு ஒரு முறை வந்தால் கூட நலமாக இருக்கும். நாட்டில் எல்லோரும் நல்ல நிலைமைக்கு வந்து விடுவார்கள்' என்றார். வேண்டாம். இப்போது ஆண்டுக்கு ஒரு முறை வருகிறபோதே ஆபத்தாக இருக்கிறது. ரசித்து போடாத முறையில் அதிகார பூர்வமான நிலை இல்லாமல் பகல் கொள்ளை அடிக்கும் நிலைமையாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றியாக வேண்டும். பிறந்த நாள் விழாவை அவர்கள் கொண்டாடிக் கொள்ளட்டும். இதற்கு முன்னால் இருந்த முதலமைச்சர்கள் பிறந்த நாள் விழா கொண்டாடியது கோயில் பிரசாதத்தோடு முடிந்து விட்டது. இன்றைய முதலமைச்சரின் பிறந்த நாள் விழா என்றால் அதிகாரிகள் பயப்படுகிறார்கள், இருக்கின்ற வியாபாரிகள் பயப்படுகிறார்கள், நாட்டில் இருக்கும் மக்கள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு முதலமைச்சர் பிறந்த நாள் விழா வந்தால் எந்த ஆபத்தில் கொண்டு போய்விடுமோ, எதைக் கேட்பார்களோ என்று பயப்படும் நிலைமை வருகிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றியாக வேண்டும்.

1973 ஆகஸ்டு 10] [திரு. சி. வே. வேலப்பன்]

இதையெல்லாம் எடுத்துச் சொன்னால் சினிமா மாயையில் வந்திருக்கிற கட்சி என்று பொதுவாகச் சொல்லிவிடுவார்கள். அப்படியே வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும் முதலமைச்சர் அவர்கள் சினிமாக்காரர் இல்லை யென்று சொல்ல முடியுமா? அவர்கள் கதை எழுதியிருக்கிறார்கள், நாடகத்தில் நடித்திருக்கிறார்கள். கலைத் துறையில் வல்லுநர் என்ற பெய செல்லாம் பெற்றிருக்கிறார்கள். அதிலே தன்னுடைய குடும்பத்தையே இணைத்திருக்கிறார்கள். நிராவிட முன்னேற்றக் கழகமே சினிமா மாயைதான். இல்லையென்று சொல்ல முடியாது. ஆகவே, நாங்கள் எடுத்துச் சொல்லுகின்ற வாதங்களுக்கு குறுக்கே அப்படிச் சொல்வதில் பயன் இல்லை. நாட்டில் இருக்கின்ற உண்மை நிலையைப் பார்க்க வேண்டும்.

இது ஒட்டுக் காங்கிரஸ் என்று கூறுகிறார்கள். யார் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியாக வேண்டும். நான் படித்ததாக நினைவு, 'இனிமேல் நாட்டை ஆள நான் அல்லது காமராஜர்தான் வரவேண்டும், மற்றவர்கள் வரமுடியாது' என்று சொன்னதாக ஞாபகம். அதைப் பற்றி எதிர்காலம் பதில் சொல்லும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

உர விநியோகத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். உர விநியோகப் பொறுப்பைக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயரால் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள். கட்சிக்காரர்கள் ஏஜண்டுகள் என்ற நிலையில் சங்கங்கள் என்ற பெயரில் வாங்கி வீட்டில் கொண்டு போய் வைத்துக் கொண்டு வியாபாரம் செய்கிறார்கள். எப்படிப்பட்ட நிலையில் ஊழல் இருக்கிறது. சட்டப்படி சரியாக இருக்கிறது என்று பதில் சொல்லிவிடலாம். ஆனால் நியாயப்படி நாம் அதைப் பார்க்கவேண்டும்.

விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். எவ்வளவோ கடன்கள் கொடுக்கிறார்கள். அவை வசூலிக்கப்படுகிறதா என்றால் இல்லை. நிலுவை இருக்கிறது. அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஸ்டே வாங்கி ஒன்று இரண்டு வருடங்கள் என்றுகின்றன.

தணி வாங்கக் கூட விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கப்பட இருக்கிறது என்று அறிவித்தால் அதையும் வாங்குவார்கள். கொடுத்துவிட்டு 30-ம் தேதிக்குள் அதைத் திருப்பிச் செலுத்தவேண்டும். இல்லையென்றால் வேஷ்டி சீலை இவற்றை அவிழ்த்துக்கொண்டு விடுவோம் என்று சொல்வார்கள்.

[திரு. சி. வே. வேலப்பன்] [1973 ஆகஸ்டு 10

விவசாயிகளுக்கு பம்ப் செட்ஸ் வாங்கக் கடன் கொடுக்கிறார்கள். 30-ம் தேதி பணம் கட்டவில்லை என்றால் அதை எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள்.

மாடு வாங்கக் கடன் கொடுக்கிறார்கள். அதற்குரிய பணத்தை 30-ம் தேதி கட்டவில்லை என்று சொன்னால் மாட்டை அவிழ்த்துக்கொண்டு போய் விடுவார்கள்.

இப்படிப்பட்ட அவல நிலை வேண்டியதில்லை. அப்படிப்பட்ட நிலையில் கடன் கொடுப்பதையே நிறுத்திவிடலாம். மற்றத் துறைகளில் தொழில் செய்கிறவர்களுக்குக் கொடுக்கப்படும் கடன்களை எப்படி வசூலித்து வருகிறோம்? என் அந்தச் சட்டத்தைத் திருத்த முடியாது? மக்களுக்காக வாழ்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுக்குக் கொடுக்கப் படும் கடன்களை வசூலிப்பதை நிறுத்தியாகவேண்டும். இல்லை என்றால் வசூலிக்கிற முறையை மாற்றியாகவேண்டும். ஏதாவது சொன்னால், குறிப் பிட்டுச் சொல்லமுடியுமா என்று கேட்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தில் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏழை எளியவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுகின்றன என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற பொறுப்பான தலைவர்கள் என்று சொல்லக்கூடியவர்களுக்கு அந்தப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருப்பது தெரியுமா இல்லையா? அதை முதல் அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வேலப்பன் இப்படிப்பட்ட குற்றச்சாட்டை சட்டமன்றத்தில் கூறிவிட்டார், ஆகவே அப்படிப்பட்ட குற்றச்சாட்டு சரியா இல்லையா என்பதை அவர்கள் தெரிந்துகொண்டு பதில் சொன்னால் நன்றாக இருக்கும். இல்லாவிட்டால் அதுகுறித்து மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அந்தப் பொறுப்பான தலைவர்களின் பெயரால், அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் பெயரால் பட்டா நிலங்கள் வழங்கப்பட் டிருக்கின்றன.

நாங்கள் மிக மிகத் தாழ்த்தப்பட்டவர்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். யார் தாழ்த்தப்பட்டவர்கள், யார் ஏழைகள் என்று அதற்கு ஒரு இலக்கணம் இல்லாமல் இருக்கிறது. ஏர் கண்டிஷன்ட் வீடுகளில் இருப்பவர்கள் எல்லாம் ஏழைகள் என்றும், அவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும், மற்ற வர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்கள் என இப்படித்தான் இனி எதிர்காலத்தில் பிரிக்கவேண்டிய அவல நிலை வந்து விடுமோ என்ற பயம்தான் ஏற்பட்டிருக் கிறது.

1973 ஆகஸ்டு 10] [திரு. சி. வே. வேலப்பன்]

ஊழல் இல்லே என்று சொல்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் பரிசு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை எப்படி வாங்குகிறார்கள் என்பது வேறு விஷயம். எப்படி வசூல் செய்கிறார்கள், எப்படி வழங்கப்படுகிறது என்பது வேறு விஷயம். கார் பரிசு கொடுக்கப்பட்டது. எனது அருமை நண்பர் வீரபாண்டி தொகுதி உறுப்பினர் ஆறுமுகம் அவர்களுக்கும் கார் பரிசு கொடுக்கப்பட்டது. இப்போதும் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத்தான் இருக்கிறார். ஆனால் அவருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்ட காரை அவர் விற்றுவிட்டார். பிறகு அவர் எப்படித் தொகுதியில் வேலே செய்கிறார் என்றால் அவர்கள் இப்போது புதிய ஒரு பதவியின் பொறுப்பை ஏற்றிருக்கிறார். மத்திய கூட்டுறவு வங்கியின் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அந்தக் காரைத்தான் அதன் கூட்டங்களுக்குச் செல்ல உபயோகப்படுத்துகிறார்கள். சட்ட மன்றத்திற்கு வருவதும் அந்தக் காரில்தான். ஊருக்குச் செல்வதும் அந்தக் காரில்தான். பிள்ளேகள் பள்ளிக் கூடத்திற்குச் செல்வதும் அந்தக் காரில்தான். தொகுதியில் செல்வதற்கும் அந்தக் கார்தான். இவையெல்லாம் ஊழல் இல்லேயா என்று கேட்கிறேன். சட்டப்படி பார்த்தால் வங்கி வேலேகளுக்கு மட்டும்தான் அதை உபயோகப் படுத்தலாம். ஆனால் அதை 24 மணி நேரமும் வைத்துக்கொள்ளலாம், அதில் வீட்டிலிருப்பவர்கள் ஊருக்குச் செல்லலாம், அதில் பிள்ளேகளேப் பள்ளிக் கூடத்திற்குக் கொண்டு போய் விடலாம், கூட்டிக் கொண்டுவரலாம், எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்றால், சில நேரங்களில் டிரைவரை இறக்கி விட்டு நான் கூடப் போவேன் என்றால் இவற்றை எப்படி நீரூபிக்க முடியும்? இவை நியாயமா என்று பார்க்கவேண்டும். இப்படிப்பட்டவை எல்லாம் நடந்தும் கூட ஊழல் இல்லே என்று சொல்கிறார்கள்.

கூட்டுறவு மத்திய வங்கிக்குக் கொடுக்கப்படுகிற தஸ்தாவேஜ்களே பிரின்ட் செய்யவேண்டுமென்றால் கூட்டுறவு அச்சகத்திற்குத்தான் அவற்றை பிரின்ட் செய்யக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு நியதி இருக்கிறது. ஆனால் அப்படிக் கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லே. எங்கள் மாவட்டத்தில் அப்படி இல்லே. அங்குள்ள கூட்டுறவு மத்திய வங்கிக்குக் கொடுக்கப்படுகிற தஸ்தாவேஜ்களே அச்சடித்துக் கொடுப்பதற்கு தனியார்களுக்கு. அதுவும் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறவர்களுக்கு, முக்கிய பொறுப்பில், பதவியில் இருப்பவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, மற்ற தனிப்பட்டவர் களின் அச்சகங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லே. இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளேச் சொல்லும்போது அது ஊழல் இல்லே என்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படவில்லே என்று மறுக்கமுடியாது. அப்படிக் கொடுக்கவில்லே யென்றே கொடுப்பதில்லே என்றே மறுக்கமுடியுமா? பின்னர் எப்படி

[திரு. சி. வே. வேலப்பன்] [1973 ஆகஸ்டு 10

வாழ்க்கை வசதி ஏற்பட்டது? என்னை எடுத்துக் கொள்ளலாம், என் அருமை நண்பர் ஆறுமுகத்தை எடுத்துக்கொள்ளலாம். இல்லை, முதல் அமைச்சர் அவர்களை எடுத்துக் கொள்ளலாம். ஒரு பத்து ஆண்டுக் கணக்குகளைப் பார்க்கலாம். 1967-ல் இருந்தது எவ்வளவு, அதாவது அப்போதிருந்த சொத்து எவ்வளவு, இன்றையதினம் எவ்வளவு சொத்து இருக்கிறது என்று, 1967-க்கு முன்பு ஒரு ஐந்தாண்டுகளுக்கு முன்பு இருந்த சொத்து எவ்வளவு என்று அதையெல்லாம் கூட கணக்குப் பார்க்கவேண்டும். எதோ பதில் சொல்லிவிட்டோம் என்ற நிலை இல்லாது . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:

• • • •

திரு. சி. வே. வேலப்பன்:

• • • •

இந்த நிலையில் எல்லா அமைச்சர்களின் மீதும் குற்றச்சாட்டு இருக்கிறது.

THIRU V. KRISHNAMURTHY:

* * * * *

திரு. சி. வே. வேலப்பன்: கட்சி மாறுவதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். மொடக்குறிச்சி உறுப்பினர் ஈரோடு சின்னசாமி அவர்கள் எவ்வளவு கட்சிகள் மாறினார்கள் என்று கேட்டால் அவர்களுக்கே கூடத் தெரியாது. ஆக, இந்த நிலையில் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை முழுமனதோடு ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஆறுமுகம்: ஒரு தன்னிலை விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் வேலப்பன் அவர்கள் சொல்கிறபோது சேலம் கூட்டுறவு மத்திய வங்கிக்காக அச்சடிக்கக் கூடியவை எல்லாம் தனிப்பட்டவர்களுக்கு, எங்கள் கட்சிக்காரர்களுக்குக் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். நான் அந்தப் பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு . . . .

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்ற விதிகளில் தன்னிலை விளக்கம் என்று சொல்லும்போது வேலப்பன் அவர்கள் பேசும்போது நண்பர் ஆறுமுகத்தைப்பற்றி தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டு . . . .

---

* மாண்புமிகு போவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1973 ஆகஸ்டு 10]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எட்மண்ட் அவர்கள் வெளியிலிருந்து இப்போதுதான் வந்தார்கள். தெரியாமல் பேசுவது முறையல்ல. வீரபாண்டி ஆறுமுகம் என்று பலமுறை பெயரைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவசரப்பட்டுப் பேசுவது நல்லதல்ல.

THIRU G. R. EDMUND : Sir, I withdraw it.

திரு. எஸ். ஆறுமுகம் : நான் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு கூட்டுறவு அச்சகம், தனியார் அச்சகங்கள் பலவற்றிற்கு டென்டர்கள் கோரப்பட்டு யார் குறைந்த டென்டர் கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அச்சடிக்கக் கொடுக்கப்பட்டு, ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு மேல் சேலம் கூட்டுறவு மத்திய வங்கிக்கு லாபம் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனிதமான முறைகேடான காரியங்களிலும் மத்திய கூட்டுறவு வங்கி ஈடுபடவில்லை என்பதை நிரூபிக்க நான் தயாராயிருக்கிறேன்.

திரு. சி. வே. வேலப்பன் : நான் கேட்பது தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா ?

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, நான் சார்ந்து இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் முழுக்க முழுக்க எதிர்த்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றைக்கு நான்காவது நாளாக இந்தத் தீர்மானங்களின் மீது பல்வேறு கருத்துக்களை எதிர்க்கட்சித் தரப்பிலிருக்கும் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற கருத்துக்கள் எத்தன்மை வாய்ந்தவை என்று நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். முதலில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை சுதந்திராக் கட்சித் தலைவர் அவர்கள் அவை முன் வைத்து கருத்துக்களைச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தங்கமணி அவர்கள் கண்டனத் தீர்மானத்தை இங்கே அவை முன் வைத்து பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். இப்படி ஆளும் கட்சி மீது தாக்கி எறியப்படுகின்ற குற்றச்சாட்டுகளை நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் அவர்களுக்கு விளக்க வேண்டிய அவசியத்தில் இல்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சி. ஆறுமுகம்] [1973 ஆகஸ்டு 10

ஊழல், ஊழல் என்ற குரலை ஒட்டு மொத்தமாக ஆளும் கட்சித் தரப்பு மீது தாக்கிச் சொல்வது நல்லதல்ல. எங்கே ஊழல், எப்படி ஊழல், எப்போது ஊழல், யார் செய்தார்கள், யார் வாங்கினார்கள், எங்கே தவறு நடந்து இருக்கிறது என்பதை உள்ளபடியே அந்த நண்பர்கள் தெரிவிக்கவில்லை. ஆளும் காங்கிரஸ் கட்சி சார்பாகப் பேசிய கோவை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் 'ஊழல் என்கிற சேற்றை உடம்பெல்லாம் பூசிக் கொண்டிருப்பதாக' ஒரு கருத்தை வெளியிட்டார்கள். நான் உள்ள படியே அவர்கள் மீது மிகுந்த மரியாதை வைத்திருப்பவன். அவர் எப்போதும் மரியாதையோடு பேசுகிற நண்பர் தான். ஆனால் அவர் ஒன்றை மறந்து விட்டார், ஊழல் என்ற சேற்றை மத்திய அரசாங்கம் பூசிக்கொண்டிருக்கிறது, அதைத் துடைக்க என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்பதை நான் வருத்தத் தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊழல், ஊழல் என்று பேசுகிறவர்கள்— இந்தப் பக்கத்திலிருந்து, தலைவர்களே, இந்த 1½ அடி மேஜையைத் தாண்டிச் சென்றதற்குப் பிறகு பேசுகிறார்களே, அதற்கு முன்னாலே அந்த ஊழல் எங்கே மறைந்து போயிற்று? எங்கே அந்த ஞானஸ்தலம் சொல்லப் பட்டது? எங்களுக்கு எதிர்த் தரப்பில் இருப்பதால் ஊழல் என்று சொல் கிறீர்களா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஏதோ அமைச்சர்கள் இருக்கும் இடம், ஆளும் கட்சிக்காரர்கள் இருக்கும் இடம் பரிசுத்தமானது என்ற அளவில் உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப்பகுதியில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்கள் அத்தனை பேரும் ஏதோ கறைப்படிந்த கரத்தோடு இருக்கிறார்கள் என்ற பாணியில் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொள் கிறேன். நாங்கள் ஊழல் மிகுந்தவர்களாக இருந்தால், எத்தத் தண்டனை யையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்பதை எங்கள் கட்சியின் சார்பாகத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: நம்முடைய ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவர் நான் சொல்லியவற்றிற்கு வருத்தப்படவேண்டியதில்லை. நான் அவரைச் சொல்லவில்லை. நான் குறிப்பிட்டது எங்களிடத்திலிருந்து பிரிந்து சென்ற நண்பர்களைப் பார்த்துச் சொன்னேன். 6 மாதத்திற்கு முன்பு இங்கே உட்கார்ந்து கொண்டு இருந்தவர்கள், இன்று ஊழல், ஊழல் என்று சொல்கி றார்களே அவர்களைப் பார்த்துச் சொன்னேன். நீங்கள் அதை எடுத்துக் கொள்ளவேண்டாம். நீங்களெல்லாம் 6 மாதகாலத்திற்கு முன்பு குற்றச் சாட்டை எடுத்துச்சொன்னபோது, அதை மறுத்தவர்கள், இன்று 10 பேர்

1973 ஆகஸ்டு 10] [திரு. சி. ஆறுமுகம்]

அந்தப் பக்கம் சென்று விட்ட காரணத்தால் இங்கே ஊழல் என்று சொல்கிறீர்களே, இடையே அந்த ஞானஸ்தலம் எங்கே யார் கொடுத்தது? நம்முடைய ஸ்தாபன காங்கிரஸ் பற்றி நான் பேச விரும்பவில்லை. எங்கே ஊழல்? எடுத்துச் சொல்லுங்கள். ரார் குடும்பத்தின் மீது சொத்து வாங்கியிருக்கிறோம், யார் மனைவி மீது சொத்து வாங்கியிருக்கிறோம், யார் மாமியார் மீது சொத்து வாங்கியிருக்கிறோம், யார் மைத்துனர் மீது சொத்து வாங்கியிருக்கிறோம், நிரூபித்துக்காட்டுங்கள். நான் ராசினமா செய்கிறேன் என்று சொல்லவில்லை, தலைவரவர்களே, உங்கள் தீர்ப்புக்குக் கட்டுப்படுகிறேன்—எந்த தண்டனையையும் ஆளும் கட்சி சார்பாக நான் ஏற்றுக்கொள்கிறேன். இவ்வளவையும் நான் தெரிவிப்பதற்குக் காரணம், ஒட்டுமொத்தமாக கோணிப் பையில் கல்லைக் கட்டி ஊழல், ஊழல் என்று அடிப்பது பொதுவாழ்வில் உள்ள எல்லோரையும் ஊழலில் சம்பந்தப்படுத்திவிட்டால், நாட்டில் பிறகு யாரும் பொதுத் தொண்டுக்கு வரமாட்டார்கள். இதிலே போய்ச் சேர்ந்தால் அந்தப் பெயர் வரும் என்று சொல்லி ஒதுங்கியிருந்து விடுவார்கள். அப்படி ஒதுங்கி விட்டால் என்ன ஆகும்? பெர்னாட்ஷா அவர்கள் சொல்லியது போல் கடைசி மனிதன்தான் பொது வாழ்வுக்கு வந்து விடுவான். பொதுவாழ்வில் உள்ளவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சொல்கிறபோது ஆதாரத்தோடு சொல்லுங்கள். நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். அதற்குப் பரிகாரத்தைச் சொல்லுங்கள். லஞ்சம் வாங்கினோம் என்று உட்கார்ந்து கொண்டே சொன்னால் அது பிரயோசனப்படாது. நான் நிரும்பித் நிரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். எங்கே உடம்பிலே சேற்றைப் பூசிக்கொண்டிருக்கிறோம். வெள்ளை சட்டை அல்லவா போட்டுக்கொண்டிருக்கிறோம். இந்திய நாட்டை ஆண்டு கொண்டிருக்கிற பிரதமர் இந்திரா காந்தி மகனுக்கு கார் லைசென்சு கொடுத்த இருக்கிறது. அது ஊழல் இல்லையா? அவற்றைப் பற்றி ஏன் பேசக்கூடாதா? இந்த நிலைமைகள் இருக்கிறபோது எங்களைப் பார்த்து ஊழல் ஊழல் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

அடுத்ததாகப் பெரியகுப்பம் நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னீர்கள். தலைவரவர்களே, உங்கள் அனுமதியோடு நான் சிலவற்றைச் எடுத்துக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆலைக்குப்பம், தன்சிங் (குறுக்கீடு) . . . . . சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு அச்சடித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது . . . .

திரு முனு ஆதி: சபைத்தலைவர் அனுமதி வாங்கினீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்குக் காட்டிவிட்டார். அதிலிருந்து சில விஷயங்களைத்தான் படிக்கப்போகிறார்.

[1973 ஆகஸ்டு 10

திரு. சி. ஆறுமுகம்: நான் சுருக்கமாக முடித்து விடுகிறேன். இதைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அச்சடித்துக் கொடுத்து இருக்கிறார்கள். அதிலே எனக்கு ஒன்று கிடைத்தது. லஞ்சம் என்று சொன்னாலே நான் அந்தப் பக்கம் வராதவன். நான் யாருடனும் காரில் கூட ஏறிச்செல்ல விரும்பாதவன். டாக்சி வைத்துக்கொண்டு தான் போவேன். என்னுடைய பணத்தில் தான் சாப்பிடுவேன். யாரிடத்திலிருந்தும் டீ கூட வாங்கிக் குடிக்காதவன். நான், உள்ளபடியே இப்படி எழுதியிருப்பதற்காக வருத்தப்படுகிறேன். இப்படிச் சொன்னால் நான் முன்னாலே சொல்லியது போல் நல்லவர்கள் அரசியலுக்கு வரமாட்டார்கள். பெரியகுப்பம் சம்பவம், ஆலிக்குப்பம், அங்காளக்குப்பம், கானத்துக்குப்பம் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த பிரச்னை. இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்தவர்களுக்கோ, எம்.எல்.ஏ.க்களுக்கோ எந்த விதமான தொடர்பும் இல்லை என்று திட்டவட்டமாக மறுக்கத் தயாராக இருக்கிறோம். மே மாதம் 11-ம் தேதி நடந்தது இது எல்லாம். நாங்கள் எல்லாம் திண்டுக்கல் தொகுதியில் தேர்தல் பணி செய்வதற்காகச் சென்றிருந்தோம். திரும்பி வந்தது மே 21-ம் தேதி. அவர்கள் குறிப்பிட்டு இருக்கும் பிரச்னைகள் 12, 13, 14 தேதிகளில் நடைபெற்றவை. நாங்கள் அப்போது திண்டுக்கல்லிலே இருக்கிறோம். அதிலே என்ன குறிப்பிட்டு இருக்கிறார்கள் "ஆலிக்குப்பத்தில் உள்ளவர்களை 11-ம் தேதி பெரியகுப்பத்தில் உள்ளவர்கள் விசைப்படகில் சென்று பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு தாக்கி 30 பேர் செங்கல்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்." ரிக்கார்டு இருக்கிறது பார்த்துக்கொள்ளலாம். நான் பத்திரிக்கைக்காரர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நல்ல பத்திரிக்கை தர்மம் நாட்டில் நீடிக்க வேண்டும் என்று, கலிவரவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலே எத்தக் கட்சி ஆளுகிறது என்பது அல்ல, நாட்டிலே நீதி, தர்மம் தழைக்க வேண்டும்.

பெரிய குப்பத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். அதற்கு அருகில் இருக்கும் ஆலிக்குப்பம் எங்கே போய்விட்டது? அங்கே நடந்தவற்றைப் பார்க்கக் கூடாதா? 31-ம் தேதி ராத்திரி பூராவும் பெரியகுப்பத்தில் நடந்தவற்றைப் பார்வையிட்டவர்கள் செங்கல்பட்டு மருத்துவ மனையில் இருப்பவர்களை எதிர்க் கட்சித் தலைவர்கள் போய்ப் பார்த்ததாகச் சொன்னார்கள். பெரியகுப்பத்திற்குச் சென்று பார்த்தவர்கள் ஆலிக்குப்பத்திற்குச் சென்று இருக்கக்கூடாதா? அந்தப் பிரச்னை முழுக்க முழுக்க மீனவர்களுடைய பிரச்னை. நாங்கள் அறிஞர் அண்ணா அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள், லஞ்சம் வாங்குவதற்காகக் கட்சி வளர்க்கவில்லை, கலைஞர் அவர்களும் லஞ்சம் வாங்குங்கள் என்று சொல்லவில்லை. நான் ஒருவரிடத்தில் போய் 50 ரூபாய் கை நீட்டி

1973 ஆகஸ்டு 10] *[திரு. சி. ஆறுமுகம்]*

வாங்கவேண்டிய அவசியத்தில் இல்லே. நான் எந்த அதிகாரியிடத்திலும் போய் ஒரு 5 நிமிடம் கூட நிற்கமாட்டேன். நான் ஒரு பஸ் அதிபர் என்பதைப் பெருமையாகவே சொல்லிக்கொள்வேன். ஒருவரிடத்தில் பிச்சைக்காசு வாங்கிப் பிழைக்கவேண்டிய நிலே எனக்கு இல்லே. அந்த நிலே எதிர்க் கட்சியில் இருப்பவர்களுக்கு இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு ஒட்டு மொத்தமாகச் சொல்வது சரியல்ல. பெரியகுப்பத்தில் விசாரணே வேண்டு மென்று கேட்டார்கள். விசாரணே வைக்கப்பட்டது. ஏன் விசாரணேக்குப் பயந்து கொண்டு பின்வாங்கி ஓடி வரவேண்டும்? முழுக்க முழுக்க சிந்திக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள், யார் எது சொன்னலும், பழித்தாலும் எங்களேப் பதில் சொல்ல அனுமதிக்காமல் எதிர்க்கட்சிக்காரர்களேயே இப்படிக் குறை கூறலாம் என்று முழுக்க முழுக்க அனுமதித்து விடுகிறார்கள். அதன் விளேவுகள்தான் இன்றைக்கு ஊழல், ஊழல் என்று பேசுவது, மற்றவர்களேத் தாக்குவது என்பதெல்லாம் நடக்கிறது. நாங்கள் அவைகளேத் தாங்கிக் கொள்வதற்குக் காரணம் எங்களுடைய பண்பட்ட மனம் தான்.

கொள்கையில்லாத கொள்கை என்று சொல்வதற்கே இடமில்லே. கொள் கையைப்பற்றி ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். இவர்களுக்குத் தான் கொள்கையே இல்லே. இவர்கள் அடுத்து வரும் தேர்தலில் எதைச் சொல்லி வோட்டு கேட்பது என்பது தான் எதிர்க்கட்சியினருக்கு சங்கடம். இவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு சொன்னதையெல்லாம் செய்து விட்டார்களே, நாம் எதை 1976-ம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் முன்வைத்து மக்களிடம் வோட்டு கேட்பது என்று திகைக்கிறார்கள். நிலச்சொந்தக்காரர் களா, 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கர் நிலம், பஸ் அதிபர்களா, தேசியமயம் இப்படி எல்லாவித நன்மைகளேயும் நாங்கள் செய்துவிட்டோம். இப்பொழுது பொது உடைமைத் தத்துவத்தை நாங்கள் கம்யூனிஸ்டு என்று சொல்லாமலே எங்களுடைய இயக்கத்தைத் துவக்கியதற்குப் பின்னால் நாங்கள் ஆளும் கட்சியாக வந்தபிறகு பொது உடைமைத் தத்துவத்தின்கீழ் அவர்கள் எதை யெல்லாம் செய்யவேண்டும் என்று நினேத்தார்களோ அதையெல்லாம் செய்து விட்டோம். அது தான் அவர்களுக்கு எங்கள் மீது கோபம். 1976-ல் எதைச் சொல்லி வோட் கேட்பது, எந்தக் கொள்கையை செயல்படுத்துவது, இந்தப் பாவிகள் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார்களே என்று அவர்களுக்கு சங்கடமாக இருக்கிறது. அவர்களுக்குத் தான் கொள்கை இல்லே. எனக்குப் பேசுவதற்கு நேரம் அளித்த தலேவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

---

* மாண்புமிகு போவைத் தலேவரின் ஆணேக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வடிவேல் தெரிவித்த கருத்திற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உரை இந்த மன்றத்திலிருக்கிற எல்லாத் தரப்பினர்களுக்கும் இருப்பது நல்லது. இந்த மன்றத்தில் விவாதம் நடைபெறுகிற நேரத்தில் எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சி செய்திருக்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை. அப்படிச் செய்வது அவர்களுடைய இன்றியமையாத கடமையாகும். தவறுகளைச் சுட்டிக்காட்டும் நேரத்தில் தனிப்பட்ட முறையில் யாரையும் தாக்கிப் பேசக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுவது முறையாகாது. தனிப்பட்டவர்களைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் ஆதாரத்தோடு சொல்லவேண்டும். வேக் அலிகேஷன்ஸ், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை இந்த அவையிலே கூறுவது முறையற்றது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையிலே இரண்டு, மூன்று நாட்களாக அப்படிப்பட்ட ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை, நிகழ்ச்சி குறிப்புகளைப் பார்த்து, எவற்றைக் குறிப்பேட்டிலிருந்து நீக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் நீக்கிவிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது வரையிலும்—நேற்று நடந்த நிகழ்ச்சியைப் பற்றி இல்லை—இன்று நடைபெற்ற நிகழ்ச்சியிலே இதிலே ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளாக இருப்பதைப் பத்திரிகைகள் வெளியிட்வேண்டாம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. இ. எஸ். நியாகாசாசன்.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, request is quite different from expunction order. நீங்கள் எக்ஸ்பஞ்ச் பண்ணுவதாகச் சொல்வதோடு கூட, அவைகளைப் பத்திரிகைகளிலே போடக்கூடாது என்று உத்தரவு போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போடக் கூடாது என்று உத்தரவு தான்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: எந்தப் பகுதிகள் நீக்கப்படும் என்று வரையறுத்தவிடுவது நல்லது. பொதுவாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் என்றால் தெளிவாக இராது.

1973 ஆகஸ்டு 10]

* * * *

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வேலப்பன் முதல் அமைச்சர் அவர்கள் பற்றிக் கூறிய குற்றச்சாட்டுகளையும், முதல் அமைச்சர் திரு. வேலப்பன் அவர்களைப் பற்றிக் கூறிய குற்றச்சாட்டுகளையும் பார்த்து நாளைக்கு எதை வெளியிடலாம், எதை வெளியிடக்கூடாது என்று கூறுகிறவரையிலும் பத்திரிகைகள் இதை வெளியிடக்கூடாது என்று சொன்னேன். திரு. இ. எஸ். நியாகராசன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I make one submission? So far as expunction of words is concerned, we are governed by Rule 235, which says 'If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent, or unparliamentary or undignified, or grossly irregular he may, in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House, and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order.'

Sir, so far as this Rule is concerned, it gives wide powers for the Hon. Speaker to order expunction of words. But what are the words which are expunged should be made known to the Press so that the freedom of Press is not curtailed. The freedom of the Press should not be curtailed. For any reason if any portion is published by the Press, they should not be hauled up for contempt or breach of privilege by the House. Therefore, I request that the words which have been expunged should be made known to the Press so that such difficulties may not crop up.

THIRU K. T. K. THANGAMANI: Following what Mr. Ponnappa Nadar has said, I would like to say this. In the same Rule 235, it has been mentioned that words which have been used in the debate which are defamatory or in decent or unparliamentary or undignified should be expunged. நாங்கள் இன்றைக்கு உத்தரவு போடும்பொழுது இன்றைக்கு நடந்ததுபற்றி சொல்வதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இதற்கு முன்னால் நடந்தவற்றிலெல்லாம் ஏதாவது

* மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[Thiru K. T. K. Thangamani] [1973 ஆகஸ்டு 10

ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் இருக்குமானால் அவற்றையும் எக்ஸ்பஞ்ச் செய்வதாகச் சொல்வது சொம்ப தவறான நிலைமையில் கொண்டு போய்விடும். அம்மாதிரி உத்தரவு போடுவது ஏற்கனவே சொன்னதை எக்ஸ்பஞ்ச் செய்வ தாகச் சொல்வது என்ற நிலை இருக்குமானால், ஏற்கனவே இதையெல்லாம் வெளியிட்டவர்கள் Will be hauled up for contempt of the House என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். இன்றைக்கு நடந்த நிகழ்ச்சிகளில் எவை எவை எக்ஸ்பஞ்ச் செய்யப்படும் என்று சொன்னால் அதில் ஆட்சேபனை இல்லை. ஆகவே, நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்று நடந்த நிகழ்ச்சியில் விவாதங்களில் உள்ளதை, ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளாக உள்ளதை மட்டும் நீக்கவேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொன்னால், அது ஒருதலைப்பட்ச நிகழ்ச்சியாக இருக்கும் என்ற எண்ணத்தில் தான், நடந்த நிகழ்ச்சிகளில் அபபடி ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் இருக்குமானால் அவை அனைத்தையும் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவதாகச் சொன்னேன். நான் அப்படிப் பட்ட உத்தரவு போடுவதற்கு முன்னால் இவைகளை வெளியிட்டிருந்தால், இந்த உத்தரவு அவர்களைக் கட்டுப்படுத்தாது. ஒரு முறையான நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகத் தான் நான் இந்த முறையில் சொன்னேன். அதில் சந்தேகமான தவறும் இல்லை. ஆனால், உறுப்பினர் நேற்று நடந்த நிகழ்ச்சி களைப் பற்றி நீக்க வேண்டியதில்லை என்று சொன்னால், இப்பொழுது இன்று நடந்திருக்கிற நிகழ்ச்சிகளில் உள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மட்டும் நீக்கிவிடுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆகவே, இன்றைய நிகழ்ச்சிகளில் திரு. வேலப்பன் அவர்கள் முதல் அமைச்சர் அவர்கள் பற்றிக் கூறிய ஆதார மற்ற குற்றச்சாட்டுகளும், முதல் அமைச்சர் அவர்கள் வேலப்பன் அவர்கள் பற்றிக் கூறிய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளும் அவை நடவடிக்கைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுகின்றன, அவைகளைப் பத்திரிகைகள் வெளியிட வேண்டாம் என்று உத்தரவு பிறப்பிக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் இங்கே நடந்த நிகழ்ச்சியின்போது அவர்களின் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டை எழுதிக் கட்சித் தரப்பினர்களை வைத்துக்கொண்டு, இருக்கிற ரிகார்டுகளை வைத்துக் கொண்டு தாங்கள் விசாரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தாங்கள் அந்தப் பகுதியை நீக்கிவிட்டால் அந்த விசாரணைக்கு உகந்ததாக இருக்குமா? ஆகவே, அதையும் பரிசீலனை செய்யவேண்டும்.

1973 ஆகஸ்டு 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை நீங்களும் பரிசிலிக்கலாம்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, தாங்கள் கொடுத்த தீர்ப்பு இதற்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் கட்டுப்படுத்துமா அல்லது இன்று நடந்த நிகழ்ச்சிகளை மட்டும் கட்டுப்படுத்துமா (சில குரல்கள்—ஏற்கெனவே சொல்லியாகிவிட்டதே) என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு முன்னால் நடந்தவைகளைக் கட்டுப்படுத்தாது. இன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை மட்டும்தான் கட்டுப்படுத்தும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.

திரு. இ. எஸ். தியாகராசன்: பேரவைத் தலைவரவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து, தமிழரசுக் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம், திண்டுக்கல் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் தோல்வியடைந்து விட்டதால் இந்த அமைச்சரவை இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இது ஒன்றும் புதிய நிகழ்ச்சி அல்ல. இது போன்ற நிகழ்ச்சிகள் இதற்கு முன்னால் பல நடைபெற்றிருக்கின்றன. மதிப்புக்குரிய இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் அருப்புக் கோட்டை பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. அப்போது அவர்கள் இராஜினாமா செய்யவில்லை. அதற்குப் பிறகு திருச்செங்கோட்டிலே நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் சுப்பராயன் அவர்களைத் தோற்கடித்து திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. அப்போதும் காங்கிரஸ் அமைச்சரவை இராஜினாமா செய்யவில்லை. அதற்குப் பின்னால் திருவண்ணாமலை சட்டமன்றத் தேர்தலில் இன்றைய அமைச்சர் ப. உ. ச. அவர்கள் வெற்றி பெற்றார்கள். அப்போதும் காங்கிரஸ் ஆட்சி இராஜினாமா செய்யவில்லை. அந்த தேர்தலில் காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். அப்படி இருக்கும்போது இன்று மட்டும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்வது எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டிலே பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு பல முன்னேற்றமான காரியங்களை செய்திருக்கிறது. மேலும் செய்து கொண்டு வருகின்றது. அதிலும் குறிப்பாக டாக்டர் கலைஞர் அவர்கள்

[திரு. இ. எஸ். தியாகராசன்] [1973 ஆகஸ்டு 10

மூதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னால், பிற்பட்ட சமுதாயம் வளர்ச்சி பெறவேண்டும் என்பதற்காக ஒரு தனி கமிஷன் நியமித்து, அந்தக் கமிஷன் தந்த எல்லா சிபாரிசுகளையும் நிறைவேற்றுவதற்காக ஒரு தனி அமைச்சரையே நியமித்திருக்கிறார்கள். அதனால் பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்த அமைச்சரவையைப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே எடுத்துக்கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சியிலே தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் நல்ல பலன் அடைந்து வருகிறார்கள். இந்த ஆட்சி வந்தபிறகுதான் தமிழ்நாட்டிலே நல்லதொரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுக்கு தமிழ்நாடு என்ற பெயரைப் பெற்றுத் தந்ததே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இன்றையதினம் சோஷலிசத்தைப் பேசுகின்ற மாநிலங்களில் எல்லாம் நடைமுறைப்படுத்தப்படாத முற்போக்கு எண்ணங்களை எல்லாம் செயல்படுத்திக்கொண்டிருக்கும் ஒரே மாநிலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்யும் இந்த மாநிலத்தில்தான். முற்போக்குத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்ற ஒரே அமைச்சரவை இந்த திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை தான் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய முற்போக்குத் திட்டங்களிலே ஒன்று பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கியது. பஸகளைத் தேசியமயமாக்கியது மட்டுமல்ல; அந்தத் தொழிலிலே தொழிலாளர்களுக்கும் பங்கு ஏற்படுத்தித் தந்து தமிழ்நாட்டு மக்களின் பாராட்டுதலைப் பெற்றது மட்டுமல்லாமல் இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களின் பாராட்டையும் பெற்றுத்தந்தது இந்த அமைச்சரவைதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அதுமட்டுமல்ல, தமிழகத்தின் தலைநகரான சென்னையிலே முன்பு எல்லாம் குடிசைப்பகுதிகளில் தொற்றுநோய் பரவிக்கொண்டிருந்தது. அதைப் போக்குவதற்காக இன்றையதினம் குடிசைமாற்று வாரியத்தை ஏற்படுத்தி, அத்தகைய குடிசைப் பகுதிகளை எல்லாம் மாற்றி அமைத்து, அந்த மக்களுக்கு சுகாதாரமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது இந்தக் கழக அரசுதான் என்பதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. குடிநீர் வசதி இல்லாமல் இருந்த பல நூற்றுக்கணக்கான நகரங்களுக்கும் கிராமங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் குடிநீர் வாரியத்தை அமைத்து, அதன் மூலம் குடிநீர் வசதியை ஏற்படுத்திக்

1973 ஆகஸ்டு 10] [திரு. இ. எஸ். தியாகராசன்]

கொண்டிருப்பதற்காகவும்—கோடிக்கணக்கான ரூபாய்களை இத்திட்டத்திற்காகச் செலவு செய்கிறார்கள்—என்னுடைய பாராட்டை இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு எல்லாம்—வீடு இல்லாதவர்களுக்கு வீட்டுமனை, நிலம் இல்லாதவர்களுக்கு நிலப் பட்டா என்று வழங்கிக்கொண்டிருக்கிறது இந்த அரசு. அதனால் அந்த மக்கள் எல்லாம் இந்த அரசை மனதார வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப் போலவே கண்ணொளி வழங்கும் திட்டம், தொழுநோய்க்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்கும் திட்டம், சைக்கிள் ரிக்சா வழங்கும் திட்டம் இப்படிப்பட்ட பல நல்ல திட்டங்களை இப்போது முதலமைச்சராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு செய்துகொண்டிருக்கிறது இந்த அரசு. அதற்காக நான் இந்த கிராமிட மூன்னேற்றக் கழக அரசைப் பாராட்டுகிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய சமுதாயமான நெசவாளர் சமுதாயம் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த நெசவாளர்களுக்கு உதவி செய்வதற்காக நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு வெளியே உள்ளவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடன் உதவி செய்தார்கள். இதுபோன்ற ஒரு காரியத்தை வேறு எந்த அரசும் இதுவரையில் செய்தது கிடையாது. நெசவாளர்களின் கஷ்ட நஷ்டங்களில் இதுவரையிலே வேறு எந்த அரசும் பங்கு கொண்டது கிடையாது.

இப்படிப் பல்வேறு வகைகளிலே இந்த கிராமிட மூன்னேற்றக் கழக அரசு ஏழை எளிய மக்களுக்கு, தொழிலாளர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, நெசவாளர்களுக்கு எல்லாம் நல்ல பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வழி வகுத்திருக்கிறது என்று சொல்லி, அப்படிப்பட்ட இந்த அரசு நீண்டநாள் இருக்க வேண்டுமென்று விரும்பி, பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மு. பழனிவேலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவ்றைக்கு இந்த ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லை என்று மாற்றுக்கட்சியினர் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை என்னுடைய முழு மூச்சோடு எதிர்க்கிறேன்.

[திரு. மு. பழனிவேலன்] [1973 ஆகஸ்டு 10

இங்கே பேசுகின்ற நேரத்தில் என் பக்கத்துத் தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் தமிழக அரசையும் அமைச்சரவையையும் பற்றிப் பேசிய குற்றச்சாட்டுக்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். முதலிலே அவர் பேசுகின்ற நேரத்தில் ஏதோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அரிசனங்களுக்கும் வக்காலத்து வாங்கிப் பேசுவதுபோல் குறிப்பிட்டார். ஆனால் சென்ற கூட்டத்தில் அவர் பேசிய பேச்சை தயவுசெய்து படித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், அரிசனங்களுக்கும் பிற்பட்ட மக்களுக்கும் சலுகை அளிக்கக் கூடாது, பொருளாதார அடிப்படையிலேயே சலுகைகள் அளிக்கப்பட வேண்டும் என்று அன்றைக்குப் பேசியவர், இன்றைக்குத் தன் உடைய பேச்சை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டுமல்ல, பல்வேறு வகுப்பினரைச் சார்ந்த மக்களுக்கும் தொண்டு செய்துகொண்டிருக்கிறது என்பதை நாட்டு மக்கள் எல்லாம் நன்றாக அறிவார்கள். என் தொகுதியைப் பொறுத்தவரையில் அங்குள்ள கார் டிரைவர்களுக்கு ஏறத்தாழ 20 கார்களை இந்த அரசு வழங்கியிருக்கிறது. அதனால் அவர்களெல்லாம் உள்ளபடியே இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மாற்றுக் கட்சிக்காரர்கள் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, வேண்டுமென்றே ஏதோ பழி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ரசீது இல்லாமல் பணம் வசூல் செய்கிறார்கள் என்றெல்லாம்கூட சொன்னார்கள். அவர்கள் தயவுசெய்து நெஞ்சிலே கை வைத்துச் சொல்லவேண்டும். நாமக்கல் பகுதியைச் சேர்ந்த வேலூரில் ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்ப்பதற்காக நிதி வசூல் செய்யப்பட்டது. யாரால் வசூல் செய்யப்பட்டது என்பதை அவர்கள் நன்றாக அறிவார்கள். அவர்கள் ஒரு தீர்மானத்தைப் போட்டு, ஒரு குழு என்று போட்டு, அந்தக் குழுவுக்கு இவர் தலைவர் என்று போட்டு, ஏறத்தாழ 15,000 ரூபாய்க்குமேல் வசூல் செய்தார்கள். கல்லூரி மாணவர்களிடம் 500 ரூபாய் 1,000 ரூபாய் என்று வசூல் செய்யப்பட்டது. இன்றைக்கு அந்தப் பணம் எங்கே போனது, என்ன ஆனது என்றே தெரியவில்லை. அவர்கள்தான் ரசீது இல்லாமல் வசூல் செய்கிறார்கள் என்று இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

1973 ஆகஸ்டு 10] *[திரு. மு. பழனிவேலன்]*

அதுமட்டுமல்ல. ஏதோ இங்கே வந்தால் மட்டும் பேசுவது அல்லது மேடைகளிலே மட்டும் பேசுவது என்று இல்லாமல், அவர்கள் எல்லாம் அந்தந்தத் தொகுதி மக்களிடத்திலே பேசினால் நல்லது. விவசாயிகளுக்காக இங்கே பேசுவதை விட அந்த விவசாயிகளிடத்திலே பேசினால் நன்றாக இருக்கும். அந்தந்தத் தொகுதி மக்களுக்காகப் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்தத் தொகுதியிலே எவ் சொந்த கிராமம், நான் பிறந்த கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திலே இருக்கின்ற ஏழை விவசாய மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அந்த விவசாயிகளைப் பகடைக் காய்களைப்போல் உருட்டிவிட்டு வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கபிலைமலைத் தொகுதி மக்கள் அதை நன்றாக அறிவார்கள். அந்தப் பகுதி விவசாய மக்கள் அரசாங்கத் தண்ணீரை சட்டத்திற்கு விரோதமாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அவர்களை என்னவேண்டுமென்றாலும் செய்யலாம் என்ற எண்ணத்தில் சட்டமன்ற உறுப்பினரும் மற்றவர்களும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அத்தச் சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய சொந்த செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, தன்னுடைய சகலைக்கும் தனக்கும்—இந்த ஆட்சி வருவதற்கு முன்னால்—சொந்த நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியைப் பயன்படுத்தி மின்சார இணைப்பைப் பெற்றுக்கொண்டார்கள். மின்சார இணைப்பைப் பெற்றுக்கொண்டு அவசரமாகக் கூட்டத்தைப் போட்டார்கள். அந்தக் கூட்டத்தில் எல்லாப் பொதுமக்களையும் வைத்துக்கொண்டு பேசும்போது 'நான் உங்கள் எல்லோருக்கும் மின்சார இணைப்புப் பெற்றுத் தருகிறேன். ஆனால் நீங்கள் எல்லோரும் எக்கருக்கு நூறு ரூபாய் பணம் தரவேண்டும். அப்படிப் பணம் தருவீர்களானால் நான் பெற்றுத்தருகிறேன்' என்றார். எக்கருக்கு நூறு ரூபாய் என்றால் 3½ லட்சம் ரூபாய் ஆயிற்று. இவர்கள் அப்படிச் சொன்னவுடன் நூறு ரூபாய் அல்ல, இருநூறு ரூபாய் தருகிறோம், அதற்கென்று ஒரு குழு அமைக்கவேண்டும் என்றார்கள். இங்கே லஞ்ச லாவண்யத்தைப்பற்றிப் பேசுகின்றவர் அன்றைக்கு இந்தப் பணத்திற்குக் கணக்குக் கேட்கக் கூடாது, எஸ்.இ. க்கு கொடுக்கவேண்டும். இ.இ. க்குக் கொடுக்கவேண்டும் என்றார்கள். கணக்கு இல்லை என்று சொன்னால் ஒப்புக் கொள்ளத் தயார் இல்லை என்று சொன்னார்கள். அந்தக் கூட்டம் கலைக்கப் பட்டது.

[1973 ஆகஸ்டு 10

திரு. சி. வே. வேலப்பன்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் என்னைக் குறிப்பிட்டு சில குற்றச்சாட்டுகளைச் சொல்கிறார்கள். அவற்றுக்கு ஆதாரம் இருக்கிறதா? ஆதாரம் இல்லை என்றால் அவை சட்ட மன்ற நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப்படவேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரு. பழனிவேலன் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு வருகிறேன். அவர் பொதுவாகச் சொல்லி வருகிறாரே தவிர திரு. வேலப்பன் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை.

திரு. சி. வே. வேலப்பன்: கபிலைமலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிவேலன் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாம் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். தனிப்பட்ட ஒருவர் மீது ஆதாரமின்றி பொதுவான குற்றச்சாட்டாக எதுவும் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்லப்படுமானால் அது அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப்படும் என்று தெரிவித்து இருக்கிறேன். அப்படிப்பட்ட குற்றச் சாட்டைச் சொல்லுகின்றவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. மு. பழனிவேலன்: முழுக்க முழுக்க நான் கூறியவற்றுக்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். அதனால் என்ன விளைவு வந்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

(திரு. என். கணபதி, திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. ஆறுமுகம் ஆகியவர்கள் எழுந்திருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திரு. எட்மண்ட் அவர்களை அவருடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்ல அழைக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு பாயின்ட்ஸ் ஆப் ஆர்டர் எழுப்புகிறேன். இந்த மன்றத்திற்குத் தாங்கள் தலைவர் என்று நாங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறோம். நம்பிக்கொண்டிருக்கிறோம்.

1973 ஆகஸ்டு 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள். இது எல்லாம் வேண்டாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நான் உங்களிடம் பேசுகிறபோது அவர்கள் என்னிடம் கேட்கிறார்களே.

மன்றத்திலுள்ள ஒரு உறுப்பினர் வேறு எந்த உறுப்பினரைப்பற்றியாவது சொல்லிவிடுவது, ஆதாரம் இருக்கிறதா என்றால் பொறுப்பேற்றுக்கொள்வதாகச் சொல்வது, பின்னர் பொறுப்பேற்றுக்கொண்டவர் அதை நிரூபிக்கிறாரோ இல்லையோ, நிகழ்ச்சிக் குறிப்பில் அவர் சொன்னவைகள் எதிலிடுவது, ஒழுங்குமுறைக்கு உட்பட்டதாஞ என்று அறிய விரும்புகிறேன்.

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மன்றத்தில் எழுப்பக்கூடிய விவாதங்களில் மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடிய மன்றங்களை உதாரணமாகச் சொல்லவில்லை—நமது லோக் சபாவில்—இந்தியப் பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய மரபு—ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர்மீது தனிப்பட்டமுறையில் குற்றம்சாட்டுவதாக இருந்தாலும், அல்லது ஒரு அமைச்சரின்மீது தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டுவதாக இருந்தாலும்—முதலில் எழுத்துமூலம் சபாநாயகரிடத்தில் தெரிவிக்க வேண்டும், குற்றம் சாட்டப்படுகிற உறுப்பினர் அல்லது அமைச்சரிடம் சபாநாயகர் அதை முன்கூட்டியே தெரிவித்து, பிறகு குற்றம் சாட்டுகிற உறுப்பினரையும் அழைத்துப் பேசிய பிறகுதான் அனுமதி அளிக்கிறார். சபாநாயகரின் அனுமதி பெற்ற பிறகுதான் பாராளுமன்றத்தில் அந்தப் பிரச்சினையை எழுப்புகிறார்கள். பாராளுமன்றத்தில் இந்த முறைதான் இருக்கிறது. ஆனால் இங்கே நமது மன்றத்தில் நடைபெறுகிற நிகழ்ச்சியில் ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரைப் பார்த்துத் திடீரென்று—லஞ்சம் வாங்கினார் என்று பேசுவது முறையாக இல்லை. இனி இதுபோல ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினர்மீதோ, அமைச்சர் மீதோ தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டுவதாக இருந்தால் அவர்கள் தங்கள் அனுமதியை முன்கூட்டியே பெற்று இந்தப் பேரவையில் எழுப்ப வேண்டும். லோக் சபா சபாநாயகர் திரு. தில்லான் பின்பற்றுகிற முறையையே நீங்களும் இங்கே பின்பற்றவேண்டும். தங்கள் அனுமதியின்றி யாரும் ஸ்லிப்பிங் அவிகேஷனைப் பேசுவது கூடாது என்று சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாராளுமன்றத்தில் பயிற்சி பெற்றவர். அதன்காரணமாக அவர் தெரிவித்த கருத்துக்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அது நல்ல முறை

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1973 ஆகஸ்டு 10

தான். பேசுகின்ற உறுப்பினர் குறிப்பிட்ட குற்றச்சாட்டை எழுப்புவதற்கு முன் பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெறவேண்டும்....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாக் குற்றச்சாட்டுகளும் முன்கூட்டியே சொல்லப்பெறுவது அல்ல. தனிப்பட்ட ஒருவர்மீது லஞ்சக் குற்றச்சாட்டு, ஊழல் குற்றச்சாட்டு என்று எழுப்ப விரும்புகிறபோது இந்த முறையைப் பின்பற்றினால் இரு சாராருக்கும் நலமாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஒட்டுமொத்தமாகப் பேரவைத் தலைவரின் அனுமதிபெற்றே குற்றச்சாட்டுகளை இங்கே எழுப்பவேண்டும் என்பது ப்ரீடம் ஆப் ஸ்பீச், ப்ரீடம் ஆப் டிபேட் ஆகிய எல்லாவற்றையும் பாதிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அட்மினிஸ்ட்ரேடிவ் லாப்சைப் பற்றிப் பேசலாம்— ஒருவரது தனிப்பட்ட வாழ்வைப்பற்றி, குறிப்பிட்ட குற்றச்சாட்டை எழுப்புகிறபோது முன் அனுமதி பெற்றுப் பேசுவதாக இருந்தால் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் தனிப்பட்ட முறையில் ஒருவர்மீது சாட்டப்படுகிற குற்றச்சாட்டுகளைப்பற்றித்தான் சொன்னார். கூடுமானவரையில் பொறுப்பற்ற முறையில் ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளை இந்த அவையில் யாரும் கூறவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. பழனிவேலன்: அவர் பணம் பெற்றார் என்று நான் சொல்லவில்லை. கேட்டார்கள் என்றுதான் சொன்னேன்.

(திரு. எட்மண்ட், திரு. முனு ஆதி எழுந்திருந்தார்கள்.)

திரு. என். கணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மற்றவர்கள் எல்லாம் இதுபோன்ற குற்றச்சாட்டுகளைப் பேசிவிட்டார்கள். இவரும் பேசிவிடட்டும்.

திரு. மு. பழனிவேலன்: அவர்கள் பேசும்போது எங்களது முதல்வரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுங்கள். ஆதாரமற்ற குற்றச் சாட்டுகளை யார்மீதும் இந்த அவையில் குறிப்பிட்டுப் பேசக்கூடாது.

1973 ஆகஸ்டு 10]

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள்மீது அவர்கள் குற்றச்சாட்டிப் பேசியபோதெல்லாம் விட்டுவிட்டு இப்போது இதுபோன்ற தீர்ப்பை அளிப்பது எங்களைப் பாதிப்பதாக ஆகாதா என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். கணபதி: எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் டாக்குமெண்டரி எவிடன்ஸ் கொடுப்பது என்பது சிரமம். தாம் கூறுகிறவற்றுக்குத் தாமே பொறுப்பேற்றுக்கொண்டு நிரூபிக்கிறேன் என்று சொல்லும்போது தாங்கள் அனுமதி அளிக்கலாம். அப்படி அனுமதி அளிப்பது சரியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. முனு ஆதி எழுந்திருந்தார்.)

திரு. மு. பழனிவேலன்: அந்தப் பகுதி வட்டச செயலாளர், வாக்காளர் என்ற முறையில் அந்தச் சம்பவத்தை எடுத்துச் சொன்னேனேதவிர இன்றைக்கு இவர்கள் என்ன செய்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வர்கள் தாக்கப்படுகிற நேரத்தில் மக்கள் கிளர்ச்சி என்று சொல்கிறார்கள். அவர்கள் கட்சியில் யாராவது தாக்கப்பட்டால் காலிகள் தாக்கினர்கள், எதிரிகள் தாக்கினர்கள் என்று பேசுகிறார்கள். மதுவிலக்கைப்பற்றி ஒன்றே ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். அந்தக் கட்சியிலே இருக்கிற அருமை நண்பர் களுக்குச் சொல்லிக்கொள்வேன், உங்களுடைய கட்சியிலே உள்ள மாயவன் என்பவர் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே இல்லாதவர்களைப்பற்றிக் குறிப்பிட வேண்டாம்.

திரு. மு. பழனிவேலன்: மாயவன் என்பவர் இன்றைக்கு சாராயக் கடையை ரூ. 43,000-க்கு ஏலம் எடுத்திருக்கிறார். அவர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்; இப்பொழுது அண்ணா தி.மு.க. அமைப்பாளர். அதேபோல் மணிவாசகம் என்பவர் பேட்டப்பாளையம் ஊராட்சிமன்றத் தலைவராக இருக்கிறார். அவர் ஏலம் எடுத்திருக்கிறார். இப்படி அமைப்பாளர்களாக இருக்கிற அவர்களுடைய கட்சிக்காரர்களுக்கு இதைப்பற்றிச் சொல்லிவிட்டு, பிறகு மற்றவர்களைப் பற்றிப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 15 பேர் பேச வேண்டியிருக்கிறது. ஒரே ஒரு நிமிடத்திலே முடித்துக்கொள்ளுங்கள்.

[1973 ஆகஸ்டு 10

திரு. மு. பழனிவேலன்: ஊழல் புகாரைப்பற்றியும், இலஞ்ச இலாவணியத்தைப்பற்றியும் பேசுகிறார்கள். பட்டா நிலத்தையெல்லாம் சுரண்டியிருக்கிறீயே என்று சொல்கிறார்கள். நான் இந்தக் கட்சிக்கு வருவதற்கு முன்னாலே வைத்திருந்த சொத்து விவரத்தைக் கொடுக்கிறேன். இப்பொழுதுள்ள சொத்து விவரத்தைக் கொடுக்கிறேன். அவர்கள் தயாரா? எங்கள் கட்சியிலே முன்னாலே அமைச்சராக இருந்தவர், இன்றைக்கு அவர்களுடைய கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர், எங்களுடைய கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் பட்டா நிலங்களைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள் என்று சொன்ன பிறகும் எறத்தாழ 40 ஏக்கர் நிலத்தை இன்றுவரை திருப்பிக் கொடுக்கவில்லை. அதை அவர்களுடைய கட்சிக்காரர்கள் சொல்லி, திருப்பிக் கொடுக்கச் செய்தால், சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஆத்தூரிலே இருக்கிற எல்.டி. பாங்கில், பம்ப் செட் வைக்கவேண்டுமென்று கடன் பெற்றிருக்கிறார். ஆனால், பம்ப் செட் வைக்காமலேயே, அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து கடனைப் பெற்றிருக்கிறார்கள். தயவுசெய்து, அப்படிப்பட்ட குற்றங்களை முதலில் களைந்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

எல்லாவற்றிலும், எல்லோரும் இன்றைக்குத் தலையிடுகிறார்கள், அரசாங்கக் காரியங்களிலே தலையிடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன், உங்களை விட மற்றக் கட்சியிலுள்ளவர் யாரும் அரசாங்கத்திலே தலையிடவில்லை. அவர்களுடைய தலையீடு எப்படி இருக்கிறது என்பதற்காக, உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைப்பற்றி இங்கே ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய பகுதியிலே ஒரு கட்சிக்காரர் இருக்கிறார். அவரை எறத்தாழ 50, 60 பேர் கொலை செய்துவிட்டார்கள். அந்தக் கொலை வழக்கு நீதிமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலே, இன்றைக்கு இங்கே நீதித் துறையிலே தலையிடக் கூடாது என்று சொன்ன சட்டமன்ற உறுப்பினர், தலையிட்டு, அந்தத் தீர்ப்பை மாற்ற வேண்டுமென்று எப்படி முயற்சி செய்தார்கள்? அது சம்பந்தமாக, செஷன்ஸ் கோர்ட்டிலே இரண்டு பெக்டர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கொடுத்த வாக்குமூலம், 'வேலப்பன், எம்.எல்.ஏ. எதிரிக்கு ஆதரவு அளித்தார்கள். இதை அவர் ஆரம்பத்திலேயிருந்து செய்துகொண்டிருந்தார். இன்றைக்குக்கூட வழக்கு மன்றத்திற்கு அவர் வந்திருந்தார். எதிரியுடன் கோர்ட்டில் இங்கேயும் அங்கேயும் சுற்றிக் கொண்டிருந்தார்', என்பது.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார் . . .

1973 ஆகஸ்டு 10]

திரு. மு. பழனிவேலன் : செஷன்ஸ் கோர்ட், சேலம் எஸ். சி. நெ. 103/70. அந்தத் தீர்ப்பிலே 23-ம் பக்கத்திலே திரு. வேலப்பன் 11-3-1970 மாலை கொலை நடந்த இடத்திற்கு வந்தார். அவர் ஆரம்ப காலத்திலேயிருந்து எதிரிகள் கூட்டணிக்கு ஆதரவு கொடுத்து வந்திருக்கிறார் என்று அந்த இடத்திலும் சொல்லியிருக்கிறார்கள்.

கடைசியில் அந்தக் கொலை வழக்குக்கு எப்படித் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், உயர்நீதிமன்றத்திலே ஐவருக்கு ஆயுள் தண்டனையும் ஏறக்குறைய 40, 42 பேருக்குக் கடும் தண்டனையும் வழங்கப்பட்டது. அந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, தள்ளுபடி செய்யப் பட்டிருக்கிறது என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள் கிறேன். அப்படிப்பட்ட வழக்குகளில் எல்லாம் தலையிட்டவர்கள், நீதித் துறையிலே தலையிடுகிறவர்கள், மற்றவர்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திலோ, நீதித் துறையிலே தலையிடவேண்டாமென்று தெரிவித்துக்கொண்டு . . . (மணியடிக்கப்பட்டது.)

* திரு. எஸ். வடிவேல் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தில் சில விஷயங்களை நான் கொண்டுவருகிறேன். கீழ் வெண்மணி கோரச் சம்பவத்தை நான் இங்கே கொண்டுவர விரும்புகிறேன். 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25-ம் தேதி ஏசு பிறந்த அந்தப் புனித தினத் தன்று நாகை தாலூகா கீழ்வெண்மணி கிராமத்தில் 44 அரிசனங்களை ஒரே வீட்டில் பூட்டி அடைத்துக் கொளுத்திய அந்த கோரச் சம்பவத்தைக் கண்டு, உலகமே கண்டிராத அளவுக்கு, நல்ல நெஞ்சம் கொண்டவர்கள் குமுறினார்கள். தமிழக வரலாற்றில் இத்தகைய கொடுமையை யாரும் பார்த்தது இல்லை. அன்றைக்கு எல்லாக் கட்சியினரும் ஜாதி, மத, இன வேறுபாடின்றி வேதனைப் பட்டார்கள். 44 தாழ்த்தப்பட்ட மக்களைக் கொன்றவர்களுக்குச் சரியான தண்டனை நிச்சயம் கிடைக்கும் என்று நாட்டு மக்கள் நம்பினார்கள் என்பதையும் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பைப் பாருங்கள். 'குற்ற வாளிகளின்மீது குற்றத்தை நிரூபிக்கத் தகுந்த சாட்சியங்களைக் கொண்டுவர பிராசிக்யூஷன் தரப்பில் தவறிவிட்டது' என்று ஹைகோர்ட்டிலே பிராசிக் யூஷன் தரப்பைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கீழ் மட்டத்திலேயே, போலீஸ் இலாகாவால், திட்டமிட்டே, வழக்கு தோற்க வேண்டுமென்றே பிராசிக்யூஷன் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில்

[திரு. எஸ். வடிவேல்] [1973 ஆகஸ்டு 10

சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே கிழ்வெண்மரி வழக்கிலே அரிசனங்கள் சம்பந்தப்படுத்தப்பட்ட வழக்கில் 10, 5 ஆண்டு என்று, இன்னொருவரைக் கொன்றார்கள் என்பதற்காகத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இது அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, வழக்கின் அடிப்படையான விஷயங்களுக்குச் செல்லாமல் இருப்பது நல்லது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: Sir, may I make one submission. தலைவர் அவர்களே, நீதிமன்றத்தைப் பொறுத்தவரையிலே, ஜட்ஜ்மென்டைப் படிப்பதிலே சங்கடமில்லை. ஆனால், உண்மையான குற்றவாளிகளை விட்டுவிடுகிறார்கள், அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவில்லை என்று பேசாமலிருப்பது நல்லதாக இருக்கும். ' It is better that hundred guilty persons should escape rather than one innocent person should suffer '. என்ற ஒரு முக்கியமான கருத்து இருக்கிறது. அந்த அடிப்படையிலே பார்க்கின்ற பொழுது பல கேஸ்களிலும் போதுமான சாட்சியங்கள் இல்லாமலிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை விடுதலையாக்கிவிடுகிறார்கள் என்ற காரணத்தினால் அவர்களை நிரபராதி என்று கோர்ட்டு சொல்லவில்லை. கோர்ட்டு தீர்ப்பினையும் நாம் மதித்து நடந்துகொள்ளவேண்டும். நாமெல்லாம் சட்ட மன்றத்திலே யிருக்கிற காரணத்தினால் எந்த விவாதமும் நல்ல பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே தங்கமணி: பொதுப்படையாக நாடார் சொன்னது சரிதான். அவர் சொன்னது கோர்ட்டுகளுக்குச் சரியாக இருக்கும். திரு. வடிவேல் சொன்னது அந்தத் தீர்ப்பிலேயே தெளிவாக ஜட்ஜ்கள் சொல்லியிருக்கிறார்கள். கீழ்க் கோர்ட்டுகளிலே ஜட்ஜ்கள் சரியாக நடந்துகொள்ளவில்லை. பிராசிக்யூஷன் தரப்பிலே, பல ஊனங்கள் கொடுத்து, வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் தப்பிப்பதற்கு ஏற்பாடு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அந்தத் தீர்ப்பிலே சொல்லியிருப்பதைத்தான் கூறுகிறார். இப்படிப்பட்ட கேஸ்களில் அரசு முறையாக இன்வெஸ்டிகேஷன் நடத்தவில்லை. அதே நேரத்திலே இன்னொரு கேஸ் நல்ல முறையிலே விசாரணை செய்யப்பட்டு, கீழ்க் கோர்ட்டிலே தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். அதில் எதுவும் தவறில்லையென்று கருதுகிறேன்.

திரு. எஸ். வடிவேல்: இதேபோல், இந்த 20-ம் நூற்றாண்டு இறுதிக் கட்டத்திலே, 44 உயிர்கள் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகியோருடைய வீடுகளிலே போக்கப்பட்ட சம்பவம் நடந்திருக்குமானால், தாழ்த்தப்பட்ட மக்க

1973 ஆகஸ்டு 10] [திரு. எஸ். வடிவேல்]

ஞுடைய ஒவ்வொரு குடிசையையும் எரித்து இருப்பார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அரிசன மக்கள் என்ற முறையிலே, சரியான முறையிலே, போலீஸ் இலாகாவிலே கேஸ் ஜோடிக்கப்படவில்லையென்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டேதவிர, நீதிபதிகள் எப்படித் தீர்ப்பு அளித்தார்கள் என்பதிலே நான் அதிகமாகப் புக விரும்பவில்லே. அந்த அடிப்படையிலே இன்றைக்கு 4½ கோடி மக்கள் வாழ்கிற தமிழகத்தில் ஏறத்தாழ 73 இலட்சம் பேர்கள்—1971-வது ஆண்டு கணக்குப்படி—அரிசன மக்கள். இன்றைக்குத் தமிழக மக்களிலே 6-ல் 1 பங்கு இருக்கிறோம். வெண்மணி சம்பவத்தைப்பற்றி யாருடைய உள்ளத்தைப் பார்த்தாலும் சோகச் சம்பவம்தான் தெரியும்.

நம்மூடைய கலீஞர் அவர்கள் 1948-ம் ஆண்டிலே பேசியதை இப்பொழுது கூற விரும்புகிறேன். 'ஒருவனுடைய காதலி; அந்தக் காதலியைக் காதலன் விரும்பினுன். அவன் அவளே ஏற்றுக்கொள் என்று சொல்கிறுன். அப்பொழுது அந்தக் காதலி காதலனைக் கூப்பிட்டுச் சொன்னுள், 'ஓடிப்போய் உன்னுடைய அன்னையினுடைய இதயத்தை எடுத்துவந்து என்னுடைய கையிலே கொடு, என்று. அப்பொழுதுதான் நான் உன்னே ஏற்றுக்கொள்வேன் என்று சொன்னுள். அவன் உடனே ஓடினுன், அன்னையை வெட்டினுன் இதயத்தை எடுத்துக்கொண்டு ஓடிவருகிறுன். அப்பொழுது அந்த அன்னையினுடைய இதயம் பேசுகிறது, 'மெதுவாகப் போடா என் அருமை மகனே' என்று இவ்வாறு முதல்வர் அவர்கள் அன்றைக்குப் பேசினுர்கள். இந்த கீழ் வெண்மணி சம்பவம் நடந்த டிசம்பர் மாதம், நம்மூடைய உணவு அமைச்சர் அப்பொழுது மாவட்டச் செயலாளராக இருந்தார். அந்த மன்னை நாராயணசாமி அவர்களும் மாவட்ட கலெக்டராக இருந்த இரங்கபாஷ்யம் அவர்களும் தானும் அங்கு சென்று 44 பிணங்களேப் புரட்டிப் பார்த்தபொழுது, 7 மாதக் கர்ப்பிணி ஒருத்தியினுடைய வயிறு வெடித்துக் குழந்தை வெளிவந்திருக்கிறது. பச்சிளம் பிள்ளே ஒன்று தன் தாயினுடைய மார்பில் வாயை வைத்தவாறு இருந்தது. இப்படிப்பட்ட சோகச் சம்பவங்களேப் பார்க்க முடிந்தது. இன்றைக்குப் பல்வேறு வகையிலே ஓலாளிற்கு வசதி செய்து கொடுத்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல்வேறு கொடுமைகள் செய்யப் பட்டிருக்கின்றன. வேதாரணியம் தொகுதியிலே ஆயகரணியம்புலம் என்ற ஊரில் 20 அரிசனக் குடிசைகளேக் கொளுத்தியிருக்கிறார்கள். அதிராம் பட்டணத்தில் 7 அரிசனக் குடிசைகளேக் கொளுத்தியிருக்கிறார்கள். அதைப் போன்று இன்றைக்குத் திருத்துறைப்பூண்டியிலே திரு. மணலி கந்தசாமி அவர்கள் தொகுதியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொல்லே கொடுத்து இருக்கிறார்கள். இதைப்பற்றியெல்லாம் காவல் துறைக்கு எடுத்துச்சென்றால்

[திரு. எஸ். வடிவேல்] [1973 ஆகஸ்டு 10

கூட, தாழ்த்தப்பட்ட மக்களை அவர்களும் ஜாதியின் பெயரைச் சொல்லி அவமானப்படுத்தக்கூடிய நிலைமையேதான் இருக்கிறது என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கீழ்வெண்மணிச் சம்பவத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு, உயர்நீதி மன்றம் என்ன சொல்லியிருக்கிறது என்றால், அவர்களுக்கு எல்லாம் தாராளமாக நிதி உதவி செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அப்படியே தீர்ப்பளித்திருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே அவர்கள் மறியல் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் சில கோரிக்கைகளை வைத்து அண்ணல் அம்பேத்காரின் படம் இங்கே வைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அதற்காக அவர்கள் கைது செய்யப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. இன்னும் அவர்கள் பல்வேறு கோஷங்களை வைத்திருக்கிறார்கள், கீழ்வெண்மணிச் சம்பவம்பற்றி அப்பீல் செய்யப்பட்டிருப்பதாக டாக்டர் கலைஞர் அவர்கள் இப்பொழுது குறுக்கிட்டுச் சொல்லும்பொழுதுதான் சொல்கிறார், இதுவரையில் அப்பீல் செய்யப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை, எந்தப் பத்திரிகையிலேயும் நான் அதைப் பார்க்கவேயில்லை. அப்பீல் செய்திருக்கிறார்களே, காலத்தோடு அப்பீல் செய்திருந்தால் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்து இருக்கமுடியும் . . . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: காலத்தோடு செய்தால் தான் அப்பீலை ஏற்றுக்கொள்வார்கள் மேல் கோர்டிலே. காலத்தோடுதான் அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: அங்கே எந்த மனிதர்கள் அவர்களைத் தீயிட்டுக் கொளுத்தினார்களோ அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்படுகிறது. அதற்குப் போலீஸ் இலாகா துணை நிற்கிறது. அதுமட்டுமல்ல, ஆளுங்கட்சியும் துணை நிற்கிறது.

லஞ்சம்பற்றிக் குறிப்பிட்டார்கள். நானேகூட சொல்லியிருக்கிறேன், அவையியமாகப் பேசக்கூடாது என்று. ஆனால் ஆதாரத்தோடு பேசலாம். என்னுடைய தொகுதியிலே நான் சொல்லமுடியும். சீர்காழியிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 250 ரூபாய் லோன் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் உத்தரவு இருக்கிறது. ஆனால் 250 ரூபாயிலே 200 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. இதை நான் புரூவ் பண்ணுகிறேன். முதல்வர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தால் நான் அந்தப் பணம் எப்படிப் போச்சு என்ன ஆச்சு

1973 ஆகஸ்டு 10] [திரு. எஸ். வடிவேல்]

என்று சொல்லமுடியும். என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர்கள் விலிட்டர்ஸ் காலரியிலே இருக்கிறார்கள். அவர்களுக்கும் தெரியும். 30 ரூபாய் தாசில்தாருக்கும், பாக்கி வேறு ஒருவருக்கும் என்ற நிலைமைதான் இருக்கிறது ...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இது உள்ளபடியே கொடுமையான குற்றச்சாட்டுதான். அவர்களுக்கு 250 ரூபாய் அரசு கொடுத்தும்கூட 200 ரூபாய்தான் அதிகாரிகள் அவர்கள் கையிலே கொடுத்தார்கள், 50 ரூபாயை அவர்கள் வாயில் போட்டுக்கொண்டார்கள், அந்தப பணம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லையென்றால் உண்மையிலேயே வீரம் மிக்க உறுப்பினர்கள்—அவர்கள் 50 ரூபாயை எடுத்துக்கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள்—அந்த வீரம் மிக்க உறுப்பினர்கள் அவர்களே அப்பொழுதே கையும் களவுமாகப் பிடித்து அந்தப் பணத்தை வாங்கிக்கொள்ளாமல் இருக்கச் செய்து எனக்கு ஒரு தந்தி கொடுத்திருந்தாலும் போதும், அந்த தாசில்தார்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். இப்பொழுது அவர்கள் சொல்லாவிட்டாலும் அவர்களுடைய பேச்சை முடித்தபிறகு அவருடைய பெயரைக் குறித்துக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: அரசு கொடுத்தது 250 ரூபாய்; நீ அடித்தது 50 ரூபாய்; கிடைத்ததோ 200 ரூபாய் என்று அவர்கள் போட்டு அவர்கள் 50 பேர்கள் ஊர்வலம்கூட வந்தார்கள். அது முதலமைச்சரின் கவனத்திற்கு வந்திருக்கும் என்றுதான் நான் பேசுகிறேன். அத்தனை பேர்களும் என்னிடத்திலே சொன்னார்கள். யார் யாரை புரூவ் பண்ணுவது என்பதல்ல. அரசியலிலே நேர்மையான நியாயமான வாழ்க்கை வேண்டும். 1952-லே இருந்து நான் இந்த அவையில் இருந்திருக்கிறேன், அப்பொழுது இப்படிப்பட்ட ரசாபாசங்கள் எல்லாம் இருந்ததில்லை. பெண்களுக்குத் துன்பம் என்றால் அவர்கள் அழுது அழுது கண்ணீர் விட்டுத் தீர்க்கிறார்கள். அந்த முறையிலே நாட்டு மக்களுக்கு ஏற்படுகின்ற துன்பங்களை, துயரங்களை நாங்கள் இங்கே தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளைப் பேசிப் பேசித் தீர்த்துவிடலாம் என்று நினைத்தாலும்கூட இங்கே பேசக்கூட விடுவதில்லை.

இன்றைக்கு நாட்டிலே லஞ்ச லாவண்யங்கள் தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றன. காவல் துறையிலே தாழ்த்தப்பட்ட மக்களைப் புறக்கணிக்கக்கூடிய நிலையே இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 16 சதவிகிதம் பேர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள் ஆனால் உண்மையிலே கிடைக்கிறதா? கிடைக்கவில்லை. ஏதோ பேருக்கு போடப்பட்டு அது புத்தகத்தை அலங்கரிக்கிறதேதவிர, 16 சதவிகிதம் உண்மையிலே கிடைக்கவில்லை.

[திரு. எஸ். வடிவேல்] [1973 ஆகஸ்டு 10

இந்தியக் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நியாயமான கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவற்றை எல்லாம் எது சரி, எது சரியில்லை என்று பார்த்து அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய குடியரசுக் கட்சியின் சார்பாக ஊர்வலம் வந்தவர்களைக் கைது செய்து வைத்திருக்கிறார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: யாரும் கைதுசெய்யப்பட்டு வைக்கப்படவில்லை. கைது செய்யப்பட்டவுடனே விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள்.

திரு. எஸ். வடிவேல்: விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று ஒரு கூலி நிர்ணயக் கமிஷன் வைத்தார்கள். இன்றைக்குப் பெருகிவருகின்ற விலைவாசி ஏற்றத்திலே—சாதாரண பியூன் 250 ரூபாய் சம்பளம் பெறுகிறான்—ஆனால் விவசாயிகளுக்கு 90 ரூபாய்கூட கிடைப்பதில்லை என்றால்—அதுவும் அவர்களுக்கு 5 மாதம்தான் வேலை கிடைக்கும் 360 நாட்களிலே 182 நாட்கள்தான் வேலை கிடைக்கும் என்று உயர்நீதிமன்ற நீதிபதி கணபதியா பிள்ளை அவர்களே சொல்லியிருக்கிறார்—90 ரூபாயை வைத்துக்கொண்டு எப்படி வாழ்க்கையை நடத்த முடியும்? தாழ்த்தப்பட்ட மக்கள், கடைக்கோடியிலே வாழுகிற மக்கள்—அவர்களுக்கு வேண்டுமானால் 4 அடி 3 அடி என்று கொடுத்து அவர்களுடைய வாயைப் பூட்டி வைக்கலாமேதவிர—நம்பிக்கை வைக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 19 பேர்கள் பேசவேண்டியதில் 5 பேர்கள்தான் பேசியிருக்கிறார்கள். இன்னும் 14 பேர்கள் இருக்கிறார்கள். காலையிலே இன்னும் 3 மணி நேரம்தான் இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்குமேல் போகாமல் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. அபுசாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின்மீது கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் முஸ்லீம் லீக் சார்பாக எதிர்த்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தியாவிலேயே பல நல்ல திட்டங்களைப் புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கிவரும் இந்த அரசுக்கு நல்லது செய்யமுடியாவிட்டாலும், கெட்டது செய்யாமலாவது இருக்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தோழர்களை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த

1973 ஆகஸ்டு 10] [திரு. எம். ஏ. அபுசாலி]

அரசு பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. அதற்காக மேலும் இந்த அரசின்மீது நம்பிக்கை வைத்திருந்தால் இப்படிப்பட்ட திட்டங்களை நிறை வேற்ற வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதே நேரத்திலே முஸ்லீம் லீக் சிறுபான்மை மக்களாகிய நாங்கள் எங்களுடைய கோரிக்கைகளை முஸ்லீம் லீக் சார்பிலே கொடுத்தால் நல்ல முறையிலே நிறைவேற்றவில்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக சிதம்பரத்தில் நடந்த நிகழ்ச்சியை கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 27, 28, 29 ஆகிய மூன்று தேதிகளிலும் ஒரு கொலைகேஸ் சம்பந்தமாக கவுன்சிலர்கள் இருவரையும் அவர்களைச் சேர்ந்த அவர்களுடைய அண்ணன் தம்பிகளையும் கழுதைமேல் வைத்து செருப்பு, துடைப்பக்கட்டை மாலைகளைப் போட்டு ஊர்வலம் விட்டார்கள். அதை நேரில் நான் கண்ணால் பார்த்தேன். அதை இந்த அரசின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறை சொல்வதாக நினைக்கவேண்டாம். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நேரில் பார்த்ததை நான் சொல்கிறேன். சிதம்பரம் வட்டாரத்திலே மக்கள் பீதியடைந்திருக்கி றார்கள். அந்த மாதிரி நிலைமையை உருவாக்கவேண்டாம் என்று இந்த அரசுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கடன்களை வசூல் செய்வதற்காக எங்களுடைய தொகுதியில், புவனகிரி தொகுதியில், அங்கே வெள்ளப்பாடு ஏற்பட்ட பகுதி இருப்பதால், அவர்கள் கட்ட முடியவில்லை. இந்த நேரத்திலே அவர்களுடைய மாடுகளை ஜப்தி செய்வதும், வீட்டிலே உள்ள பாத்திரங்களை சேதப்படுத்துவதுமாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளை உருவாக்காமல் காலம் தாழ்த்தி அதை வசூல் செய்யச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

மதுவிலக்குக் கொண்டுவரக்கூடிய முறையிலே முதலிலே கள்ளுக்கடை களைத்தான் எடுத்து இருக்கிறார்கள்.

அது மட்டும் போதாது. சாராயக் கடைகளையும் நிறுத்தியிருந்தால்தான் நாம் முஸ்லீம் மக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும். எனவே அவை களையும் நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தலைவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

[1973 ஆகஸ்டு 10

திரு. மணலி சி. கந்தசாமி: தலைவரவர்களே, சபையின் முன்னால் விவாதிக்கப்பட்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம், கண்டனத் தீர்மானம் ஆகிய இந்த இரண்டைப்பற்றியும் என்னுடைய சில கருத்துக்களை என் கட்சியின் சார்பாகச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக இந்த விவாதத்தை இரண்டு நாட்களாகக் கவனிக்கக்கூடிய சந்தர்ப்பத்திலே விவாதத்தின் தரம், விவாதத்தின் சாராம்சம் குறிப்பாக கொள்கைகளைத் தாக்கிப் பேசுவது, கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட ஊனங்களைப் பேசுவது என்பதற்குப் பதிலாக சபையின் போக்கு ஓளவிற்குத் தாழ்ந்துபோகும் நிலைமையில் இருக்கிறது என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதைப்பற்றிக் கூறும்பொழுது நேற்று மாலை சுதேசமித்திரன் பத்திரிகையில் தலையங்கம் ஏழுதியிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சர்க்காரின் கொள்கைகளை விமர்சிப்பதற்கு இத்தகைய தீர்மானம் மிகவும் அத்தியாவசியம். அந்த விமர்சனத்தின்மூலம், அந்த விமர்சனத்தைச் சரிவரச் செய்வதன்மூலம் சர்க்காரைத் திருத்தவும், அப்படியும் திருந்தாவிட்டால் ஜனங்கள் மத்தியில் சர்க்காரைப்பற்றி புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்தவும் இதைப் பயன்படுத்துவது நியாயமாக இருக்கும். இப்பொழுது எடுத்துப்பார்த்தால் இங்கே பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தனிப்பட்ட முறையிலே ஏசிக்கொள்வது போன்ற விஷயங்கள், குற்றச்சாட்டுகள் போன்றவை சமுதாயத்திலே அரசியல்வாதிகளை அசிங்கப்படுத்தும் அளவிற்குக் கொண்டுபோகிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது என்னைப் போன்றவர்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது என்று சொல்லி சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக எடுத்துக்கொண்டால், இன்றையதினம் இந்தத் தேசத்திலே இருக்கும் நெருக்கடி ஒரு பெரிய நெருக்கடியாகும். பாராளுமன்றத்தில்கூட இந்திரா காந்தி அம்மையின் மந்திரி சபையின்மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்போவதாகப் பேச்சு அடிபட்டு, அதற்குப்பிறகு அது கைவிடப்பட்டிருக்கிறது என்று பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். இன்றைக்குள்ள கோரமான நிலைமை நாடு பூராவிலும் கவ்விக்கொண்ட நெருக்கடியாக இருக்கிறது. இதிலே மத்திய அரசுக்கும் பங்கு உண்டு, மாநில அரசுக்கும் பங்கு உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதிக பங்கு, அதிகப் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இன்றைக்கிருக்கும் அரசியல் நிலைமைகளிலே இருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது, அதற்கு எல்லையே

1973 ஆகஸ்டு 10] [திரு. மணலி சி. கந்தசாமி]

கிடையாது. அந்த அளவிற்கு நாட்டிலே பெரிய அராஜக சூழ்நிலை ஏற்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை என்று சொல்லும் அளவிற்கு மிகவும் ஆபத்தான நிலைமை இருக்கிறது.

இதைச் சொல்லும் நேரத்தில் இன்றைக்கு இங்கேயுள்ள சர்க்காருக்கு இதை எந்த அளவிற்குக் கட்டுப்படுத்த வாய்ப்புகள் இருக்கின்றன, அப்படிக் கட்டுப்படுவதற்கு இருக்கக்கூடிய வாய்ப்புகளை எந்த அளவிற்குச் செய்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி விமர்சிக்க நிச்சயமாக அவசியம் இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இன்றைய தினம் அனுஷ்டிக்கக்கூடிய பொருளாதாரக் கொள்கையினால், அவர்கள் அனுஷ்டிக்கக்கூடிய உணவுக் கொள்கையினால் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள எண்ணற்ற நெருக்கடிகள், விலை வாசியைத் தணிக்காதது மட்டுமல்ல, மேலும் மேலும் விலைவாசி ஏறக்கூடிய அளவில் இருப்பதை இன்றைக்கு இப்பொழுதே நாம் கண்ணாரக் காண்கின்றோம். அதற்கு அடிப்படைக் காரணம், பலர் இதைப் பற்றிப் பேசினாலும் நான் ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த நாட்டிலே கையாளப்படுகின்ற மூதலாளித்துவ பாணியில் நடத்தப்படும் பொருளாதார வளர்ச்சித்தான் இதற்கு அடிப்படையான காரணம் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாடு சுதந்திரம் அடைந்தபிறகு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டுமானால், அதற்காக நாங்கள் கூறிக்கொண்டு வருகிறோம், இன்னும் சோஷலிச கருத்துடையவர்கள் பலரும் அதற்காகச் சொல்லிக்கொண்டுவருவது, இந்த நாட்டிலேயிருக்கும் பெரிய மூதலாளிகளுக்கு அனுசரணையாகக் கூட்டாகச் செயல்படுகின்ற ஏகாதிபத்திய மூதலாளித்துவத்தை, நிலப்பிரபுத்துவத்தைக் கட்டுப்படுத்தாமல் இதைச் செய்ய முடியாது. இதைச் செய்யாத அளவில் வேறு எந்த வித்தையைச் செய்தாலும் இந்தப் பொருளாதார நெருக்கடியின் கோரத்தன்மையைக் குறைக்க முடியாது. அதை விட்டுவிட்டுச் சிறுசிறு விஷயங்களைப் பேசக் கூடாது. அதனால் விலைவாசியேற்றத்தை யாரும் மறைக்க முடியாது.

இன்றைக்குத் தேங்காய் எண்ணெயின் விலை என்ன? மற்றப் பொருட்களின் விலை என்ன? நான் இன்றைக்கு வரும்பொழுது ஒரு தகவலைக் கேட்டேன். உத்தமபாளையத்தில் ஒரு பட்டணம் படி நெல் இரண்டு ரூபாய்க்கு விற்கிறது என்று உத்தமபாளையத்தைச் சேர்ந்தவர் என்னிடத்தில் தகவலைச்-சொன்னார். இப்படிப்பட்ட நிலைமையைக் கட்டுப்படுத்த நிச்சயமாக மத்திய அரசுக்கு அதிகப் பொறுப்பு உண்டு என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 ஆகஸ்டு 10

தனிய வியாபாரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று போட்டார்கள். அதன் காரணமாகச் சில மாநிலங்களில் அது அமலுக்கு வந்தது. அங்கே தனிய வியாபாரத்தில் ஈடுபட்ட கொள்ளையர்கள், அதன்மூலம் பணம் கிரட்டத் கிட்டமிட்டிருந்த கோடீஸ்வரர்கள் அதை எதிர்த்து எதிர்த்து, எப்படியெப்படிப் பல்வேறு கட்சிகளைப் பயன்படுத்தி அராஜகத்தை நாட்டிலே உண்டுபண்ணினார்கள் என்பதைப் பார்க்கிறோம். சமூகத்தை அமைதியாக நடத்தும் விதத்தில் பொருளாதார சூழ்நிலைகளை அமைதியாக முன்னேக்கிக்கொண்டு போகும் நிலைமை மாறிக் குழப்பத்திற்கு ஆளாக்கக்கூடிய நிலைமையில் சுயநலக்காரர்கள், சொத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக, நாட்டுப் பற்றில் கவலையில்லாமல், கோடீஸ்வரர்களாக ஆக வேண்டுமென்ற வியாபார சமூகத்தினரும், கொள்முதல் செய்யக்கூடிய பெருமுதலாளிகளெல்லாம் இன்றைக்கு நடந்து வருகிறார்கள் என்றால் அதைப்பற்றிச் சிந்திக்க எல்லாக் கட்சிகளுக்கு பொறுப்பு உண்டு. இது தேசியப் பிரச்னை.

குற்றச்சாட்டுகளைப்பற்றிப் பேசும்பொழுது பொறுப்புணர்ச்சியோடு நாட்டிலே அதைத் தீர்க்கும் எண்ணத்தோடு செயல்படாவிட்டால் உண்மை வராமல் போகிறது, அதனால் நம் நாடு சீர்கேடு அடையும். இதன்காரணமாக நாம் இதுவரையிலே எந்தெந்தக் கொள்கைகளை நெஞ்சில் நிறுத்திப் போற்றி வந்தோமோ அவைகளுக்குத் தீங்கு ஏற்படும் அளவில், மனிதத் தன்மையே பழிக்கப்படும் அளவிற்குப் போகும் என்ற நிலைமையை இந்தச் சர்க்காருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதல் காரியமாக நிலச்சீர்திருத்தம், இரண்டாவதாக உணவு தான்ய, அத்தியாவசிய தான்யங்களின் விநியோகத்தை இராஜ்ய சர்க்கார் ஏற்று நடத்த வேண்டும். இதில் மத்திய அரசின் குறுக்கீடு எதுவும் இல்லை என்று கருதுகிறேன். இதைச் செய்ய முடியும். இதைச் செய்வது கடினம் என்பது தெரியும். இதைச் செய்வதற்குச் சகல கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை என்பதும் எனக்குத் தெரியும். எனவே, இத்தகைய நீதியில் முயற்சிகளைச் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று தண்டோரா காணிகளைச் செய்துவிட்டதாகக் கூறினால் மட்டும் போதாது.

நேற்றுகூட பத்திரிகையில் பார்த்தோம், கள்ளமார்க்கெட்காரர்கள் பிடிக்கப்பட்டார்கள், பல நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மூட்டை தானியங்கள் பிடிக்கப்பட்டன என்று இருந்தால் மட்டும் போதுமா? ஆகவே, இது எவ்வளவு கடினமாக இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையில், எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் இங்கே சபையில் உள்ள,

1973 ஆகஸ்டு 10] *[திரு. மணலி சி. கந்தசாமி]*

நாட்டில் நல்ல அக்கறை கொண்டுள்ள கட்சிகள் உங்களுக்குக் கைகொடுத்து உதவத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது கடினமாக இருந்தாலும், அதை எளிதாக்குவதற்கு எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு உண்டு என்ற அடிப்படையில் அத்தியாவியப் பண்டங்களை நீங்கள் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய வேண்டும். அதைப் பல்வேறு கடைகளுக்குக்கூட கொடுக்கலாம். சர்க்கார் இலாக்காவிலேயே ஸ்டோர்களை நடத்த வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அது அசாத்தியம் என்றாலும், கடைக்காரர்களிலேயே நாணயமானவர்களைத் தகுந்த செக்யூரிட்டி கட்டச் சொல்லி ஒழுங்காகச் செய்ய வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் அதைப்போன்ற கடைக்காரர்களை நியமிக்க வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் நாட்டிலே அமளி துமளி ஏற்படும். எனவே, இதில் தயக்கம் காட்டக் கூடாது. எனவே, எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஆளுங்கட்சி தயாராக வேண்டும். அப்படி ஒத்துழைப்பு கொடுக்காத கட்சிகளைப்பற்றி, வேண்டுமென்றே விஷமம் செய்ய இருக்கிறார்களே தவிர, ஆக்கபூர்வமான பிரச்னையைத் தீர்ப்பதற்காக இல்லை என்ற நிலைமைக்கு மக்கள் அவைகளைப்பற்றிப் புரிந்துகொள்வார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இத்தகைய ரீதியில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே கள்ள மார்க்கெட் எப்படி ஏற்படுகிறது? கள்ளப்பணம் இருக்கிறது, அதைச் சும்மா வைத்திருக்க முடியுமா? அதைப் பல்வேறு விதங்களிலே பயன்படுத்த வேண்டும். ஐயாயிரம் கோடிக்கு இந்த நாட்டிலே கள்ளப்பணம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஐயாயிரம் கோடிக்கு இந்த நாட்டிலே கள்ளப்பணம் இருந்தால் இந்த நாடு உருப்படுமா? இதைத் திருத்துவதற்கு, இதைத் தடுப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசு சிந்திக்க வேண்டும், நான் உங்களைக் குறை கூறவில்லை. ஐயாயிரம் கோடி என்றால் அது சின்ன விஷயம் இல்லை.

டாக்ஸ் எவேஷனும் தேசத்துரோகம்தான், அதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. வரியைக் கொடுக்காமல் இருப்பவர்களுக்கும், வரியை ஏய்ப்பவர்களுக்கும் வித்தியாசம் இல்லை. வரியைக் கொடுக்காமல் இருப்பதும், வரியை ஏய்ப்பதும், கள்ளப் பணத்தை வைத்திருப்பதும் நாட்டுக்குத் துரோகம்தான். இவைகளினால் நாட்டின் பொருளாதாரம் பாழடிக்கப்படுகிறது. இவைகளிலே நடிகர்கள் மட்டுமல்ல, எல்லா நடிகர்களும், எல்லா நடிகைகளும், பணக்காரர்களும் அல்லது யார் சம்பந்தப்பட்டிருந்தாலும், ஐயாயிரம் கோடி எந்தெந்த இடத்திலே இருக்கிறது என்று பார்க்க வேண்டும். இது சாமான்ய

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 ஆகஸ்டு 10

விஷயமா? இதை எப்படிக் கண்டுபிடிப்பது? இதை எடுத்தால் சட்டம் என்ன சொல்கிறது? பணத்தைப் பறிமுதல் செய்கிறது அல்லது அபராதம் போடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களையெல்லாம் சுட வேண்டும், அல்லது ஆயுள் தண்டனை அளிக்க வேண்டும். மத்திய சர்க்கார் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இயற்றி கட்டுப்படுத்துவதைத்தவிர, வேடிக்கை விளையாட்டாகச் சொல்லி எதிர்க்கட்சிகளை வென்றுவிட்டோம் என்று பாயிண்ட் கெயின் பண்ணிச் சொல்வதில் பயனில்லை. ஆழமான நெருக்கடியில் இருக்கிறோம். இதிலே பொறுப்புணர்ச்சி காட்டுவது அவசியமானது.

நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி இப்போது கொண்டுவந்த சட்டத்தையும் அதிகமாகத் தாக்கக்கூடியவர்கள் இந்தத் தரப்பிலும் பல பேர் இருக்கிறார்கள். கோயில் நிலங்களை எடுக்க வேண்டுமா என்று சாமி மீது ஆவேசம் வந்து பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். இது வேடிக்கை விளையாட்டல்ல. நாட்டின் பொருளாதாரத்தைச் சமனப்படுத்த வேண்டுமென்றால் உற்பத்தி முறையில் இருக்கும் அவக்கேடுகளை நீக்கியாகவேண்டும். பாவலாக எல்லோர் கைக்கும் வாக்கூடிய விதத்தில் நிலச்சீர்திருத்தம் அவசியம். அப்போதுதான் கொள்முதல் செய்பவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கொள்முதல் செய்ய முடியும், ஏகபோகக் கொள்முதல் இருக்காது. இதிலே கூட இந்தச் சர்க்கார் ஒருசில விஷயங்களைச் செய்திருந்தாலும் கூட, எதிர்ப்பு வந்த பிறகு இந்தச் சர்க்கா னிடத்திலே தயக்கம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறேன். நமக்கு ஏன் தலைவலி என்று விட்டுவிட்டார்கள். எவன் சொத்தை எவன் எடுத்துக் கொண்டால் என்ன என்ற கண்ணோட்டத்தில் சென்றால் இந்த நாட்டுக்கு நல்லது செய்தவர் களாக ஆகமாட்டார்கள்.

பொருளாதார சீர்கேட்டுக்கு மத்திய சர்க்காருக்குப் பெரும் பொறுப் புண்டு. அதை நீங்கள் பின்பற்றுவதில் உள்ள ஊனங்களையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் சில கள்ளமார்க்கட்காரர்களைப் பாதுகாப்புக் கைதியாகப் போட்டிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மகிழ்ச்சிகரமான செய்தியாக இருக்கிறது. இன்றைக்கு கள்ளமார்க்கட்காரர்களைச் சிறையில் வைக்கக்கூடிய நிகழ்ச்சி தொடர்ந்தால் நிச்சயமாகப் புதிய சிறைச்சாலைகளைக் கட்டியாக வேண்டிய நிலைமை ஏற்படும்.

மனிதன் தரம் குறைந்திருக்கிறது. மனிதன் பிசாசு மாதிரி பணத்தைச் சம்பாதித்தாக வேண்டுமென்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இந்த வீழ்ச்சி எல்லோரையும் பிடித்திருக்கிறது.

1973 ஆகஸ்டு 10] *[திரு. மணலி சி. கந்தசாமி]*

ஒருவருக்கொருவர் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். எதற்காக இந்தச் சட்டசபையில் வந்திருக்கிறோம் என்று கூடத் தோன்றுகிறது. சாமியாராகப் போய்விடலாமா என்று கூடச் சில சமயங்களில் தோன்றுகிறது. வாழ்க்கையில் வெறுப்படைந்தவன் நான். அரசியலில் ஈடுபட்டு புனிதமான வாழ்க்கை நடத்தவேண்டுமென்று விரும்பினேன். ஆனால் இன்றைய அரசியல் நிலைமையைப் பார்க்கும்போது—எனக்குக் கொஞ்சம் சித்த வைத்தியம் தெரியும்—மொட்டையடித்துக் கொண்டு சாமியாராகப் போய் விடலாம் என்று உள்ளபடியே தோன்றுகிறது. அந்த நிலைமையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு என்னை விரட்டி விடாதீர்கள். இன்னும் கொஞ்ச நாள் அரசியலில் வைத்திருங்கள்.

இன்றைக்கு ஊழலைப் பற்றிப் பேசப்படுகிறது. ஊழல் இல்லையென்று நிச்சயமாக ஆளும் கட்சிகூடச் சொல்ல முடியாது. இந்தச் சமுதாயத்தில் நெருக்கடி முற்ற முற்ற ஊழல்களும் கூட வளர்ந்து கொண்டே வருகிறது. இது ஒரு தேசியப் பிரச்சினை. எந்த ராஜ்யத்தில் இல்லை? மத்திய சர்க்காரில் இல்லையா? குறிப்பிட்ட ஊழலை எடுத்துக் கொண்டு சவால் விட்டு ருசுப்பிக்கும் அளவுக்கு வந்தால் நன்றாக இருக்கும். இதற்காகப் பொது மக்கள் மத்தியில் கிளர்ச்சி செய்து போராட்டம் நடத்துவதாக இருந்தால் அதற்குக்கூட நான் தயார். ஆனால் புகார்ப் பட்டியல் தயார் செய்து டில்லிக்குச் சென்றது சரியான 'டாக்டிக்ஸ்' அல்ல. (ஆரவாரம்) இதை நான் சொல்லுவது கை தட்டுவதற்காக அல்ல; மாண்புமிகு அங்கத்தினர் திரு. சின்னசாமியைக் கேட்டுக் கொள்கிறேன், இதெல்லாம் சந்தோஷப்படத் தக்க விஷயம் அல்ல. நான் வேதனையின் அடிப்படையில் பேசுகிறேன். பாயிண்ட் ஸ்கோர் பண்ணுவதற்காகப் பேசவில்லை. அந்தப் புகார்ப் பட்டியலை இங்கே வைத்திருக்கலாம், மக்கள் மன்றத்தில் வைத்திருக்கலாம். நூற்றுக் கணக்கான கூட்டங்களைப் போட்டுப் பேசி இருக்கலாம். அதற்காக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து சிறைப்படுத்தினால் கூட போகத் தயாராக இருக்கலாம். ஒரு உண்மையைச் சொல்வதற்காகச் சிறைக்குப் போக வேண்டுமென்றால் போகத் தயாராக இருக்க வேண்டும்.

இப்போது மக்கள் மத்தியில் ஒரு பிரமையை வளர்த்து விட்டிருக்கிறார்கள். இந்த மந்திரிசபை கவிழப் போகிறது, இந்திரா காந்தி தலையிடப் போகிறார், விசாரணை நடக்கப் போகிறது என்ற அந்தப் பிரமை இன்று தகர்ந்தவுடன் மக்கள் மத்தியில் விரக்தி ஏற்பட்டிருக்கிறது. இந்த மந்திரிசபை இறங்க வேண்டுமென்றால்—இரண்டரை வருஷம் ஆகிவிட்டது—இரண்டரை வருஷம் சொல்லிக்கொண்டே இருக்கப் போகிறார்களா? இப்படிச் சொல்லிக் கொண்டே இருப்பதால் அவர்கள் இறங்கப் போகிறார்களா என்றால் இறங்க மாட்டார்கள்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1973 ஆகஸ்ட் 10

அதிகாரத்திற்கு வந்திருப்பது சும்மா அல்ல. ஓட்டு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இல்லே—கலகம் செய்து இந்த மந்திரிசபையை இறக்க வேண்டுமென்றால் அதற்கும் தயாராக இருக்கிறேன்—என்னைப் பொறுத்த வரையில். இல்லே—ஐந்து ஆண்டுகளில் மீதி இருக்கும் ஆண்டுகளில் இந்த மந்திரிசபை என்ன விதத்தில் ஊழல் மிக்க அரசு என்று மக்கள் மத்தியில் பேசி மக்களை நம் பக்கம் கொண்டு வரவேண்டும். அடுத்த தேர்தல் வந்தால் நாங்கள் யாரோடு சேருவது என்று யோசித்துக் கொண்டிருக்கின்ற நிலைமையும் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மணலி அவர்கள் பகிரங்கமாக, பொதுக்கூட்டங்களில் ஊழல்களைப் பற்றிப் பேச வேண்டும் என்றார்கள். சில பேர் அப்படிப் பேசுகிறார்கள். பின்னால் நீதி மன்றத்தில் வழக்குப் போட்டால் நாங்கள் அப்படிப் பேசவில்லை என்று நீதி மன்றத்தில் சொல்லிவிடுகிறார்கள். பேசினேன் என்று நீதிமன்றத்தில் சொல்லும் அளவுக்கு ஆண்மை இல்லாமல் இருப்பதால் அவர்கள் பேச்சில் அதையும் ஒரு பொருளாக ஆக்கிக்கொள்ள வேண்டுகிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: அதற்குப் பின்னால் வருகிறேன். அடுத்த படியாக, ஆளும் கட்சிக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். சுதேசமித்திரன் தலையங்கம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். தயவு செய்து படித்துப் பார்க்க வேண்டும். திருத்தணி தலத்தில் அங்கு இருக்கக்கூடிய கோயில் தர்மகர்த்தா நடந்து கொண்ட விதத்தைப் பற்றிப் பத்திரிகையில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். அந்த ஸ்தலத்திற்கு தரிசனம் செய்ய வந்திருந்த பெண்ணை அங்கிருக்கக்கூடிய தர்மகர்த்தா ஒருவர் கெஸ்ட் ஹவுசில் துன்புறுத்தியிருக்கிறார். கணவன் வந்து தடுத்திருக்கிறான். இதைப் பற்றிப் பக்தவத்சலம் அவர்களாலே எழுதப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை, உங்களைப் பற்றி அவதூறு கூறக்கூடிய நிலைமை இருப்பதைத் தடுக்க வேண்டாமா? இந்த அளவுக்கு நிலைமை இருக்குமானால் உங்களை நீங்கள் சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டாமா? சில சமயங்களில் தாழ்ப்புணர்ச்சி காரணமாகத் தவறான குற்றச்சாட்டுகளைக் கூறி சேற்றை வாரி வீச வேண்டுமென்று கூறியிருக்கலாம். ஆனால் திருத்தணியில் நடந்தது . . .

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, திருத்தணி ஓய்வு விடுதியில் நடைபெற்ற சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு மணலி கந்தசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். உடனடியாக அதுபற்றி விசாரிக்கப்பட்டு தவறு

1973 ஆகஸ்ட் 10] *[மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்]*

செய்த அறங்காவலர் அந்தப் பதவியில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மணலி சி. கந்தசாமி : அதைத்தான் திரு. பக்தவத்சலம் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவரை அறங்காவலர் வேலையிலிருந்து நீக்கியது மாத்திரம் போதாது. கடுமையான குற்றத்திற்கு இதுதான் தண்டனையா என்ற கேள்வியை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அது போதாது. இப்படிப் பட்டவர்கள் இருப்பார்களானால் அவர்களை ரோட்டில் நிறுத்தி சவுக்கால் அடிக்கவேண்டும். இவ்வளவு ஈனத்தனமான காரியத்தைச் செய்த . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதிலே விசாரணை இல்லாமல் எதுவும் செய்ய முடியாது. நம்முடைய அரசு அரிசன மக்களை அறங்காவலர் களாக ஒருவரையாவது நியமிக்க வேண்டுமென்ற கட்டாயமான முடிவை எடுத்ததற்கிணங்க ஒரு அரிசன தோழன் அங்கு அறங்காவலராக நியமிக்கப் பட்டார். அந்த அரிசனத் தோழர் செய்த தவறுதான் அது. விசாரிக் காமல் அந்தத் தோழர் மீது நடவடிக்கை எடுத்துவிட்டால், அரிசனத் தோழர் மீது அரசாங்கம் விசாரிக்காமலேயே கடுமையான நடவடிக்கை எடுத்துவிட்டது என்ற புகார்கூட வரும். விசாரித்து, உண்மை என்று ஆகி விட்டால் நிச்சயமாக ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

புலவர் சி. பழனிச்சாமி : பழனி அறங்காவலரைப் பற்றியும் கூட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு, இது வேறு.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, அரிசனங்களை அறங்காவலர்களாகப் போட்டாலும் அவர்கள் தங்களுடைய பொறுப்பை உணர்ந்து காரக்டரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட பெரிய தவறைச் செய்தவர் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந் தாலும் சரி, தண்டிக்கப்பட வேண்டியவர்தான். தீர விசாரித்துத் தண்டனை கொடுத்தால் அதனால் ஆத்திரம் ஒன்றும் ஏற்பட்டுவிடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர் சஸ்பென்ட் செய்து வைக்கப் பட்டிருக்கிறார். பிறகு என்னிடத்தில் கூட வந்தார். நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ., திரு. பாலையா அவர்கள்கூட அப்போது என்னைப் பார்க்க வந்திருந்தார்கள் என்று நினைக்கிறேன்—தன்னைத் தற்காலிக மாக விலக்கி வைத்திருக்கிறார்கள் என்றும் மன்னிக்க வேண்டுமென்றும்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

கூறினார். 'இவ்வளவு பெரிய தவறைச் செய்த நீங்கள் என் முகத்தில்கூட விழிக்கக்கூடாது, வெளியே போய்விடுங்கள்' என்று சொன்னேன். நிச்சயமாக விசாரணை செய்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி அமைதிபடுத்தினேன்.

திரு. மணலி சி. கந்தசாமி: ஆகவே ஆளும் கட்சியினரை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். பல நடவடிக்கைகள் உங்கள் பொதுக்குழுவில் வந்திருக்கின்றன. பல நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த நாட்டின் நன்மையைக் கருதி, நீங்கள் ஏற்றிருக்கும் பணியைக் கருதி, உங்கள் மத்தியில் தூய்மையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள், அவதூறுகள் கூறுவதை விட்டுவிட்டு, யாரும் சந்தேகிக்க முடியாத அளவிற்கு ஒரு தூய்மையான வாழ்க்கையை நடத்த வேண்டும்.

நான் நல்ல முறையில்தான் சொல்கிறேன். நான் கூடச் சொல்லியிருக்கிறேன், யார் வந்தாலும் ஒரு கும்பிடு போடு ஐயா என்று. நல்லெண்ணத்தோடு சொல்கிறேன். என்னைப் பொறுத்தவரையில் நல்லவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுக்குப் பணிய நான் தயாராயிருக்கிறேன். ஒழுக்கக்கேடு ஒரு சீர் கேடாக வளர்ந்து கொண்டிருக்கிறது. எல்லாக் கட்சிகளிலும் ஒழுக்கமின்மை தலைதூக்கி நிற்கிறது. நாட்டின் சீர்குலைவிற்கு ஒரு ஆரம்பமாக அது தென்படுகிறது. அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்ய எடுத்துக் கொள்வது போன்ற பல்வேறு விஷயங்களில் உள்ள ஊனங்களைத் துடைத்துக் கொள்ள இந்த விவாதத்தை அடிப்படையாக வைத்துக்கொள்ளவேண்டும். தப்பானவற்றிற்குப் பதில் சொல்லவேண்டியதில்லை. நீங்கள் என்ன போக்கை அனுஷ்டிக்கப் போகிறீர்கள், தமிழக மக்களின் நல்வாழ்விற்கு நடந்த இவ்விவாதங்கள் எந்தளவிற்கு உபயோகமாக இருக்கப் போகிறது என்பதைத் தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் விரும்புவதெல்லாம் விலை குறையுமா, நாம் நல்லபடி வாழ்வோமா, சாப்பிடுவோமா என்ற அடிப்படையில் தான் பார்க்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஒரு விஷயத்தை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். போடியில் சில மாணவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்கும் போடப்பட்டிருக்கிறது. மாணவர் சமுதாயத்தைத் துன்புறுத்த வேண்டாம், அவர்கள் மீதுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கிக்கொண்டு ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 10]

திரு. நா. வெ. குருசாமி : தலைவர் அவர்களே, எங்கள் கட்சித் தலைவர் திரு. வெங்கடசாமி அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த அரசின் மீதான நம்பிக்கையின்மைத் தீர்மானத்தையும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வந்துள்ள கண்டனத் தீர்மானத்தையும் முழுமனதோடு ஆதரித்து என் கருத்துக்களை சிலவற்றைக் கூற ஆசைப்படுகிறேன்.

முக்கியமாக, கடந்த மூன்று நாட்களாக இந்த மன்றத்தில் விலைவாசிகள் உயர்ந்து விட்டன என்றும் பாட்டாளி மக்கள் எல்லாப் பண்டங்களையும் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை இருக்கிறது என்றும் தெளிவான முறையில் சொல்லப்பட்டது. விலைவாசி உயர்வைப்பற்றிச் சொன்னால் முதல் அமைச்சர் அவர்களும், அமைச்சர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும் மத்திய அரசைத்தான் காட்டுகிறார்கள். நம் மாநிலம் மத்திய அரசின் தவறான கொள்கையினால் வேதனைக்குள்ளாகியிருப்பதைப் பற்றி இங்கு ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

அடுத்து, விவசாயிகளைப் பொறுத்தவரையில் நேற்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். விவசாயிகளையும் மற்ற பாட்டாளிகளையும் அவர்கள் அரசாங்கத்திலிருந்து வாங்கியிருக்கும் கடன்களுக்காக ஜப்தி செய்து அவர்களைத் துன்பப்படுத்துகிறார்கள் என்று தெளிவான முறையில் எடுத்துக் கூறினார்கள். அதுகுறித்து இந்த அரசாங்கம் தக்க கவனம் செலுத்தி ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனத்தில் 4,400 மூட்டை நெல் காணவில்லை போய்விட்டதாக பல மாதங்களுக்கு முன்பு கூறப்பட்டது. வளவனூரில் 790 மூட்டைகள் கோடவுனில் இருந்து காணவில்லை. அதன் பேரில் இந்த அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறோம்.

அடுத்தபடியாக, மின்சாரத்தில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்றுவிட்டதாகப் பத்திரிகைகளில் செய்தி வந்தது. ஆனால் கடந்த பத்து நாட்களாக எங்கள் பகுதியில் மின்சாரம் பாதி நேரத்திற்குத்தான் வந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்க மின்சாரத்தில் நாம் தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்று எப்படிக் கூற முடியும்? தன்னிறைவு பெற்றுவிட்டதாக அமைச்சர் அவர்கள் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இப்படிக் குறைத் திருப்பதுபற்றி ஏன் பத்திரிகை வாயிலாக மக்களுக்கு அவர்கள் தெரிவிக்க வில்லை என்று கேட்க விரும்புகிறேன்.

[திரு. நா. வெ. குருசாமி] [1973 ஆகஸ்ட் 10

மதுவிலக்கை எடுத்துக்கொண்டால், மதுவிலக் விஷயத்தில் இந்த அரசு செய்த முடிவால் பல மக்கள் இன்னலுற்றிருக்கிறார்கள். ஆகவே இந்த மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தினால் இன்று தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கானவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். படித்த இளைஞர்கள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், இப்பேர்ப்பட்டவர்கள் வேலையில்லாமல் நடுத்தெருவில் நின்றுகொண்டிருக்கும் அவல நிலைதான் இருக்கிறது. குறிப்பாக சட்டசபை உறுப்பினர்கள் ஹாஸ்டலுக்கு வந்து பார்த்தால் தெரியும். ஒரு சட்டசபை உறுப்பினரைச் சுற்றிக்கொண்டு நூறு பேர்கள் கிரிய வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், வேலையில்லாத் திண்டாட்டம்தான். ஆகவே, அதிகப்படியான வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வழிவகைகள் காண வேண்டும்.

மேலும், ஆசிரியர்கள் பயிற்சி பெற்றும் வேலை கிடைக்காத நிலை இருக்கிறது. லஞ்சம், ஊழல் என்று சொன்னால் எங்கே, எப்போது என்று கேட்கிறார்கள். ஒரு ஆசிரியர் பதவிக்கு ஒரு பஞ்சாயத்து யூனியனில் அல்லது வேறு எங்கேயாவது வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால் ரூ. 3,000, ரூ. 5,000 என்று லஞ்சம் கொடுத்தால்தான் வேலை பெறமுடியும் என்ற நிலை இருக்கிறது. அந்த நிலையைச் சுட்டிக்காட்டினால் எங்கே கொடுத்தார்கள் என்று எங்களைத் திருப்பிக் கேட்டால் நாங்கள் என்ன போட்டோவா பிடித்துக் காட்டமுடியும்? எங்கள் பகுதியில் கூட, ஆண்டிப்பட்டி பகுதியில்கூட, அம்மாதிரி லஞ்சம் வாங்கப்படுகிறது. ஆகவே இதில் தக்க கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆளும் கட்சி அராஜகங்கள் பற்றியெல்லாம் உறுப்பினர்கள் பேசினார்கள். நடந்து முடிந்த திண்டுக்கல் தேர்தலில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எம்மாதிரி அராஜகங்கள் நடத்தினார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். திண்டுக்கல் தேர்தல் சமயத்தில் தேர்தல் கூட்டத்தில் முதலமைச்சரவர்கள் கல்லுப்பட்டி சமீபம் வில்லூரில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர் சித்தன் அவர்களை ஆதரித்துப் பேசுவதற்காக நானும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களும் ஒரு ஊருக்குச் சென்று கொண்டிருந்தோம். இடையில் முதல் அமைச்சர் அவர்கள் வில்லூரில் பேசிக்கொண்டிருக்கும்போது, நாங்கள் குறிப்பிட்ட நேரத்திற்குத்தான் சென்று கொண்டிருந்தோம். ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள் வில்லூரில்; ஆகவே, வில்லூருக்கு

1973 ஆகஸ்ட் 10] *[திரு. நா. வெ. குருசாமி]*

இரண்டு மைல்களுக்கு அப்பால் ஒரு இடத்தில் தன்னந்தனியாக இரவு 10-30 மணிக்கு எங்கள் கார் வழிமறித்து நிறுத்தப்பட்டது. சிவாஜி கணேசன் அவர்களும் வில்லூரில் ஒரு கூட்டத்தில் பேச வேண்டியிருந்தது. முதல் அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே இந்த வழியாகப் போகக்கூடாது என்று சொன்னார்கள். இவை எல்லாம் அராஜக மாகத் தெரியவில்லையா என்று கேட்கிறேன்.

அதோடு இன்றையதினம் ராஜ்ய சபா உறுப்பினராக இருக்கும் ராஜேந்திரன் அவர்கள் பல கூட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், பெரும் தலைவர் திரு. காமராஜ் அவர்கள் சென்ற கூட்டங்களுக்கு இடையூறு செய்வதற்காக அவர்கள் செல்லக்கூடிய பாதையில் முன்னதாக ஐந்து நிமிடங் களுக்கு முன்னால் செல்வார், காமராஜ் அவர்களுக்குப் பேசுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தும்கூட.

திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : ஒரு தன்னிலை விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வில்லூர் என்ற கிராமத்திற்கு முதல் அமைச்சர் அவர்கள் வருகை தருகிற நேரத்தில் இடையில் காவல் துறையினர் தங்களைத் தடுத்து நிறுத்தி வைத்துவிட்டதாக குற்றச்சாட்டு சொன்னார்கள். அந்த நேரத்தில் வில்லூர் கிராமத்தில் நானும் இருந்தேன். வில்லூர் ஒரு சிறிய கிராமம். இரு சாராருடைய கார்களும் சின்னக் கிராமத்தில் ஒரே வழி யில் செல்லவேண்டிய நிலை இருந்தது. மதிப்பிற்குரிய சிவாஜி கணேசன் அவர் களே முதல் அமைச்சர் அவர்கள் பேசிவிட்டுச் சென்றபிறகுதான் அந்தக் கிராமத்திற்கு வருவதாகப் போலீஸ் அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்லி அவர்கள் பக்கத்து கிராமத்தில் இருந்துகொண்டு முதல் அமைச்சர் அவர்கள் சென்ற பிறகு அந்தக் கூட்டத்திற்குச் சென்றார்கள் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் இங்கு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : அதை நான் மறுக்கிறேன். தான் அவ்விதம் இடையில் நிறுத்திவைக்கப்பட்டதைக் குறித்து அந்தக் கூட்டத்தில் சிவாஜி கணேசன் அவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். அப்படியிருக்கும் போது போலீஸ் அதிகாரிகளிடம் அப்படிச் சொல்லியிருக்கிறார்கள் என்பது மறுக்கக்கூடிய ஒரு விஷயமாக இருக்கிறது.

தலைவர் காமராஜ் அவர்களுக்கு செக்காலூர்ணியில் இருந்து உசிலம்பட்டி வரையில் பேச அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. நானும் சென்றிருந்தேன். ஆனால் அனுமதி இல்லாமல் ராஜ்ய சபா உறுப்பினர் ராஜேந்திரன் அவர்கள்

[திரு. நா. வெ. குருசாமி] [1973 ஆகஸ்ட் 10

முன்னதாக ஐந்து நிமிடங்கள் முன்னரே சென்று தலைவர் காமராஜர் அவர்கள் பேசும் கூட்டங்களில் இடையூறு செய்யவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அம்மாதிரி நடந்துகொண்டார்கள். பள்ளப்பட்டிக்கும் நிலக்கோட்டைக்கும் இடையே உள்ள ஒரு கிராமத்தில் எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். ஒரு இடத்தில் திரு. காமராஜ் அவர்கள் செல்லக்கூடிய இடத்திற்கு ஐந்து நிமிடங்கள் முன்னதாகச் சென்று, ஏதோ தனக்குக் கூட்டம் கூடிவிட்டதுபோல் பேச ஆரம்பித்திருக்கிறார். அந்த ஊர் மக்கள் இங்கு இப்போது கூட்டம் நடத்த உங்களுக்கு அனுமதி இல்லையே, ஏன் ஐயா தொந்தரவு செய்கிறீர்கள் என்று கேட்டதற்குத் துப்பாக்கியைக் காட்டியிருக்கிறார்கள்.

திரு. ஆ. முனியாண்டி: அத்தக் கூட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டது. முறையாகத்தான் நடந்தது. துப்பாக்கியைக் காட்டியதாகச் சொல்வதை மறுக்கிறேன். அதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை.

திரு. நா. வெ. குருசாமி: துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தியதைக் கண்டித்தவர்கள் மேல் கேஸ் போடப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. முனியாண்டி: எந்த வகையிலும் அது ஆதாரமற்ற செய்தி.

திரு. நா. வெ. குருசாமி: நான் அதற்கான ஆதாரத்தைக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, திரு. எஸ். எஸ். ஆர். அவர்கள் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தன்னிடத்தில் துப்பாக்கி எதுவும் இல்லை, துப்பாக்கிக்கான லைசென்சு கிடையாது என்று அறிக்கை விட்டு இருக்கிறார்கள் என்பதைத் தவறு கூர்ந்த தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: அவர் அறிவித்து இருக்கலாம். ஆனால் அங்கேயுள்ள மக்கள் துப்பாக்கியைக் காட்டினார் என்று சொன்னார்கள். நாங்கள் சென்ற நேரத்தில் அப்படிச் சொன்னதால்தான் நான் சொன்னேன். அப்படி அவர்கள் சொன்ன நேரத்தில் நீங்கள் அதற்குக் கவலைப்பட வேண்டாம், அதற்கு ஒரு முடிவு கட்டுவோம் என்று சொல்லிவிட்டு வந்தோம். துப்பாக்கி அவரிடத்தில் இல்லை என்று சொல்வதை நான் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை.

1973 ஆகஸ்டு 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிவடைந்து விட்டது.

திரு. நா. வெ. குருசாமி: இன்னும் 5 நிமிடங்கள் தாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சித் தலைவர் ஏற்கெனவே அதிக நேரம் பேசியிருக்கிறார். இன்னும் அவர்கள் விவாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில்வேறு பேசவேண்டும். நேரமில்லை, முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. நா. வெ. குருசாமி: 10 நாட்களுக்கு முன்னால் ராஜபாளையத்தில் ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ரயில் நிலையத்தில் ரயிலை நிறுத்தி ஒரு பொதுக்கூட்டம் போடவேண்டுமா? ரகளை செய்து அந்த ரயிலை நிறுத்தி இருக்கிறார்கள். டிரைவரை அடித்து அராஜகம் செய்து இருக்கிறார்கள். இதையெல்லாம் செய்வது சரியல்ல என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த அரசு சர்க்கார் புத்தகங்களில் சரித்திரம் தவருகப் போடப்பட்டு இருக்கிறது. மவுண்ட்பேட்டன் பிரபு கடைசி வெள்ளைக்கார கவர்னர்-ஜெனரல் இந்தியாவிற்கு, அவருக்குப் பிறகு முதல் ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் என்று போட்டிருக்கிறது. ராஜாஜி அவர்கள் கவர்னர்-ஜெனரலாக இருந்த விவரம் மறைக்கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். நிறைய அளவிற்கு தி.மு.க. பிரசாரம் பள்ளிப் புத்தகங்களில் அதிக மாகக் காணப்படுகிறது. அது முறையா என்று கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம் அவசரக்கோலமாகவும், அலங்கோல மாகவும் நிறைவேற்றப்பட்டு விட்டதால், அதனால் மக்களுக்கு ஒன்றும் நன்மை செய்ய முடியவில்லை. அதை செலக்ட் கமிட்டிக்கு விட்டு, மக்களின் அபிப் பிராயத்தைக் கேட்டு நிறைவேற்றலாம் என்று சுதந்திராக் கட்சியின் முன்னாள் தலைவர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கோரிக்கை எழுப்பியபோது அதை மறுத்து விட்டார்கள். இப்போது அந்தச் சட்டம் சரியான முறையில் அமல் படுத்தப்படுமா அல்லது அந்தச் சட்டம் வாபஸ் பெறப்படுமா என்று இந்த அவையில் தெளிவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்த் துறையைப் பற்றி எடுத்துக்கொள்வோம். டன்லப் கம்பெனியில் 30—7—1973 அன்று தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்தி உண்ணாவிரதம் இருக்கத் திட்டமிட்டார்கள். அந்த நேரத்தில்

[திரு. நா. வெ. குருசாமி] [1973 ஆகஸ்ட் 10

எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். கே. சீனிவாசன், ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், குசேலர், முன்னாள் மேயர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரைக் கைது செய்தார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்றால் சட்டத்தில் எந்த விதியை மீறினார்கள் என்பதற்காகக் கைது செய்யப்பட்டார்கள் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். எஸ்.பி., டி.எஸ்.பி. மற்றும் பல அதிகாரிகளைக் கேட்டும் அவர்கள் விளக்கம் தர மறுத்து விட்டார்கள். எந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்பது தெரிய வேண்டாமா? தலைவர்களுக்கே இப்படிப்பட்ட நிலைமையென்றால், சாதாரண மக்களுக்கு போலீசார் எந்த அளவுக்குத் துன்பம் தருவார்கள் என்று தெரியவில்லை.

போடியில் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம். அங்கே 16 வயதுப் பையன் பேரில் பல வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அவன் அடிக்கடி வாய்தா சென்று வர முடியாததால் அவன் பேரில் இருக்கும் கேஸ்களை சர்க்கார் உடனடியாக வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊழல், லஞ்சம் என்ற அடிப்படையில் நான் முன்பே பட்ஜெட் கூட்டத் தொடரில் குறிப்பிட்டேன். பெரியகுளம் தாலூக்காவில் ஒரு தாசில்தார் இருந்தார். அவர் அதிகமாக லஞ்சம் வாங்கினார் என்று சொன்னேன். இது வரையில் அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. நான் கேள்விப்படுகிறேன், அவர் பெரியகுளத்தில் தாலூகா தாசில்தாராக இருந்தவர். இன்று மதுரை ஜில்லாவில் ஏதோ ஒரு வேலியில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். அவருக்கு என்ன பிரமோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் இல்லை. 10 நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் 10 நிமிடத்திற்கு மேல் பேசி இருக்கிறீர்கள்.

திரு. நா. வெ. குருசாமி: லாரிகளுக்கு இப்போது ஏன் மஞ்சள் பெயின்ட் அடிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கட்சிக்குக் கொடுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. திரு. ஏ. ஆர். சுப்பையா அவர்கள் பேசுவார்கள்.

திரு. நா. வெ. குருசாமி: நான் சொல்ல வந்த கருத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

THIRU B. VENKATASWAMY: You please allow him to finish his idea.

1973 ஆகஸ்ட் 10]

திரு. நா. வெ. குருசாமி : ஏன் இந்த லாரிகளுக்கு மஞ்சள் பெயின்ட் அடிக்கவேண்டுமென்று சொன்னார்கள் ? மஞ்சள் பெயின்ட் அதிகமாக யாரிட மாவது தேங்கிவிட்டதா ? எந்தக் காரணத்தால் அடிக்கச் சொன்னார்கள் என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) எதற்காகச் சிரிக்கிறீர்கள் . . . காரணம் என்ன என்று தெரியவில்லே.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலேவரவர்களே, ஒரு உறுப்பினர் பேசு கிற நேரத்தில் மற்றவர்கள் உட்கார்ந்த இடத்திலிருந்து கேள்விகள் எழுப்பினல் நன்ருக இருக்காது. பொருத்தமாக இருக்காது. அதைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன் : தலேவரவர்களே, நான் ஒரு சிறு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். திரு. குருசாமி அவர்கள் பேசுகிறபோது ஒவ்வொரு முறையும் ஏதாவது கூறிவிட்டு முடிக்கிற நேரத்தில் 'அச்சப்படுகிறேன்', 'இப்படி இருக்கும் என்று சந்தேகிக்கிறேன்' என்று சொல்வதற்குப் பதிலாக 'ஆசைப்படுகிறேன்' என்று சொன்னதால் அது சிரிப்பை உண்டாக்கி விட்டது. அதைத் தவருக எடுத்துக்கொள்ளவேண்டாம், வேண்டுமென்று சிரிக்கவில்லே என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி : இந்த மாதிரி லாரிகளுக்கு பெயின்ட் எதற்காக அடிக்கச் சொன்னர்கள் என்று கேட்கிறேன். மற்ற மாகாணங்களில் இப்படிப் பட்ட சட்டங்கள் எதுவும் இல்லே. அப்புறம் அரசாங்கம் மக்கள் மொட்டை அடித்துக்கொள்ளவேண்டும், இந்தக் கலர் சட்டைதான் போட்டுக்கொள்ள வேண்டும் என்று கூட சட்டம் கொண்டு வருவார்கள் போல் இருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான முரண்பாட்டுச் சட்டங்கள் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்லவன் போக்குவரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 1 கோடி ரூபாய் நஷ்டம் என்று சொன்னர்கள். இந்த ஆட்சி சரியான நிர்வாகத் திறமையில்லாத தால்தான் இப்படிப்பட்ட நஷ்டம் ஏற்படுகிறது என்று கூறி, இப்படிப்பட்ட காரணங்களால் இந்த அரசு மீது நம்பிக்கையில்லே என்று தெரிவித்து, எங்கள் கட்சியின் சார்பாகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிக்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

[1973 ஆகஸ்ட் 10

திரு. ஏ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, இந்த அவையிலே இன்று இரண்டு விதமான தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஒன்று நம்பிக்கையில்லாத் தீர்மானம்; மற்றொன்று இந்த அரசின் கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானம். அவை இரண்டையும் நான் வன்மையாகக் கண்டித்து என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்கிறேன்.

'கொள்கையற்ற கொள்கை' என்ற 'சுலோகன்' புதிதாக உருவாக்கப் பட்டிருக்கிறது நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களால். எந்தப் பிரச்னையில் இந்த அரசு கொள்கையில்லாமல் இருக்கிறது என்பதை அவர்கள் சொன்னால் நன்றாக இருக்கும். இன்று எடுத்துக்கொண்டால் 20 கொள்கைகள் மூலமாக இந்த அரசு நல்ல வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். பஸ் தேசியமயம், பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுத் திட்டம், ஏழைகளுக்குக் கண்ணொளி வழங்கு திட்டம், குடி நீர் திட்டம்—எல்.ஐ.சி. உதவியோடு எல்லாயிடங்களுக்கும் கொடுக்கப்படுகிறது—எல்லோருக்கும் வீட்டு வசதி, நில உச்சவரம்பு 15 ஏக்கர் என்று குறைக்கப் பட்டிருக்கிறது, மேய்ச்சல் தரை, கரும்பு நிலங்களுக்குத் தரப்பட்டிருந்த விதிவிலக்கை ரத்து செய்தது, ஹரிஜனப் பகுதி மக்களுக்கு மின்சார வசதி அக்ரிகல்சுரல் யூனிவர்சிடி புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, வேலிவாய்ப்பு வசதியைப் பெருக்குவதற்காக சிக் மில்களை அரசு எடுத்து இருக்கிறது, கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் ஒழுங்காக விநியோகிக்க அரசு முறை செய்து இருக்கிறது, சைக்கிள் ரிக்ஷா வழங்கப்பட்டிருக்கிறது, திட்டங்களை உருவாக்க தமிழ்நாடு பிளானிங் கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது, இப்படிப் பல திட்டங்கள் செயல்படுகிற நேரத்தில், எந்தத் திட்டத்தில், என்ன குறை கண்டீர்கள்? இன்னும் பல நல்ல திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கிற நேரத்தில் எப்படிக் கொள்கையற்ற கொள்கை என்று சொன்னீர்கள் என்று தெரியவில்லை. பெரும் தலைவர் நாட்டுக்கு நல்லது ஏற்பட வேண்டுமென்று நினைக்கிற தலைவர், நல்ல கொள்கையை வரவேற்ப தற்குப் பதிலாக, கொள்கையற்ற கொள்கை என்று கூறுவது தன்னுடைய கட்சியை வளர்ப்பதற்காக என்று பேசுவது மனதிற்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய பெருந் தலைவர் சொன்னபடி, நாட்டினுடைய வளர்ச்சிக்கு ஒரு திட்டத்தையும் கொடுக்காமல், எதிர்ப்பது என்று ஒரே குறிக்கோளோடு நடப்பது நாட்டின் நன்மைக்கு உகந்தது அல்ல.

1973 ஆகஸ்ட் 10] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

நாட்டில் இப்பொழுது இருக்கக்கூடிய கஷ்டங்கள் எதனால் ஏற்பட்டிருக்கின்றன? அவற்றிற்கு மத்திய சர்க்காரின் கொள்கைதான் காரணம். அதற்கு உதாரணமாக ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அபிவிருத்தி தடைபடுவதற்குக் காரணம் மத்திய அரசினுடைய கொள்கை. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், காதி போர்டு என்று ஒன்று இருந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பணம் ஒதுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. காதி போர்டு செவ்வனே வேலை செய்வதற்கு வாய்ப்பு இல்லை. காதி கமிஷன் ஒரு கிளை வைத்துக்கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 6 மாத காலமாகிறது. கமிஷன் மூட்டுக்கட்டை போட்டுக்கொண்டே இருக்கிறது. காதி போர்டின் வளர்ச்சிக்கு மூட்டுக்கட்டை போட்டுக்கொண்டிருக்கிறது. காதி போர்டின் முக்கியமான வேலைகள், கிராமத் தொழில் வளர்ச்சி, கதர் அபிவிருத்தி, குடிசைத் தொழில் வளர்ச்சி ஆகியவை இதற்கெல்லாம் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் வளர்ச்சி தடைபடுவதற்கு மூட்டுக்கட்டை செய்வதற்காகப் புதிய கமிஷனின் ஒரு கிளை உருவாக்கப்பட்டிருக்கிறது.

- அதே மாதிரி எடுத்துக் கொண்டால் அக்ரிகல்சரல் யூனிவர்சிடி. அதற்குப் பணம் ஒதுக்குவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் பணம் ஒதுக்குவதற்கு வழியில்லை. காரணம், ஏதோ விதிமுறை இருக்கிறது என்பதை வைத்துக் கொண்டு ஐ.ஸி.ஏ.ஆர். மூலம்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்லி வளர்ச்சியைக் கூட தடைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

அதேபோலத்தான் நாஷனல் டெய்ரி டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் உருவாக்கப்பட்டும், அதை அபிவிருத்தி செய்வதற்கு வழி செய்யப்படாமல் இருக்கிறது. அதற்கு மத்திய சர்க்காரின் ஒத்துழைப்பு நமக்குத் தேவை. மத்திய சர்க்காரின் கொள்கையிலே இருக்கக்கூடிய இடைஞ்சல் அபிவிருத்திக்குத் தடையாக இருக்கிறது. மத்திய சர்க்காரின் ஒத்துழைப்பு இல்லை. காவிரிப் பிரச்னையை எடுத்துக் கொண்டால் வாய்தா போட்டுக் கொண்டே போகிறார்கள்.

மின்விசை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் இங்கிருந்து திட்டங்கள் போட்டு அனுப்பினால் அவைகளை யெல்லாம் கோல்டு ஸ்டோரேஜில் வைத்திருக்கிறார்கள். இதை யெல்லாம் நிறைவேற்றியிருந்தால் நமது வளர்ச்சி நன்றாக இருந்திருக்கும்.

சர்க்கரை விநியோகம் என்றால் அவர்களைக் கேட்டுத்தான் செய்ய வேண்டும். மத்திய சர்க்கார் ஒத்துழையாமை என்ற நிலை இருக்கிறது.

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1973 ஆகஸ்ட் 10

நாம் உற்பத்தி செய்யக்கூடிய நூலை அவர்கள் தான் விநியோகம் செய்ய வேண்டும். இதையெல்லாம் பார்த்தால் வளர்ச்சி தடைபடுவதற்கு மத்திய சர்க்கார் ஒத்துழையாமை தான் காரணம்.

பணவீக்கம் தான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் கிட்டத்தட்ட 80 சதவீதம் பணம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது என்று அசோக் மேத்தா அவர்கள் அறிக்கையிலே கொல்லியிருக்கிறார்கள். 1967-ல் உற்பத்தி 5136 கோடிதான். இப்பொழுது உற்பத்தி 9718 கோடி. அப்படி இருக்கும் பொழுது, 80 சதவிகிதம் பணம் உற்பத்தியாகி இருக்கிறது. 80 சதவிகிதம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உற்பத்தி கிட்டத்தட்ட ஒரு பங்கு தான் ஏற்பட்டிருக்கிறது. இதைச் செவ்வனே செய்தால்தான் நாடு முன்னேற முடியும்.

கோதுமை பற்றிச் சொன்னார்கள். எனக்கு முன் பேசிய நண்பன் கந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். முக்கியமான பண்டங்களையெல்லாம் நாட்டில் இருக்கக்கூடிய அரசு பெற்றுக்கொள்ள வேண்டும், விநியோகம் செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்கு நம்மிடம் வசதி வேண்டும், இட வசதி வேண்டும், பாதுகாப்பு வேண்டும், பிரிஸர்வேஷன் வசதி வேண்டும். இந்த வசதிகள் எல்லாம் இருந்தால்தான் நல்ல காரியத்தைச் செய்ய முடியும்.

ஸ்டேட் டிரேடிங் ஸ்கீம் ஆனதற்குக் காரணம் தனிப்பட்டவர்களிடத்தில் இருக்கக்கூடிய தப்பிதமாக இருக்கலாம். பணம் படைத்தவர்கள், வியாபாரம் செய்யக்கூடியவர்கள் ஆகியவர்களுடைய தப்பிதமாக இருக்கலாம். இருந்தாலும், நாம் செவ்வனே செய்ய முடியாததற்குக் காரணம் பண வசதி இல்லை, இட வசதி, கோடவுன் வசதி இல்லை, பாதுகாப்பு, பிரஸர்வேஷன் வசதி இல்லை. இதை யெல்லாம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டால்தான் ஸ்டேட் டிரேடிங் ஸ்கீமை நாம் நல்ல முறையில் நடத்த முடியும். மத்திய சர்க்காருடைய பல சிக்கலான காரியங்கள் தான் நாட்டினுடைய கேடுக்குக் காரணம் என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அது போக, முக்கியமான எனது ஒன்றிரண்டு அபிப்பிராயங்களையும் சொல்லிக் கொள்கிறேன்.

நம்முடைய அமைச்சர்கள் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்ய வேண்டியதுதான். ஆனால் ஒரு வேண்டுகோள் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடிக்கடி நீங்கள் சர்ப்ரைஸ்

1973 ஆகஸ்ட் 10] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

விலிட் செய்ய வேண்டும். உங்களுடைய இலாகாவில் இருக்கக்கூடிய வேலை களைப் போய் நீங்கள் மாறு வேஷம் போட்டுக் கொண்டு கூடப் போய்ப் பார்க்க வேண்டும். நிர்வாகத்தில் பொதுவாக சிக்கல்கள், இருந்து கொண்டிருக் கின்றன, ஊழல்கள் இருந்து கொண்டிருக்கின்றன. 2 மணி ஓய்வு நேரம் இருக்கும்பொழுது அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் குற்றாலத்தில் சில இடங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். 6 மாதங்களில் செய்யப்படும் காரியங் களெல்லாம் உடனே செய்யப்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் பண்ண வேண்டும்.

அது மாதிரி மாவட்ட ரீதியில் இருக்கக்கூடிய அதிகாரிகளும் செய்ய வேண்டும். அதிகாரிகள் போய் ரெய்டு மீடிங் போடுகிறார்கள். ஆனால் ஸ்பாட் இன்ஸ்பெக்ஷன் இல்லை. அம்மாதிரி செய்தால் நிர்வாகத்தில் இருக்கக் கூடிய குறைபாடுகள் எல்லாம் நீங்கிவிடும். நிர்வாகத்தில் இருக்கக்கூடிய குறைபாடுகளுக்குக் காரணம் நிர்வாகத்தில் இருக்கக்கூடிய ஊழல், நிர்வாகத்தில் இருக்கக்கூடிய லஞ்சம் இவைகள்தாம். இவைகளை நிவர்த்தி செய்வதற்கு இரண்டுவிதமான வழிகள் உண்டு. மாநில அமைச்சர்கள் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் செய்வதன் மூலம் நிவர்த்தி செய்யலாம். மாவட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள் அதே மாதிரி சர்ப்ரைஸ் விஸிட் செய்தால் நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அதே மாதிரி நாம் டூத் கோர் என்று வைத்திருக்கிறோம். அவர்களுக்குப் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததால் ஒரு ஊகியமாக அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு ஒரு விதமான வேலையும் கொடுப்பதில்லை. அவர்களை ஐடிலாக வைத்திருக்கும்பொழுது அவர்கள் சர்வீஸ் செய்வதற்கு அவர்களுக்குத் திட்டங்கள் போட்டு சர்வீஸ் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உதாரணமாக எடுத்துக் கொண்டால் எங்கு பார்த் தாலும் நெருக்கடி பஸ் நெருக்கடி, உணவுப் பிரச்னை நெருக்கடி, விநியோகத்தில் நெருக்கடி, அம்மாதிரி இடங்களி லெல்லாம் டூத் கோர் போட்டு அவர்கள் க்யூவை வைத்து நிர்வகிக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும்; அவர்களுக்கு மக்களிடையே தொடர்பு ஏற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் டூத் கோரில் இருப்பவர்களுக்கு சர்வீஸ் மெண்டாலிடி, சேவை உணர்ச்சி ஏற்படும்.

அது மாதிரி கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் பல இடங்களில் தவறுதல்கள் நடக்கின்றன. ஸ்குவாடு வைத்திருக்கிறார்கள். அந்த ஸ்குவாடு சரியாக வேலை செய்கிறதா என்று பார்ப்பதற்கு ஸ்பாலோ அப் ஆக்ஷன்

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1973 ஆகஸ்ட் 10

இல்லே. ஸ்குவாடையும் சரிக்கட்டி அதிகாரிகளையும் ஒருவிதமாக ஏமாற்றி போகக்கூடிய கூட்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதை யெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு மாநில லெவலில் திரு. ராயப்பா அவர்கள் காலத்தில் செய்தது போல சர்ப்ரைஸ் செக் செய்யவேண்டும். இங்கிருந்து புறப்பட்டு திருச்சிக்குச் செல்வார்கள். அதன் மூலம் வரி ஏய்ப்பைச் சமாளிப்பதற்கு வழிவகை ஏற்பட்டது, சர்க்காருக்கு ஓரளவுக்கு வருமானமும் வந்தது. ஆகவே, சர்ப்ரைஸ் ஸ்குவாட் விஸிட் செய்வதற்கு வழி செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. க. உரொ. எட்மண்ட்: போவைத் தலைவர் அவர்களே, இந்த அமைச்சர் அவையின் மீது கொண்டு வரப்பட்டிருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தையும் சட்டசபையில் நம்முடைய இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் மதிப்பிற்குரிய தங்கமணி அவர்கள் கொடுத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தையும் ஆதரித்து என்னுடைய கருத்துக்களை அண்ணாதுரைவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்திலே எதிர்க் கட்சியிலிருந்து நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததனுடைய காரணங்களைப் பற்றி பல உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆளும் கட்சித் தரப்பிலிருந்தும், அவர்களுடைய தோழமைக் கட்சித் தரப்பிலிருந்தும் சொல்லப்படுகிற வாதம் எல்லாம் இந்த அரசாங்கம் எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறது, அத்தனை நன்மைகளைச் செய்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதா என்பது தான். இந்த மன்றத்திற்கு முன்னால் ஒன்றை நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1966-ம் ஆண்டு காங்கிரஸ் கட்சியினுடைய முதல் அமைச்சராக இருந்த மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் இந்த மன்றத்திலே இருந்த நேரத்தில் அன்றைய தினம் பிரதான எதிர்க் கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம், அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருந்த நம்முடைய பெருமதிப் பிற்குரிய கல்வித் துறை அமைச்சர் நாவலர் அவர்கள் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அந்த ஆட்சியின்மீது கொண்டுவந்தார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது யாரெல்லாம் பேசியிருக்கிறார்கள் என்றால், இன்றையதினம் முதல் அமைச்சராக இருக்கிற நம்முடைய மாண்புமிகு டாக்டர் கருணாநிதி அவர்களும், மாண்புமிகு நாவலர் அவர்களும், சட்ட அமைச்சராக இருக்கிற

1973 ஆகஸ்ட் 10] *[திரு. க. உரொ. எட்மண்ட்]*

மாண்புமிகு மாதவன் அவர்களும், நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சராக இருக்கிற மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்களும் பேசியிருக்கிறார்கள். பல்வேறு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அன்றைய தினம் பேசியிருந்தாலும் கூட நான் இவர்கள் பேசியதை உங்கள் கவனத்திற்காக இங்கே குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்றையதினம் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் செய்து கொண்டிருந்த நல்ல திட்டங்களை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்லாமல், அவர்கள் எந்தக் குறைகளைக் காட்டி அந்த ஆட்சியின்மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள் என்று பார்க்கின்றபோது, என்ன குறைகளைக் காட்டியிருக்கிறார்கள் என்றால், இந்த நாட்டிலே விலைவாசி ஏறியிருக்கிறது; மதுவிலக்கை சரியாக அமுல் படுத்தவில்லை; ஆளும் கட்சியினர் காவல் துறையினரை எதிர்க் கட்சினருக்கு விரோதமாகப் பயன்படுத்துகிறார்கள். நாட்டு மக்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை; சட்டம் கெட்டுவிட்டது; அமைதி கெட்டுவிட்டது; சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துவதற்குக் காவல் துறையைப் பயன்படுத்தவில்லை என்ற கருத்தைதான் அந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது சொல்லியிருக்கிறார்கள்.

நான் இந்த மன்றத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்றையதினம் காங்கிரஸ் ஆட்சியை எதிர்த்து, அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலத்திற்கு எதிராக நம்பிக்கை இல்லாத தீர்மானத்தை எந்தக் காரணத்திற்காகக் கொண்டு வந்தீர்களோ அதே நிலைதான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது. நாட்டிலே விலைவாசி ஏறியிருக்கிறது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் குறைக்கப்பட்ட விலைவாசி, அவர்கள் மறைந்த பின்னால் மீண்டும் தலைதூக்கியிருக்கிறது. எந்த அளவுக்கு விலைவாசி ஏறியிருக்கிறது என்பது இந்த அமைச்சரவையிலே இருக்கின்றவர்களுக்கு நன்றாகத் தெரியும்; ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்களும் அதை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். இன்றைக்கு எங்கே பார்த்தாலும் விலைவாசி ஏறியிருக்கிறது. மக்களின் அன்றாடத் தேவைக்குப் பயன்படும் பொருள்களின் விலைகூட பலமடங்கு ஏறியிருக்கிறது என்ற நிலையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக மதுவிலக்கைக் காரணம் காட்டிப் பேசியிருக்கிறார்கள். இன்று நாட்டிலே என்ன நிலைமை இருக்கிறது? பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது என்ன சொன்னார்கள்?

[திரு. க. உசொ. எட்மண்ட்] [1973 ஆகஸ்ட் 10

"மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலம் பல கோடி ரூபாய் வருமானம் வரும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இந்த மதுவிலக்கைத் தளர்த்துவதன் மூலம் வரக்கூடிய பல கோடி ரூபாயைப் பெற்று இந்த ஆட்சியை நடத்துவதைவிட நான் என்னுடைய முதலமைச்சர் பதவியை இராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு பொதுக்கூட்டங்களிலும் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் அண்ணு வழியிலேயே நடக்கிறேன் என்று சொல்கின்ற இன்றைய முதலமைச்சர் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்திருக்கிறாரா என்று பார்த்தால், இல்லையே. நேற்று கூட நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையை இந்த மன்றத்தில் எழுப்பியபோது முதலமைச்சரவர்கள் அதற்குப் பதிலளித்தார்கள். அப்போதும் அண்ணு அவர்களைத்தான் மேற்கோள் காட்டினார்கள். ஆனால் இன்றையதினம் நாட்டிலே மதுவிலக்கு இருக்கிறதா என்றால் மதுவிலக்கு இல்லை; மது இருக்கிறது. உங்கள் கட்சியிலே குடிப்பவர்கள் இல்லையா என்று கேட்கிறார்கள். அதேநேரத்தில் நான் அவர்களைக் கேட்க விரும்புகிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தில் குடிப்பவர்கள் இல்லையா என்று. எல்லாக் கட்சியிலும் குடிப்பவர்கள் இருக்கிறார்கள். ஒரு உதாரணத்திற்காகத்தான் இதைச் சொல்கிறேன். குடித்துப் பழகிவிட்டவர்கள், அத்தப் பழக்க வழக்கத்திற்கு உட்பட்டுவிட்டவர்கள், ஆசாபாசங்களுக்கு உட்பட்டுவிட்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்; அவர்களால் அதை நிறுத்த முடியாது.

குடிக்கக் கூடாது என்று சட்டத்தைப் போடுங்கள். ஆனால் கள் குடிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டு, சாராயக் கடைகளையும், மற்ற மதுக் கடைகளையும் திறந்து வைத்திருந்தால் என்ன பிரயோஜனம்? மதுவே அருந்தக் கூடாது என்று சட்டத்தைப் போடுங்கள். அந்தச் சட்டத்தை மீறி குடிப்பவர்கள்; குடித்துவிட்டு வெளியே வருபவர்கள்; அமளி செய்பவர்கள் யாராக இருந்தாலும்—எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி— அவர்களைக் கைது செய்து சட்டப்படி நடவடிக்கை எடுங்கள். அதை வேண்டாம் என்று நாங்கள் சொல்லவில்லை. எல்லா மதுக் கடைகளையும் மூடிவிட வேண்டும். அதை விட்டுவிட்டு, கள் மட்டும் குடிக்கக் கூடாது என்பது வேடிக்கையாக இருக்கிறது. 'புரொகிபிஷன்' என்றால் முழு புரொகிபிஷன் வேண்டும்; 'பார்ஷியல் புரொகிபிஷன்' கூடாது. கள்ளுக் கடைகளை மட்டும் செப்டம்பர் மாதம் ஒன்றும் தேதியிலிருந்து மூடிவிட்டோம். சாராயக் கடைகள் எல்லாம்

1973 ஆகஸ்ட் 10] [திரு. க. உரொ. எட்மண்ட்]

இருக்கும்; மதுக் கடைகள் எல்லாம் இருக்கும் என்ற திட்டத்தை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இது நியாயத்திற்கு விரோதமான ஒரு திட்டம் அல்லவா? இது நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு சட்டம் என்பதை அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு காவல் துறையினரை இந்த அரசாங்கத்தார் எப்படிப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னை போலீஸ் சட்டத்தினுடைய ஒரு திருத்த மசோதாவை அன்றையதினம் ஆளும் கட்சியிலிருந்து கொண்டு வந்தபோது அதைப்பற்றிப் பேசும்போது, இப்போது கல்வி அமைச்சராக இருக்கின்ற நாவலர் அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், எதிர்க் கட்சிக்காரர்கள் பேசும் கூட்டங்களுக்கு மட்டும் நீங்கள் சுருக்கெழுத்தாளர்களை—சி.ஐ.டி.களை—அனுப்பி வைக்கிறீர்கள்; ஆளும் கட்சியிலுள்ளவர்கள் கலந்து கொள்ளும் கூட்டத்திற்கு அனுபவுவதில்லை; ஆளும் கட்சியிலுள்ளவர்கள் மட்டும் கண்ணியமான முறையிலா பேசுகிறார்கள்? எதிர்க் கட்சியினர் கூட்டத்தில் மட்டும் தான் கண்ணியக் குறைவாகப் பேசுகிறார்கள் என்று கருதி சுருக்கெழுத்தாளர்களை அனுப்புகிறீர்களே. இது என்ன நியாயம் என்று கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலே அதையும் ஒரு காரணமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த முறை ஒழிந்துவிட்டதா என்றால் இல்லை. இன்றைக்கும் இந்த நாட்டிலே அந்த முறை இருந்து கொண்டுதான் இருக்கிறது. நாங்கள் பொதுக் கூட்டத்திலே பார்க்கிறோம். அங்கே சுருக்கெழுத்தாளர்கள் இருக்கிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேசும் கூட்டத்திலே சுருக்கெழுத்தாளர்கள் காணப்படுவதில்லை. அந்த அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது இன்றைக்கும்.

நாங்கள் 10 மணிக்கு மேலே பேசினால் ஒலிபெருக்கியை அப்புறப்படுத்தி விடுகிறார்கள் காவல் துறையினர் அல்லது ஒலிபெருக்கி அமைப்பாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால் அமைச்சரவர்கள் சுற்றுப்பயணம் வரும்போது, பொதுக்கூட்டங்களிலும் கட்சிக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளும்போது, இரவு 11, 12 மணி வரையில்கூட ஒலிபெருக்கி வைத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். காவல் துறையினர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. ஒலி பெருக்கி வைத்திருப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதில்லை. இப்படிப் பல முறைகளிலே அண்ணா திராவிட முன்னேற்றக்

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1973 ஆகஸ்ட் 10

கழகத்தினரைக் காவல் துறையை வைத்து எப்படி அடக்க வேண்டும், ஒடுக்க வேண்டும், ஒழிக்க வேண்டும் என்று திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கிறார்கள். இது நியாயமான நடவடிக்கை என்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் என்று நினைக்கிறேன். பாளையங்கோட்டையின் அருகில் முன்னீர்பள்ளம் என்ற கிராமத்திலே ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு நானும் சட்டமன்ற உறுப்பினர் காளிமுத்து அவர்களும் போனோம். பேசி விட்டுத் திரும்பி வரும்போது இரவு 12 மணி இருக்கும். வழியில் கிட்டத்தட்ட 5 அல்லது 6 குண்டர்கள் எங்கள் காரை வழி மறித்து, கல்லால் அடித்து கண்ணாடிகளைச் சேதப்படுத்தி, காரையும் சேதப்படுத்திவிட்டார்கள். உடனே நாங்கள் பக்கத்திலே உள்ள முன்னீர்பள்ளம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தோம். இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து புகார் கொடுத்தோம். காவல் துறையினர் 6 மாதங்கள் கழித்து எங்களுக்குப் பதில் கொடுக்கிறார்கள். எப்படி என்றால், 'The complaint that you have given at the Munnirpallam Police Station has been deferred because it is undetectable.' என்று பதில் கொடுத்திருக்கிறார்கள். இது இயற்கை ; இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அதே நேரத்தில் டிசம்பர் 15-ம் தேதி என்று நினைக்கிறேன். திருநெல்வேலியிலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த அரசாங்க தூரித பஸ்ஸைக் கோவில்பட்டிக்கு மத்தியிலே 30 பேர் வழிமறித்து, பஸ்லில் இருந்த பிரயாணிகளை எல்லாம் இறக்கிவிட்டு, தீ இட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள். உடனடியாக அந்த பஸ்லிலிருந்த டிரைவர் ஓடிவந்து கோவில்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார். அந்தப் புகாரில் இரவு ஒரு மணிக்கு இனம் தெரியாதவர்கள், அடையாளம் தெரியாதவர்கள் தீ இட்டுக் கொளுத்தினர்கள் என்று சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு).

(Thiru V. Krishnamoorthy rose)

THIRU G. R. EDMUND : What do you want?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன்றுமில்லை. நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : புகார் கொடுத்த 12 மணி நேரத்திற்குள் மறுநாள் 11 மணிக்கு அந்த பஸ்ஸை யார் கொளுத்தினர்கள் என்று காவல் துறையினர் கண்டுபிடித்துக் கைது செய்து விட்டார்கள். 14 பேர் மீது

1978 ஆகஸ்ட் 10] *[திரு. க. உரொ. எட்மண்ட்]*

வழக்குப் போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், பஸ்ஸை நீ இட்டுக் கொளுத்தினால் எந்த செக்ஷன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டுமென்று. அந்தக் காவல் துறையினர் செக்ஷன் 307-ன் கீழ் 'அட்டெம்ட் டு மர்டர்' என்று பதிவு செய்திருக்கிறார்கள். இப்போது எதைக்கெடுத்தாலும் இந்த 307 செக்ஷன்தான் பயன்படுகிறது. முன்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் சி.ஆர்.பி.சி. 54—சந்தேகக் கேஸ் என்று போடுவார்கள். ஆனால் இந்த ஆட்சியில் ஐ.பி.சி. 307-ஐ பயன்படுத்துகிறார்கள். வழக்கைப் போட்டால் ஒரு மாத காலத்திற்கு ஜாமீன்கூட கிடைக்காத அளவுக்கு அரசாங்க வக்கீல் கடுமையாக வாதாடுகிறார். ஒரு மாதம் கழித்து ஜாமீனில் வெளியே வந்திருக்கிறார்கள். வந்து ஏறத்தாழ 9 மாதங்கள் ஆகி விட்டன. இன்னும் சார்ஜ் ஷீட் போடவில்லை.

ஆனால் ஆளும் கட்சியிலே உள்ளவர்களுக்கு என்றால் நிலைமை வேறு விதமாக இருக்கிறது. இந்த மன்றத்திலே இருக்கின்ற எனது அருமை நண்பர் ஈரோடு சின்னசாமி அவர்கள் மீது ஒரு வழக்குப் பதிவு செய்தார்கள். 147, 148, 326, 307 ஆகிய செக்ஷன்களின் கீழ் வழக்குப் போட்டார்கள். அந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர் அடுத்த நாளே வெளியே வந்துவிட்டார். செக்ஷன் 307-ல் வழக்குப் போட்டால் ஜாமீன் கொடுக்க முடியாத அளவுக்கு கடுமையான ஆட்சேபம் தெரிவிக்க வேண்டும், என்று இருக்கிறது. ஆனால் இரண்டு அல்லது மூன்று நாட்களிலேயே அவர்கள் வெளியே வந்துவிடுகிறார்கள்.

(திரு. மு. சின்னசாமி அவர்களும் திரு. நெல்லிகுப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் எழுந்தார்கள்).

திரு. மு. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, என் மீது 307 செக்ஷன் மீது வழக்கு இருக்கிறது. நான் சட்டப் பிரகாரம் நீதி மன்றத்திற்குப்போய், சிறையில் இருந்து, பிறகு ஜாமீனில் சென்னையில் தான் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடோடு வந்திருக்கிறேன். நிரானிட முன்னேற்றக் கழக உறுப்பினர் என்பதற்காக எந்த விதிவிலக்கும் கொடுக்கக் கூடாது என்கிற இந்த அரசின் கட்டுப்பாட்டினால் நான் ஹைக்கோர்ட்டில் ஜாமீன் பெற்று வந்திருக்கிறேன். எங்கள் வருத்தமெல்லாம் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு இருக்கிற உரிமைகூட திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள எங்களுக்கு இல்லை என்பதுதான்.

மு.ப 11 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜாமீனில் விடுதலை பண்ணுவது அரசாங்க வக்கீல்கள் அல்ல. காவல்துறை அல்ல. வழக்கு மன்ற நடுவர்கள் தான். நடுவர்கள் ஜாமீனில்விட்ட செய்தியைப்பற்றி குறைகூறிப் பேசுவது முறை அல்ல.

THIRU G. R. EDMUND: I am not making any comment on the bail release order given by the Sub-Magistrate.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரை ஒரே நாளில் விட்டிருக்கிறார்கள் என்று சொல்வது நடுவர்கள் தவறாக நடந்து கொண்டிருப்பதுபோன்ற உள் நோக்கம் உடையதாகத்தான் இருக்கிறது. அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வது நல்லது.

THIRU G. R. EDMUND: I withdrew my remarks.

திரு. கே. டி. கே. தங்கமணி: செக்ஷன் 307 இன் கீழ் கைது செய்யப்படுகிறபோது ஜாமீன் மனு தாக்கல் செய்வதற்கே அப்படி இப்படி என்று ஒரு வாரமாகிவிடும். நானும் அந்த செக்ஷன் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறேன். கண்டிஷனல் பெய்ல் கிடைக்கவே ஒரு வாரம் ஆகும். அப்படி இருக்க சிலருக்குத் துரிதமாகக் கிடைத்துவிடுகிறதே, அதற்குக் காரணம் என்ன என்கிற அளவில் தான் குறிப்பிட்டார்.

திரு. மு. சின்னசாமி: ஹைக்கோர்ட்டில் போய்க் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீதிமன்ற நடுவர் செயலைக் குறை சொல்வதாகத்தான் ஆகும். அதுபோலப் பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU G. R. EDMUND: I will make myself clear. நெல்லை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீது பல்வேறு வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். வழக்குப் போடட்டும். எப்.ஐ.ஆர். போடும்போது 5 பேர்கள் மேற்கொண்டு பத்து பேர்கள், அறு பேர்கள் மேற்கொண்டு நூறு பேர்கள் என்று போட்டுக் கொள்வது; மேற்கொண்டு அந்த மாவட்டத்தில் யார் யார் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைப்பாளரோ, செயலாளரோ, தொண்டரோ அவர்களை எல்லாம் காவல்துறையினரிடத்தில் சுட்டிக்காட்டி வழக்கில் சேர்த்துவிடுவது என்கிற நிலைமைதான் இருக்கிறது. நான் வழக்குகள் போடுவதை ஆட்சே

1973 ஆகஸ்ட் 10] [திரு. க. உரொ. எட்மண்ட்]

பிக்கவில்லே. எத்தனே வழக்குகளே வேண்டுமானலும் போடுங்கள். எங்களால் அந்த வழக்குகளேத் தாள் தாளாக ஆக்க முடியும். வழக்குகளேப் போடுவது— சாட்சிகளேயே போலீஸ் தரப்பில் இருந்து கொண்டுவந்து ஆஜர்படுத்துவது இல்லே. நானே என் கட்சிக்காரர்களுக்கு ஆஜாவதலுல் சொல்கிறேன். ஒரு வழக்கில் மூன்று, நான்கு முறையாகக் கழகப் பேச்சாளர் நீதிமன்றத்திற்கே வாவில்லே.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : நான் அதைத்தான் முன்பு சொன்னேன். வாவில்லே என்றல் சாட்சியைக் கோர்ட்டுக்கு வரவழைக்க நடுவருக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த நடுவர் தவறி விட்டார் என்பதாக மறைமுகமாக நடுவர்மீது குற்றம் சாட்டுவதாகத்தான் அது வருகிறது. அது நல்லது அல்ல.

THIRU R. PONNAPPA NADAR : May I make one submission, Sir? Only the conduct of the Judge cannot be discussed on the floor of the House. I do not know whether any fair comment made on the judgment can come under the heading ' discussion on the conduct of the Judge '. He referred only to certain decisions of the Court. The provision in the Constitution is specific and clear. The Constitutional guarantee is there. He has not said that the Judge is motivated or anything else. He has not said any such thing. If such things are not allowed, there will be no room for debate in the House and our rights will be curtailed. I therefore request the Chair to give necessary permission.

(The hon. Member Thiru N. Ganapathi rose in his seat.)

THIRU G. R. EDMUND : I am not yielding.

THIRU N. GANAPATHI : Sir, my submission is this. The statement of the hon. Member is that the prominent speaker has not attended the Court and that the Court has not functioned properly to bring the witness to the Court, thereby the Court has prolonged the case. It is a reflection on the functions of the Court and it amounts to contempt of the Court. He says that the Court has failed in bringing the witness to the Court and to conduct the trial and thereby the trial has been delayed. It amounts to reflection on the Judge. It should not be permitted.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைத்தான் முன்பே சொன்னேன். திரு. எட்மண்ட் அவர்கள் சாட்சி கோர்ட்டுக்கு ஒரு முறை அல்ல, இரண்டு, மூன்று முறை கூட வரவில்லை என்றார். கோர்ட்டுக்கு ஒரு சாட்சியை வரவழைக்க அதிகாரம் இருக்கிறது. அந்த அதிகாரத்தை நீதிமன்ற நடுவர் பயன்படுத்தவில்லை என்கிற குற்றச்சாட்டுதான் மையமுகமாக வருகிறது. வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிற நேரத்தில் நடுவர்களுக்கு மாசு கற்பிப்பது போல அதைப்பற்றி மேலும் தொடர்ந்து பேசுவது முறை அல்ல.

திரு. க. உரொ. எட்மண்ட்: நான் நீதிபதிகளைக் குறை சொல்லிப் பேசவில்லை. நானே ஒரு வழக்குரைஞர். நீதிபதிகளை எப்படி மதிக்க வேண்டுமென்று தெரிந்து வைத்திருக்கிறேன். மூன்று முறை, நான்கு முறை சம்மன் சர்வ் செய்யப்பட்டும், அந்த சம்மனைப் பெற்றுக் கொண்ட கழகப் பேச்சாளர் எப்படி நீதிமன்றத்தை அவமதிக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டத் தான் குறிப்பிட்டேன்.

THIRU R. PONNAPPA NADAR: May I make the following submission, Sir? I would like to refer to Article 211 of the Constitution, which reads as follows:

'No discusion shall take place in the Legislature of a State with respect to the conduct of any Judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties.' ஆகவே நாம் இந்தச் சட்டத்தைப் பின்பற்றுவது முறையாக இருக்கும். சாலச் சிறந்ததாக இருக்கும். 'Conduct of any judge of the Supreme Court or of a High Court in the discharge of his duties' என்கிற இடத்திற்கு வராமல் நாம் விவாதத்தைத் தொடங்கி நடத்துவதில் ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நீதிபதிகளுடைய காண்டெக்டைப் பற்றியோ, ட்யூடியைப்பற்றியோ ஒன்றும் அவர் குறிப்பிடவில்லை. சாட்சிகளைக் கொண்டுவர வேண்டியது போலீஸ் பொறுப்பு. போலீஸ் அதைச் செய்யவில்லை, ஆகவே இது அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டாக வருகிறதே தவிர வேறு இல்லை. I have had several occasions on which the Court has been placed under helpless position. It casts aspersion on the executive—the Police.

1973 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. விளக்கம்தான்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய எட்மண்ட் அவர்கள் ஜட்ஜ் மீது குற்றம் சாட்டவில்லை. சாட்சிகளைக் கொண்டு வரவேண்டியது போலீஸ்காரர்கள். அவர்கள் சாட்சிகளைக் கொண்டுவரவில்லை, இதுபோன்ற தொல்லைகளை ஜட்ஜுகளுக்குத் தரும்படியாக நடந்து கொள்ளக் கூடாது என்கிற அளவில்தான் சொன்னார்களே தவிர இது அரசியல் அமைப்பு ஆர்ட்டிகிள் 211 இன் கீழ் வரவில்லை.

திரு. என். கணபதி: சம்மன் சர்வு செய்யப்பட்டும் சாட்சிகள் வரவில்லை என்று சொல்கிற காரணத்தினால் போலீஸ் துறையினர் சம்மன் சர்வ் செய்வதில் தவறிவிடவில்லை, அவர்கள் சம்மன் சர்வ் செய்தும் வரவில்லை என்றால் நீதிபதிதான் வாரண்டு கொடுத்து அந்தச் சாட்சியைக் கொண்டுவரச் சொல்ல வேண்டும், போலீஸ்காரர்களாகவே அதைச் செய்ய முடியாது. ஆகவே அவரது குற்றச்சாட்டு நீதிபதியைத்தான் சாரும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது சாதாரண அக்கடமிக் டிஸ்கஷன் தான். சாட்சிகள் வருவதும் உண்டு. வராது போவதும் உண்டு. அக்யூஸ்டே கோர்ட்டுக்கு வராமல் போகிற நிலை எல்லாம் இருக்கிறது. ஆகவே இதுபற்றி மேற்கொண்டும் விவாதத்தை வளர்த்துக் கொண்டு போகாமல் இருப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: என்னுடைய தொகுதியில் மேலாத்தூர் என்ற கிராமம் இருக்கிறது. அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர் ஆற்றங்கரையில் இருந்த அரசு மரத்தை வெட்டி விற்றுவிட்டார்கள். அதைப்பற்றி கிராம முன்சீப் காவல்துறைக்குப் புகார் செய்திருக்கிறார். கம்ப்ளயின்ட் கிரைம் நம்பர் 14/73, 4-2-73-இல் ஆறுமுகநேரி போலீஸ் ஸ்டேஷனில் ரிஜிஸ்தராகியிருக்கிறது. இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா என்றால் இல்லை. மரத்தை வெட்டுவது Section 379 of the Indian Penal Code -ல் வரும். இது ஒரு களவு. ஆனால் அந்தப் பஞ்சாயத்து போர்டு தலைவரைக் கைது செய்திருக்கிறார்களா என்றால், இல்லை.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1973 ஆகஸ்ட் 10

அதேபோல், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்ற மாதம் நெல்லே மாவட்டத்திலே சுற்றுப் பயணம் செய்ய வந்தார்கள். அதையொட்டி ஏராளமான அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்கள் மீதும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள்மீதும் வழக்கு போட்டிருக்கிறார்கள். எப்படிப் போட்டிருக்கிறார்கள் என்றால், இதுதான் எப்.ஐ.ஆர்.; திருவேங்கடம் போலீஸ் ஸ்டேஷன், கிரைம் நெம்பர் 92, கிரைம் நெம்பா 94, கிரைம் நெம்பர் 95, கிரைம் நெம்பர் 96. எல்லாவற்றிலும் எந்த செக்ஷனிலே வழக்கு போடு கிறார்கள்? செக்ஷன் 147, 148, 323, 324, 326 and, as usual, 307-படி போட்டிருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், காவல் துறையைக் சேர்ந்தவர்களே நேரிலே போய் அவர்களைச் சந்தித்து, அவர்களிடம் புகாரை வாங்கியிருக்கிறார்கள். இப்படி நடைபெற்றிருக்கிறது.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நிண்டுக்கல் தேர்தலிலே பிரச்சாரத்திற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் நாடகம் போட அனுமதி கேட்டார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்களே தலேவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனேப்பற்றி எவ்வளவு தரக் குறை வாகத் தாக்கி எழுதமுடியுமோ அவ்வளவு தாக் குறைவாகத் தாக்கி எழுதி யிருந்தார்கள். அதை அனுமதித்திருந்தார்கள். ஆனல் எங்கள் நாடகத் திற்கு மாவட்ட ஆட்சித் தலேவரிடம், காவல் துறை அதிகாரிகளிடம் அனுமதி கேட்ட நேரத்தில் அனுமதி மறுக்கிறார்கள். இந்த நிலேமைகளேயெல்லாம் பார்க்கின்றோம்.

அடுத்து, கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம். நம்முடைய நாவலர் அவர்களும், சட்டமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் பேசியிருக் கிறார்கள். 1966-ம் ஆண்டிலே பேசியிருக்கிறார்கள். கறுப்புக் கொடியை எதிர்க்கட்சிதான் காட்டுமே தவிர, ஆளும் கட்சி எதிர்க்கட்சிகளுக்குக் காட்டாது. அதுதான் சம்பிரதாயம் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் தலேவர் எங்கே போனலும் திராவிட முன்னேற்றக் கழகம் கறுப்புக் கொடி காட்டுவதைப் பார்க்கிறோம். நம்முடைய முதல்வர் அவர்கள் கடந்த மாதம் நெல்லே மாவட்டத்திற்குச் சுற்றுப் பயணம் வந்தபொழுது, நெல்லே மாவட் டத்தில் முதல்வர் அவர்கள் எங்கேயெல்லாம் செல்வதாக இருந்தார்களோ அங்கே எல்லாம் அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கறுப்புக் கொடி காட்ட ஏற்பாடு செய்திருந்தார்கள். கறுப்புக் கொடி காட்டுவது நாட்டிலே எதிர்க்கட்சிகளுடைய உரிமை, அவர்களுடைய கடமை என்றெல் லாம் பேசியிருக்கிறார்கள். நானும் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனல்,

1973 ஆகஸ்ட் 10] *[திரு. க. உரொ. எட்மண்ட்]*

அங்கு முதல்வருக்குக் கறுப்புக் கொடி காட்ட கூடியிருந்தவர்களை, முதல மைச்சர் வருவதற்கு ½ மணி நேரம் முன்னுலே கைது செய்வது, 50 மைல் தள்ளிக் கொண்டு போவது, மீண்டும் விட்டு விடுவது, இப்படி செய்திருக் கிறார்கள். நீங்கள் சட்டப்படி வழக்கு போடுங்கள். அன்செக்கார்டாக் கைது செய்து, எங்கேயோ கொண்டு சென்று விட்டுவிடுவது என்ன? இவை யெல்லாம் நடந்திருக்கின்றன. அந்த அளவிற்குக் காவல்துறை நாட்டிலே எதிர்க்கட்சிகளை அடக்குவதற்கும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன தவறுகளையெல்லாம் செய்தாலும் அவற்றையெல்லாம் தட்டிக் கழிப்பதற்கும் பயன்படுகிறது; இந்த ஆட்சி அவற்றிற்குக் காவல் துறையைப் பயன்படுத்து கிறது என்பதை என்னுடைய குற்றச்சாட்டாக இந்த நேரத்திலே பகிரங்கமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

•

அடுத்து, இங்கே பேசியவர்கள், நீங்கள்தான் நம்பிக்கையில்லை என்று சொல்கிறீர்கள், 42 பேர் சொல்கிறீர்கள், நாட்டிலே இருக்கிற மக்கள் எங்களுக்கு எவ்வளவு பெரிய ஆதரவு தருகிறார்கள் என்றெல்லாம் இங்கே பேசுகிறார்கள். ஆனால், நிலைமை என்ன? மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிமீது நம்பிக்கையிருக்குமானால், இந்த ஆட்சி நல்லவைகளைச் செய்து இருக்கிறது என்று மக்கள் உணர்வார்களென்றால், நகரசபைத் தேர்தல் களையும் ஏன் ஒத்திப்போடுகிறார்கள்? கேட்டால், உடனே நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுக்கிறார்கள், வார்டுகள் இன்னும் பிரிக்கப்படவில்லை என்று. ஒவ்வொரு நகராட்சிக்கும் மாநகராட் சிக்கும் 5 ஆண்டுகளுக்கொருமுறை, தேர்தல் நடக்கும் என்ற அந்தச் சட்டதையெல்லாம் தெரியாதவர் அல்ல அமைச்சர். அதைத் தெரியாத வர்கள் அல்ல அமைச்சர்கள்.

திரு. நா. வீராசாமி: கேரளாவில் 8 ஆண்டுகளாகத் தேர்தல் நடத்த வில்லையே.

THIRU G. R. EDMUND: My hon. Friend, Thiru Veeraswami, can go to the Kerala Legislative Assembly and speak, and not in the Tamil Nadu Legislative Assembly.

கேட்டால், வார்டு பிரிவினை என்று சொல்கிறார்கள். உங்களுக்குத் தெரியாதா. மாநகராட்சித் தேர்தல் 1973-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடக்க வேண்டு மென்று. அதற்காக முன்னதாகவே, வார்டு பிரிவினையெல்லாம் நடத்தியிருக்கக் கூடாதா? நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாக்கு என்று சொல்வார்கள். அதைப் போல் மக்களிடம் நீங்கள் செல்வாக்கு இழந்து விட்டீர்கள்.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1973 ஆகஸ்ட் 10

மாநகராட்சித் தேர்தல்கள் நடந்தால் அல்லது நகராட்சித் தேர்தல்கள் நடந்தால், தமிழகத்திலே நடந்தால், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்றைக்கு நான் சொல்கிறேன், ஒரு நகராட்சிகூடக் கிடைக்காது என்ற காரணத்தால், பயத்தின் காரணமாகத்தான் நகராட்சித் தேர்தலே ஒத்தி வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நம்பிக்கை இழந்த அரசாங்கத்தின் மீது எனக்கு நம்பிக்கை இல்லே, நம்பிக்கை இல்லே, நம்பிக்கை இல்லே என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்காகத் தங்களுக்கு நன்றி கூறி, அமர்கின்றேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இன்று சபையிலே கொண்டு வரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன்.

தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே, விலைவாசியைப் பற்றி பல உறுப் பினர்கள் குறிப்பிட்டபொழுது, மத்திய சர்க்கார்தான் இதற்குப் பரிபூரணப் பொறுப்பு என்று வாதிட்டார்கள்.

(திரு. என். டென்னிஸ் தலைமை)

மதிப்பிற்குரிய உறுப்பினர் சுப்பையா முதலியார் அவர்கள் முழுக்க முழுக்க, அத்தனையும், 100-க்கு 100 மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்று இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். ஒன்றை நான் ஒத்துக்கொள்கிறேன் ; நாட்டிலே விலைவாசி ஏறி இருக்கிற சங்கடமான நிலே இருக்கிறது என்ற உண்மையை நாம் மறுப்பதற்கில்லே. ஆனால், இதற்கு மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்று சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லே. இந்த விலை ஏற்றத்தில் மத்திய சர்க்காருக்குப் பொறுப்பு உண்டு. அதே மாதிரி மாநில சர்க்கார்களுக்கும் பொறுப்பு உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், மத்திய சர்க்காரை இப்படிப் பேசிக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அல்ல. விலைவாசி ஏற்றத் திற்கு மத்திய அரசுதான் பொறுப்பு என்று சொன்னால், நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிவிடுவோம் என்ற காரணத்தினால் விலைவாசியைக் குறைக்கவேண்டிய பொறுப்பு நமக்கும் இருக்கிறது என்ற கருத்தை ஒத்துக் கொள்ளவேண்டும். மத்திய சர்க்கார் நோட்டு அடித்ததனால்தான் விலைவாசி ஏறிவிட்டது என்ற கருத்து இங்கே மிக அதிகமாக வலியுறுத்தப்பட்டது. என்னைப் பொறுத்தவரையிலே இங்கே கூறிக்கொள்கிறேன், மத்திய சர்க்கார்

1973 ஆகஸ்ட் 10] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

நோட்டு அடிப்பதால் மட்டும் விலைவாசி ஏறிவிடவில்லை. ஆனால், அதுவும் ஒரு காரணம். ஆகையினாலே நாம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற விலைவை, சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற சீர்குலைவை எப்படிப் போக்குவது என்பதிலே கவனம் செலுத்தியாக வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையிலும் அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளை மாநில சர்க்கார்கள்தான் நிறைவேற்றுகின்றனவே தவிர, மத்திய சர்க்கார் நேரடியாக நிறைவேற்றுவது கிடையாது. மத்திய சர்க்கார் மட்டும்தான் பொறுப்பு என்று சொல்ல முடியாது. மத்திய சர்க்கார் டெபிசிட்டைத் தவிர்க்க நோட்டு அடித்தாலும், அதை மாநில சர்க்கார்களுக்குத்தான் வழங்குகிறார்கள். மானியமாகவும் கடனுகவும் அல்லது திட்டங்களை நிறைவேற்றவும் வழங்குகிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற பணத்தை நாம் சரியான வழியிலே செலவழிக்கவில்லையென்றால், அது விலைவாசி ஏற்றத்திலே போய் முடிகிறது. போடுகின்ற திட்டங்களை சரியாக நிறைவேற்றவேண்டும். மாநில சர்க்காருக்கும் தான் அதில் பொறுப்பு இருக்கிறது. நான் தமிழ்நாடு சர்க்காரைப் பற்றி மட்டும் சொல்லவில்லை. எல்லா மாநில சர்க்கார்களுக்கும் பொறுப்பு இருக்கிறது.

ஆகவே, மத்திய சர்க்கார் ஒரு கொள்கையை வகுத்து, அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்காகச் சொல்கின்ற கட்டளைகளை நிறைவேற்றுவது மாநில சர்க்கார்களுடைய கடமை, பொறுப்பு என்று இருக்கும்போது, அந்தத் திட்டங்களை மாநில சர்க்கார்கள் நிறைவேற்றும்போது அந்தப் பணம் விரயமாக்கப்படாமல் செலவழிக்கப்பட்டு, அதனால் உற்பத்திப் பெருக்கம் நடைபெறவில்லையென்றால், அது தேசத்தினுடைய நலனை ஒட்டுமொத்தமாகப் பாதிக்கிறது என்ற கருத்தை இந்தச் சபை ஏற்றுக்கொள்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, தலைவரவர்களே, நான் கூறுகின்ற குற்றச்சாட்டு, பத்திய சர்க்கார் நோட்டு அடித்து விட்டது என்று மட்டும் கூறிவிடாமல், இந்த மாநில சர்க்கார் அம்மாதிரி ஏற்பட்ட விலைவாசிகளைக் குறைப்பதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன, வழிகள் என்ன என்று பார்க்கும் போது, இன்றைக்கு சரியான நடவடிக்கைகளை மாநில சர்க்கார் எடுக்கவில்லை. இங்கே இருக்கிற அரசாங்கம் ஊழலற்ற, இலஞ்ச இலாவணியமற்ற அரசாங்கமாக, அந்த இயந்திரத்தை உடையதாக இருக்கவேண்டும். அப்படி இல்லாமல், பரவலாக, ஊழல் நிரந்தரமாக இருக்குமானால், நாம் போடுகின்ற திட்டங்கள் சரியாக நிறைவேறாமல் இம்மாதிரி நிலைமைகள் வந்துவிடுகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இங்கே இலஞ்சம் மிக மிக அதிகமாகத் தாண்டவம் ஆடியிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1973 ஆகஸ்ட் 10

அரசாங்கத்தை நடத்துகின்ற கட்சியினர் ஓளவு இல்லை என்று வாதிக்கக் கூடும். ஆனால் உண்மை, ஏழே நிறைய ஊழல் இருக்கிறது. இலஞ்சம் நிறைய இருக்கிறது ஏன்? உண்மையை நாம் மறுத்து விடுவதற்கில்லை. ஆனால் அதை வெளிப்படையாக அரசாங்கத் தரப்பிலே மறுக்க முடியவில்லை யென்றாலும் அதைக் களைவதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு மக்களிடத்திலே என்ன உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் கருத்திலே கொள்ளவேண்டும். எதை எடுத்தாலும் சிபாரிசு செய்தால்தான் தனக்குக் கிடைக்கும், எதை எடுத்தாலும் லஞ்சம் கொடுத்தால்தான் தனக்குக் கிடைக்கும், எதை எடுத்தாலும் மெரிட் பேரிலேயே கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எங்கும் இருக்கிறது.

அதை நாம் போக்கியாகவேண்டும். அது எந்த நிலையிலே கொண்டு வந்துவிடுகிறது என்றால், அதனுடைய விளைவு என்ன ஆகிறது என்றால், பண வசதி உள்ளவர்களுக்குத்தான் பல சலுகைகள் கிடைக்கும், பல காரியங்கள் நடக்கும் என்ற நிலைமை நாட்டிலே ஏற்பட்டுவிடுகிறது. அப்படிப்பட்ட நிலையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். நிர்வாகத் திலே எல்லா இடங்களிலும் தவறு இருக்கிறது என்றால் அந்தத் தவறுகளைத் திருத்துவதற்கு மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிகள் செய்ய வேண்டும். அரசாங்க நிர்வாகத்தைத் திருத்துவதற்கு மேலே உள்ள அமைச்சர்கள் முயற்சியெடுத்தால் மட்டும் போதாது; கீழே இருக்கின்ற கட்சி சார்பற்ற முறையிலே இருக்கின்ற எல்லா மக்களின் ஆதரவையும் பெற முயற்சிக்கவேண்டும்.

உணவு தானியம் தமிழகத்திலே தேவையான அளவிற்கு உற்பத்தி ஆகிறது. உற்பத்தியானது தேவையான அளவிற்கு இருக்கிறபோது எல் லோரும் வாசிகள் இவ்வளவு ஏறிக்கொண்டு இருக்கவேண்டும்? என்ன காரணம்? அதைத் தடுத்து நிறுத்துவதற்கு நம்மால் முடியவில்லை. நியாயமான விலையிலே மக்களுக்கு அரிசியைக் கொடுப்பதற்குச் சக்தியற்ற நிலைமை இருக்கிறது. பதுக்கல்காரர்களையும் கடத்தல்காரர்களையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்திலேயிருந்து கேரளத்திற்கு அரிசி கடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் அங்கே அரசாங்கம் ஒரு தடையை ஏற்படுத்தினார்கள். ஆனால் அங்குள்ள மக்களுக்குப் போதுமான அரிசியை வழங்குவதற்கான முறையிலே ஒரு நிர்வாக அமைப்பை அங்கே ஏற்படுத்தாததன் விளைவாகத்தான் இன்றைக்கு அங்கிருக்கின்ற மக்கள் போராட்டம் நடத்தி அங்கே கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

1973 ஆகஸ்ட் 10] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

ஒரே ஒரு மாவட்டத்திலே சிறிய மாவட்டத்திலே அங்கேயுள்ள மக்களுக்கு அரிசி கொடுக்கமுடியாத அரசு அங்கேயுள்ள நிலைமையைத் திருத்தமுடியாத அரசு தமிழ்நாடு முழுவதும் எப்படித் திருத்தப்போகிறது என்று தெரியவில்லை. பல திருத்தங்களைச் செய்வதற்கு அரசு முயற்சியெடுத்தாலும் விலைவாசியேற்றத்தைத் தடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

மொத்த வியாபாரத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசாங்கம் ஒத்துக்கொண்டு இருக்கிறது. எப்பொழுது எடுக்கப்போகிறது என்று அறிவிக்கவில்லையென்றாலும்கூட விரைவிலே அதை எடுத்தாகவேண்டும். இல்லையென்றால் நாட்டிலேயுள்ள மக்களுக்கு அத்தியாவசியமான பண்டங்களைக் குறைந்த விலையில், நியாயமான விலையிலே, கொடுக்க இயலாது. இப்பொழுது அரசாங்கம் உணவுப்பொருட்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யமுடியவில்லை. அமைச்சர் அவர்கள் கூறலாம், சரியான முறைகளை ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று. அது போதாது. கன்னியாகுமரி மாவட்டத்திலேயே அது முடியவில்லை என்றால் நாடு பூராவும் ஒட்டு மொத்தமாக எவ்வாறு செய்யப்போகிறோம் என்பதைக் கருத்தில்கொண்டு அதற்கு ஆவன செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, நூல் விநியோகத்தை எடுத்துக்கொண்டால் கைத்தறியாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. விலை ஏறுகிறது. கட்டுப்படுத்தப்பட்ட விலையிலே கைத்தறியாளர்களுக்கு நூலைக் கொடுக்கக்கூடிய முறையிலே மத்திய சர்க்கார் கன்ட்ரோல் கொண்டுவந்த பிறகும் சரியாக நம்மால் அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை. கார்டுகள் விநியோகிக்கப்படுகின்றன. தவறான முறையிலும் கார்டுகள் விநியோகிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்ல, கார்டு கொடுக்கப்பட்டவர்களுக்கு நூல் கொடுப்பதில்லை.

உதாரணமாக ஒரு பகுதியில் 100 கைத்தறியாளர் குடும்பங்களுக்குக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதுவரையிலே அவர்களுக்கு நூலே கொடுக்கப்படவில்லை. இம்மாதிரி ஆங்காங்கு எவ்வளவு மோசமான நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நேற்று கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றி முதல்வர் அவர்கள் கூறும்பொழுது ஆயிரக்கணக்கான போலி கார்டுகள் இருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு யார் காரணம்? அதிகாரிகள் தானே அப்படிக் கொடுத்திருப்பார்கள்? அங்குள்ள மக்கள், சர்வகட்சியைச் சேர்ந்தவர்கள் இவர்களையெல்லாம் கலந்துகொண்டு . . .

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கே சர்வ கட்சி கூட்டம் போட்டோம், சட்ட மன்ற உறுப்பினர்களையும் கூப்பிட்டோம், சர்க்குலர் விட்டோம். அப்படியெல்லாம் கலந்துசெய்தும்கூட, சர்வ கட்சியும் சேர்ந்து செய்யக்கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமைதான் நம்முடைய நாட்டிலே இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் போக்குவதற்கு வழிவகைகள் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். பதுக்கல்காரர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும்.

பத்திரிகைகளிலே பார்க்கிறோம், வளவனூரிலே அரசாங்க ஸ்டாக் நெல்லைக் காணோம், அதுமட்டுமல்ல, திருக்கோவிலூரிலே அரசுகிடங்கு நல்லூரிலே காணோம் என்றெல்லாம் செய்திகள் வருகின்றன. நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் கூட ஒழுங்கான முறையிலே குற்றஞ் செய்தவர்களைத் தண்டிக்கவேண்டும். லஞ்சம் தாண்டவமாடுகின்றது என்ற முறையிலேதான் தவறு செய்தவர்கள் தாமும் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று நினைக்கிறார்கள். பணத்தைச் சேர்க்க வேண்டுமென்ற, செல்வத்தைச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் வளர்ந்திருப்பதால் பணத்தை வைத்துக்கொண்டால் எப்படியும் தப்பித்து விடலாம் என்ற எண்ணத்திலே சிலர் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள். அதைத் தடுப்பதற்குக் கடுமையான தண்டனை அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய முறையிலே வழக்கு மன்றங்களிலே ஒழுங்காக வழக்காட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வடிவேல் அவர்கள் பேசும்பொழுது கீழ்வெண்மணி பற்றிச் சொன்னார்கள். நல்ல முறையிலே கேஸ் நடைபெற்றிருந்தால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு இருக்கும். நல்ல முறையிலே வழக்கை நடத்தாததால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன . . .

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: வழக்கு சுப்ரீம் கோர்ட்டிலே நடந்தது. டிஸ்டிரிக்ட் ஜட்ஜால் குற்றவாளிகளுக்குத் தண்டனை அளிக்கப் பட்டு சுப்ரீம் கோர்ட்டிலே விடுதலையாகியிருக்கிறது. சரியான முறையிலேதான் பிராசிக்யூஷன் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நான் நீதிமன்றத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை, நிர்வாகத்தைப்பற்றித்தான் சொல்கிறேன். சமூக விரோதிகளையெல்லாம் கடுமையாகத் தண்டிக்கக்கூடிய நிலைமை ஏற்படவேண்டும்.

1973 ஆகஸ்ட் 10] *[திரு. எ. ஆர். மாரிமுத்து]*

உர விநியோகம் சரியான முறையிலே நடைபெறவில்லை என்ற எண்ணம் மக்களிடத்திலே பரவலாக இருக்கிறது. சென்ற ஆண்டு உரம் சரியாகக் கிடைக்கவில்லை. கார்டுகள் வழங்கப்பட்டு தேவையான உரம் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இன்னும் பல இடங்களிலே கார்டுகள் வழங்கப் பட்டதாகத் தெரியவில்லை. கார்டுகள் வழங்கப்பட்டாலும் தேவையான உரம் கிடைக்கிறது என்று சொல்ல முடியவில்லை. வெளியிலே கள்ள மார்க் கட்டிலே உரம் கிடைக்கிறது. நியாயமான முறையிலே, நியாயமான விலையிலே, அரசாங்கத்தால் கொடுக்க முடியாத நிலைமை இருக்கும்பொழுது கள்ள மார்க் கெட்டிலே உரம் வருகிறது. இதையெல்லாம் தடுத்து நிறுத்தவில்லையென்றால் மக்களுக்கு இந்த அரசு மேல் நம்பிக்கை ஏற்படுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு நாட்டிலே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற கோஷம் வைக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். பத்திரிகையிலே கூட செய்திகள் வந்திருக்கின்றன. தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோஷம் நாட்டி னுடைய ஒருமைப்பாட்டிற்கு விரோதமானது என்று கருதுகிறேன். அம் மாதிரியான கோஷங்களைத் தடைசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாடு தமிழருக்கே என்பது பிரிவினை வாதத்தினுடைய அடிப்படையிலே எழுந்த கோஷம் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றுக்கூட திரு. சுப்பு அவர்கள் இதைப்பற்றிப் பேசினார்கள். நான் விழுப்புரம் மாநாட்டிலேயே தெளிவாகச் சொன்னேன். யாரும் இதைத் திரித்துக் கூற வேண்டாம், தவறுகத் கருத வேண்டாம், மொழிவழிதான் மாநிலங்கள் பிரிந்திருக்கின்றன, மொழிவழி பிரிந்துள்ள மாநிலங்களில் அந்த அந்த மக்களின் பெரும்பான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும், மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் குடியேறி யிருந்தால் அவர்களுடைய உரிமைகளும் பாதுகாக்கப்படும். எப்படி பெங்களூரிலே தமிழர்கள் குடியேறியிருந்தால் அவர்களுடைய உரிமை அங்கே பாதுகாக்கப்படுகிறதோ, எப்படி வங்காளத்திலே தமிழர்கள் இருந்தால் அவர் களுடைய உரிமை பாதுகாக்கப்படுகிறதோ, எப்படி கேரளாவிலே தமிழர்கள் இருந்தால் அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்படுகிறதோ. அந்த அளவிற்குத் தமிழ்நாட்டிலே மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இருந்தால் அவர்களுடைய உரிமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும்; மராட்டியத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் இருந்தால் அவர்களுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும், கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டிலே இருந்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

தால் அவர்களுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ் நாட்டிலே இருந்தால் அவர்களுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற அளவிலே தான் அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இப்பொழுது இருக்கிற மொழிவழி மாநிலங்கள் அளவிலே, கேரளத்திலே உள்ளவர்களுக்கு எப்படிக் கேரளத்தை ஆளுகின்ற உரிமை இருக்கிறதோ, அது போன்று தமிழ் நாட்டிலே இருக்கின்றவர்களுக்குத் தமிழ்நாட்டை ஆளுகின்ற உரிமை இருக்கிறது. தமிழ்நாடு தமிழருக்கே என்பது பிரிவினை வாதம் அல்ல. இந்தியாவிலே எதிரிகளை நுழையவிட மாட்டோம் என்ற அந்த அளவிலே இந்தியா இந்தியருக்கே என்று சொல்லப் பட்டது. இங்கேயுள்ள எல்லா மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும், சிறு பான்மையோருக்கும் உரிமைகள் நிச்சயமாக வழங்கப்படும் என்று தெளிவாக அறிவித்து இருக்கிறேன். எனவே இதிலே பிரிவினை வாதத்திற்கு இடமே எள்ளளவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I ask one clarification. பாராளுமன்றத்திலே மத்திய அமைச்சர் ஒருவர் நமது மாநில சர்க்காரிடமிருந்து ஏதோ ரிமார்க்ஸ் கேட்டிருப்பதாக ஒரு கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது சம்பந்தமாகத் தகவல் வந்திருக்கிறதா? அப்படி என்றால் அதன் விவரம் என்ன என்று முதல் அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான்கூட பத்திரிகையில் வந்த செய்தியைத்தான் பார்த்தேன். இன்னும் அரசாங்கத்திற்குச் செய்தி எட்டிய தாகத் தெரியவில்லை. ஒருவேளை வரலாம். அப்படி வந்தால் இப்பொழுது சொன்ன பதிலைத்தான் அளிக்க இருக்கிறோம். விழுப்புரம் மாநாட்டில் பேசும் பொழுதே சொன்னேன், இப்பொழுது இவ்வளவு வேகமாக எதிர்க்கின்ற வர்கள், மைசூரிலே இருப்பவர்கள் அந்த மாநிலத்து மக்களுக்குத்தான் வேலைக்கு முதலிடம் என்று சொன்னபொழுதும், மேற்கு வங்கத்தில் திரு. சே அவர்கள் "சன்ஸ் ஆஃப் தி சாயில்" என்று சொன்னபொழுதும் அதை எதிர்த்துப் பேசினார்களா என்று கேட்டேன். கேரளாவைச் சேர்ந்த அச்சுத மேனன் அவர்களும், தமிழகத்தைச் சேர்ந்த நானும்தான் அந்தக் கொள்கை தவறு என்று கூறியிருக்கிறோம். மேலும் விழுப்புரம் மாநாட்டிலேயே கூறினேன், "சன்ஸ் ஆஃப் தி சாயில்" என்று மேற்கு வங்கத்தில் பேசப்படுகிறது, அதை இந்திய அரசு ஒத்துக்கொண்டால், அதை எல்லா மாநிலங்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் தமிழ்நாடும் கடைப்பிடிக்கின்ற நிலைமைக்கு ஆளாக நேரிடும் என்று சொல்லியிருக்கிறேன்.

1973 ஆகஸ்ட் 10]

திருமதி த. நா. அனந்தநாயகி: தலைவரவர்களே, "இந்தியா இந்தியருக்கே, தமிழ்நாடு தமிழருக்கே" என்று சொன்னால் ஏதோ தமிழ்நாடு இந்தியாவில் ஒரு பகுதியாக இல்லாதது போலவும், இந்தியா தனியாகவும், தமிழ்நாடு தனியாகவும் இருப்பது போலவும் ஊரிலே இருப்பவர்களுக்குத் தெரிகிறது. இதை கனம் முதலமைச்சரவர்கள் வெகு சாமர்த்தியமாக விளக்கிக் காட்டுவார்கள். அவர்களை நான் கேட்கிறேன், "இந்தியா இந்தியருக்கே, தமிழ்நாடு தமிழருக்கே" என்று நீங்கள் பேசினால் கட்டாயமாக அதன் உட்கருத்தை மக்கள் தவருகப் புரிந்துகொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதைப்பற்றி மத்திய அரசுக்கு என்ன விளக்கம் சொல்லப் போகிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, "இந்தியா இந்தியருக்கே, இந்தியாவிற்குள் தமிழ்நாடு தமிழருக்கே."

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இன்று காலையிலே நான் சபையிலே கேட்டேன். ஏற்கெனவே மத்திய சர்க்காரிலிருந்து, தமிழ்நாடு தமிழருக்கே என்பதற்கு விளக்கம் கேட்க வேண்டுமென்று செய்தி வந்திருக்கிறதே. திரு. முருகானந்தம் அவர்கள் கேட்டதாகவும், மத்திய அமைச்சர் பதில் சொல்லியதாகவும் செய்தி வந்திருக்கிறதே. அதற்குப் பதில் என்ன என்பது பற்றி சபையிலே அறிக்கை விடத் தயாராக இருக்கிறார்களா என்று கேட்டேன். அப்பொழுது சபாநாயகரவர்கள், அம்மாதிரி என்னிடத்தில் கேட்கவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, இந்தச் சபையிலே, எம்மாதிரி அவர்கள் பதில் எழுதுகிறார்கள் என்பதுபற்றி அந்தப் பதில் இந்தச் சபையில் வைக்கப் படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பத்திரிகையிலே வரும் செய்தியைப் பார்த்துவிட்டு உடனடியாக நாங்கள் மத்திய சர்க்காருக்கு கடிதம் எழுதுவது முறையல்ல. பத்திரிகையிலே வந்தது. பாராளுமன்றத்தில் கேட்டதைப்பற்றியும், தமிழக அரசிடம் விளக்கம் கேட்கப்படும் என்று சொன்னதைப்பற்றியும் வந்திருந்தது. விளக்கம் கேட்பதே தமிழக அரசாங்கத்தை மிரட்டுகிறார்கள் என்றே அல்லது அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றே அர்த்தம் அல்ல. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பதற்கு அர்த்தம் என்ன என்று கேட்கிறார்கள். அது தமிழக அரசின் சார்பில் விளக்கப்படும். பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. மத்திய சர்க்காரிலிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. பொதுவாகப் பாராளுமன்றத்தில் நமது மாநிலத்தைப்பற்றி எழுப்பப்பட்டால் உடனடியாக அந்த மாநிலத்திற்கு அனுப்பி அந்த அரசினுடைய பதிலைப் பெற்று, அந்தப் பதிலை அளிப்பது

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

வழக்கமாக இருக்கிறது. அப்படி வந்தால் நான் சொன்ன விளக்கத்தை அப்பொழுது பதில் என்ற முறையிலே அளிப்பேன் என்று கூறிக்கொள் கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, முதலமைச்சருடைய பதிலி லிருந்து, "தமிழ்நாடு தமிழருக்கே" என்ருல் தமிழ்நாட்டைத் தமிழகத்தில் இருப்பவர்கள்தான் ஆள வேண்டுமென்ற கருத்து தொனிக்கிறது அல்லவா? இன்றுள்ள அரசியல் சட்டப்படி இதர மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் வெகு நீண்டகாலமாகத் தமிழகத்திலேயே வாழ்ந்து, தமிழர்களாகவே பழகியிருந்தாலும், அவர்கள் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வருவதற்குத் தடை இருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன். அவர்கள் சொல்வதைப் பார்த்தால் தமிழ்நாட்டில் தமிழர்கள்தான் அரசியல் பொறுப்பை ஏற்கவேண்டும், பாக்கிப் பேர் வர முடியாது என்ற கருத்து தொனிக்கவில்லையா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அரசியல் சட்டத்திலே இருப்பதைப்பற்றி நான் ஆராய விரும்பவும் இல்லை. இப்பொழுது வேறு யாரும் வரவே கூடாது என்று சொல்லியிருப்பதாகவும் சொல்லவில்லை. இப்பொழுது இருக்கின்ற நிலைமை ஒவ்வொரு மாநிலத்திலேயும் அந்தந்த மாநிலத்திலே இருக்கின்ற பெரும்பான்மை மொழி பேசும் மக்களின் பிரதிநிதிகள்தான் தலைமையேற்று அந்தந்த ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேனே தவிர, வேறு யாரும் முதலமைச்சராக உட்காரவே கூடாது என்று சொல்லவில்லை. இதே கருத்தை நான் ஏற்கனவே சொன்னபொழுது, காங்கிரஸ் தரப்பிலேயிருந்து காமராஜர் தான் வருவார் என்று சொன்னதாகச் சொல்லப்பட்டது. தமிழ்நாட்டில் தமிழ் மக்களின் ஆட்சி, கேரளத்தில் கேரள மக்களின் ஆட்சி, அதேபோல் ஆந்திர மாநிலத்திலே ஆந்திர மக்களின் ஆட்சி என்ற கருத்திலேதான் சொன்னேனே தவிர, வேறு யாரும் முதலமைச்சராக உட்காரவே கூடாது என்று சொல்ல வில்லை. இது தமிழ்நாட்டு மக்களாகப் பார்த்து முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தமிழ்நாடு தமிழருக்கே என்ற கொள்கையை அரசாங்கம் வைத்திருந்தால், இப்பொழுதுள்ள தமிழ்நாடு தான் தமிழர்களுக்கு என்ற கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்ருல், கேரளத்திலே தமிழ்நாட்டைச் சேரவேண்டிய பகுதிகள் இன்னும் இருக்கின்றன. அதற்காக நாங்கள் போராடிக்கொண்டே இருந்தோம்.

னும

1973 ஆகஸ்ட் 10] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நாடு மொழிவழி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபொழுது நான்கு தாலுக்காக்கள் தமிழ்நாட்டோடு சேர்க்கப்பட்ட வேண்டிய பகுதிகளாக அங்கே இருக்கின்றன. அந்தப் பகுதிகளையும் சேர்த்துத்தான் தமிழ்நாடு என்று வைக்க வேண்டுமென்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, இன்றைக்கு அரசாங்க நிர்வாகத்திலே ஒரே லஞ்சமும், ஊழலும் இருக்கிற நிலைமை இருக்கும் பொழுது நாட்டிலே எந்தவிதமான பெரிய மாறுதலையும் கொண்டுவருவது இயலாது என்பதாலும், அதைப்போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதாலும், அது வரவர வளர்ந்துகொண்டே போகிறது என்பதாலும் நாங்கள் இந்த அரசாங்கத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசுத் தரப்பிலே இருப்பவர்கள் இன்றைக்கு என்ன கருதுகிறார்கள் என்றால், இப்படிப்பட்ட நோத்திலே மிகவும் அதிகமாள கூட்டம் அவர்களை நோக்கி வரும்பொழுது, ஒவ்வொருவரும் இந்த நோத்திலே பெரும் காரியங்களைச் செய்து கொள்ள வேண்டுமென்று வருகிறபொழுது பெரும்பாலான மக்களின் ஆதரவு தங்களுக்கு இருக்கிறது என்று நினைத்துக்கொள்கிறார்கள். அதனால் உண்மையிலேயே அரசுத் தரப்பிலே முற்போக்கான காரியங்களைச் செய்து வைத்திருக்கிறோம் என்று நினைத்து மக்கள் நம் பக்கம்தான் இருக்கிறார்கள் என்று கருதுவது தவறு.

இன்றைக்கு நிர்வாக ஊழலின் காரணமாகவும், தவறுகளின் காரணமாகவும் மக்களின் ஆதரவு உங்களுக்குக் குறைந்திருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். நன்மைகள் பல செய்தாலும்கூட தீமைகள் நிகழும்பொழுது அந்த நன்மைகளின் பலன்களை மறந்துவிடக்கூடிய போக்குதான் இருக்கிறது என்று கூறி, வள்ளுவர் கூறியதை நினைவுபடுத்த விரும்புகிறேன். "குன்றின் அனையாரும் குன்றுவர், குன்றுவ குன்றி அனைய செயின்" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். இதைக் கருத்திற்கொண்டு நாட்டிலே நிலவும் மோசமான நிலைமைகளைப் போக்கி நல்ல நிர்வாகத்தை அரசு கொடுக்க வேண்டுமென்று கூறி, இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: பேரன்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, எதிர்க்கட்சியினர் கொண்டு வந்துள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்து நான் என்னுடைய கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 ஆகஸ்ட் 10

கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு சற்றேறத்தாழ ஏழெட்டு நினங்கள் விவாதிக்கப்பட்டு அதிலே பெரும்பான்மையான உறுப்பினர்கள் இந்தச் சட்டமன்றத்தில் இந்த அரசின்மீது முழு நம்பிக்கை இருக்கிறது என்று வாக்களித்தபிறகு இந்த மூன்று மாத காலத்தில் என்ன நடக்கக்கூடாதது நடந்துவிட்டது, எதற்காக மீண்டும் இம்மாதிரி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த அரசின்மீது கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

நான் நினைக்கிறேன், எப்படி ஒவ்வொரு கூட்டமும் துதிப் பாடலோடு ஆரம்பிக்கப்படுகிறதோ அதைப்போல இப்பொழுதெல்லாம் சட்டமன்றக் கூட்டத் தொடரும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற துதிப் பாடலோடு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நியதி ஏற்பட்டுவிட்டது போலும். இதற்கு எப்பொழுது மங்களம் பாடப்படும் என்று தெரியவில்லை. இன்றைக்கு மாலையோடு அது முடியும் என்று நினைக்கிறேன்.

ஆனால் அதைக்குறித்து ஒரு சில கருத்துக்களை, நடுநிலையோடு நின்று, எந்த விருப்பும் வெறுப்புமின்றி கூற விரும்புகிறேன். நடந்து முடிந்த நிண்டுக்கல் தேர்தலைப்பற்றி பல கண்ணோட்டத்தோடு இங்கே பிரச்னைகளை அணுகினர்கள். நானும் ஒன்று சொல்கிறேன். ஒரு அரசின்மீது மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதற்காக உபதேர்தல் பயன்பட்டு வருகிறது என்பது உண்மைதான். ஆனால் எந்த உப தேர்தலும் கண்டனத்தின் அறிகுறியாகவோ, அல்லது இந்த அரசே வேண்டாமென்று சொல்லக்கூடிய முறையிலோ இருக்க முடியாது. நன்றாகப் படிக்கின்ற நல்ல பிள்ளைகூட தன்மீது வைத்துள்ள அபார நம்பிக்கையின் காரணமாக விளையாட்டில் ஈடுபடும்பொழுது அவனுடைய தந்தை அவனைக் கண்டிப்பது வழக்கம். அதைப்போல ஒரு அரசு தனக்குப் பெரும்பான்மையான ஆதரவு இருக்கிறது என்று அலட்சியமாக இருந்தாலோ அல்லது ஒருசில தவறுகளை அலுவலர்கள் செய்யும் பொழுது அந்தக் குறைகளை நீக்கி இன்னும் நல்ல முறையில் சீர்திருத்தங்களைச் செய்யுங்கள் என்று உப தேர்தலில் சொல்வதாக எடுத்துக்கொள்வதற்கு அது உதவும். அதைப்போலவே இந்த அரசு நிட்டங்களில் மக்களோடு அணுகிய முறைகளிலே ஏதாவது குறைபாடுகளைக் கண்ட மக்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இவைகளிலே சீர்திருத்தம் செய்யுங்கள் என்ற அறிவிப்பை நிண்டுக்கல் தேர்தலிலே மக்கள் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசே வேண்டாம், இந்த அரசின்மீது நம்பிக்கையில்லை என்று

1973 ஆகஸ்ட் 10] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

மக்கள் கருதுவதாக திண்டுக்கல் தேர்தலே எடுத்துக்கொள்ளாவிட்டாலும், மக்களிடமிருந்து எச்சரிக்கை வந்திருக்கிறது என்று மட்டும் கவனத்திற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வகையிலே என்ன எச்சரிக்கை வந்திருக்கிறது என்றால் அது உங்களுக்கு வெளிப்படையாகவே தெரியும். அதுதான் மதுவிலக்குப் பிரச்னை. இந்தப் பிரச்னையில் மற்ற மாநிலங்களில் எல்லாம், இந்தியா முழுவதும் ஒரே சீரான முறையில் மதுவிலக்குத் திட்டத்தை அனுசரிக்க வேண்டுமென்ற நியாயமான கோரிக்கையிலிருந்து சற்றுத் தளர்த்தி இந்தக் கள்ளுக் கடைகளை முதலிலே மூடுகிறோம் என்று சொல்கிறார்கள். நான் அதற்குப் பிறகு இந்தச் சாராயக் கடைகள் ஏலம் போன தொகைகளைப் பத்திரிகை வாயிலாகப் பார்க்கும்பொழுது அந்த நன்னெக்கம் மூறியடிக்கப்பட்டு விட்டது என்று உணர்கிறேன். நாங்கள் கேண்டீனுக்குப் போய் டீ கேட்டு அது இல்லையென்று சொன்னால் குறைந்தபட்சம் காபியையாவது கொடுத்துத் தொலை என்று சொல்வதைப்போல் கள் இல்லை என்றால் சாராயத்தையாவது கொடு என்று சொல்லும் அளவில் இருக்குமே தவிர அதனால் நாம் விரும்பிய பலன் ஏற்பட முடியாது.

ஆகவே, இதில் மற்ற மாநிலங்களுக்கு நம்முடைய மாநிலம் முன்மாதிரி யாக இருக்க வேண்டும். எல்லா வகையிலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை மக்களுக்குப் பாடுபடுவதிலே, பாட்டாளி மக்களுக்குப் பாடுபடு வதிலே, விவசாய மக்களுக்குப் பாடுபடுவதிலே, சம நேரக்குடன் எல்லோ ருக்கும் சம வாய்ப்பு ஏற்பட வேண்டுமென்பதற்காகப் பாடுபடுவதிலே மற்ற மாநிலங்களுக்கு அகில இந்தியாவிற்கு, உலகத்திற்கேகூட முன்மாதிரியாக இருக்கிற அரசு இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதிலும் முன்மாதிரியாக இருக்க வேண்டும். மற்ற மாநிலங்களிலே வரட்டும். அதற்குப் பிறகு செய்கிறேன் என் வாதத்தை இனியாவது கைவிட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாராயக் கடைகளுக்கும் வசதி படைத்தவர்கள் அருந்தக்கூடிய உயர்தர மான வெளிநாட்டுச் சரக்குகளான ஒயின் போன்றவைகளுக்கும் தடங்கல் எதும் இல்லை. எங்கெங்கெல்லாம் இந்தக் கடைகளைப் பார்க்கக் கூடாதோ அங்கெல்லாம் பார்க்கிறோம். பள்ளிக்கூடங்களின் அருகாமையிலே பார்க் கிறோம், மருத்துவமனைகளுக்கு அருகாமையிலே பார்க்கிறோம், ஆஸ்பத்திரிகளுக்கு

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 ஆகஸ்ட் 10

அருகாமையிலே பார்க்கிறோம். இந்த மதுக் கடைகள் மக்களுக்கு எவ்வளவோ சொல்லொணு மனவேதனையைத் தந்து கொண்டிருக்கிறது. அதனுடைய எதிரொலியாகத்தான் நான் திண்டுக்கல் பிரச்சினையை அணுகுகிறேன்.

இந்த அரசு ஏழை மக்களுக்கு நிறையச் செய்ய வேண்டும், வாழ்க்கையின் அடித்தளத்திலே இருக்கும் மக்களுக்கு சீர்திருத்தம் செய்து மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்ற நன்னோக்கத்தில் தீவிரம் காட்டுவதை மக்கள் ஜீரணம் செய்ய முடியாத அளவுக்கு வேகமாகச் செல்கிறது. சீர்திருத்தத் திட்டங்களை மக்கள் ஒவ்வொன்றாகப் புரிந்து கொள்ளுகின்ற நிலையில் செய்யாது, மக்கள் தீவிரமான சோஷலிசத் திட்டங்களுக்குத் தயாராகாத நிலையில், தீவிரமான சோஷலிசத் திட்டங்களைக் கொண்டு வருவதன் மூலமாக, திணிப்பதன் மூலமாக எதிர்ப்புணர்ச்சி ஏற்படுகிறது என்பதை அரசு உற்று நோக்க வேண்டும்.

கல்டிவேட்டிங் டெனன்ட்சுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்ற சட்டத்தை அரசு கொண்டு வந்தது. இது தீவிரமான திட்டம். இந்த நாட்டு மக்கள் இவ்வளவு தீவிரமான சோஷலிசத் திட்டத்திற்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை. ஆகவே, இந்தத் தீவிரத் திட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசின் மீது நிச்சயமாகக் கிராமப்புறங்களில் கெட்ட எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இடையில் ஏற்பட்ட மின்சார வெட்டின் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் பயிரெல்லாம் காய்ந்து கருகி, உழைப்பெல்லாம் வீணாகிவிடுமோ என்று அஞ்சி நின்று கொண்டிருந்த நேரத்திலே தேர்தல் வந்து அதன் எதிரொலியாக முடிவு வந்தது.

என் போன்றவர்கள் எல்லாம் தமிழகத்தில் எங்கள் கட்சியின் சார்பாக மூலை முடுக்குகள் எல்லாம் சுற்றிப் பயணம் செய்யக்கூடியவர்கள். அப்படிப் பயணம் செய்யும்போது முஸ்லீம் இளைஞர்களையும், அந்தச் சமுதாய மக்களையும் ஆங்காங்கு சந்திக்கிறேன். அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் உள்ளத்தில் இருக்கும் வேதனையைப் பார்க்கும்போது, இந்த நாடு சுதந்திரமடைந்தபிறகு 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் எப்படி முஸ்லீம் மக்கள் ஏக்கமும், கவலையும் உடையவர்களாக இருந்தார்களோ அப்படித்தான் இன்னமும் இருக்கிறார்கள். நம்முடைய குறை நீர்க்கும் காலம் வராதோ, நம்முடைய குறைகளைத் தீர்க்கக்கூடிய ஆட்சி வாராதோ என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்குத் தோழமைக் கட்சியினர் பதவி

1973 ஆகஸ்ட் 10] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

பெற்றவுடன் உற்சாகத்தோடு மகிழ்ச்சியில் இருந்தார்கள். நம்முடைய குறைகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தீர்க்கப்படும் என்ற மகிழ்ச்சியில் இருந்தார்கள். ஆனால் இன்று அரசாங்கத்திலே வேலை செய்யும் அலுவலர்களுக்கு நன்நோக்கம் இல்லாத காரணத்தால் சிறுபான்மை சமுதாயத்தினருக்கு நீதி வழங்கப்படவில்லை, அநீதி வழங்கப்படுகிறது.

உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், சப் இன்ஸ்பெக்டர்களுக்கு சமீபத்தில் தேர்வு நடந்தது. வேலூர் சூப்பரின்டென்டன்ட் மூலமாக நடந்தது. அதிலே ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர் பதினாலே செகண்ட் லேட்டாக ஓடி வந்தார் என்பதற்காக டிஸ்குவாலிபை செய்யப் பட்டிருக்கிறார். இன்னொருவர் நெஞ்சளவு 76 செ.மீ. தான் இருக்கிறது என்று அதிகாரியால் டிஸ்குவாலிபை செய்யப்பட்டார். ஆனால் மறுபடியும் அடுத்த அதிகாரியிடம்—திரு. கிருஷ்ணமூர்த்தி என்று நினைக்கிறேன்—போய் கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டு மறுபடியும் பார்த்ததில் 78½ செ.மீ. நெஞ்சளவு இருந்தது. இரண்டாவது அதிகாரியிடம் போனவுடன் 2½ செ.மீ. எப்படி அதிகமானது? ஒருசில அதிகாரிகள் முஸ்லீம்களை உத்தியோகத்தில் சேர்க்கக் கூடாது, அவர்களைப் பக்கத்தில் கூட சேர்க்கக் கூடாது என்ற உணர்ச்சியுடன் அணுகுகிறார்கள் என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டும்.

கல்வி சம்பந்தப்பட்டவரை எடுத்துக் கொண்டால் ஆசிரியர் பயிற்சிக் கூடங்கள் மூடப்பட்டுக் கிடந்தன. இந்த ஆண்டு தமிழாசிரியர்கள் பயிற்சிக் கூடங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாநிலம் முழுமைக்குமாக உருது பேசும் மக்களுக்காக இருக்கக்கூடிய ஒரே ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தாஹிர் சாஹிப் தெருவில் இருக் கூடியதுதான். அந்த ஆசிரியர் பள்ளிக்கூடம் இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. என் என்று அரசு சொல்ல வேண்டும். முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டவரையில் இன்னும் பாரபட்சங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன என்று வேதனையுடன் எங்களுடைய மக்கள் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையிலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

விலைவாசி உயர்வு பற்றிச் சொல்லப்பட்டது. அரசுக்குத் தாழ்மையான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். விலைவாசி உயர்வு பல பொருள்களை மத்திய தர மக்களே வாங்கி உண்ண முடியாத அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பரிகாரமாக அரசே உணவுப் பொருள் விநியோகத்தை

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1973 ஆகஸ்ட் 10

ஏற்றுக் கொள்ளப்போவதாகச் சொல்கிறார்கள். நான் எச்சரிக்கிறேன். அப்படி உணவு தானிய விநியோகத்தை அரசு எடுத்துக் கொள்ளவேண்டு மென்று சொல்வது எதிர்க்கட்சிகள் செய்யும் சூழ்ச்சி என்று எச்சரிக்கிறேன்.

மந்திய அரசு கோதுமை விநியோகத்தை எடுத்துக் கொண்டு அதனால் எத்தனை துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன, மக்களுக்கு எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன, விநியோக சீர்கேடு எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது, அதனால் பட்டினி பசியால் மக்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் என்பதை யெல்லாம் அரசு பார்த்து இப்போது அரிசி விநியோகத்தை அரசு ஏற்றுக் கொள்வதற்குரிய நிலையில் உத்தம புத்திரர்களாக அலுவலர்கள் எங்கேயும் இல்லை, இவர்களை வைத்துக்கொண்டு விநியோகம் செய்வதாக இருந்தால் தவறுகள் நடந்து அரசாங்கத்தின்மீது பழிபாவங்கள் சுமரும் என்பதால் அரசு இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விலைவாசிகளைக் குறைப்ப தற்காக எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் கொண்ட கூட்டத்தைக் கூட்டி அதிலே ஆராய்ந்து எப்படி விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது என்பதை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மூஸ்லிம் சமுதாய மக்கள் என்றென்றும் பல்லக்குத் தூக்குபவர்களாகவே இருக்க வேண்டுமென்ற நினைப்பு மாறி, அவர்களும் இந்த நாட்டில் பிறந்த வர்கள், சம அந்தஸ்து அவர்களுக்கும் அளிக்கும் வகையில் வழிவகை செய்து தரவேண்டுமென்ற முறையில் இந்த அரசு பணிபுரிய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் எதிர்க்கட்சி உறுபபினர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்து என் கருத்துக் களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

பொதுவாக, எதிர்க்கட்சி வரிசையில் இருந்து பேசுகிற உறுப்பினர்கள் இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பிற்பாடு நாட்டில் லஞ்சம் பெருகிவிட்டது, ஊழல் பெருகிவிட்டது, அமைச்சர்கள் எல்லாம் சொத்து சம்பாதித்துவிட்டார்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப் பினர்கள் எல்லாரும் சொத்து சம்பாதித்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை ஆதாரம் இல்லாமல், ஒரு நபரைக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தகுதி இல்லாமல் ஒட்டுமொத்தமாகப் பேசுவதையும் அப்படிப் பேசிவிட்டு அவர்களே தங்கள் நிலையைப் பிற்பாடு திருத்திக் கொள்வதையும் நாம் இன்றைக்கு மிகத் தெளிவாகப் பார்க்கிறோம்.

1973 ஆகஸ்ட் 10] [திரு. கு. துரைசாமி]

இப்போது தமிழ்நாடு முழுவதிலும் இந்த அரசாங்கத்திற்கு எதிராக இருக்கும் கட்சியைச் சார்ந்தவர்கள் இப்படி சேற்றை வாரி இறைக்கிற காரியத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் குற்றச் சாட்டுகளை எடுத்துக் கொண்டு டில்லிக்குப் போகிறார்கள், குடியரசுத் தலைவரைப் பார்த்து மர்மமான குற்றச்சாட்டுகளைக் கொடுக்கிறார்கள். அதற்குப் பின்னால் பிரதமர் இந்திரா காந்தியை சந்தித்து குற்றச்சாட்டுகள் இருப்பதாகக் கொடுக்கிறார்கள். அதைக் கொடுத்துவிட்டுச் சொல்லக் கூடிய வாதமெல்லாம்—இதற்கு கமிஷன் போட வேண்டும், நீதிபதியை நியமிக்க வேண்டும் என்ற கருத்தை வெளியேயும் பேசுகிறார்கள். உள்ளேயும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பேசக் கூடியவர்கள் தங்களுடைய பேச்சி லிருந்து பின்வாங்காமல் அதை நிரூபிக்கக்கூடிய தகுதியில் இருக்கிறார்களா என்றால் இல்லை என்பதை இந்தத் தமிழ்நாட்டு மக்கள் மிகத் தெளிவாக அறிவார்கள். தமிழ்நாட்டில் உள்ள பெரியவர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்பாக ஒரு ஊருக்கு வந்தார். அந்த ஊரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். அவர் பேசிய பேச்சுக்கள்—'1967-ம் ஆண்டுக்குப் பிற்பாடு இந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏராளமான சொத்துக்களைச் சம்பாதித்துக் கொண்டார், அந்தச் சொத்துக்களை முறையற்ற முறையில் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்' என்று கூறினார்.

1967-க்குப் பின்னால் ரூ. 75,000-க்கு எயர்கண்டிஷன்ட் பங்களா கட்டிக் கொண்டார், சைக்கிள் கம்பெனியில் பங்குகள் இருக்கின்றன, மோட்டார் கம்பெனியில் பங்குகள் இருக்கின்றன, என்றெல்லாம் ஏராளமான குற்றச் சாட்டுக்களை எல்லாம் அவர்கள் பேசினார்கள். சில பத்திரிகைகளிலும் அந்தப் பேச்சுக்கள் வந்திருக்கின்றன. அந்தப் பேச்சுக்கள் வந்த பிற்பாடு அந்தச் சட்டமன்ற உறுப்பினர் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, தன்மீது சுமத்தப் பட்ட குற்றச்சாட்டை தவறு என்று நிரூபிப்பதற்காக நீதிமன்றத்திற்குப் போகிறார். நீதிமன்றத்தில் அவர் சொல்கிறார்—இப்படிப்பட்டதொரு குற்றச் சாட்டை ஒரு பெரிய தலைவர் பேசியிருக்கிறார், இவைகள் எல்லாம் உண்மை அல்ல என்று நீதிமன்றத்திற்குச் சென்று சொன்ன நேரத்தில் பெரிய தலைவர் நீதிமன்றத்திற்கு வருகிறார். அவர் என்ன சொல்கிறார்? பொதுக் கூட்டத்தில் பேசினார், தன் கட்சிப் பத்திரிகையில் அந்தச் செய்திகள் எல்லாம் வந்திருக் கின்றன. அவர்கள் உள்ளபடியே நாணயமானவர்களாக இருந்தால், நேர்மை உள்ளவர்களாக இருந்தால், உண்மையைப் பேசக்கூடியவர்களாக இருந்தால் என்ன சொல்லியிருக்கவேண்டும் நீதிமன்றத்தில்? நான் பொதுக் கூட்டத்தில் பேசியது உண்மை, அந்த உறுப்பினர் 1967-க்குப் பிறகு இப்படியெல்லாம்

[திரு. சு. துரைசாமி] [1973 ஆகஸ்ட் 10

சொத்து சம்பாதித்திருக்கிறார் என்று சொன்னதை நிரூபிக்க வேண்டும். என்ன பேசுகிறார்கள் வெளியே? மத்திய அரசு ஒரு கமிஷன் போடவேண்டும், நீதி விசாரணை வேண்டும் என்றெல்லாம் பேசுகிறார்கள். ஆனால் அந்தப் பெரிய தலைவர் நீதிமன்றத்திற்கு வந்து என்ன பேசுகிறார்? நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்கிறார். தனிப்பட்ட எந்தப் பெயரையும் நான் குறிப்பிட்டு அங்கு பேசவில்லை என்று சொல்கிறார் நீதிமன்றத்தில்.

இந்த மன்றத்தின் மூலம் தமிழ் நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று எதிர்த்தரப்பிலிருந்து பேசுகிறவர்கள் ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுகளைச் சொல்லாமல் ஏதோ பேசவேண்டுமென்று சில குற்றச்சாட்டுக்களைச் சொல்லி நீதி மன்றத்திற்குப் போனால் அங்கு தண்டனைக்குப் பயந்துகொண்டு தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டு இரட்டை வேஷம் போடுகிற காட்சியை தமிழக மக்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் இன்று ஊருக்கு உபதேசம் செய்வது போல் தங்களை நீதிவான்கள் போல் வெளியே பேசிக்கொண்டிருப்பது எந்த வகையிலும் நாணயம் இல்லை என்பதை நாடு தெளிவாக அறியும். ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, ஆளும் கட்சியைப் பொறுத்தவரையில், அமைச்சர்களைப் பொறுத்தவரையில், சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் எதிர்வரிசையில் இருப்பவர்கள் நபர்களைக் குறிப்பிட்டுப் பேசட்டும். ஆனைக் குறிப்பிட்டு இன்ன குற்றச்சாட்டை இன்னார் செய்தார் என்று சொல்லட்டும். அப்படிச் சொல்கிற தைரியம் இல்லை, திறன் இல்லை, நாணயம் இல்லை என்பதை நீதிமன்றத்தில் அவர்கள் பேசிய பேச்சுக்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில் எல்லாத் துறைகளிலும் சாதாரண மக்களுக்காக, ஏழை எளிய மக்களுக்காக, பாடுபடுகிற மக்களுக்காக இருக்கிற அரசாகும். இந்த அரசு வீழ்த்தப்பட வேண்டும் என்று, இந்த அரசு மாற்றப்படவேண்டும் என்று பேசுகிறவர்கள் சுந்தர்ப்பவாதிகளாக, மக்களைப் பற்றிக் கவலைப்படாதவர்களாக இருப்பதைத் தான் பார்க்கிறோம். தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்திருக்கிறது என்றால் திராவிட முன்னேற்றக்கழக அமைச்சரவையைத் தவிர, நம் முதல் அமைச்சர் அவர்களை விட வேறு யாரும் அதைவிடச் சிறப்பாகச் செய்ய முடியாது. வெளியே அப்படியெல்லாம் பேசிய தலைவரைத்தான் இன்று புரட்சித் தலைவர் என்று வெளியே பேசிக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவராக இருந்தால், உண்மையை எற்றுக்கொள்ளக் கூடியவராக இருந்தால் நீதிமன்றத்தில் அவர் சொல்லியிருக்கவேண்டும். நான் திருப்பூர் சட்டமன்ற

1973 ஆகஸ்ட் 10] [திரு. சு. துரைசாமி]

உறுப்பினரைப் பற்றித்தான் பேசினேன். 1967-க்குப் பின்னால் இப்படி இப்படியெல்லாம் சொத்து சம்பாதித்திருக்கிறார் என்று ஆதாரத்தோடு நிரூபித்துக் காட்டியிருக்க வேண்டும். நிரூபித்தார்களா? நிரூபிக்கவில்லை. அப்படி நிரூபிக்காமல் இங்கு வந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது சுமத்துகிற குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. தமிழக அரசுதான் இன்று ஏழை மக்களுக்காக, தொழிலாளர்களுக்காக, பாடுபடுகிற மக்களுக்காக எல்லாத் துறைகளிலும் நல்ல பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. பஞ்சாலைத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட காலத்தில் அவர்களுக்கு நிவாரணம் கொடுத்தது இந்திய நாட்டிலேயே தமிழக அரசு ஒன்றே தவிர கேரளத்தில் இருக்கிற அச்சுத மேனன் அரசு அல்ல. அல்லது வேறு மாநிலங்களில் இருக்கிற காங்கிரஸ் அரசாங்கங்களும் அல்ல. இந்திய நாட்டிற்கே வழிகாட்டக் கூடிய முறையில் உழைக்கக்கூடிய மக்களுக்கு, பாதிக்கப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளித்திருப்பது நம் அரசுதான். அதேபோல் கைத்தறித் தொழிலாளர்கள் இந்திய நாடு முழுவதும் இருக்கிறார்கள். ஆனால் இந்த ஒரு மாநிலத்தில் மட்டும்தான் அவர்களுக்கு தக்க உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில், கேரளாவில், ஆந்திராவில், பம்பாயில் எங்கேயாவது பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு ஒரு நூறு ரூபாயாவது கொடுத்திருக்கிறார்களா, வேண்டாம் அனுதாபத்தைக் காட்டுவதற்காகவாவது ஐந்து ரூபாயாவது கொடுக்கக்கூடிய உணர்வாவது ஏற்பட்டதா என்றால் இல்லை என்பதைத்தான் பார்க்கிறோம். உழைக்கிற மக்களுக்காக இருக்கிற இந்த அரசு என்றைக்கும் நீடித்திருக்கவேண்டும் என்ற உணர்வோடு எதிர்வரிசையில் இருந்து கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய நம்பிக்கையின்மைத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் நான் வன்மையாகக் கண்டித்து என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையின்மைத் தீர்மானத்திலும், திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டுவந்திருக்கிற கண்டனத் தீர்மானத்திலும் கலந்துகொண்டு பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பல்வேறு கோணங்களில், பல்வேறு பிரச்னைகளை ஆராய்கிற வகையில், அரசைச் சாடுகிற வகையில், அல்லது அரசை ஆதரிக்கிற வகையில் இங்கு எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 ஆகஸ்ட் 10

பொதுவாக, ஒரு நம்பிக்கையின்மைத் தீர்மானம் அவையில் கொண்டுவரப் படுகிறது என்றால் அதனுடைய விளைவுகளை நல்ல விளைவுகளாக நினைத்து, நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும் என்று நினைத்துத்தான் பொறுப்புள்ள வர்கள் கொண்டுவரவேண்டும். ஒரு நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின் வாயிலாக அல்லது ஒரு கண்டனத் தீர்மானத்தின் வாயிலாக அரசு செய்கிற குற்றங்குறைகளை எடுத்துக் கூறக்கூடிய ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்து வதற்கும், அவையில் தங்களுக்கு பெரும்பான்மை பலம் இல்லாவிட்டாலும், நம்பிக்கையின்மைத் தீர்மானம் நிச்சயமாக தோற்கடிக்கப்படும், கண்டனத் தீர்மானம் நிச்சயமாக அவையால் ஒதுக்கித் தள்ளப்படும் என்று தெரிந்து கொண்டிருந்தும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருகிறார்கள் என்றால் அந்தத் தீர்மானத்தின் வாயிலாக அரசு உண்மையாகச் செய்த குற்றங்குறைகளை அவை முன் எடுத்து வைப்பதன் வாயிலாக நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறி அமைச்சரவையில் இருப்பவர்கள் தங்கள் குற்றங்குறைகளைக் களைவதற்கான வகைகளைக் காணவேண்டும் என்பதோடு அதன் வாயிலாக நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படவேண்டும், அவையில் உள்ள அமைச்சர்களிடம் நேரடியாகக் கேள்விகள் கேட்பதன் வாயிலாக அவர்கள் கீழ் வேலை செய்கிற அதிகாரிகள் தங்கள் தவறுகளை உணர்ந்து திருத்திக்கொண்டு நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கிற வகையில் அவர்கள் செயலாற்றவேண்டுமென்ற அடிப்படையில் நம்பிக்கையின்மைத் தீர்மானம் கொண்டுவருவது மரபு. அதுதான் நோக்கமாக இருக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக அரசைச் சாடவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு, ஆட்சியில் இருக்கிறவர்களுக்கு மக்களிடம் இருக்கிற பிடிப்பை எப்படியாவது தளர்த்தவேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு இன்று நடைபெறுகிற இந்த ஆட்சி சரியாக இல்லை, ஆட்சி நாட்டு மக்களின் நம்பிக் கையை இழந்துவிட்டது, இன்று செல்கிறதோ நாளைச் செல்கிறதோ அல்லது நாளை மறுநாள் செல்கிறதோ இந்த ஆட்சி என்ற நினைப்பை நாட்டில் பரப்ப வேண்டுமென்ற நோக்கத்தோடு கொண்டுவருகிற நம்பிக்கையின்மைத் தீர்மானங்கள் எந்த அளவிற்கு நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் என்பதை இந்த அவை சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறது.

என் நண்பர் ஜப்பார் அவர்கள் சொல்லியதைப்போல் இங்கு ஆரம்பிக்கப் படுகிற ஒவ்வொரு கூட்டத் தொடரும் நம்பிக்கை இல்லை, நம்பிக்கை இல்லை என்ற அடிப்படையில் தொடங்குவதாக இருந்தால், அதுவும் பேசுகிற பேச்சுக்கள், அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் இந்தப் பக்கத்தில் இருப்ப வர்களைப் பார்த்து நீங்கள் குற்றம் செய்தவர்கள் என்று சொல்வதும், இந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் அந்தப் பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து லஞ்சம்

1973 ஆகஸ்ட் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

வாங்கினீர்கள், லஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் என்றும், உங்கள் வாழ்க்கையை மட்டும் செம்மையாக நடத்திக்கொண்டு மக்களை மறந்து ஆட்சி செய்யக்கூடியவர்கள் என்று சொல்வதும், இந்தப் பக்கத்தில் இருப்பவர்களைப் பார்த்து அந்தப் பக்கத்தில் இருப்பவர்கள் நீங்கள் எப்படி நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்று தெரியும் என்று சொல்வதும் எந்த அளவிற்கு மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிற நமக்குக் கௌரவத்தை அளிக்கும், எந்த அளவிற்கு அது மக்கள் நம்மீது வைத்திருக்கும் கௌரவத்தை உயர்த்தும் என்பதை சிந்தித்துப் பார்க்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

மணலி அவர்கள் மிக வேதனையாகச் சொன்னார்கள். அந்த வேதனையில் நான் கூட பங்கு பெறுகின்றேன். இந்த நாட்டு மக்களிடையே சட்டமன்ற உறுப்பினர்கள் என்று சொல்லுவதே அவமானமாக இருக்கிறது. எம்.எல்.ஏ. என்று சொல்லிக்கொண்டு செல்ல முடியவில்லை. சாதாரண லத்தீப், வழக்கறிஞர் என்று எனக்கு இருந்த மரியாதை அற்றுப்போய்விட்டது. இன்று சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஊருக்குள் சென்றால் அவர்கள் பார்க்கும் பார்வையைக் காணும்போது என் சட்டமன்ற உறுப்பினராகி நம்முடைய தரத்தை நாம் தாழ்த்திக்கொண்டோம் என்று எண்ணுகிறது என்னுடைய உள்ளம். இப்படி ஒரு வேதனையான நிலையை உருவாக்குவதற்குத்தான் இந்த அவை உருவாக்கப்பட்டதா, அதற்குத்தான் அரசியல் சட்டத்தில் சில அடிப்படையான காரியங்களை இந்த அவை செய்யவேண்டுமென்று எழுதப்பட்டதா என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பி.ப. 17-30

இன்றைக்கு இந்தத் தீர்மானங்களின் வாயிலாக இந்த நாட்டு மக்களுக்கு எந்த அளவுக்கு நன்மை ஏற்படும் என்ற ஒரு முடிவை இந்த அவை தீர்மானிப்பதற்கு இருக்கிறது. நாட்டிலே இருக்கிற மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறது இந்த ஆட்சி, இன்னும் 2½ ஆண்டுகளுக்குப் பதவியில் இருந்தால்தான் நல்ல நன்மைகளைச் செய்யமுடியும். இந்த ஆட்சி நீடித்து இருக்கும் என்ற நிலை இருந்தால்தான் இந்த ஆட்சிக்குக் கீழே இருக்கிற அதிகாரிகள் கடமை உணர்ச்சியோடு பணியாற்றுவார்கள். அந்தக் கடமையுணர்ச்சியைத் தடுத்து நிறுத்துகிற வகையில் இப்படிப்பட்ட தீர்மானங்கள் அடிக்கடி கொண்டுவரப்பட்டால் அது நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்காது, இந்த மன்றத்திற்கும் உகந்ததாக இருக்காது என்று வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 ஆகஸ்ட் 10

இன்றைக்கு என்னுடைய கட்சியைச் சார்ந்த அபுசாலி அவர்களும், ஜப்பார் அவர்களும் சில குறைகளைச் சொன்னார்கள். நாங்கள் சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளாக வந்து இருக்கிறோம். சிறுபான்மை மக்களுக்கு அரசில் சட்டத்தில் எவ்வளவுதான் உத்தரவாதங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும் அரசியல் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டிருந்தாலும், எழுதப் பட்டிருந்தாலும், நீதிமன்றங்களால் சிறுபான்மை மக்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கும் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் தீர்ப்புகள் அளிக்கப்பட்டிருந்தாலும், அவற்றிற்கு முழு வடிவம், முழுப் பலன் எப்படிக் கிடைக்கும் என்றால் பெரும்பான்மையான மக்களின் நல்லெண்ணம் இருக்கவேண்டும், அப்படியில்லையென்றால் அது புத்தகத்தில் எழுதப்பட்ட எழுத்தாக இருக்குமே தவிர நிச்சயமாக அவை பயன் உள்ளவையாக இருக்காது என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகையால்தான் நாங்கள் எங்களுடைய இனத்திற்கு உரிமைகள் அரசியல் சட்டத்தில் வரையறுக்கப் பட்டிருந்தாலும், பெரும்பான்மையான மக்களின் நல்லெண்ணம் வேண்டும், வேண்டும் என்று சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பாக, ஆட்சியிலுள்ளவர்கள், பெரும்பான்மை பலத்தைப் பிரதிபலிப்பதன் வாயிலாக ஆட்சி பீடத்தில் ஏறி இருப்பவர்கள், பெரும்பான்மையான பலத்தின் வாயிலாக ஆட்சி நடத்தக்கூடியவர்கள், அரசியல் சட்டத்தில் எங்கள் சமுதாயத்திற்காக வரையறுக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாத்துத் தருவதில் நல்லெண்ணம் காட்ட வேண்டும், அப்படி நல்லெண்ணம் காட்டப்படவேண்டுமானால் அவர்களுடைய பொதுநோக்கு பாதுகாக்கப்படவேண்டுமென்று கூறத்தான் எங்களைப் போன்றவர்கள் இருக்கிறோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

நான் கேட்கிறேன், இந்த அவைக்கு ஒரு மரியாதை இருக்கிறது. மரியாதை இருக்கிறது. நான் தவறுகச் சொல்லவில்லை. பொருள் கற்பித்துப் பேச விரும்பவில்லை. அர்த்தம் கற்பித்துப் பேச விரும்பவில்லை. உள்நோக்கம் வைத்துப் பேச விரும்பவில்லை. இந்த அவையில் கொடுக்கப்படும் வாக்குறுதிகள், உத்தரவாதங்கள், அதுவும் சாதாரண மக்களுக்காக அமைச்சரவையால் கொடுக்கப்படும் உத்தரவாதங்கள். இந்த நாட்டிலே இருக்கின்ற சிறுபான்மை மக்களுக்காக, முஸ்லீம் பெருமக்களுக்காகக் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றுதான் நம்புகிறேன். முஸ்லீம் இனத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து இருக்கிறார்கள். அது உருது பேசும் முஸ்லீம், தமிழ் பேசும் முஸ்லீம் என்று பிரித்து இருக்கிறார்கள். தமிழ் பேசும் முஸ்லீம்களை

லப்பை என்றும் பிரித்து இருக்கிறார்கள். 1901-லேயே அது குறிப்பிடப் பட்டிருக்கிறது அரசாங்கக் குறிப்புகளில். அதற்கு விவரம்கூட கூறப் பட்டிருக்கிறது.

Those who habitually speak in Tamil and their descendants are 'Labbai'. ஆனால் துரதிருஷ்டவசமாக நாங்கள் லப்பை 'ஹேபிச்சுவலி ஸ்பீக்கிங் தமிழ்' வழக்கமாக தமிழ் பேசுகின்றவர்கள் என்ற விதத்தில்—தமிழ் முஸ்லீம்கள் உருது பேசும் முஸ்லீம்களாக மாறியிருப்பவர்கள்—என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1953-ல் என்னுடைய சர்டிபிகேட் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

The name of the Pupil	...	...		M. Abdul Latheef
Nationality	...	...	...	Indian
Religion	...	...	...	Muslim
Caste	...	...	...	Labbai
Mother Tongue	...	...	...	Urdu

இப்படி 1953-லே எனக்குத் தெரிந்து என்னுடைய சர்டிபிகேட் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. நானும் பிற்பட்ட வகுப்பினர் என்று கருதப்பட்டு, அந்த பிற்பட்ட வகுப்பினருக்குள்ள எல்லாச் சலுகைகளையும் பெற்று எம்.ஏ.,பி.எல். வரை படித்துவிட்டு இங்கே வந்து சட்டமன்ற உறுப்பினனாக வீற்று இருக்கிறேன்.

ஆனால் இன்றைக்குப் புதிதாக அரசாங்க உத்தரவு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணம் எனக்குப் புரியும், மாண்புமிகு முதல மைச்சர் அவர்களின் உணர்ச்சிகள் எனக்குப் புரியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உள்ளம் எனக்குப் புரியும். அவரது உள்ளம் தூய்மையான உள்ளம். எங்கள் சமுதாயத்திற்கு நன்மை செய்யவேண்டு மென்று நினைக்கிற உள்ளம், முதலமைச்சர் அவர்களின் உள்ளம். ஆனால் இன்றைக்கு அவர்களுக்குக் கீழே வேலை செய்யும் அதிகாரிகள் இந்தச் சமுதாயத்தின்பால் பாரபட்சமாக நடந்து கொள்கிறார்கள். பாரபட்சம் காட்டுகிறார்கள், அந்தச் சமுதாயத்திற்கு நன்மை செய்யக் கூடாது என்று நினைக்கிற அதிகாரிகள் இருக்கிறார்கள். நம்முடைய சட்டத் துறை, the most inefficient department that I ever saw. நான்கூட சட்டம் படித்தவன். எனக்குக் கூட சட்டம் தெரியும்.

[1973 ஆகஸ்ட் 16

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister for Law whether he accepts Mr. Latheef's statement that our Law Department is the most inefficient department of our State?

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The Hon. Law Minister's silence means that he accepts that it is so.

திரு. எம். ஏ. லத்தீப்: இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சட்டத் துறை ஒரு விளக்கத்தைக் கொடுத்து இருக்கிறது. லப்பையாக இருப்பவர் உருது பேசுபவராக இருந்தாலும், இராவுத்தர்களாக இருந்தாலும், மரக்காயர்களாக இருந்தாலும், அவர்கள் இஸ்லாம மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தால் அவர்கள் எல்லாம் லப்பை என்ற அடிப்படையில் கடந்த பல ஆண்டுகாலமாக சலுகை பெற்று வருகிறார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய சட்டத் துறை புதிதாக ஒரு சட்ட விளக்கத்தைக் கொடுத்து இருக்கிறது. என்ன தெரியுமா? இந்த அவையிலே எல்லோரும் பேசினார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசினார்கள். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசினார்கள். அம்மையார் அனந்தநாயகி அவர்களும் பேசினார்கள். சௌடி சுந்தரபாரதி அவர்களும் பேசினார்கள். மற்றவர்கள் எல்லோரும் பேசினார்கள். எங்களுடைய அருமை தி.மு.க. தோழர்கள் பேசினார்கள். எல்லோரும் சேர்ந்து அந்தச் சலுகையை முஸ்லீம்கள் எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்று வாதாடினார்கள். அதன் அடிப்படையில் இங்கே சட்டப்பிரச்னை கூட வந்தது. மாண்புமிகு அமைச்சர்—அப்போது பிற்பட்டத் துறை அமைச்சராக இருந்தவர்—ராசாராம் அவர்கள் ஆர்டிகிள் 15ஐ எடுத்து இங்கே வாசித்துக் காட்டினார்கள். அதற்கான விளக்கங்களைச் சுட்டிக் காட்டினார்கள். அப்போது அவையில் கொடுக்கப்பட்டது. அப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து சட்டத்தில் இடம் இருக்கிறதோ இல்லையோ, என்னுடைய இதயத்தில் இடம் இருக்கிறது. இதயத்தில் இடம் இருந்தால் எதையும் நான் செய்து விடுவேன் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்குச் சட்டத் துறையில் இருப்பவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உள்ளத்திற்கு சட்டம் போட்டு இருக்கிறார்கள். போட்டோவிற்குச் சட்டம் போடுவதுமாதிரி போட்டு இருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு புதிய ஜி.ஓ. போட்டு இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்தார்கள். அதன் அடிப்படையில் என்ன ஜி.ஓ. என்றால், நாங்கள் ஆண்டாண்டு காலமாக அனுபவித்து வருகிறோமே, அதற்கு புதிதாக விளக்கம் தந்து இருக்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஒரு கதை சொல்லுவார்கள். ஒருவனை அரசனிடத்தில் அழைத்துச் செல்லுவார்கள். அரசன் உடனே அவனுடைய உயிரை எடுத்து விடுங்கள் என்று சொல்வான். அப்படிச் சொல்கிறபோது, அரசே என்னுடைய உயிரைக் காப்பாற்றுங்கள் என்று வேண்டிக்கொள்வான். உடனே அரசன், உமக்கு உயிர் கொடுத்தேன் என்று சொல்வான். உடனடியாக அமைச்சர் அரசே உயிர் கொடுத்தீர்கள், இவனுக்கு வேறு என்ன தண்டனை என்பான். இவன் காலை வெட்டி விடுங்கள் என்று சொல்வான். உடனே அவன், அரசே எனக்குக் கால் கொடுங்கள் என்பான். உடனே அரசன் உனக்குக் கால் கொடுத்தேன் என்று சொல்வான். இப்படி அவனுடைய ஒவ்வொரு அங்கத்தையும் வெட்டுங்கள் என்று சொல்லி, பிறகு கொடுத்தேன் என்று சொல்வான். பிறகு அரசன் கேட்பான் உனக்கு உயிரும் உடலும் யார் கொடுத்தது என்று கேட்பான். அரசே நீங்கள்தான் கொடுத்தது என்று சொல்வான். அரசனும், ஆமாம் நான்தான் கொடுத்தேன் என்று சொல்வான்.

அந்த அரசனைப்போல் இன்றைக்கு லப்பையாக இருக்கும் அப்துல் லத்தீப்க்கு, பல சலுகைகளைப் பெற்று வந்திருக்கும் அப்துல் லத்தீப்புக்கு புதியதாக ஒரு சலுகையை இந்தச் சட்டத்துறை கொடுக்கிறது என்று எழுதுகிறது. நான் மற்ற விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. எனக்குத் தெரியும். மாண்புமிகு நம்முடைய அம்மையார் சட்டத் துறையைப்பற்றி கேட்டார்கள். பொன்னப்ப நாடார் அவர்களும் கேட்டார்கள். சட்டத் துறையைப்பற்றி எனக்குத் தெரியும். ஏன் இப்படி அவர்கள் சட்டத் துறைக்குப் பரிந்துரை வைத்துக் கேட்கிறார்கள்? முதல் அமைச்சர் அவர்கள் 4½ கோடி மக்களுக்கு நாயகன், தமிழ் சமுதாயத்தினுடைய தலைவர் இந்த அவையிலே உட்கார்ந்து கொண்டு ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அந்த வாக்குறுதிக்கு சட்டம் போடுகின்ற வகையில் அதிகாரிகள் உள் நோக்கம் வைத்து உத்தரவு போடுகிறார்கள். I charge these officers மக்களிடையே இந்த முதல் அமைச்சர் வாக்குறுதி எப்படி மதிக்கப்படுகிறது என்று முஸ்லீம் பெருமக்களைத் தூண்டிவிடக்கூடிய வகையில் முஸ்லீம் பெருமக்களுக்குத் தொண்டர்களாக நாட்டிலே நடமாடிக்கொண்டிருக்கும் எங்களுக்கெல்லாம் அரசியல் ரீதியிலே பலஹீனத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற முறையில் இன்றைக்கு. . .

திருமதி த. ந. அனந்தநாயகி: அதிகாரிகளைப் பற்றி சட்டசபை அங்கத்தினர் அவர்கள் இவ்வளவு தீவிரமாகப் பேசும்பொழுது சட்ட அமைச்சர் அவர்கள் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் அல்லது அதற்குப்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1973 ஆகஸ்ட் 10

பதில்வரவு கொடுக்கவேண்டும் என்பதுதான் நியாயம். ஒன்றுமே சொல்லாமல் அவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பதில் சொல்ல முடியாத அதிகாரிகள் பற்றி இங்கே இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் இதன் பொருள் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் பேசும்பொழுது திருமதி அனந்தநாயகி அவர்கள் குறுக்கிட்டார்கள். விளக்கம் கேட்டார்கள். இது வரையில் நண்பர் லத்தீப் உணர்ச்சியோடு பேசுகிறார்கள். சட்டத் துறை என்ன தவறு செய்திருக்கிறது என்று இன்னும் சொல்லவில்லை. சொல்ல வருவார்கள். அவர்கள் சொல்லும்பொழுது விளக்கம் தரப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப்: சட்டத் துறையில் இருக்கிற அதிகாரிகளுக்கு நம்முடைய அம்மையார் அவர்கள் இவ்வளவு பரிந்துரை பேசுவது எனக்கு விஷயம் விளங்குகிறது. அவர்கள் ஏன் இவ்வளவு பரிந்துரை செய்கிறார்கள் என்று விளங்குகிறது, அவர்களுக்கும் விளங்கும், அவைக்கும் விளங்கும், எனக்கும் தெரியும் . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: This is adding insult toinjury. இப்படி உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. எனக்கு அங்கு யார் இருக்கிறார்கள் என்று கூடத் தெரியாது. விஷயம் என்ன என்று அவர்கள் விளக்க வேண்டும். இம்மாதிரி உள்நோக்கம் கற்பிப்பது சரியல்ல. என்ன என்று சொல்லவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லத்தீப் அவர்கள் பேசும்பொழுது அம்மையார் அவர்கள் சட்டத் துறை அதிகாரிகள் குறித்துச் சொன்னபொழுது 'ஏன் அப்படி அவர் சொல்கிறார் என்பது எனக்கும் தெரியும், அவர்களுக்கும் தெரியும், அவைக்கும் தெரியும்' என்று சொல்வது சரியல்ல. அப்படி உள்நோக்கம் கற்பித்துச் சொல்லக் கூடாது.

திரு. எம். ஏ. லத்தீப்: அம்மையார் அவர்கள் இதிலே பெரிய மகிழ்ச்சி கொண்டிருக்கிறார்கள் இப்போர்ப்பட்ட ஜி.ஓ. வந்ததிலே அவர்களுக்கு மகிழ்ச்சி. . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, this is the most ungrateful attack on me. I had come to your rescue and supported your resolution. When that is the case how can you say such a thing against me? Is it fair?

1973 ஆகஸ்ட் 10] *[திரு. எம். ஏ. லத்தீப்]*

THIRU R. PONNAPPA NADAR: This is the most unkindest cut of all; I am tempted to quote Shakespeare.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது சொன்னார்கள். எல்லோரும் ஆதரித்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். மறுபடியும் அதற்கு எதிராக இப்பொழுது சொல்வது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த முறையில் பேசுவது முறையல்ல. ஒரு உறுப்பினர் கருத்து தெரிவிக்கிறார். அந்த உறுப்பினருக்கு உள் நோக்கம் கற்பிப்பது தவறு. அம்மாதிரி பேசக்கூடிய பேச்சு முறையல்ல. அம்மாதிரி பேசவேண்டாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: அம்மையார் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் என்ன சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள், என்ன அர்த்தம் என்று கேட்டார்கள். அந்த வகையிலே பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் இதை ஆதரித்துப் பேசினார்கள் என்பதை மறந்துவிடவில்லை. அவர்கள் குறுக்கிட்டுப் பேசினார்கள். அவர்கள் ஒருவருக்கு உள்நோக்கம் கற்பிக்கிறார்கள்.

The person who is holding the floor is entitled to reply. ஆகையினாலே நான் சொல்ல வந்ததெல்லாம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது 15 நிமிஷம் ஆகிவிட்டது.

திரு. எம். ஏ. லத்தீப்: இந்தப் பிரச்னையில் நாங்கள் பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறோம். நான் என் அபிகாரிகளைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னேன் என்றால் நான் முதல் அமைச்சர் அவர்களின் உள்ளத்தைப் புரிந்தவன். என்னைப் பொறுத்தவரையில் நான் அவருடைய உள்ளத்தைப் புரிந்திருக்கிறேன். அவர்கள் நல்ல எண்ணத்தோடு இந்த வேண்டுகோளை, முஸ்லீம் பெருமக்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்கள். அது மட்டுமல்ல. நாடு நகரமெல்லாம் இந்த அறிவிப்பை முஸ்லீம் பெருமக்கள் பெரிதும் பாராட்டினார்கள். ஆனால் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? என்னுடைய துரதிருஷ்டம் என்னவென்றால், இங்கே இருக்கிற முஸ்லீம்களாக இருக்கும் 6 சட்டமன்ற உறுப்பினர்களில் நான் ஒருவன் உருது பேசும் லப்பையாக இருக்கிறேன். லத்தீப் சட்டசபையில் வாதாடுகிறான். மக்கள் வேண்டுகோளை இங்கே சொல்கிறான். ஆனால் இப்பொழுது உருது பேசும் லப்பைக்கு என்று சொல்கிறார்கள். இல்லாததை இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள் அட்டியாளர்கள். இவர்கள் சும்மா உட்கார்ந்துவிட்டார்கள். இதுமாதிரி எல்லாம் கேள்வியை எழுப்புகிறார்கள். அதனால் தான் நான் சொன்னேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 ஆகஸ்ட் 10

சட்டத்தில் என்ன அங்கே குறுக்கீடாக இருக்கிறது என்பதை இந்தச் சட்டத் துறை சொல்லவேண்டும். நான் கூட சட்டம் படித்தவன் தான். அதிலும் குறிப் பாக நான் எம்.எல். படித்தேன். இண்டர்நேஷனல் லா, கான்ஸ்டிடியூஷனல் லா, அரசியல் சட்டம், சர்வதேசச் சட்டம் நான் எம்.எல்.-லில் படித்தேன். அந்த சட்டங்களில் இருக்கிற நுணுக்கங்களைக் கூட எங்களுக்கு எங்கள் பேராசிரி யர்கள் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் சட்டத் துறை இப்படிச் சொல்லியிருக்கிறது. அது என் என்று எனக்குப் புரியவில்லை. ஆகையினால் இது மிகப் பெரிய அநீதி. நான் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்த விரும்பவில்லை. சட்டமன்றத்தில் முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி. அதை நிறைவேற்றுவதாகச் சொல்லி, இப்படி ஒரு ஜி.ஓ. போடாமல் இருந்துவிட்டால் கூட எங்களுக்கெல்லாம் மிகுந்த சந்தோஷமாக இருந்திருக்கும். ஆனால் என்ன சொல்கிறார்கள் என்றால், A community on the basis of religion cannot be declared as socially and economically backward and as such concession cannot be given என்பது தான் அவர்களுடைய ஆர்குமெண்டு. இது மிகவும் ஒரு முக்கியமான பிரச்னை என்பதுதான் அவர்களுடைய ஒரு வாதமாக இருக்கிறது. அந்த வாதம் எனக்குப் புரிகிறது. ஒரு சமுதாயத்தில் இருக்கிற ஒரு இனம் அல்லது ஒரு பிரிவு ஒரு மதத்தைப் பின்பற்றுகிறது என்ற அடிப்படையிலே மட்டும் சர்க்காருடைய சலுகைகளைப் பெறுவதாக இருந்தால், அதை அரசியல் சட்டம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. நான் கேட்கிறேன், இங்கே கொடுக்கின்ற ஒரு ஜி.ஓ. எற்கெனவே இருக்கிறது. இப்பொழுது உருது பேசும் முஸ்லீம்கள் என்று நாம் சொல்கிறோம். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் மிகத் தெளிவாக இருக்கிறது. உருது பேசும் முஸ்லீம்களுக்கு என் தரக் கூடாது? நான் கூட சட்டமன்றத்தில் பேசியிருக்கிறேன். அந்த வாதத்தை எற்றுக்கொண்டிருக்கிறார்கள். வேறு யாரும் பேசவில்லை. நான் மட்டும் தான் பேசினேன். அந்த வகுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத் திற்குச் சொல்கிறேன். நாயுடு வகுப்பை எடுத்துக்கொண்டால், அதிலே பல உட்பிரிவுகள் இருக்கின்றன. கம்மாவர நாயுடு, கவர நாயுடு, பலிஜா நாயுடு, ஈடிக நாயுடு, வடுக நாயுடு என்றெல்லாம் இருக்கிறது. நாயுடுகளில் கம்மாவர நாயுடு பார்வேர்டு, மற்ற நாயுடுகளெல்லாம் பாக்வேர்டு என்று சொல்லும் பொழுது எந்த அடிப்படையிலே சொல்லப்படுகிறது? வடுக நாயுடு, கவர நாயுடு பாக்வேர்டு என்று சொல்லும்பொழுது எந்த அடிப்படையிலே சொல் கிறார்களோ அதே அடிப்படையில் சொல்லவேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம். ஆனால் அவர்கள் ஜி.ஓ. போடும்பொழுது அம்மாதிரி போட முடியாது, அரசியல் சட்டத்தின் விதியைப் பின்பற்றுகிறோம் என்று சொல்

1973 ஆகஸ்ட் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

கிறார்கள். நான் சொல்கிறேன், அதே விதியின் அடிப்படையில் தான், நீங்கள் எந்த ஆர்டிக்கிளை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையிலே கொடுக்கக் கூடாது என்று சொல்கிறீர்களோ அதே ஆர்டிக்கிள் அடிப்படையில் தான் நாங்கள் அந்தச் சலுகைகளைக் கோருகிறோம். அதைப்பற்றி இந்த அவையிலே கூட விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது மாறுதலாக வந்திருக்கிறது. நீங்கள் என்ன உத்தரவு போட்டாலும், நாங்கள் சிறுபான்மை மக்கள், எண்ணிக்கையிலே குறைந்தவர்கள் அல்லவா? எப்பொழுதும் பெரும் பான்மை மக்கள் எப்படி நடக்கிறார்களோ அவர்களைப் பின்பற்றுபவர்கள் அல்லவா? சட்டத்தில் என்ன உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் உங்களுடைய நல்லெண்ணம் இருந்தால்தான் வாழ முடியும். ஏனென்றால் நீங்கள் பெரும்பான்மையாக இருக்கக்கூடியவர்களாகையால் நீங்கள் எதைச் செய்கின்றீர்களோ அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டாயத்தில் இருக்கக் கூடியவர்கள் நாங்கள்.

ஆகவே, அந்தக் கட்டாயத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இனிமேல் நாங்கள் இந்தப் பிரச்னையை வற்புறுத்தவே மாட்டோம். ஏனென்றால் விவாதம் இவ்வளவு நடந்தது. நடந்ததற்குப் பிறகு இந்த நிலைமை உருவாகியிருக்கிறது. கடைசியில் என்ன? உருது பேசக்கூடியவர்கள் தமிழ்நாட்டில் தக்கணியர்கள் என்று சொல்லப்படுபவர்கள், பட்டாணியர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் தக்கணியர்கள். தக்கணத்திலிருந்து வந்தவர்கள் என்ற காரணத்தினால் அவர்கள் தக்கணியர்கள் என்று சொல்லப்படுகிறார்கள். அவர்களெல்லாம் இன்றைக்கு எப்படி இருக்கிறார்கள்? நான் உண்மையாகவே சொல்கிறேன். அவர்கள் மிக ஏழ்மையாக வாழக் கூடிய மக்கள். அவர்களுக்குக்கூட எங்களால் சேவை செய்ய முடியாமல் விட்டால், முஸ்லீம் மக்களின் சார்பாக சிறுபான்மை மக்களுடைய உரிமைக் குரலை இங்கே எழுப்பக்கூடிய கடமையுடையவர்களாக இருக்கிறோம் என்று சொல்வதற்கு வெட்கப்படுகிறேன், வேதனைப்படுகிறேன். அதைக்கூட அந்த மக்களுக்காகச் செய்ய முடியாவிட்டால், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நாங்கள் வேறு எதைச் செய்யப் போகிறோம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நான் மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே உங்கள் உள்ளத்தை மட்டும் கேளுங்கள். நீங்கள் எந்தச் சூழ்நிலையிலே இருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். எத்தகையோர்களால் சூழப் பட்டிருக்கிறீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், எங்கள் பிரச்னையை அணுகும்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1973 ஆகஸ்ட் 10

போது உங்கள் உள்ளத்தைக் கேட்டுச் செய்யுங்கள் என்று, மாண்புமிகு நாவலர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், எங்கள் பிரச்சனையை அணுகும் போது உங்கள் உள்ளத்தைக் கேட்டுச் செய்யுங்கள் என்று.

இந்தப் பிரச்சனையிலே ஏதாவது விளக்கம் வேண்டுமென்றால் என்னைக் கேட்டிருக்கலாம். இந்த சிறுபான்மை சமூகத்திலைரைக் கேட்டிருக்கலாம். சட்டத் துறையினர் இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்யும்போது என்னைக் கேட்டிருக்கலாமே. முதலமைச்சரவர்கள் ஏதோ வாக்குறுதி தந்து விட்டார்கள். ஆனால் சட்டத்திலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அதற்கு என்ன செய்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று என்னைக் கேட்டிருந்தால் என்னுடைய சிற்றறிவுக்கு எட்டிய சில விபரங்களை நான் தந்திருப்பேனே. நான் உணர்ச்சிவசப்பட்டுப் பேசக்கூடாது; ஆத்திரப்பட்டுப் பேசக்கூடாது; உணர்ச்சியைத் தூண்டிவிட்டுப் பேசக்கூடாது என்று நினைத்திருந்தேன். என்னையும் மீறிக்கொண்டு உணர்ச்சிகள் வெளிப்படுகின்றன. இந்த உணர்ச்சி லத்தீபின் உணர்ச்சி அல்ல. இந்த உணர்ச்சி இந்த சட்டமன்ற உறுப்பினர் லத்தீபின் உணர்ச்சி அல்ல. அந்த சிறுபான்மை மக்களின் உள்ளக் குமுறல் இது என்ற முறையிலேதான் நான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடைசியாக கருத்துக்கு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அவர்கள் சொல்லி முடிப்பதற்குள் என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

ஏற்கெனவே மூஸ்லீம்களில் பின்தங்கிய வகுப்பினர் யார் என்றால் லப்பை என்று பெயர் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த லப்பை என்றால், 'தமிழ் ஸ்பீக்கிங்' லப்பை என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் தமிழ் பேசுகின்ற லப்பையாக இருந்தாலும், உருது பேசுகின்ற லப்பையாக இருந்தாலும் அவர்கள் எல்லாம் பின்தங்கிய வகுப்பினர் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இப்போதுதான் உருது பேசுகின்ற தக்கணியர்கள் இருக்கிறார்கள்; அவர்களையும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இதை முன்னாலேயே சொல்லியிருந்தால் எங்கள் வேலை சுலபமாக ஆகியிருக்கும். இந்த தக்கணியர்கள் என்ற பிரிவினர் இருக்கிறார்கள் என்பது இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் மூலமாகத் தெரிய வருகிறது. உருது பேசுகின்றவர்கள் எல்லோருக்கும் சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்ற இப்போது முடிவு செய்திருக்கிறோம். ஆனால் உருது பேசுகின்றவர்கள், தமிழ்

1973 ஆகஸ்ட் 10] [திரு. செ. மாதவன்]

பேசுகின்றவர்கள் ஆகிய எல்லா வகுப்பினருக்கும் சலுகைகள் அளிப்பது சட்டப்படி செல்லுபடி ஆகுமா என்ற ஒரு சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கிறது. அதற்காக சட்ட இலாகாவே மோசம் என்று ஒரேயடியாகத் தாக்கிப் பேசுவது சரியல்ல. அவர்களும் வழக்குரைஞர்கள்; நானும் ஒரு வழக்குரைஞர். நீங்களும் ஒரு வழக்குரைஞர். ஒவ்வொருவரும் வழக்குகளை அணுகும் முறை வேவ்வேறு விதமாக இருக்கலாம். அணுகும் முறை எப்படிப்பட்டது என்பதைப் பார்த்து சந்தேகங்களைச் சரி செய்து கொள்ளலாம்; அதை விடுத்து, சட்டத்தைத் தெரிந்த ஒருவர் சட்ட இலாகாவையே முழுக்க முழுக்க தாக்கிப் பேசுவது சரியல்ல. நாம் இருவருமே வழக்குரைஞர்கள்தான். நம் இருவருடைய கருத்தும் ஒன்றாக இருக்குமா என்பதே சந்தேகம்தான். எப்போதுமே இரண்டு வழக்குரைஞர்கள் ஒரே கருத்துடையவர்களாக இருக்க மாட்டார்கள்; ஒரே கருத்தைச் சொல்ல மாட்டார்கள்.

நீங்கள் குறிப்பிடுகின்ற இந்தப் பிரச்சினைபற்றி ஏற்கெனவே முதலமைச்சரவர்களிடம் விவாதித்திருக்கிறீர்கள். முதலமைச்சரவர்களும் விளக்கம் தந்திருக்கிறார்கள். நாங்களும் அதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். உரை பேசுகின்ற தக்கணியர்கள் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள் என்று இதுவரையில் யாரும் சொல்லவில்லை, இப்போதுதான் நீங்கள் புதிதாகச் சொல்கிறீர்கள். நிச்சயமாக அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் ஏற்கெனவே உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: இன்றைக்கு நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கே. டி. கே. அவர்கள், விலைவாசி ஏறிவிட்டது என்பதை எடுத்து காட்டுவதற்காக நம்பிக்கையின்மைத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் அதிகமாகிவிட்டது. நீங்கள் இன்னும் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடித்துவிட வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: எங்கள் தலைவர் பேசவில்லை. நான் மட்டும்தான் பேசுகிறேன். அதனால் எனக்குக் கொஞ்சம் அதிகமாக நேரம் கொடுங்கள். ஏற்கெனவே எற்பட்ட குறுக்கீடுகளினால் எனக்குக் கொடுத்த நேரம் குறைந்து போய்விட்டது. பேச வேண்டாம் என்று சொன்னால் உட்கார்ந்து விடுகிறேன்.

[1973 ஆகஸ்ட் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கிடு இல்லாமலேயே நீங்கள் அரை மணி நேரத்திற்கு மேல் பேசியிருக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதனால் சீக்கிரம் முடித்துக் கொளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இங்கே பேசிய உறுப்பினர்கள் எல்லாம் தமிழ் நாட்டிலே பொருட்களின் விலை வானத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது ; ஆகையால் மக்கள் வாழ்க்கையில் இன்னல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த கே. டி. கே. அவர்களை ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்படி இந்த விலை ஏறிவிட்டது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பொருட்களின் விலையேற்றத்திற்கு 'ஃபிஸ்கல் பாலிஸி, மானிட்டரி பாலிஸி, பாங்கிங் பாலிஸி' இவைகள்தான் காரணம். இந்தப் பாலிஸிகளை யார் வைத்திருக்கிறார்களோ அவர்கள்தான் விலையேற்றத்திற்குக் காரணம்.

The general monetary policy that is applicable to the entire sphere. இதை முடிவு செய்யக்கூடியவர்கள் யார் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை முடிவு செய்பவர்கள் மாநில அரசாக இருந்தால் இந்த மாநில அரசைக் கண்டிக்கலாம். இதை முடிவு செய்வதற்குள்ள அதிகாரம் மத்திய அரசாங்கத்திலேதான் இருக்கிறது என்பதை ஒரு சாதாரண பி.காம். மாணவன் கூட சொல்லிவிடுவான். ஆனால், இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பவர்கள் இந்த ஆட்சிதான் பொறுப்பு என்று எந்தப் பொருளாதார அடிப்படையிலே பேசுகிறார்கள் என்று புரியவில்லை. ஆனால் அவர்கள் எந்த நோக்கத்தோடு பேசுகிறார்கள் என்பது புரிகிறது.

இன்றைக்கு பாராளுமன்றத்திலேகூட மாண்புமிகு பிரதம அமைச்சர் இந்திரா காந்தி ஆட்சிதான் இந்த நாட்டிலே பொருளாதார சீர்குலைவுக்கு அடிப்படையான காரணம் என்று குற்றஞ்சாட்டிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநில அரசுதான் விலையேற்றத்திற்குக் காரணம் என்று சொல்லக்கூடிய கட்சிகளோச் சேர்ந்தவர்களும் அங்கே இந்திரா காந்தி ஆட்சிதான் காரணம் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அங்கே அப்படிச் சொல்லிவிட்டு, இங்கே இப்படிப் பேசுவது ஒரு சரியான வாதம் அல்ல என்பதை இங்குள்ளவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாட்டிலே உற்பத்தி பெருகி இருக்கிறது ; சந்தேகம் இல்லை. வேலை வாய்ப்பு பெருகி இருக்கிறது ; சந்தேகம் இல்லை. ஆனால் அதன் பலன் கிட்டக்கவில்லை.

1973 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமாகிவிட்டது; நீங்கள் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேசவேண்டாம் என்றால் உட்கார்ந்துவிடுகிறேன். மற்றவர்கள் குறுக்கிட்டதால் குறிப்பிட்ட நேரத்திற்குள் நான் முடிக்க முடியவில்லை. இன்னும் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மற்ற உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: பிஸ்கல் பாலிசி, மானிட்டரி பாலிஸி, பாங்கிங் பாலிஸி ஆகிய இந்த பாலிஸிகளை நிர்வகிப்பவர்கள் யார் என்று பார்க்கும் போது, அது மத்திய அரசுதான் என்ற அடிப்படையிலே பார்க்கும்போது, இந்த விவாதங்கள் எல்லாம் சரியான வாதங்கள் அல்ல. இந்த பாலிஸிகளைப் பற்றி முடிவு செய்கின்ற அதிகாரம் எல்லாம் மத்தியிலேதான் இருக்கிறது; மாநிலத்தில் இல்லை. ஆகவேதான் மாநில அரசுக்கு அத்தகைய அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறோம்.

தொழிற்சாலைகளை அமைக்கும் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டும். ரோடு போடும் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டும். பப்ளிக் எக்ஸ்பென்ஸ்—பொதுக்காரணங்களுக்கு ஏற்றபடி செலவு செய்யும் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டும். பொதுவாக ஒரு மாநிலத்திற்கு என்னென்ன தேவை என்பதை எல்லாம் முடிவு செய்யும் அதிகாரம் மாநிலத்திற்கு வேண்டும். அதெல்லாம் இல்லாவிட்டால் ஒரு மாநில அரசு அரசாக இருக்க முடியாது. ஒரு முனிசிப்பாலிட்டியாகத்தான் இருக்கும். எந்தவிதமான முன்னேற்றமும் பெற முடியாது. அதனால்தான் மாநிலத்திற்கு அதிகமான அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறோம். இந்தக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளுமானால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியும். அந்த அடிப்படையிலே இந்த நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தையும், கண்டனத்தைத் தெரிவிக்கும் தீர்மானத்தையும் வன்மையாகக் கண்டித்து, இந்தத் தீர்மானங்கள் தேவையில்லாதவை என்று கூறி, இந்த அவையின் நேரத்தை வீணாக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் இவை என்று கூறி, மக்களுக்கு எத்தனைத்தினும் பயன்படாத தீர்மானங்கள் இவை என்று கூறி, இந்தத் தீர்மானங்களை எங்களுடைய முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக எதிர்த்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, நான் ஒரு தன்னிலை விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேற்று நான் பேசும்போது, என்னுடைய பதவியை இராஜினாமா செய்துவிட்டு மீண்டும் போட்டியிடத் தயாராக இருக்கிறேன்; அ.தி.மு.க.வினர் தயாரா என்று கேட்டேன். அப்போது அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர், தயார் என்று சொன்னார். அதன்படி என்னுடைய பதவியை இராஜினாமா செய்துவிட்டு, மீண்டும் வீரபாண்டி தொகுதியில் போட்டியிடத் தயாராக இருக்கிறேன் என்னுடைய இராஜினாமாக் கடிதத்தையும் தயாராக எழுதி வைத்திருக்கிறேன். இன்று அந்த அ.தி.மு.க. உறுப்பினரைக் கேட்டேன். அவர் அவருடைய கட்சித் தலைவரைக் கலந்து முடிவு தெரிவிப்பதாகச் சொன்னார். ஆகவே, அவருடைய இராஜினாமாக் கடிதம் வந்தால், அந்த இராஜினாமாக் கடிதத்தையும் என்னுடைய இராஜினாமாக் கடிதத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I have to make one submission. This sort of offer and counter-offer should be put an end to. You have already ruled in this House that such charges and counter-charges and offers and counter offers should not be made. This House shoud not be made the forum for ventilating all these things. It may amount to inducement if such coercive methods are adopted and it may not speak well of this House and the position we hold. Even if unwittingly any such remark had been made by any hon. Member, it would not be proper to try to enforce it. That is the view which will have to be considered and such practice should be condemned. That is the submission I wish to make.

திரு. சி. வே. வேலப்பன்: தலைவர் அவர்களே, தங்கள் அறையில் நடந்தது என்னவென்றால் . . .

திரு. நா. வீராசாமி: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். அறையில் என்ன நடந்தது என்பதை இங்கே சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறையில் எதுவும் நடைபெறவில்லை.

திரு. சி. வே. வேலப்பன்: வீரபாண்டித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இங்கே தம்முடைய ராஜினாமாவைக் கொடுப்பதற்குத் தயாராய் இருக்கிறார் என்றால் நானும் இங்கே என்னுடைய ராஜினாமாவைக் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்.

மாணபுமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த அவையில் எல்லா உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இதை வாங்கிக்கொண்டு, அதை வாங்கியபின் இதை ஏமாற்றிவிடுவார்கள் என்பதற்கு இடமின்றி அவர்கள் இரண்டு பேர் களுமே தங்கள் ராஜிநாமாவை எழுதி நேராகக் கொண்டுவந்து பேரவைத் தலைவரிடத்தில் நாம் அனைவரும் சாட்சியாக இருக்க, கொடுத்துவிடலாம்.

திரு. சி. வே. வேல்ப்பன்: முதலில் அவர்கள் கொடுப்பார்களானால் நானும் தயாராக எழுதி வைத்திருக்கிறேன் கொடுப்பதற்கு.

திரு. எம். ஏ. லத்தீப்: சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தேர்தல் களத்தில் எழுப்பப்படும் இத்தகைய பிரச்சினைகளை இந்த அவையில் தங்கள் முன்னிலையில் எழுப்புவது அரசியல் நீதியில் சரியான பிரச்சினை அல்ல. இந்தப் பேரவைக்குத் தலைமை வகிக்கிற சபாநாயகர் மூலம் ராஜிநாமாக்களைப் பரி மாறிக்கொள்கிற நிகழ்ச்சி நடைபெறுமானால், அது ஒரு நல்ல மரபை ஏற் படுத்தியதாக ஆகாது. இந்த அவையின் தனித்தன்மையை, முழுத்தன்மை யைக் காப்பாற்ற இந்த அவையும், தாங்களும் இதில் இருந்து விலகியிருப்பதே நல்ல மரபை ஏற்படுத்தும்.

THIRU B. VENKATASWAMY: Sir, on behalf of the Swathanthra Party, I say that it is better to leave the matter at that. It is not good to make charges and counter-charges in this House. I hope the Hon. Speaker will accede to my request and leave the matter at this.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் காலையில்தான் திரு. ஜேம்ஸ் அவர் களுக்குச் சொன்னேன் என்று நினைக்கிறேன். இந்த அவையில் இருந்து உறுப்பினர் எவரும் வெளியேறுவதை நான் விரும்பாதவன் என்ற கருத்தைக் கூறினேன். இப்போதும் அதையே கூறுகிறேன். பேரவைத் தலைவர் என்ற முறையில் யார் எந்தக் காகிதத்தைக் கொடுத்தாலும் இந்த அவையில் வாங்குவது இல்லை என்ற மரபு இருக்கிறது. அறையில் வந்து எதையும் கொடுக்கிற முறையை மேற்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அறையில் கொண்டு போய்க் கொடுக்கலாம்.

* **திரு. அ. தேவேந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசின் மீது, கொள்கையின்றி ஒன்று சேர்ந்தவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையின்மைத் தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் கடுமை

[திரு. அ. தேவேந்திரன்] [1973 ஆகஸ்ட் 10

யாக எதிர்த்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல முற்படுகிறேன். எங்கள் பகுதியில் "அறிவார் அறிவர் ஆவரம்பூ வாசனையை, மட்டி அறியுமோ மகிழம்பூ வாசனையை" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல கொள்கையில்லாதவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இன்றைக்கு இந்த அரசுக்கு கொள்கை இல்லை என்று சொல்லி, எப்படியாவது இந்த அரசை வீழ்த்திவிட வேண்டுமென்று இந்த நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். எங்களுக்கு இருக்கிற கொள்கை எல்லாம், நாங்கள் பின்பற்றுகிற கொள்கை எல்லாம் இங்கு வாழும் மனிதர்களுக்கு வயிறார உணவு, அறிவார கல்வி, மானம் காக்க உடை, இனிப்பாற வீடு என்ற அண்ணாவின் லட்சியத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கும்கூட இந்த அரசு செயல்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1381-ம் பசலிக்கு அளிக்க வேண்டிய குத்தகையை அளந்துவிட்டால் எஞ்சியிருக்கிற முன்பழைய பாக்கிகள் எல்லாம் ரத்து செய்யப்படும் என்கிற சட்டத்தைக் கொண்டுவந்து, விவசாயப் பெருங்குடி மக்களைக் காப்பாற்ற முன்வந்தது இந்த அரசுதான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அகில இந்தியாவிலேயே இந்திய தானைக் கண்டத்தில் எங்கும் இல்லாத நிலையில் விவசாயக் கூலிகளின் தகராறுக்குத் தீர்வு காணுகிற முறையில் நான்கு மரக்கால், நாலரை மரக்கால் என்று அறுவடைக் கூலி வாங்கி வந்தவர்களுக்கு ஒரு கலம் நெல்லுக்கு 6 லிட்டர் கூலி என்பதாக நியாயக் கூலி நிர்ணயம் செய்தது இந்த அரசுதான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. அண்மையில் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சருடைய உத்தரவுக்கிணங்க எங்களை எல்லாம் கூட்டிவைத்து நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு நான்கு ரூபாய், நடவுக் கூலி 2½ ரூபாய் என்பதாக ஒரு முறையை ஏற்படுத்திச் சட்டத்தைப் போட்டது இந்த அரசுதான் என்பதனை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மார்க்ஸைப்பற்றிப் பேசுகின்றவர்கள் எல்லாம், மாவோவைப்பற்றிப் பேசுகின்றவர்கள் எல்லாம் இதுவரையிலும் சிந்தித்துப் பார்க்காத அளவில்—உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்கிற அடிப்படையில் ஒரு மாபெரும் சட்டத்தையே நிறைவேற்றிக் காட்டியிருப்பது இந்த அரசுதான் என்பதனை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழகத்தில் இருக்கிற அடித்தளத்து மக்கள்—சாலை போடுகிற சாதாரண தொழிலாளி காலுக்கு

1973 ஆகஸ்ட் 10] [திரு. அ. தேவேந்திரன்]

செருப்பு இன்றி வேலை செய்யக்கூடாது என்பதாக அவர்களுக்கு எல்லாம் செருப்பு வாங்கிக்கொடுக்க உத்தரவிட்டது இந்த அரசுதான் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தார்கள். ஆலயத்தில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்ற உணர்ச்சி—ஆண்டவன்பேரில் உறுதிமொழி எடுத்துக்கொண்டவர்களுக்கு எல்லாம் வராமல் இருந்ததைத்தான் பார்த்தோம். அது ஒரு தனித் துறையாக இல்லாமல் இருந்தது. அதில் வேலை செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களது கோரிக்கை கவனிக்கப்படாமல் இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் கோவில்களை எல்லாம் இடித்துத் தள்ளிவிடுவார்கள் என்று சொன்னார்களே—எங்களது ஆட்சியில்தான் ஆலயங்களுக்குத் தனித்துறை ஆலயப் பணியாளர்கள் 50 ஆயிரம் பேர்களுக்குப் பயன் கிடைக்கிற வகையில் தனி நபருக்கு 10 ரூபாய் சம்பள உயர்வு என்ற முறையில் செய்திருக்கிறோம்.

இப்படி நல்ல பல காரியங்களை எல்லாம் இந்த அரசு செய்து கொண்டிருக்கிற நேரத்தில்தான் விலைவாசி உயர்ந்துவிட்டது என்றும், உணவு தானியப் பங்கீட்டு முறை சரியில்லை என்றும் கண்டனத் தீர்மானத்தைத் தந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சில விஷயங்களைப் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும். மொபைல் வான் என்றால் ஆஸ்பத்திரி வான்தான்; போலீஸ், போஸ்டாபீஸ் வான்தான் என்ற நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால், இன்றைக்கு மொபைல் வான் வைத்து உணவு தானியங்களை அங்கங்கே வழங்கி வருகிறார்கள் என்றால் நல்ல இதயம் கொண்டவர்கள் எல்லோரும் இந்த ஆசைப் பாராட்டுவார்கள் என்று கருதுகிறேன்.

இங்கே பேசுகிறபோது சொன்னார்கள். பிறந்த நாள் வருகிறது, ஆண்டுக்கு ஒரு முறை, மாதத்திற்கு ஒரு முறை வந்தால்கூட நல்ல முறையில் பயன்படும் என்றார்கள். அடேயப்பா பயமாக இருக்கிறது, என்ன வருமோ சங்கடமாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் சொல்வேன். பயப்படவேண்டிய அவசியம் இல்லை. இன்னும் கூடச் சொன்னார்கள். செஞ்சோற்றுக் கடன் மறந்து—பிறந்தநாள் விழா வராமல் இருந்தால் கூட நாட்டுக்கு நல்லது என்று. இன்னும் பஞ்சாப் மாநில முதலமைச்சர் கெப்ரோனுக்கு ஏற்பட்ட நிலை தமிழகத்து முதலமைச்சருக்கு ஏற்படும் என்று பேசி, பத்திரிகையில் வந்தது. நான் உள்ளபடியே சொல்கிறேன், இந்த நாட்டிலே இருக்கிற சாதாரண குடிமகன்களிலே ஒருவன் என்ற முறையிலே, திராவிட முன்னேற்றக் கழகச் சாதாரண சட்டமன்ற உறுப்பினன் என்ற

முறையிலே, தாழ்த்தப்பட்டக் குடிமகன் என்ற முறையிலே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருவது என்ருல், அதற்கு என்ன சொல்வது என்றே தெரிய வில்லை. எப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும் என்று இப்போது சொல்ல முடியாது. கெய்ரோனுக்கு ஏற்பட்ட நிலை என்று வெளியிலே பேசு கிறார்கள், இங்கே வந்து பிறந்த நாள் வரக் கூடாது என்று பேசுகிறார்கள்.

இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்வது தமிழகத்திலே இருக்கிற பாட்டாளி மக்களை மையமாகக் கொண்டு செய்தது ஒன்றும் பெரிய காரியம் அல்ல, ஆகித் திராவிட மக்களுக்கு ஒன்றும் செய்யவில்லையென்று சொன்னார்கள். இராஜாஜி அவர்கள் காந்தி அவர்களோடு சம்பந்தம் வைத்துக் கொண்டார்கள். ஆனல், தமிழகத்தின் தனிப்பெரும் தலைவராக இருக்கிற முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழகத்திலே மிகத் தாழ்ந்த குடியிலே இருக்கிற ஒருவரோடுதான் சம்பந்தம் வைத்திருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் படும் துயர் தொலைத்து நாட்டிலே இன்ப நன்னிலைப் பொங்க மூட்டுவோம் உணர்வோடு முயற்சித் நீயை என்று பேரறிஞர் அண்ணு வழியில் செயல்படும் இந்த அரசின் மீது நிறைய நம்பிக்கை இருக்கிறது என்று தெரிவித்து, இந்தக் கண்டனத் தீர்மானத்தையும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கடுமையாக எதிர்த்து நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. சி. வே. வேலப்பன் : . . . . * *

மாண்புமிகு போரவைத் தலைவர் : திரு. வேலப்பன் அவர்கள் இப்பொழுது பேசியவை நிகழ்ச்சிக் குறிப்பேட்டிலே ஏறுது. பத்திரிகைக்காரர்கள் அவற்றை வெளியிடக் கூடாது.

திரு. ஏ. ஆர் பெருமாள் : போரவைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் எதிர்த்து பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களும், அதை ஆதரிக்கிறவர்களும் இந்த மன்றத்திலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, இந்த ஆட்சியை மாற்றிவிட முடியும் என்ற நோக்கத்தோடு கொண்டு வரவில்லை என்பது அவர்களுக்கும் தெரியும். பொதுவாக ஆளுகிற கட்சி பெரும்பான்மையாக இருக்கிறபொழுது, அதை எதிர்க்கின்ற எதிர்க்

** மாண்புமிகு போரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1973 ஆகஸ்ட் 10] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

கட்சிகள் முக்கியமான சந்தர்ப்பங்களிலே, அந்த மாநிலத்திலே நெருக்கடியான கட்டங்கள் ஏற்பட்டு பின்னர் சட்டமன்றம் கூடுகிறபொழுது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, சம்பவங்கள் குறித்துப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாகவும், அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தங்களை வலுவுபடுத்திக் கொள்ளவும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவது மரபாக இருந்து வருகிறது. ஆனால், அதே நேரத்திலே பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருப்பவர்கள், ஒவ்வொரு அரசியல் கட்சிலேயும் உள்ள பொறுப்பு மிக்கவர்கள் தங்களுடைய மனசாட்சியை முன்னால் நிறுத்தி, நாம் இந்த அரசியல் கட்சியிலே எதற்காக ஈடுபாடு கொண்டோம், இவரையே நாம் எதற்காகத் தலைவனாக ஏற்றுக்கொண்டோம் என்ற கொள்கையை உள்ளத்திலே பதிய வைத்துக்கொண்டு அந்தக் கொள்கைக்காக அக்கட்சியிலே ஈடுபடுத்திக் கொண்டவர்கள், அந்த மனச்சாட்சிப்படி, அரசியல் தொடக்கக் காலமுதல், இறுதிக்காலம் வரையில் இருப்பார்கள். அப்படி ஒவ்வொரு அரசியல் கட்சிக்கும் ஒவ்வொரு பொறுப்பு இருக்கிறது. ஒவ்வொரு அரசியல் கட்சியிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கும் ஒவ்வொரு கடமை உண்டு. அதை மனதிலே கொண்டு மனச்சாட்சியை முன்னால் நிறுத்தி அடித்தவர்களின்மீது சாட்டுகிற குற்றச் சாட்டுக்கு நாம் இலக்காகாமலிருக்கிறோமா, பொதுவாழ்வின் புனிதத் தன்மை கெட்டுப்போகாமல் நாம் நடந்து வந்திருக்கிறோமா, பொதுவாழ்வில் ஈடுபட்டால், எவையெல்லாம் தவறு, எவையெல்லாம் வெறுக்கத்தகுந்தவை என்று சொல்லப்படுகிறதோ, அந்த அம்சங்கள் எதையாவது நாம் பெறுமல் இருக்கிறோமா என்று மனச்சாட்சியை வைத்துக்கொண்டு பேசத் தொடங்கினால் பிரச்சினைகளே எழாது.

எந்த ஒரு அரசியல் கட்சியாகட்டும், அது முழுக்க முழுக்க நல்ல கட்சி என்று வாதிட முடியாது. ஒரு கட்சியிலே உள்ள அத்தனை பேர்களும் உத்தமர்கள் என்று யாரும் வாதாட முடியாது. அதுபோல ஒரு கட்சியிலே நல்லவர்களும் இருக்கலாம், கெட்டவர்களும் இருக்கலாம். எந்த ஒரு கட்சியிலும் நல்லவர்கள் குறைவாக இருக்கலாம். அதுபோல எந்த ஒரு கட்சியிலும் நல்லவர்கள் அதிகமாக இருக்கலாம். உள்ள அனைவருமே நல்லவர்கள் என்பது கிடையாது. ஆனால், பொதுவாக, நல்லவர்கள் அதிகமாக உள்ள கட்சியை நல்ல கட்சி என்றும், கெட்டவர்கள் அதிகமாக உள்ள கட்சியைக் கெட்ட கட்சி என்றும் கூறுகிறோம். அந்த அடிப்படையிலே வைத்துக் கொண்டு, இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பார்த்தால் நாட்டில் பாதிக்கப்பட்டிருக்கிற ஒரு பிரச்சினையாகட்டும், இங்கே பேசப்பட்ட முதல் பிரச்சினையாகட்டும் எங்கு பார்த்தாலும் இந்த விலை உயர்ந்துவிட்டது, பொருள்களின் விலை கிடுகிடு என்று உயர்ந்துவிட்டது. விமான வேகத்தில் உயர்ந்து

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1973 ஆகஸ்ட் 10

விட்டது; முன்னுலே படிப்படியாக உயர்ந்தது, இப்பொழுது விஷம்போல் உயர்ந்து விட்டது என்றெல்லாம் பேசினுர்கள். விலேவாசி உயர்வுக்கு, தமிழ் நாடுமட்டில் ஆளுகிற திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் பொறுப்பு என்று இங்கே யாராவது சொல்வார்களாலுல் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லே. இங்கு ஆளுகிற கட்சி வில் உயர்வுக்குப் பொறுப்பு இல்லே என்பதை இங்கே வந்திருக்கிற அத்தனே எதிர்க்கட்சிகளும் ஒத்துக்கொள்ளும். அப்பொழுது விலேவாசி ஏறிவிட்டது, என்று முன்னுலே நீங்கள் போராட்டம் நடத்தவில்லேயா என்று எல்லாம் கேட்டார்கள். நாங்கள் போராட்டம் நடத்தினேம் விலேவாசிகளே எதிர்த்து. ஆனுல் அன்றைக்கு இருந்த முதலமைச்சர் மத்திய அரசுதான் இதற்குப் பொறுப்பு என்று சொல்கிற துணிவு பெற்றிருக்கவில்லே, நாங்கள் சொல்கிறேம் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னுர்கள்.

இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சித் தலேவர் திரு. மாரிமுத்து அவர்கள் அழகாகச் சொன்னுர்கள். இந்த விலேவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய அரசுதான், மாநில அரசு மாத்திரமல்ல. மத்திய அரசுக்கும் இதிலே பங்குண்டு. ஆனுல் மத்திய அரசுக்கு மாத்திரம் பங்கு இல்லே என்று அவர்கள் வாதாடினுர்கள். மத்திய அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். இதிலே மத்திய அரசுக்கு மாத்திரம் பொறுப்பு இல்லே. நாட்டிலே உள்ள எல்லா மாநிலங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்றுர். பொதுமக்கள் நலனே, ஏழை எளிய மக்கள் நலனே, சமுதாயத்தில் பின்தங்கிய, அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தினர் நலனே விரும்புகிற அத்தனே பேருக்கும் பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பிலிருந்து இந்த அரசு எதில் தவறி விட்டது விலேவாசிகள் உயர்வைத் தடுக்கச் செய்யாதவைகள் என்ன என்று யாராவது எடுத்துக் காட்டுவார்களா என்று எதிர்பார்த்தோம். யாரும் அதைப்பற்றி சொல்லவில்லே. விலேவாசிகள் உயர்வைத் தடுப்பதிலே மாநில அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்று சொன்னுல் விலேவாசி உயர்வதை திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த பங்கை, இந்த இடத்திலே, இந்த முறையில், செய்யத் தவறிய காரணத்தினுலே, இப்படி ஆகிவிட்டது என்று இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்தவர்கள் எடுத்துக்காட்டினுர்களா என்று பார்த்தால் எடுத்துக்காட்டவே இல்லே. ஆகவே, விலேவாசி உயர்வுக்கு யார் பொறுப்பு? இந்தியா முழுமையும் ஆளுகிற மத்திய அரசு பொறுப்பு. நோட்டு அடிப்பது தவறு என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். நான் பொருளாதாரம் படிக்கவில்லே. ஆனுல் பொருளாதார நிபுணர்கள் சொல்லிய தத்துவங்களே எல்லாம் படித்திருக்

1973 ஆகஸ்ட் 10] [திரு. எ. ஆர். பெருமாள்]

கிறேன். ஒரு அரசாங்கம் ரிசர்வ் வங்கியிலே எவ்வளவு தங்கம் வைத்திருக் கிறதோ, அந்த அளவுக்குத்தான் நோட்டு அடிக்கவேண்டும். கரன்சி நோட்டு அடிக்க வேண்டுமென்ற முறை எப்படி வந்தது? தங்கத்தை உபயோகப் படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன, ஆகவே, தங்கத்தை இருப்பாக வைத்துவிட்டு, நோட்டு அடிக்கவேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் இங்கு, தங்கத்தை இருப்பாக வைத்து, அதற்கு இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, ஐந்து மடங்கு, பத்து மடங்கு அதிகமாக கத்தை, கத்தையாக நோட்டுகளை அடித்துத் தள்ளுவதுதான் விலைவாசி உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது. ஒரு பக்கத்திலே நோட்டை அடித்துத் தள்ளுவது கத்தை கத்தையாக. இன்னொரு பக்கத்திலே வருமான வரிக்கு டிமிக்கி கொடுப்போர், அரசாங்க வரிகளை ஏமாற்றுவோர், இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பணத்தை, கள்ளப் பணத்தை ஒன்றும் நெம்பர், இரண்டாம் நெம்பர் என்று கணக்கு வைத்திருக்கக் கூடியவர்கள் இவர்களிலுலே ஏற்படுகிற பொருளாதார நெருக்கடி. இப்படி இருப்பதை, பொருளாதார நிபுணர்கள் உட்கார்ந்து, இந்த விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்ன எவை என்று தெளிவாக ஆராய்ந்து அதற்குப் பிறகு, அரசியல் வட்டங்களிலே பேசி எடுக்கவேண்டிய நடவடிக் கைகளை எடுத்தால், இந்த விலைவாசிகள் படிப்படியாக குறைக்கப்பட்டு விடும் என்று அரசியல் நடுநிலை தவறுத, நாட்டு நலனில் அக்கறை உள்ளவர்கள் சிந்தித்துப் பார்த்தால் தெரியும். மண்ணெண்ணெய் விலை எவ்வளவு? ரூ. 8. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே எப்படி விற்கும்? மிளகாய் விலை எவ்வளவு? ரூ. 6. கருணாநிதி ஆட்சியிலே எப்படி விற்கும்? என்று அழகாகப் பேசலாமே தவிர நாட்டு மக்கள் என்றைக்காவது ஒருநாள் புரிந்துகொள் வார்கள், தமிழ் சமுதாயம் நிச்சயமாகப் பரிந்துகொள்ளும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பு ஏற்ற பின்னர் இந்த சமுதாயத்திலே வாடி, வதங்கிய மக்கள் எந்த அளவுக்கு முன்னேறிக் கொண்டு இருக்கிறார்கள் என்று தெளிவாகப் புரிந்துகொள்ளலாம். மக்களே சில காலம் ஏமாற்றலாம். ஆனால் பல காலம் ஏமாற்ற முடியுமா? தெருவிலே மாஞ் செடி வித்தைக்காரன் ஒரு மாங்கொட்டையை எடுத்து வைப்பான். அந்த மாங்கொட்டை சில நிமிடங்களில் மாமாமாக வளரும் என்று கூறுவான். உடனே மக்கள் கூடுவார்கள். அங்கே ஒரு போர்வையைப் போர்த்துவான். சிறிது நேரம் வித்தை காண்பித்துவிட்டு, அந்தப் போர்வையை நீக்குவான். அங்கே மாஞ்செடி இருக்கும், மாங்காயோடு. ஆம், மாங்காய் தொங்கும். அந்த வேடிக்கை முதலிலே பார்ப்பதற்கு அழகாக இருக்கும். முதலிலே பார்ப் பதற்கு வேடிக்கையாக இருக்கும். முதலிலே பார்ப்பதற்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால், திரும்பத் திரும்ப அந்த ஊரிலே அவர் அந்த வித்தையைக்

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1973 ஆகஸ்ட் 10

காட்டுவானானால், நிச்சயமாக "போர்வைக்குள்ளே என்ன இருக்கிறது" என்று வெளுவது ஒரு நாள் கேட்டுவிடுவான். அப்படிக் கேட்கிறபோதுதான் அந்தப் போர்வைக்குள்ளே நட்டுவைக்கப்பட்டு இருக்கிற மாஞ்செடி இருப்பதை உணர்வார்கள். அதுபோல உங்களுடைய மாய்மாலப் பிரச்சாரத்தை ஒரு தடவை நம்புவார்கள், இரண்டு தடவைகள் நம்புவார்கள், ஆனால் எப்பொழுதும் நம்பமாட்டார்கள். எப்படி அந்த வித்தைக்காரனின் மாஞ்செடியை சில நாட்களுக்குப்பிறகு மக்கள் நம்ப மாடடார்களோ, அதைப்போல உங்களுடைய மாய்மாலப் பிரச்சாரத்தையும் தமிழ் மக்கள் விரைவிலே புரிந்துகொள்வார்கள்.

நீங்கள் எதைச் சொன்னீர்கள்? சொன்னபடி எதைச் செய்தீர்கள்? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், எம்.ஜி.ஆர். சொன்னார், சத்தியாஸ்டுடியோ நிலத்தைத் திரும்பத் தருகிறேன் என்று. இன்னும் திரும்பக் கொடுக்கவில்லை. அந்தப் பொறுப்பிலுள்ளவரிடமிருந்து பதிலாவது அதற்கு வந்திருக்கிறதா? நான் திரும்பத் தருகிறேன் என்று சொன்னீர்களே, ஒரு பதிலும் அதைப் பற்றி சொல்லவில்லை, திருமபத் தரவும் இல்லை. இதையெல்லாம் சொல்லாமல் ஏதாவது ஒரு சிறு காரணததை வைத்துக்கொண்டு ஏதேதோ சொல்கிறார்கள். எட்மண்ட் சொன்னார்கள், போலீஸார் ஆளுங்கட்சிக்குச் சாதகமாக இருக்கிறார்கள் என்று. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு ஆண்டுக்கு முன்னால், எட்மண்ட் அவர்கள் நாசரேத் என்ற ஊரில் ஒருநாள் இரவு 11 மணிக்கு மேல் சிறைச்சாலைக்குபோப் அங்கே லாக்கப்பிலே வைக்கப்பட்டிருந்த இரண்டு கைதிகளை விடவேண்டுமென்று சொன்னார்கள், அதற்குக் காவல்துறையினர் மறுக்கவே, அவர்களைப் பார்த்துப் பேசிவிட்டாவது போகிறேன் என்று அவர்களிடம் கேட்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் கேட்கிறாரே என்று சொல்லி அவர்கள் திறந்துவிட்டுப் பேச அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அவர் பேசிக்கொண்டிருக்கின்றபொழுதே லாக்கப்பிலே இருந்த கைதிகளை வெளியே இழுத்துக்கொண்டு போனார். காவல் துறையினர் தடுத்தார்கள். மீண்டும் எட்மண்ட் அவர்கள் இழுத்துக்கொண்டு போனார்கள். இப்படிச் செய்வதைக் காவல்துறையினர் தடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றி அங்கே உள்ள டைரியில் எட்மண்ட் எம். எல். ஏ. லாக்கப்பில் இருந்த கைதிகளைக் கடத்த முயற்சி செய்தார்கள் என்று எழுதி வைக்கப்பட்டு இருக்கிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் பொதுவாழ்விலே எப்படி எப்படி நடக்கவேண்டும், எப்படிப் புனிதத்தன்மையைக் காப்பாற்ற வேண்டுமென்று நாம் முதலிலே நாம் எப்படி நடந்துவந்திருக்கிறோம் என்று பார்த்து நம்முடைய மனச்சாட்சியையே முன்வைத்துக்கொண்டு பேச வேண்டும்.

1973 ஆகஸ்ட் 10] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

மதுவிலக்குப்பற்றிப் பேசுகிறார்கள். மது குடிக்கிறவர்கள் அதைப்பற்றிப் பேசமுடியாது. மதுபானத்தை அருந்திவிட்டு மதுவிலக்குபற்றிப் பேசி அதன் மூலம் அரசியல் நடத்தலாம் என்று கருதுகிறார்கள். ஊழல் ஊழல் என்று சொல்கிறார்கள். ஊழலிலேயே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர்கள்தான ஊழல் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகளா இல்லையா என்பதற்கு அவரவர்களுடைய மனச்சாட்சியே பதில் சொல்லும். பொதுவாழ்க்கையிலே, புனிதத் தன்மை இன்றைய நிலையில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பொது வாழ்க்கையிலே புனிதத்தன்மை பாதிக்கப்படுகிற நிலைமையைப் பார்த்து பல அடக்குமுறைகளுக்கு ஆளான, சிறைசென்ற, தஞ்சையிலே விவசாயிகளுக்காகத் தன்னுடைய இன்னுயிரையும் தரச் சித்தமாயிருந்த மணலி போன்றவர்கள் சாமியாராகப் போய் விடலாமா என்று யோசிக்கிறேன் என்று சொல்லக்கூடிய நிலைமையில் தமிழ்நாட்டு அரசியல் போய்க்கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே இன்றைக்கு யார் பேசுவது எதைப் பேசுவது என்று பொறுப்பு இல்லாமல் பேசிக்கொண்டிருக்கின்ற நிலைமை வளர்ந்து வருகிறது. என்னுடைய தொகுதியிலே அண்ணா நாவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் பேசும்பொழுது கூறுகிறார், * *

இந்தப் பெருமாள் அகமுடியனை, ** இப்படிப்பட்ட பேச்சுக்கள் பொது வாழ்க்கையிலே புனிதத்தன்மையை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். அந்த அளவுக்குப் புனிதத் தன்மை இந்த நாட்டிலே போய்க்கொண்டிருக்கிறது. அண்ணா தி.மு.க. வோ காங்கிரஸ் கட்சியோ அல்லது தமிழகத்திலே உள்ள அத்தனை கட்சிகளுமோ இதைப்பற்றி சிந்திக்கப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெருமாள் அவர்கள் பேசும்பொழுது அ.தி.மு.க. காரர் ஒருவர் முதல்வரைப்பற்றிப் பேசியதாகச் சொன்ன கருத்துக்களை அவையின் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். பத்திரிகைகளும் அதை வெளியிடவேண்டாமெனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: பொதுவாழ்விலே புனிதத்தன்மை எப்படிக் கெடுக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுவதற்காகச் சொன்னேன். அதை எடுத்துவிடுவதுபற்றி எனக்கு ஆட்சேபனையில்லை. பொதுவாழ்விலே புனிதத் தன்மையைப் பாதுகாக்க அத்தனை அரசியல் கட்சிகளும் முனைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1973 ஆகஸ்ட் 10

அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாகச் சொன்ன குற்றச்சாட்டுகள், விலைவாசி ஏறுகிறது, ஆளுங் கட்சி காவல் துறையில் தலையீடு இவைதான். இதற்கெல்லாம் அந்தந்த அமைச்சர்களும், முதலமைச்சர் அவர்களும் பதில் சொல்வார்கள். இறுதியாக நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக இங்கே பேசப்பட்டது, மாநாட்டிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியா இந்திராவுக்கே, தமிழ்நாடு தமிழருக்கே என்று சொன்னார்கள். இதை ஒரு பெரிய பிரச்சினையாகக் கிளப்பிவிட்டார்கள். மீண்டும் பிரிவினை கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மாநில சுயாட்சி வேண்டுமென்று என்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழகத்தின் முதல்வர் கேட்டாரோ அன்றைக்கே சொன்னார்கள், பிரிவினையை வைத்துத்தான் அப்படிக் கேட்கிறார்கள் என்று. ஒன்று, உண்மையை எடுத்துக்கொண்டு பேசவேண்டும், அல்லது அதற்கு மாறுபட்ட கருத்துக் களைப் பரப்பாமல் இருக்கவேண்டும். இரண்டுமே இல்லாமல்—நான் மூன்றாவது வகுப்பு படித்துக்கொண்டிருந்தபொழுது படித்த கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஆற்றின் கரையிலே மேட்டிலே ஒரு ஓநாய் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்ததாம். அப்பொழுது கீழே ஒரு ஆடு தண்ணீர் குடித்துக்கொண்டு இருந்தது. ஓநாய் ஆட்டைப் பார்த்துக் கேட்டதாம், நீ மேலே தண்ணீர் குடித்துக்கொண்டு என்னை எச்சில் தண்ணீரைக் குடிக்கச் சொல்கிறாயா? என்று கேட்டதாம். அதற்கு ஆடு, நான் கீழேதான் தண்ணீர் குடிக்கிறேன், எச்சில் பட்ட தண்ணீர் உனக்கு வராது என்று சொன்னதாம். அதற்கு ஓநாய் ஒரு மாதத்திற்கு முன்னாலே என்னை நீ வைதாயாமே, என்றதாம். அதற்கு ஆடு, நான் பிறந்தே 15 நாட்கள்தானே ஆகின்றன என்று சொன்னதாம். உடனே ஓநாய் அப்படியானால் உங்க அப்பன் வைதிருப்பான் என்று சொல்லி அந்த ஆட்டை அடித்துக் கொன்று தின்றதாம். அந்த மாதிரி, திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினை கேட்கிறது என்று இல்லாததைச் சொல்லி சட்டவிரோதமாக ஆக்கிவிட்டு ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்ற முறையிலேதான் அப்படிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் தெளிவாக மாநில சுயாட்சி என்று கொள்கையைச் சொல்லியிருக்கிறார்கள். அண்ணா தி.மு.க. வினரின் கொள்கை என்ன என்று கேட்டால் அண்ணாவின் கொள்கை என்று சொல்கிறார்கள். இன்னொன்றும் சொல்கிறார்கள், அண்ணா கேட்டது மாநில சுயாட்சி இல்லை, மக்கள் சுயாட்சி என்று. ஒரு சட்டரையை உறுப்பினர் தவறு செய்துவிட்டால் திரும்ப அழைத்துக்கொள்ளவேண்டும் அதுதான்

1973 ஆகஸ்ட் 10] [திரு. எ. ஆர். பெருமாள்]

மக்கள் சுயாட்சி என்று சொல்கிறார்கள். அண்ணாவின் பல புத்தகங்களை நான் படித்திருக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே அண்ணா அவர்கள் பேச வரும்பொழுது எல்லாம் அவர்களுடைய பேச்சுக்களை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். அவர்கள் மக்கள் சுயாட்சி என்று சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. 1952 ஆம் ஆண்டிலே ஐனசக்தி பத்திரிகையிலே சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படையிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் மக்களுக்கு விரோதமாக நடந்தால் அவரைத் திரும்பப் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிமை மக்களுக்கு வேண்டும் என்ற முறையிலே தெரிவிக்கப் பட்ட கட்டுரை, அது கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கொள்கையே தவிர, அண்ணாவின் கொள்கையல்ல. இதற்கு அந்தக் கட்சியிலே பொறுப்புள்ள வர்கள் விளக்கம் சொல்லட்டும். நாம் மாநில சுயாட்சி கேட்பது மாநிலங் களுக்கு அதிகமான அதிகாரங்கள் வேண்டும் என்ற முறையிலேதான். மக்கள் சுயாட்சி என்றால் என்ன? அது ஒரு கொள்கையா? திராவிட மூன்னேற்றக் கழக அரசு ராஜினாமா செய்யவேண்டுமென்று சொல்கிறீர்களே, மாற்று ஆட்சி அமைக்கவேண்டுமென்று துடிக்கிறீர்களே, நீங்கள் ஆட்சி அமைக்கப்போவது எதற்காக, இன்ன இன்னது செய்வோம், இன்ன இன்ன திட்டங்களை நிறைவேற்றுவோம், இந்த இந்த முறையிலே மக்களுக்காகப் பணியாற்றுவோம் என்று சொல்லவேண்டாமா? கொள்கையில்லாமல் ஒரு கட்சியை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டிலே அரசியல் நடத்தலாமா?

திருமதி த. ந. அனந்தநாயகி: பாயிண்ட் ஆப் ஆர்டர், அடுத்த கட்சிக்குக் கொள்கை இருக்கிறதா என்று கேட்கிறீரே, அவருடைய கட்சிக்கு என்ன கொள்கை இருக்கிறது என்பதைச் சொல்வார்களா?

திரு ஏ. ஆர். பெருமாள்: என்னுடைய கட்சியின் கொள்கையை நேதாஜி சுபாஷ்சந்திர போஸ் அவர்கள் தி லிஸ் ஆன் பார்வர்ட் பிளாக் என்ற புத்தகத் திலே எழுதியிருக்கிறார்கள், வாங்கிப் படியுங்கள். கூடி கூடிக் கதைகள் பேசும் கொள்கையற்ற எவரையும் குப்பையிலே தள்ளிவிட்டு ஓடி ஓடி நாட்டிலெங்கும் உண்மையைப் பரப்புவோம் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு போலைவத் தலைவர்: போலையின் நாளை நிகழ்ச்சிகள் இந்த அளவுடன் முடிவடைகின்றன. போலை மீண்டும் இன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர் போலை பிற்பகல் 1.30 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

[1973 ஆகஸ்ட் 10

(பேரவை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் மீண்டும் மாலை 4 மணி அளவில் கூடியது.)

(6) அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்— (தொடர்ச்சி).

திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்பு இருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதும், கண்டனத் தீர்மானத்தின்மீதும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த எங்களுடைய உறுப்பினர்கள் எடுத்து வைத்த கருத்துக்களோடு நானும் சில கருத்துக்களைக் கூறுவதற்காக முன்வந்துள்ளேன்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது நான் பேசுகிற நேரத்தில், மிகுந்த வேதனையோடும், ஆழ்ந்த துயரத்தோடும்தான் நான் இந்தக் கடமையை ஆற்ற வந்திருக்கிறேன் என்பதை உங்கள் மூலமாக இந்த மாமன்றத்திற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூப்பதாண்டுக் காலமாக என்னுடைய நெருங்கிய ஒரு நண்பராக இருந்த, அரசியலிலே ஒத்த கொள்கையோடு பல்வேறு போராட்டங்களில், பல்வேறு நிலையில் பணிபுரிந்த ஒரு நெருங்கிய நண்பர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில், அவரைப்பற்றி, அதுவும் அவர்கள் முதலமைச்சராக வேண்டும் என்று முன்மொழிந்த நான், அவர்கள்மீதே வந்துள்ள ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது இந்த மன்றத்திலே பேசும்போது உண்மையிலேயே மிகுந்த ஒரு மன வேதனையோடுதான் நான் பேசுகிறேன் என்பதை நான் அவர்களுக்கு உங்கள் மூலமாக எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு நிலைமை மிகவும் துர்ப்பாக்கியவசமானதுதான். இந்த மாமன்றத்திலே நான் எடுத்துரைக்கிற கருத்துக்கள் வெப்பத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக வெளிச்சத்தை ஏற்படுத்தும். உண்மையிலேயே என்னுடைய இதய ஒலிக்கும், மனச்சாட்சிக்கும், நான் செய்யவேண்டிய ஜனநாயகக் கடமைக்கும் ஆற்றுகிற பணியாகக் கருதித்தான் நான் இந்த விவாதத்திலே இன்றைக்குக் கலந்துகொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வகிக்கின்ற மிகப் பெரிய—முக்கியமாக தான்கு கோடி மக்களை வழிநடத்திச் செல்கிற மிகப பெரிய—பொறுப்பில் அவர்களது கடமைகளை எப்படி ஆற்றத் தவறியிருக்கிறார்கள், என்ன காரணத்தினாலே இந்த நிர்ப்பந்தம் வந்தது என்பதை அவர்கள் ஆராய வேண்டும என்பதையும் நான் மிகுந்த பணிவோடும், மிக்க மரியாதையோடும், அன்பின் பேராலும், பரிவின் பேராலும், என்னுடைய பாசத்தின் பேராலும் நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்று நாட்களாக இங்கே விவாதங்கள் நடைபெற்றுக்கொண்டு வந்தன. இந்த விவாதங்களில் பல்வேறு கருத்துக்களெல்லாம் எடுத்துப் பேசப்பட்டன. அவைகளிலெல்லாம் நான் ஒவ்வொன்றுகப் போக விரும்பவில்லை. 'Hundred arguments will not alter a single fact' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். நாறு விவாதங்கள் இருக்கலாம். ஆனால், நிலை நாட்டப்பட்ட ஒரு உண்மையை, எவ்வளவு பெரிய வசிகரமான விவாதங்களாலும், எவ்வளவு பெரிய சாதுரியமான, திறமையான விவாதப் பொருளாலும நாம் மாற்ற முடியாத என்பதை ஆங்கிலத்தில் 'Hundred arguments will not alter a single fact' என்று மிகச் சுருக்கமாகச் சொல்வார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள்—பல எதிர்க் கட்சிகளின் சார்பிலே எடுத்துரைத்த பல நிலைமைகள், வெறும் விவாதங்கள் அல்ல; வெறுப்பினால் சொல்லப்பட்டவை அல்ல. அவைகளெல்லாம் நிலைநாட்டப்பட்ட உண்மைகள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்—மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய ஆட்சியில்—இன்றைக்குப் பல்வேறு வகையான கோளாறுகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். விலைவாசியைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். உணவு நெருக்கடியைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதிகார துஷ்பிரயோகங்களைப்பற்றிச் சொன்னார்கள். நிர்வாகச் சீர்கேடுகளைச் சொன்னார்கள். அடக்குமுறைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஒரு மாநில அமைச்சரவை என்ன என்ன காரணங்களால் இருக்கக்கூடாதோ அவைகளுக்கான எல்லாவித காரணங்களையும் எடுத்துச் சொன்னது மட்டுமல்லாமல், இந்த மாநில மக்களுடைய நம்பிக்கையையும் இழந்துவிட்டது என்று சொன்னார்கள்.

விலைவாசியைப்பற்றி எடுத்துச் சொல்கிற நேரத்தில், பல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவைகளையெல்லாம் நான் மீண்டும் இங்கே விவாதிக்க விரும்பவில்லை. இந்த மாநிலம் இன்றைக்குத் தன்னிறைவு பெற்றி

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 ஆகஸ்ட் 10

ருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் பெருமையோடு சொல்லிக்கொள் கிறார்கள். அது பாராட்டுதலுக்குரியதுதான். உணவு நெருக்கடியைத் தாண்டி நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், தன்னிறைவு பெற்ற இந்த மாநிலத்தில் இன்றைக்கு உணவுப் பொருட்களின் விலை சொம்ப வேகமாக—விஷமாக—ஏறியிருக்கிறது, மற்ற அத்தியாவசியமான பொருள்களினுடைய விலைகள் சொம்ப அதிகமாக இன்றைக்கு இருக்கின்றன. என்பதையெல்லாம் சொல்லும்போது, ஏதோ விவாதத்திற்காகச் சொல்லப் படுவதாகப் பொருள் அல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஐந்து ரூபாய், ஐந்தரை ரூபாய் வரை விற்கிறது, அதற்காக ஒரு கிளர்ச்சி என்னும்போது, ராஜஸ்தானத்தில் அப்படி இருக்கிறது, கேரளத்தில் அப்படி இருக்கிறது, பீகாரில் அப்படி இருக்கிறது, வங்காளத்தில் அப்படி இருக்கிறது என்று சொல்லுவதனால், அது எந்த அரசாக இருந்தாலும் பெருமைப்படுகிற விவகாரம் அல்ல. கும்பம் நகரத்தில் மூன்று லாரிகளை வழி மறித்தார்கள். நல்ல வைகை ஆற்றுப் பாசனத்தில், நல்ல பெரியாற்றுப் பாசனத்தில் மூன்று போகம் விளைகிறது. அந்த இடத்திலே நான்கு ரூபாய், மூன்றரை ரூபாய் விற்றது என்று சட்டமன்ற உறுப்பினரே எடுத்துச்சொன்னார்கள். ஏதோ மக்களை விநியோகிக்கும் நிலைமை ஏற்பட்டது என்றால், இது காலக்குறி என்றுதான் சொல்ல வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்ப தெல்லாம் ஒரு எச்சரிக்கைப் பலகை என்றுதான் சொல்ல வேண்டும். இதற்குக் காரணம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்களுடைய மந்திரிசபை நான்கு ஆண்டுகளாக உணவு மூன்னியிலே தோற்றிருக்கிறது, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே துவங்கப்பட்ட அந்தக் கொள் கையை மாற்றி, இன்றைக்கு நான்கு ஆண்டுகாலமாகச் செய்த, வேறு சொன்னை என்று சொல்லமாட்டேன், முரண்பாடான கொள்கையினுடைய விளைவுதான் அதற்குக் காரணம் என்று நான் பலமாகக் குற்றஞ்சாட்டுகிறேன். இவைகளை ஆதாரத்தோடு குற்றம் சாட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்பொழுது 35 இலட்சம் டன்தான் இருந்தது. அன்றைக்கு நான் உணவுத் துறை அமைச்சராகப் பொறுப் பேற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. மாண்புமிகு முதலமைச்சரவர்களும் அந்த அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார்கள். அப்படி 35 இலட்சம் டன் இருக்கும்பொழுது சென்னை நகரத்திலேயிருந்த 20 அல்லது 25 இலட்சம் மக்களுக்கும், புறநகர்ப்பகுதிகளான தாம்பரம், பரங்கிமலை, ஆலந்தார், வில்லி வாக்கம் போன்ற இடங்களுக்கும், அதேபோன்று கோயம்புத்தார், பீளமேடு, பேரூர் போன்ற பகுதிகளிலுள்ள தொழிலாளர்களுக்கு, சுமார் 10 இலட்சம்

1973 ஆகஸ்ட் 10] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

பேர்களுக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க முடிந்தது. வெளியிலே குடும்பக் கார்டுகளின் மூலம் ஏறத்தாழ ஒரு கோடி பேருக்கு 1¼ ரூபாய்க்கு அரிசி கொடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு 55 இலட்சம் டன் விளைகிறது. வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் சொன்னார்கள். ஆக, இப்படி 20 இலட்சம் டன் அதிகமாக விளைந்தும் ஏன் இன்றைக்கு இந்தச் சீர்கேடு இருக்கிறது?

அரிசியிலே இப்படி இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் நிர்வாகக் கோளாறு, கொள்கைக் கோளாறு என்றுதான் சொல்ல வேண்டும். விவசாயத்தில் 20 இலட்சம் டன் அதிகமாக வந்திருக்கிறது. வேறு மாநிலத்திலே விலைவாசி ஏன் ஏறுகிறது என்றால் உற்பத்தி அதிகமாக ஆக வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள், ஏன் அம்மா விலைவாசி ஏறிவிட்டது என்று கேட்டால், அவர்கள், உலகத்திலேயே அப்படித்தான், அர்ஜெண்டினாவைப் பாருங்கள், அமெரிக்காவைப் பாருங்கள் என்று சொல்கிறார்கள். அதேபோல் நம்முடைய முதலமைச்சரைப் பார்த்துக் கேட்டால், அம்மையாரைக் காண்பிக்கிறார்கள். சாதாரண ஏழைத் தொழிலாளர்களோ, பாமர மக்களைக் கேட்டால் காலியான பாண்டங்களைக் காட்ட வேண்டியதாயிருக்கிறது. குழந்தைகள் கேட்டால், புளி பருப்பைக் காணோமே என்று கேட்டால், என்ன சொல்வது என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். அங்கேயாவது உணவு உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படவில்லை என்று சொல்லலாம். ஆனால் இங்கே 20 இலட்சம் டன் உணவு உற்பத்தி அதிகமாக ஆகியும்கூட அதனால் விவசாயிகளும் பலன் பெறவில்லை, சாப்பிடுகின்றவர்களும் பலன் பெறவில்லை. அதற்குக் காரணம் கொள்கை விவகாரம் என்றுதான் கூற விரும்புகிறேன். முன்பே இந்த மன்றத்தில் நான் சொன்னேன், உங்களுடைய உணவுக் கொள்கை, It is neither consumer-oriented nor producer-oriented. It is under-oriented. It is middlemen-oriented. It is black-marketing-oriented. It is smuggling-oriented. இவர்களுக்கு நன்மை செய்யாமல், வர்த்தகச் சூதாடிகளுக்கும், பதுக்கல்காரர்களுக்கும், கள்ளக்கடத்தல்காரர்களுக்கும் உதவி செய்வதாக இருக்கிறது என்று கூறுகிறேன். இதை நான் குற்றமாகக்கூடச் சொல்லவில்லை. இதைப்பற்றி நீங்கள் ஆத்ம பரிசோதனை செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மாநிலத்திலேயே தொடர்ந்து இருந்துவந்த உணவு முறைகளை மாற்றியமைத்ததால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 ஆகஸ்ட் 10

கோளாவிலே நெருக்கடி இருக்கிறது என்று சொன்னால் அதற்குக் காரணங்கள் வேறு. எப்படி எப்படியோ சொல்கிறார்கள். நான்கு நாட்களாக இந்த மாமன்றத்திலே பேசப்பட்டது இந்தக் காரணங்களைத் தெளிவாகக் காட்டும் நிலைமையாக இருக்கிறது. ஆனால் எந்த அரசாங்கமாக இருந்தாலும், 4 கோடி மக்களுக்கு adequate quantity at reasonable price எந்த முதலமைச்சராக இருக்கட்டும், அது ஸ்தாபன காங்கிரசாக இருக்கட்டும், தாளுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருக்கட்டும் அல்லது கம்யூனிஸ்ட் கட்சியாக இருக்கட்டும், எந்த அரசாங்கமாக இருந்தாலும் அடிப்படையான கடமை, நியாயமான விலையில் போதுமான அரிசியைக் கொடுக்க வேண்டியது ஆகும். அந்தக் காரியத்திலே தவறி இருக்கிறார்கள், பொறுப்பைத் தட்டிக் கழித்திருக்கிறார்கள். 30 இலட்சம் டன் விளையும் நேரத்தில் 8, 9 இலட்சம் டன் ப்ரொக்யூர் செய்யப்பட்டது. சர்க்காரால் "Valuable section" என்று சொல்லப்படும் சென்னை, கோவை நகரங்களுக்கு வாங்கும் சக்தியுள்ள இடங்கள் அடைக்கப்பட்டன. ஏதோ விஷயத்தில் இராஜாஜிக்கு அடுத்தபடியாக தான்தான் பெயர் வாங்குகிறேன் என்ற மன சந்தோஷத்திற்காகவோ அல்லது எப்படிப்பட்ட நிலைமைகளினாலோ செய்ததன் விளைவாக இந்த நான்கு கோடி மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உணவு, இவ்வளவு விளைச்சல் இருந்தும் எங்கே போயிற்று? இதற்கான காரியங்களை அரசு செய்யவில்லை என்பது என்னுடைய பலமான குற்றச்சாட்டு. குழப்பியிருக்கிறார்கள். உணவு மூளையிலே தோற்றிருக்கிறார்கள். இதிலே வேறு காரணங்களைச் சொல்லக்கூடும். இதற்கு மத்திய அரசைக் காரணம் காட்டுவார்கள். மத்திய சர்க்காரையும் நான் பலமாகக் கண்டிக்கிறேன். அவர்களுடைய பண வீக்கம், டெஃபிசிட் ஃபைனான்ஸ், காகித நோட்டு அச்சடிப்பு, வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி, அளவுக்கு மீறிய பெரிய பெரிய முதலீடுகள், தேவையில்லாத வரி இப்படிப்பட்ட காரணங்கள் உண்டு என்பது நியாயம்தான். ஆனால் அதனாலேயே நாம் தட்டிக் கழிக்க முடியாது.

இந்த மாநில அரசுக்குப் பொறுப்பு இல்லை என்ற வாதத்தை நான் முற்றிலும் நிராகரிக்கிறேன். அந்தக் கொள்கையை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. நிச்சயமாகப் பொறுப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய பொருளாதாரம் அரிசியை மையமாகக் கொண்ட பொருளாதாரம். மாண்புமிகு முதலமைச்சரவர்களும், நானும், மாண்புமிகு

1973 ஆகஸ்ட் 10] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

தாவலர் அவர்களும் ஒரே அறையிலே நான்கு மாத காலம் விலைவாசி உயர்வை எதிர்த்து விலைவாசிப் போராட்டத்திற்காக சென்னைச் சிறைச்சாலையிலே இருந்தோம். என்னுடன் இருந்த தோழர், ஆயிரம்விளக்குப் பகுதியைச் சேர்ந்த தோழர் கோ. சு. மணி இறந்தே போனர். அண்ணு அவர்கள் சொன்னார்கள். அண்ணு சொன்னரா, அண்ணு சொன்னரா என்று கேட்கிறார்கள். இந்த மாநில அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது, அதைக் கண்டிப்பாகத் தட்டிக் கழிக்க முடியாது, நான்கு கோடி மக்களின் உயிரோடு விளையாடுகிறார்கள். அரிசி ஒன்றுமட்டுமல்ல, மற்றப் பொருட்களின் விலைகளும் அப்படித்தான் இருக்கின்றன. அதற்குக் காரணம் சொல்கிறார்கள். ஆனால் அந்தக் காரணங்களை மட்டும் சொல்வது போதாது.

இந்த நாட்டு மக்கள் குமுறுமாக எரிமலையாக இருக்கிறார்கள். அதற்குப் புள்ளிவிவரங்கள் தேவையில்லை. அதிகாரம் இல்லை, அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்களே, நான் இன்றைக்குக் கேட்கிறேன், இன்றைக்கு விளைச்சல் மிகுந்து இருக்கிறது, நாட்டிலே 55 இலட்சம் டன் இருந்தும் ஏன் வரவில்லை? உணவு தானிய வர்த்தகத்தை அரசாங்கமே ஏற்றிருக்கலாம், அரசாங்கமே கொள்முதல் செய்திருக்கலாம். 30 இலட்சம் டன் என்று இருந்தபொழுது 10 இலட்சம் டன் கொள்முதல் செய்தோம். இன்றைக்கு 55 இலட்சம் டன் இருக்கும்பொழுது ரைஸ் மில்காரர்களையும், வியாபாரிகளையும் ஏன் கொள்முதல் செய்யச் சொல்ல வேண்டும் என்று கேட்கிறேன். 50 கோடி ரூபாய், 100 கோடி ரூபாய் என்று அன்றைக்கு வியாபாரம் செய்யவில்லையா? 10 இலட்சம் டன், 5 இலட்சம் டன் தானியங்களை வாங்கிக் கிடங்கிலே வைத்திருக்கின்ற நிலை இருந்தால் அந்த மார்க்கெட்டைக் கட்டுப்படுத்த முடியும். அதுபோல் ஆயிரக்கணக்கான முறைகள் நிச்சயமாக இருக்கின்றன.

சோதனைச் சாவடிகள் வேண்டாமென்று சொல்லமாட்டேன். மதுருக்கு கதவுகளைத் திறந்து விட்டிருக்கிறீர்கள். பதுக்கல்காரர்களுக்கும், கள்ள மார்க்கெட்காரர்களுக்கும், வெளியிலே கொண்டு செல்பவர்களுக்கும் திறந்து விட்டீர்கள். அதன் கோர விளைவுதான் இப்பட்டிப்பட்ட பயங்கரமான விலைவிலே கொண்டுவிட்டிருக்கிறது. நான் இதை ஆத்திரத்திற்காகச் சொல்லவில்லை, பரிசீலனை செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அந்தக் கொள்கை, இரண்டாண்டுக் காலமாக இந்த மாநிலத்திலே கட்டிக் காப்பாற்றப்பட்டு வந்த அந்த நிலைமை உடைத்தெறியப்பட்டது, மற்றவர்களின் நலன்களுக்காக. இன்றைக்கு நாம் செய்ய முடியாதா? சோதனை போட முடியாதா? பதுக்கல்காரர்கள் எங்கே என்று தெரியாதா? ஸ்டாக்கு

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 ஆகஸ்ட் 10

கனைப் பார்க்க முடியாதா? கள்ள மார்க்கெட்காரர்களைச் சோதனை செய்ய முடியாதா? லாரி லிசென்சை கேன்சல் செய்ய முடியாதா? பதிமூதல் செய்ய சட்டம் இல்லே என்ருல் அதற்கான சட்டத்தை இயற்ற முடியாதா? ஆனல் யாரோ கொள்ளையடித்துக்கொள்ளட்டும் என்று கிறந்து விட்டதன் விளைவாக இது இவ்வளவு பெரிய விவகாரமாக முற்றியிருக்கிறது. நாட்டிலே பெரிய பேரணிகள் நடக்கின்றன, எல்லாக் கட்சிக்காரர்களும் கலந்து கொள் கிருர்கள் என்ருல் எல்லாம் காலத்தின் கோளாறு, பெரிய அபாய அறிவிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

எண்ணெய் விலே 9 ரூபாய் என்று சொல்கிருர்கள். மற்றும் பருப்பு, புளி விலே, சர்க்கரை விலே போன்றவற்றைப் பற்றிச் சொல்கிருர்கள். நான் அதற்குள் போக விரும்பவில்லே. எனக்கு முன்னல் நடந்தது ஞாபகம் வருகிறது. நான் உணவுத் துறை அமைச்சராக இருந்தபொழுது வடார்க்காடு மாவட்டத்திலே திருப்பத்தூரிலே வெல்லத்தின் விலே ஏறிவிட்டது. அதற்குக் காரணம் கேட்டால் கல்கத்தாவிற்கு எடுத்துக்கொண்டு போனர்கள் என்று தெரிந்தது. டெல்லிக்காரர்களிடத்திலே திடீரென்று, பேரறிஞர் அண்ணு அவர்களின் அனுமதியைப் பெற்று, அவர்களுடைய அனுகூலம் வேண்டு மென்ருல் கூட, " in anticipation of the concurrence, we promulgate hereby this order . . . . . "என்று நண்பர் மாதவன் அவர்களையே மூதிக்கொடுக்கச் சொல்லி, 'கேன் ஜேக்கரி' பற்றி கண்ட்ரோல் ஆர்டர் போட்டோம். உடனே விலே இடுகிடு வென்று குறைந்தது. இன்றைக்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டால், கடலே எண்ணெய் விலே ஏறிவிட்டதே என்று அவரிடத்தில் கேட்டால் அதற்கு மத்திய சர்க்காருக்குத்தான் கடிதம் போட்டிருக்கிறேம் என்று சொல்கிருர்கள். அவர்களுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்பதல்ல. அவர்கள் ஒரு பர்மிஷன் கொடுக்க வேண்டும், அவ்வளவுதான். மாநில சுயாட்சி பற்றிப் பேசுகிறேமே. இதிலே என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டீர்கள்? ஏன் கடலேயை வெளியே அனுப்பக் கூடாது என்று தடை உத்தரவு போட்டு கடலே எண்ணெய் விலேயைக் குறைத்திருக்கக்கூடாது?

சர்க்கரையை எடுத்துக்கொண்டால் அவர்கள்தான் பங்கு போடுகிருர்கள் என்று சொல்லுகிருர்கள். பள்ளிக்கூடப் புத்தகங்களே எல்லாம் தேசிய மயமாக்கிக் கொண்டிருக்கிருர்கள், இரண்டு கோடி ரூபாய், மூன்று கோடி

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. ஏ. மதியழகன்]

ரூபாய் லாபம் வரக்கூடிய சர்க்கரை ஆலைகளை எல் தேசியமயமாக்கப்விவில்லை? மொத்தமாக இந்தியா பூராவும் 200 கோடி ரூபாய்க்கு மேலாக சர்க்கரை ஆலைகளிலிருந்து லாபம் கிடைக்கிறது. எட்டு, ஒன்பது பேர் இருக்கிற சர்க்கரை ஆலை முதலாளிகள் நலன்தான் பெரிதா? கரும்பு விவசாயிகள், வாங்குபவர்களின் நன்மையைக் கவனிக்கக் கூடாதா? என்ன நடவடிக்கைகளை எடுத்தீர்கள்? காகித நோட்டு, டெபிகிட் பிளஸ்பிங் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை.

எஸென்ஷியல் கமாடிடிஸ் ஆக்ட் என்ற மத்திய சர்க்கார் சட்டம் இருக்கிறது. மாநில அரசும் அந்தச் சட்டத்தின்மீழ் பல பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்தி ஏழை எளியவர்களுக்கு நன்மை செய்திருக்க முடியும். பல பொருள்களுக்கு அப்படிச் செய்திருக்கமுடியும். வைக்கோல் வரை இருக்கிறது. பிண்ணுக்கு இருக்கிறது. Cattle fodder including oil cakes, cotton and wollen textiles, foodstuffs, etc., are also included.

'Powers to control production, supply, distribution, etc.. of essential commodities—

(1) If the Central Government is of opinion that it is necessary or expedient so to do for maintaining or increasing supplies of any essential commodity or for securing their equitable distribution and availability at fair prices, it may, by order, provide for regulating or prohibiting the production, supply and distribution thereof and trade and commerce therein.'. . . . . என்று

மூன்றாவது செக்ஷனில் இருக்கிறது. என்னென்னவெல்லாமோ செய்யலாம். அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். முக்கியமானவற்றை சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

'. . . (*a*) for regulating by licences, permits or otherwise the production or manufacture of any essential commodity; . . . . .

(*c*) for controlling the price at which any essential commodity may be bought or sold; . . . . .'

என்ன விலைக்கு வாங்குவது, என்ன விலைக்கு விற்பது என்பதையும் நாம் சொல்லலாம்.

(*d*) for regulating by licences, permits or otherwise the storage, transport, distribution, disposal, acquisition, use or consumption of, any essential commodity.'

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 ஆகஸ்ட் 10

எங்கு சேமிப்பது, டிரான்ஸ்போர்ட், டிஸ்ட்ரிப்யூஷன், எத்தெத்த சோடுகளில் போகலாம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

'(e) for prohibiting or withholding from sale of any essential commodity ordinarily kept for sale. . .'

அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கி வைத்துக் கொண்டிருந்தால் அதைத் தடுக்க உத்தரவு போடலாம்.

'(f) for requiring any person holding in stock any essential commodity to sell the whole or a specified part of the stock to the Central Government or a State Government or to an officer or agent of such Government or to such other person or class of persons and in such circumstances as may be specified in the order.'

இதன்படி ப்ரொக்யூர்மென்ட் செய்கிறோம். நெல்லைப் போலவே மற்றப் பொருள்களையும் இதன்கீழ் கொண்டு வரலாம்.

'For regulating or prohibiting any class of commercial or financial transactions relating to foodstuffs or cotton textiles which, in the opinion of the authority making the order, are or, if unregulated are likely to be, deterimental to the public interest.'

பாங்குகளுக்கெல்லாம் உத்தரவுகள் போடுவதற்குக்கூட அதிகாரம் இருக்கிறது.

'for collecting any information or statistics with a view to regulating or prohibiting any of the aforesaid matters;

'for requiring persons engaged in the production, supply or distribution of, or trade and commerce in, any essential commodity to maintain and produce for inspection such books, accounts and records relating to their business and to furnish such information relating thereto, as may be specified in the order;'

இன்ஸ்பெக்ட் பண்ணலாம்.

'for any incidental and supplementary matters, including in particular the entering and search of premises, vehicles, vessels and aircraft, (and) the seizure by a person authorised to make such search of any articles in respect of which such person has reason to believe that a contravention of the order has been, is being, or is about to be committed. . . .'

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. ஏ. மதியழகன்]

(மணி அடிக்கப்பட்டது.)

கொஞ்ச நேரம்கூடக் கொடுக்கலாம். சாயங்கால வேளைதான். எஸென்ஷியல் கமாடிடிஸ் விலவாசியைக் கட்டுப்படுத்துவது உயிர்நாடி. அவர்கள் அதிகாரம் இல்லையென்று சொல்லுகிறார்கள். நான் அதிகாரம் இருக்கிறது என்று வாதாடுகிறேன். முக்கியமான அம்சம் இதிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசி, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேசி, மூதலமைச்சர் அவர்கள் பேசி, தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் பேசி, பிறகு முதலமைச்சர் அவர்கள் பேச வேண்டும். இதற்கே எட்டு மணி ஆகிவிடும். இன்னும் எவ்வளவு நேரம் உங்களுக்கு வேண்டும்?

திரு. கே. ஏ. மதியழகன் : இன்னும் 30 நிமிஷத்திற்குள் முடித்து விடுகிறேன். நான்கு கோடி மக்களுடைய வாழ்க்கைப் பிரச்னையைப்பற்றி பேசுகிறேன். விவாதத்திற்காகப் பேசவில்லை. அவர்கள் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்பதற்காகப் பேசுகிறேனே தவிர, விமர்சனம் செய்வதற்கோ மற்றக் காரியங்களுக்கோ அல்ல.

' in respect of which such person has reason to believe that a contravention of the order has been, is being, or is about to be committed. . .'

மற்றப் பொருள்களை என்ன விலைக்கு வாங்கவேண்டும், விற்கவேண்டும், இன்ஸ்பெக்ட் பண்ணுவது, கணக்கு கணிக்கப்படுவது, சோதனை போடுவது, சீஷர், இவை பற்றியெல்லாம் இருக்கிறது. மத்திய சர்க்கார் ஆக்ட் என்று சொல்வார்கள். அதிலேதான் 5-வது செக்ஷனிலே கூறியிருக்கிறார்கள்.

' The Central Government may, by notified order, direct that the power to make orders under section 3 shall, in relation to such matters and subject to such conditions, if any, as may be specified in the direction, be exercisable also by—

(*a*) such officer or authority subordinate to the Central Government, or

(*b*) such State Government or such officer or authority subordinate to a State Government. . .'

என்று இருக்கிறது. இந்த ஆர்டரின்பேர்தான் இப்போது அரிசி வரையில் செல்லுகிறோம். மற்றப் பொருள்களுக்கும் ஏன் இதைச் செய்யக்கூடாது? மற்ற மாநிலங்களில் செய்கிறார்கள். அரியானா, மத்தியப் பிரதேசத்தில்

செய்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் பருப்பை கண்ட்ரோல் செய்து விடு கிறார்கள். வேறு மாநிலங்களுக்கு அங்கிருந்து பருப்பை எடுத்துக் கொண்டு வர முடிவதில்லை. கடலைப் பிண்ணாக்கை வெளி மாநிலங்களுக்கு அனுப்ப வேண்டாமென்று குஜராத் மாநிலத்தில் உத்தரவு போட்டிருப்பதாகப் பார்த் தேன். இன்றைக்கு மைசூர் மாநிலத்தில் அனுமதி இல்லாமலே ஹோமாவதி அணைக்கட்டையே கட்டி முடித்துவிட்டார்கள். நாம் அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் குறைக்க ஒரு ஆர்டர் போடக்கூடாதா? ஜாகிர்க்கு நாமே செய்தது போல் செய்யக்கூடாதா?

"in anticipation of the concurrence of the Union Government".

என்று சட்ட அமைச்சர் எழுதிக் கொடுக்க மாட்டார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தாங்கள் சொன்னதற்காக அப்படி எழுதிக் கொடுத்தேன். அது நீதிமன்றத்தில் செல்லாது போயிற்று.

திரு. கே. ஏ. மதியழகன்: வாதம் பேசுகிறார்கள். நீதிமன்றத்திலே உங்களுடைய மற்றக் காரியங்கள் எல்லாம் என்ன ஆகின்றன? நீதிமன்றத் திற்குப் போய் அடிப்பட்டுவிட்டாலும் அந்த ஆறு மாதமாவது விலை குறைந்தால் நல்லதுதானே? கடலை எண்ணெய் விலை நான்கு மாதங்களுக் காவது குறைத்திருக்கக்கூடாதா? இந்தச் சட்டத்தின் பிரகாரம் செய்ய தற்கு எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. நான்கு கோடி மக்களுக்குச் சோறு போட வேண்டியது பெரிய கடமை அல்லவா? அந்தக் கடமையிலே தவறி இருக்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

டி.ஐ.ஆர்.-ல் சில பேரைப் பிடித்திருப்பதாகச் சொன்னார்கள். எப்போது பிடிக்கிறார்கள்? மக்கள் கிளர்ந்து எழுந்தவுடன் பிடிக்கிறார்கள். டி.ஐ.ஆர்.-யை நேற்றைக்கா போட்டார்கள்? உணவுப் பொருளைச் சரியானபடி விநியோகம் செய்யத் தவறி விட்டார்கள். பெரிய நிலக்களமான உணவு தானிய வர்த்த கத்தை எடுத்திருக்கலாம். சைஸ் மில்களைத் தேசியமயமாக்கி இருக்கலாம்.

விநியோக முறையை எடுத்துக்கொண்டால் 13½ லட்சம் போலிக் கார்ட்கள் என்றால் அது அதிகாரிகள் குற்றம்தானே. கன்னியாகுமரி மாவட்டத்தைக்காரர்களா எழுதிக் கொண்டார்கள்? இதெல்லாம் நிர்வாகச் சீர்கேட்டைக் காட்டுகிறது.

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. ஏ. மதியழகன்]

கும்பம் பக்கத்தில் லாரி லாரியாகப் போயிற்று, அதிகாரிகள் லஞ்சம் வாங்கியதாக முன்னாள் முதல் அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நான் சொன்னால் ஏதோ வேண்டுமென்றே சொல்வதாகச் சொல்வார்கள். அவர்கள்மீது கோபம், பங்காளிச் சண்டை என்று சொல்வார்கள். முதல் அமைச்சர் பதவிக்காகவா திரு. பக்தவத்சலம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் ? இவை எல்லாம் நியாயமான விமர்சனங்கள். இதைக் குறித்து முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும். மக்களிடம் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கத் தைரியம் வேண்டும்.

எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி. நிலச் சீர்திருத்தம் என்னவாயிற்று? ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம் என்று சொல்கிறார்கள். இன்று மூன்று லட்சம் ஏக்கர் நிலங்கள் தஞ்சாவூரிலுள்ள மடாதிபதிகளிடம் இருக்கின்றன. அவற்றை யார் எடுப்பது? அவற்றை எடுத்து ஏன் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கக்கூடாது? அதற்கு மத்திய அரசின் சம்மதம் தேவையா? மூன்று லட்சம் ஏக்கர் நிலங்களை தரமபுரம், திருவாடுதுறை ஆதினங்கள் வைத்துக்கொண்டிருக்கின்றன. நான் செயின்பூ துறை அமைச்சராக இருந்தபோது ஒரு உறுதிமொழி அளித்தேன். மூன்று லட்சம் ஏக்கர் இல்லையா? அதனால் ஆண்டவனின் பூசை கெட்டுவிடப் போகிறதா? அதை எடுத்து ஒரு லட்சம் ஏழை ஹரிஜனங்களுக்குக் கொடுக்க லாமே. ஏரம் கொடுப்பது, மாடுகள் வாங்கக் கடன் கொடுப்பது, என்று இப்படி எவ்வளவோ செலவு செய்கிறோம். இருந்தும் விவசாயிகளின் நிலை என்ன? இன்று அவர்கள் தங்கள் ஆடு மாடுகளை விற்கிறார்கள். அவர்களின் வீட்டுக் கதவுகளைத் தூக்கிக் கொண்டு போகும் நிலை இருக்கிறது.

கல்வியை எடுத்துக் கொண்டால், திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதுபோல், பள்ளிக்கூடங்கள் பாதி நாட்கள் மூடியிருக்கின்றன. க்ளோவ் ஹாஸ்டல் சம்பவத்தைப் பார்க்கவில்லையா? அண்ணாமலைப் பல்கலைக்கழக அமலி பெருமைப்படுத்தும் அத்தியாயமா? பாளையங்கோட்டையில் ஸார்து நாதன் தாம்பரவர்ணியில் விழுந்து இறந்து கலவரம் நடந்ததே. ஒரு ஆண்டில் எத்தனை நாட்கள் விடுமுறை நாட்கள், எவ்வளவு நாட்கள் பள்ளிக் கூடம் நடந்தது? கல்விக்காக நூறு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்வதாகக் கல்வி அமைச்சர் அவர்கள் பெருமையோடு சொல்லிக்கொள்ளி ருர்கள். பாதி நாட்கள் பள்ளிகள் மூடித்தான் கிடக்கின்றன.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 ஆகஸ்ட் 10

மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் மின்சாரத்தை விற்றுவிட்டார்கள் என்ற புகார். பம்ப் செட்களுக்கு கள்ள முறையில் விநியோகமாவது தெரியாதா? நாட்டு மக்களுக்குத் தெரியும். மககள் எது உண்மை, எது தவறு என்று தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எழுபது சதவிகிதம் என்று சட்ட அமைச்சர் அவர்கள் வாதம் செய்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலானது சட்டம்-ஒழுங்கு இங்கு நிம்மதி இருக்கிறதா? நான் சொன்னால் வருத்தமாக இருக்கும். தொழிற்சங்கத் தலைவர் சித்தன் அவர்கள் சர்க்கார் பஸ்ஸில் போகிறார். பிரயாணிகளை இறக்கி விட்டு விட்டு, பஸ் கண்டக்டரையும் ட்ரைவரையும் இறக்கிவிட்டுவிட்டு ஒருவன் நல்ல ஜன சந்தடியுள்ள இடத்தில் கலைஞர் கருணாநிதி அவர்கள் இருக்கிற ஊரிலே, ஐ.ஜி. அவர்கள் இருக்கிற ஊரிலே மூலக்கடை பக்கத்தில் வன்முறையில் ஈடுபடும் அளவிற்கு நிகழ்ச்சிகள் நடந்தால் மக்களுக்கு ஒரு பயம் ஏற்படுகிறது. பூங்கா நகரில் ஹக்கீம், அமைச்சர்களுக்கு வேண்டியவர், 12 மணிக்கு இஸ்லாமியப் பெண்கள் இருக்கக்கூடிய இடத்தில் அத்துமீறிய செயல்களைச் செய்யவில்லையா? முன்பு இங்கு செயலாளராக இருந்த கிருஷ்ணை ஐயர் அவர்கள் வீட்டில் ரகளை நடக்கவில்லையா? தேர்தல் காலத்தில், திண்டுக்கல்லில் நடந்த இடைத் தேர்தலின்போது முதல் அமைச்சர் அவர்கள் மதுரையில் முகாம் போட்டிருந்தார்கள். ஐ.ஜி. யும் இருந்தார்கள். இவர்கள் போதாது என்று டெல்லிக்கார மந்திரிகளும் இருந்தார்கள். அப்போது வத்தலகுண்டில் ஆறுமுகம் கொலை செய்யப்பட்டார். கொலைகாரன் அங்கேயே உலாவுகிறான். இரண்டு நாட்கள் கழித்து எங்கள் தோழர்கள் பிடித்துக் கொடுப்போம் என்று சொன்னபிறகு சொம்பப் பொறுப்பாளர் காரில் ஏறிச் சென்று கோர்டில் சரண் அடைந்தார்கள். பாலவனத்திலா அது நடைபெற்றது? அல்லது அது காட்டில், ஆரண்யத்தில் நடந்த கொலையா? இப்படியிருந்தால் மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று கேட்கிறேன்.

இந்த நாட்டில் யாருடைய உடைமைக்கும் உயிருக்கும் பாதுகாப்பு இல்லை. கலெக்டர்கள் மாநாட்டில் சாதாரணப் பிரஜைக்கு நம் நாட்டில் பாதுகாப்பு இல்லை என்றமாதிரியாக சட்டம் ஒழுங்கு பிரச்னை பற்றிச் சொல்லும்போது பாதுகாப்பு இல்லை என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சீப் செக்ரட்டரி அவர்களே சொல்லியிருக்கிறார்கள். இது 'இந்து' பத்திரிக்கையில் வந்திருக்கிறது. காரணம் என்ன இந்த நிலைமைக்கு? நிர்வாகக் கோளாறுதான்

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. ஏ. மதியழகன்]

காரணம். நிர்வாக இயந்திரம் சீர்குலைந்து விட்டது. அதைக் கவனிக்க அவர்களுக்கு நேரம் கிடையாது. தங்கள் கட்சிக் காரியங்களைக் கவனிப்பதற்குத் தான் நேரம் இருக்கிறதே தவிர இவற்றை எங்கே கவனிக்கிறார்கள்?

இந்த அமைச்சரவையில் பெரிய இலாகா மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. உள்ளாட்சித் துறை அமைச்சர் மாறி வேறு ஒரு அமைச்சர் உள்ளாட்சித் துறை அமைச்சராக வந்திருக்கிறார். பொதுப் பணித் துறை ஒரு அமைச்சரிடமிருந்து இன்னொருவரிடம் மாறியிருக்கிறது. செளின்யூ இலாகா மாறியிருக்கிறது. விவசாய இலாகா மாறியிருக்கிறது. கூட்டுறவுத் துறை வேறு ஒரு அமைச்சருக்குப் போயிருக்கிறது. ஏன் இப்படி இலாகாக்களை மாற்றுகிறீர்கள் என்று கேட்டால், நிர்வாக செளகரியத்திற்காக மாற்றுகிறோம் என்பார்கள் சுலபமாக. சபாநாயகர் அவர்களே, நீங்கள் எவ்வளவோ முதல் அமைச்சர்களின் அனுபவங்களைப் பார்த்திருப்பீர்கள். மாறுதல் என்றால் ஒருவர் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது இலாகாவை மாற்றுவது சரி. அல்லது ஆறு மாதம் ஒருவர் வரவில்லை என்றால் இலாகாவை மாற்றலாம். இப்போது உள்ளாட்சித் துறையை மாற்றுவதற்கு என்ன காரணம்? பி.டப்ளியூ.டி.யை ஏன் இன்னொரு அமைச்சருக்கு மாற்ற வேண்டும்? ஏன் கூட்டுறவுத் துறையை வேறு ஒருவருக்கு மாற்றவேண்டும்? மாற்ற வேண்டாமென்று சொல்லவில்லை. இதே மாமன்றத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சர் மீது பி.டப்ளியூ.டி. அமைச்சர் மீது செளின்யூ துறை அமைச்சர் மீது நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து பல ஆழமான குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டிருக்கின்றன. புறையோடிய புண்ணுக்குப் புனுகு போடுவது போல் என்று பழமொழி சொல்வதைப் போல் இருக்கிறது இது. செளின்யூ அமைச்சராக இருந்த ப. உ. சண்முகம் அவர்களின் துறையில் என்ன குறை ஏற்பட்டது? கூட்டுறவுத் துறையில் என்ன குறை ஏற்பட்டது? இப்போது அதற்கு ஏன் வேறு ஒரு அமைச்சர் வந்திருக்கிறார்? அப்படி மாற்றியதைப்பற்றி இந்த மன்றத்தில் சொல்லவேண்டாமா? சொல்லவில்லையே. இந்த மன்றத்தில் அதைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை என்று சொல்வார்கள்.

நிர்வாக இயந்திரம் சீர்கெட்டு சின்னாபின்னமாக உடைக்கப்பட்டிருக்கிறது. பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள், பொர்க்குக் வரக் கூடாது என்று. அதிகாரிகளிடம் பொர்க்குக் வரக்கூடாது, இது பொதுக் குழுவின் ஒரு தீர்மானம். உத்தியோகஸ்தர்கள் யாராவது எம்.எல்.ஏ. க்களை அழைத்துக் கொண்டு வருவீர்களானால் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள்

எடுக்கப்படும் என்கிறார்கள். நியாயமான பொதுக் காரியங்களுக்குத்தான் நீங்கள் பொர்சுக்கு வரவேண்டும் என்கிறார்கள். அதிகாரிகளை மாற்றுவதற்கு பொர்சுக்கு வரக்கூடாது என்றால் அப்படி வந்திருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்? முன்பு போலீஸ் இலாகாவிற்காவது ஒரு அந்தஸ்து, மரியாதை இருந்தது. அந்தப் போலீஸ் இலாகாவின் நிலைமை என்ன ஆயிற்று இன்றைக்கு? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று காலையில் கூடச் சொன்னார்கள். மற்ற மாநிலங்களோடு உறவாவது சரியாக வைத்துக்கொண்டிருக்கிறார்களா? அவர்கள் முதலமைச்சராகி 4 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. கோயம்புத்தூர் நகரத்தின் குடிநீர் பிரச்னையைத் தீர்த்தீர்களா? பல ஆண்டுக்காலமாக அது இருக்கிறது. அந்தப் பிரச்னை திராவிட முன்னேற்றக் கழகம் வந்ததற்குப் பிறகாவது சரியாகும் என்று அந்த மக்கள் நினைத்தார்கள். அது இன்னும் தீரவில்லை என்பதை எண்ணி அந்த மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். சிறுவாணியிலிருந்து தண்ணீர் எடுக்கும் பிரச்னை நீண்ட நாட்களாக இருக்கிறது. முன்பு அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அது முடிந்துவிடும் என்று எதிர் பார்க்கப்பட்டது. முதலமைச்சர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாட் இருந்த போது அவரோடு கையெழுத்துப்போட்டு அடிக்கல் நாட்டுவிழாவிற்கு அவருடைய பெயரைக்கூட போட்டு எல்லாம் செய்தார்கள். இன்று வரை கோயம்புத்தூர் மக்களுக்குக் குடிநீர்த் திட்டம் வரவில்லை.

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் 2½ லட்சம் ரூபாய் செலவில் பெரிய திட்டமாக நீர்ப்பாசனத் திட்டமாகப் போடப்பட்டது. கேரள மாநிலத்தோடு சரியான உறவு இல்லாததால் கொண்டுவர முடியாமல் இருக்கிறது. இது அவர் களுடைய திறமைக் குறைவைக் காட்டுகிறது. ஒப்பந்தம் செய்ய முடியாத தன்மையைக் காட்டுகிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

மின்சாரத்திற்குக் கூட ரேஷன் என்று சொல்கிறார்கள். மின்சாரம் அதிகமாகத் தேவையென்றால் நீர்சேகரம் இல்லை. வீராணம் திட்டம் என்றார்கள். காவிரி நீரைச் சென்னைக்குக் கொண்டுவருவோம் என்கிறார்கள். 'காவேரி மாதா' தண்ணீர் வரும் என்று திட்டம் துவக்கினார்கள். தண்ணீர் வருகிறதா? பரம்பிக்குளம்-ஆளியாற்றில் தண்ணீர் வருவதற்கு முன்பே 100 மைல் நீளத்திற்கு சிமெண்ட் கால்வாய் கட்டி விட்டார்கள். இருபது கோடி ரூபாய் செலவு செய்கிறோம். நிலைமை என்ன? மைசூர் மாநிலத்தோடு தொடர்ப்பு கொண்டு அதிகத் தண்ணீரைப் பெற முடியவில்லை அவர்கள் பெரிய பொரி அணைகளைக் கட்டிவிட்டார்கள். ஹேமாவதியைக் கட்டிவிட்டார்கள்.

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. ஏ. மதியழகன்]

விரோதிராபடல் இருந்தபோதே தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீர் கொண்டு வர முடியவில்லை. தஞ்சை மாவட்டத்தை தண்ணீர்ப் பஞ்ச மாவட்டமாக ஆக்கி விட்டார்கள்.

இப்படி இங்கே நிலைமையிருக்கிறபோது, மாநில சுயாட்சி என்று சொல்லிக்கொண்டு காசி யாத்திரை போகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கள்.

'தமிழ்நாடு தமிழருக்கே' என்று சொல்லும் கோஷத்திற்கு காலையில் பதில் சொன்னார்கள். ஒரு கட்சியின் தலைவராக இருந்து அப்படிப்பட்ட கருத்தைச் சொன்னால் பரவாயில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து சொன்னால் பரவாயில்லை. ஆனால் தமிழ் நாட்டில் இருக்கும் 4½ கோடி மக்களின் தலைவராக இருக்கும் முதலமைச்சராக இருந்துகொண்டு தமிழ் நாடு தமிழ் மக்களுக்கே சொந்தம் என்று சொல்வது சரியல்ல. இங்கே வாழ்கிற கன்னட மக்களுக்கும் இது சொந்தம். தமிழ் அல்லாத வேறு மாநிலத்திலிருந்து வந்திருப்பவர்களுக்கும் சொந்தம். எல்லோருக்கும் சொந்தம். இந்திய நாட்டில் பிறந்த எந்த மாநிலத்திலுள்ளவனுக்கும் இந்த நாடு சொந்தம். இப்படி முதலமைச்சர் சொல்கிறபோது, பம்பாயில் இருக்கும் தமிழனின் நிலையை எண்ணிப்பார்க்கவேண்டும், ராஞ்சியில் பணிபுரியும் தமிழனை எண்ணிப்பார்க்கவேண்டும், அவர்களுடைய நிலைமை என்ன ஆகும்? அந்த மாநிலங்களில் வன்முறை தாண்டிவிடப்படவேண்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ¾ மணி நேரம் ஆகிவிட்டது.

திரு. கே. ஏ. மதியழகன்: ஐ ஆம் வித்தின் மை டைம். முடித்து விடுகிறேன். ஒரு மாநில முதலமைச்சர் என்ற முறையில் அவர்கள் பேச வேண்டும். எல்லோருக்கும் தமிழ்ப் பற்று இருக்கிறது. தமிழ் உணர்வு இருக்கிறது. ஆனால் இப்படிப் பேசுவதன் மூலம் அங்கேயுள்ள தமிழர்களின் நிலை என்ன ஆகும் எல்லாவற்றையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசிய பிறகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் பேச வேண்டும். அதற்குப் பிறகு முதலமைச்சர் பதில் அளித்த பிறகு, தீர்மானத்தை முன்மொழிந்தவர்கள் பேச வேண்டும். 9 மணி யாகிவிடும் போல் இருக்கிறது. நீங்கள் 5 நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: நிண்டுக்கல் தேர்தலைப் பற்றிச் சொல்ல வேண்டும். அதை நான் விமர்சனம் கூடச் செய்யவில்லை. அது ஒரு எக்ஸ்டிரா டினரி தேர்தல். நான் முன்பே சொன்னேன். இப்போது ஒரு எக்ஸ்டிரா

[திரு. கே. ஏ. மதியழகன்] [1973 ஆகஸ்ட் 16

டினரி சூழ்நிலை இருக்கிறது. இதற்கு ஒரு எக்ஸ்டிரார்டினரி தீர்ப்பு தான் வேண்டுமென்று சொன்னேன். அது தேர்தல் அல்ல, நீதி மன்றம். யார் இந்த நாட்டை ஆளுவது? இந்த அமைச்சரவை மீது இப்போது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம். அங்கே 2½ லட்சம் வாக்காளர்கள் எங்களோத் தேர்ந்தெடுத்து இருக்கிறார்கள். ஜனநாயகத்தில் நம்பிக்கை இருந்தால் அதை ஒப்புக்கொண்டிருக்கலாம்.

இப்போதைக்கு கார்ப்பரேஷன் தேர்தல் கிடையாது, 6 மாதம் கழித்து நடத்துகிறோம் என்று சொல்கிறார்கள். இன்னும் முனிசிபாலிடி தேர்தல் இருக்கிறது. இப்படி ஒத்திவைத்துக்கொண்டே போனால் ஏதோ குத்தகையை அனுபவித்துக்கொண்டு இருப்பது போல் இருக்கிறது. இது குத்தகை கொடுப்பது அல்லாமல் வேறு என்ன? கேட்டால், மக்கள் ஆதரவு எங்களுக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். எப்படி ஆதரவு இருக்கிறது என்று சொல்ல முடியும்? மக்கள் ஆதரவு இருக்கிறது என்று சொன்னால், உண்மையிலேயே தைரியம் இருந்தால் மக்களைச் சந்தித்திருக்க வேண்டும். மக்கள் தான் எங்கள் எஜமானர்கள் என்று சொல்கிறீர்கள். இந்த சட்டமன்றத்திற்குக் கூட மக்கள்தான் எஜமானர்கள். கோயம்புத்தூர் தேர்தல் பாராளுமன்றத் தேர்தலோடுதான் நடைபெறும் என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு இரண்டு பேர் சவால் விட்டிருக்கிறார்கள், வேலப்பன் அவர்களும், ஆறுமுகம் அவர்களும். அதற்காகவாவது தேர்தல் உடனடியாக வைக்கலாம் அல்லவா? அதற்கு ஒன்றும் பிரச்னை இருக்காது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தத் தேர்தல் இன்னும் வரவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: மக்களின் எண்ணங்களை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை, அவர்களைப்பற்றிக் கவலைப்படுவது இல்லை என்பதைத் தவிர, வேறு ஒன்றும் இல்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்தினீர்களா? வாழ்க்கைத் தரம் உயர்ந்ததா? இதை விட என்ன பெரிய காரியத்தைச் செய்து விட்டீர்கள்? ரோடு போட்டேன் என்று சொல்கிறீர்கள். பாலம் கட்டினேன் என்று சொல்கிறீர்கள். இவையெல்லாம் குமாரசாமி ராஜா காலத்தில் இல்லையா? ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் காலத்தில் நடைபெறவில்லையா? பக்தவத்சலம் செய்யவில்லையா? ஜோதி அம்மையார் காலத்தில் கூட ஹால் பிடல் திறந்தார்கள். புதிதாக இப்போது நம்முடைய அன்பழகன்தான் போய் திறக்கப் போகிறாரா? ஏழை எளிய மக்களுக்குக் கொடுத்த வாக்கை இந்த அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது. இதைச் சொன்னால் நோக்கம் கற்பிக்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 10] *[திரு. கே. ஏ. மதியழகன்]*

அவர்களிடத்தில் ஒரு வேண்டுகோளாக நான் கேட்டுக்கொள்வேன். இந்த அரசின் மீது எங்கள் கட்சியின் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களும், திரு. எம். கல்யாணசுந்தரம் அவர்களும் ஒரு ஊழல் குற்றச்சாட்டுப் பட்டியலைக் கொடுத்தார்கள். அந்தப் பட்டியலுக்கு இங்கே பதில் வைத்தீர்கள். இரண்டாவதாக ஒரு பட்டியல் கொடுத்தோம். அதற்குப் பதில் வைக்கவில்லை. ஏன் பதில் வைக்கத் தயங்குகிறீர்கள். சட்டசபையில் தைரியமாகச் சொல்லுங்கள் என்று சொன்னீர்கள். வைத்து இருக்கலாம் அல்லவா? அவைகள் ஊழல் குற்றச்சாட்டுக்களாக இல்லாமல் இருக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. அப்படி இருக்குமானால் என்னைவிட மகிழ்ச்சியுடையவன் வேறு யாரும் இருக்க முடியாது. பொறுப்பான இரண்டு தலைவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். நீங்கள் அதற்குப் பதில் அளிக்க வேண்டாமா? 'சீசர்ஸ் ஒயிப் ஷுட் பி அபொவ் சஸ்பிஷன்' என்று சொல்வார்கள். இன்று அதிகாரத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். ஊழல் மலிந்த ஒரு ஆட்சியை இந்த மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். நீங்கள் ஆயிரம்தான் சமாதானம் சொன்னாலும் அவர்கள் ஏற்றுகொள்ள மாட்டார்கள், ஆகவே, இதை ஒரு வாய்ப்பாகக் கருதி உங்கள் மீதுள்ள பழியைத் துடைத்துக்கொள்ளுங்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கூட வேண்டாம். நீங்களே ஒரு நீதிபதி போட்டு விசாரணை செய்யச் சொல்லுங்கள் என்று பணிவோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, நான் தெளிவாகச் சொல்கிறேன் உங்களுடைய கொள்கைகள், உங்களுடைய நடைமுறைகள், நோக்கங்கள் சிதைந்துவிட்டன, சீர் குலைந்துவிட்டன என்கிற காரணத்தால், உங்களுக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு இந்தச் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு, எஜமானர்களாக இருக்கும் மக்களிடத்தில் போய் தீர்ப்பு பெறுவதுதான் என்று கூறி அந்தக் காரியத்தைச் செய்யுங்கள் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஏற்கெனவே கொடுத்த குற்றச்சாட்டுகள் என்ன, என்ன குற்றச்சாட்டு அவர்கள் தலைவர்களால் சொல்லப்பட்டது என்று இங்கே சொன்னால் விளக்கம் சொல்ல வசதியாக இருக்கும்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I rise to support the No-Confidence Motion and the Censure Motion which have been tabled before this House.

At the outset, let me emphasise that this Government has forfeited the confidence and lost the confidence of this House. I may be permitted to say that this Government is oppressive

[Thiru R. Ponnappa Nadar] [1973 ஆகஸ்ட் 10

in its outlook and tyrannical in its policy. I do not want to use very strong expressions when I say that this Government does not deserve to continue for long.

Sir, the first point that I want to stress before this House is that there has been a rise in prices. Prices have soared up and prices have sky-rocketted and this Government has failed in its elementary duty to arrest the soaring prices that are prevailing in Tamil Nadu as well as elsewhere.

In this connection may I speak a few words which have been uttered by the late lamented leader and Chief Minister of our State when he addressed a meeting during May Day celebrations when he assumed office. I am inviting the attention of the House to the speech of the late Anna which he made at Chidambaram Park during May Day celebrations in 1967. It has been published in ' Murasoli ', dated 3rd May 1967.

3 படி அரிசி தருவது சாத்தியமே என்று இன்னும் நான் நம்புகிறேன். அதில் உள்ள பிரச்சனை எல்லாம் காலத்தை ஓட்டியது. அரசாங்கமும் அந்த நோக்கத்துக்காக பாடுபடுவதாக அண்ணு கூறினர். A few lines down *விலைவாசியை இறக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறது. அதைச் செய்ய முடியாது என்று கண்டால் அந்த வினாடியே பதவியை விட்டு இறங்கிவிடுவோம்.* That is the clear and categorical statement that has been made by your leader. I think it is acceptable to the House.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு இந்த அவையிலே தலைமைப் பொறுப்பை ஏற்று, தமிழகத்தினுடைய முதல்வராகப் பொறுப்பேற்று, எங்களையும், தமிழ்நாட்டு மக்களையும் வழி நடத்திச் செல்வதற்காகச் சூளுரை மேற்கொள்வதற்கு முன்பு கட்சியின் தேர்தல் பிரகடனத்தை விருகம் பாக்கத்திலே நடைபெற்ற மாநாட்டில் வெளியிட்டார்கள். அந்த நேரத்திலே அண்ணா அவர்கள் ஆற்றிய உரை, தமிழ் நாட்டிலே வரலாற்றுப் புகழ்மிக்க உரையாகும். அந்த உரையின் சில மணிவாசகங்களை இந்த இடத்தில் நினைவு கூர்வது நலம் என்று கருதுகிறேன்.

அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் 30--12—1966 அன்று மாலையிலே பேசும்போது கூறினார்கள்—

"தரணி புகழ வாழ்ந்திருந்த புகழ் பெற்றது, தமிழ மரபு! மற்ற நாடுகள் எல்லைகளை ஏற்படுத்துவதற்கு முன்பு—எல்லையில் ஏற்படும் தொல்லைகளை நீக்கியதற்கும் முன்பு—அவர்கள் அரசு என்ற ஒன்று ஏற்படுத்தாததற்கும் முன்பு—அரச நீதிகளை வகுப்பதற்கும் முன்பு; காடுகளில் அவர்கள் உலவிக் கொண்டிருந்தபோது—உலகமே வியந்து உச்சிமேல் வைத்து மெச்சத்தக்க அரசியல் நெறி பெற்றுத் திகழ்ந்தது தமிழகம்!

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

நமது மூதாதையர் யவனம் வரை தொடர்ப்பு கொண்டிருந்தனர்—நமது மூதாதையர் சீனம் வரை சென்று திரும்பினர்—தூரக்கிழக்கு நாடுகளில் கலாச் சாரத் தொடர்பு மேற்கொண்டிருந்தனர்.

அந்த உன்னதமான தமிழ் மரபுக்கு ஏற்ற வகையில் நம்மைத் தயார் படுத்திக்கொள்ள—குறைந்த அளவு 50 ஆண்டுகளாவது ஆகும்!

இன்னும் நமது மொழியை இலக்கியச் செறிவுள்ளதாக ஆக்கி—நமது பொருளாதாரத்தைச் சீராக்கி—உரிமைகளை நிலைநாட்டி—இந்த நாட்டுத் தமிழர்களைத் தமிழ்ப் பரம்பரைக்குச் சொந்தக்காரர்களாக்க இன்னும் 50 ஆண்டுகளாவது ஆகும்!

வெறும் அரசியல் நடத்த—1967ல் ஆட்சி அமைக்க மட்டும் நமது கட்சி இருக்கிறது என்று நினைக்காமல்—1967-க்குப் பிறகும் தொடர்ந்து 50 ஆண்டுக் காலத்திற்காவது நமது பணி இருக்கிறது—என்ற கடமை உணர்ச்சி நம் மனதில் ஆழப் பதியவேண்டும்.

1967 மட்டும் நம் கண் முன் நிற்பதென்னால்—1967ல் ஆட்சி பீடம் ஏறுவது மட்டும் நமது நோக்கம் என்னால்—அதற்கு யாரைப் பிடிக்கவேண்டுமோ, அவர் களைப் பிடித்து, எதைக் கொடுக்கவேண்டுமோ, அதைக் கொடுத்து, யாரை அணைத்துப் பேச வேண்டுமோ, அவர்களை அணைத்துப் பேசினால் அது ஒன்றும் முடியாத காரியமல்ல. ஆகவே, அமைச்சரவை அமைப்பது மட்டுமல்ல நமது நோக்கம். தமிழ் மக்கள், தமிழ் மரபைப் புரிந்துகொண்டு. தமிழ் வரலாற்றைப் புரிந்துகொண்டு, புதிய வரலாற்றை, புதிய செய்தியை, புதிய பண்பை உலகுக்கு வழங்க வேண்டும் என்பதற்குத்தான் நாம் பணியாற்றுகிறோம்.

ஐ.நா. சபை என்று உலகத்திலுள்ள நாடுகளை எல்லாம் ஒன்று சேர்த்து, எல்லாக் கொடிகளையும் பறக்கவிட்ட பிறகும், சர்வதேச ஒற்றுமையை சில நோக்கங்களில் காண முடியாமல் நாம் தத்தளிக்கிறோம். ஆனால், இந்த உலக ஒருமைப்பாட்டை—ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற அரியதோர் கருத்தைத் தமிழ் மரபு தந்தது.

அதுமட்டுமல்ல. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று தமிழர்கள் தாணியாண்ட காலத்திலேயே தமிழகம் கூறியது. இவை போன்ற கருத்துக்களை, பண்புகளை மீண்டும் தமிழகம் உலகுக்குத் தரவேண்டும். அப்போதுதான் தமிழினம் தலைநிமிர்ந்து வாழும்; புதிய வரலாற்றை, புதிய அத்தியாயத்தைச் சமைக்கும். அவ்விதம் சமைக்கத் தக்கவாறு தமிழினத்தை

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

ஆக்கும் பொறுப்பு—காலத்தின் கரத்தாலே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழ் மரபு காப்போர் அமரவேண்டுமென்பதற்காகத்தான் தி.மு.கழகம் ஆட்சியில் அமரவேண்டும் என்கிறோம். தமிழ் இனம், தமிழ் மொழி, தமிழ் மரபு இவைகளைக் காப்பாற்றும் புதிய அரசு—புதிய ஆட்சி தோன்றவேண்டும்."

இதைத்தான் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில், பொதுத் தேர்தலுக்கு முன்பு நடைபெற்ற அந்த மாநாட்டில், எடுத்துரைத்தார்கள்.

அண்ணா அவர்கள் விரும்பிய தமிழ் மரபைக் காப்பாற்ற, தமிழ்ச் சமுதாயத்திற்குப் பணியாற்ற, தமிழ் மொழிக்கு ஏற்றம் தர அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்திலும், அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகும் இந்த அரசு பணியாற்றியிருக்கிறதா இல்லையா என்பதற்கு நிறையப் புள்ளிவிவரங்களை நாம் பெற்றிருக்கிறோம், சான்றுகளை உடையவர்களாக நாம் இருக்கிறோம்; என்ற ஒரு ஒன்றிரண்டை நினைவுபடுத்த நான் விரும்புகிறேன்.

தமிழ் நாடு என்று இந்த மண்ணிற்குப் பெயர் வைத்தது, அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் பேசிய பேச்சின் எதிரொலியாகும்.

வள்ளுவருக்குச் சிறப்புத் தருகிற வகையில் பேருந்து வண்டிகளில் எல்லாம், தமிழகத்தில் உள்ள பயணிகள் விடுதிகளில் எல்லாம் திருக்குறளின் மணம் பரப்புகின்ற பணியைச் செய்தது அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டுப் பேச்சின் எதிரொலியாகும்.

உலகத் தமிழ் மாநாடு கண்டு, உலகத்து அறிஞர் பெருமக்களையெல்லாம் அழைத்துத் தமிழின் தொன்மையை, பெருமையை, பார் அறியச் செய்தது அண்ணா அவர்களின் விருகம்பாக்கம் மாநாட்டுப் பேச்சின் எதிரொலியாகும்.

தமிழ்நாட்டுப் பள்ளிக்கூடங்களில் தமிழ், ஆங்கிலம் இரண்டுக்கும்தான் இடம், இந்திக்கு இடமில்லை என்று வரையறுத்துச் சொன்னது, அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் ஆற்றிய உரையின் எதிரொலியாகும்.

தஞ்சை பெருவுடையார் கோவிலைக் கட்டிய இராச ராச சோழனுக்குச் சிலை, எவ்வளவோ எதிர்ப்புகளுக்கு இடையே அமைத்ததும், இளங்கோ அடிகளுக்கு, கரிகாலனுக்கு, கண்ணகிக்கு, தமிழ்ச் சான்றோர்களுக்குச் சிலை எடுப்பது என்பது சாதாரணமாகப் பேசப்பட்டாலும் எத்தனையோ ஆண்டுக் காலமாக நடைபெறுத முயற்சியை, யாருக்கும் தோன்றுத அந்தக் கருத்தைத் தமிழக

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசின் துணையோடு இன்றைக்கு நாம் செய்திருக்கிறோம் என்றால் தமிழின்பால், தமிழ்ச் சான்றோர்களின்பால், தமிழ் வரலாற்றின்பால், இந்த அரசுக்கு இருக்கிற பற்றினை, பாசத்தினைக் காட்டுவதாகும்.

அண்மையில் நடைபெற்ற பூம்புகார் விழா பற்றிக் கூட சில பேர்கள் கேலி பேசினார்கள். ஆனால், அந்தப் பூம்புகார் விழா இன்றைக்கு எத்தனை ஆயிரம் மக்களைக் கரிகால் பெருவளத்தானைப் பற்றிய வீரமிக்க வரலாற்றை நினைத்துப் பார்க்கத் தூண்டியிருக்கிறது என்பது ஒவ்வொரு நாளும் எவ்வளவு நூற்றுக்கணக்கான மக்கள் காவிரிப்பூம்பட்டினம் சென்று அங்கு அமைந்திருக்கிற சிலப்பதிகாரக் கலைக் கூடத்தைப் பார்த்து, சிலப்பதிகாரக் கதையின் சுவையை, கலையின் மேன்மையை, ஒரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் இருந்த மகிமையை உணர்ந்து வருகிறார்கள் என்பதும் மிகமிகச் சாதாரணமாகக் கருதி விடக்கூடிய ஒன்றல்ல.

சென்னை மாநகரில் எத்தனையோ ஆண்டுக் காலமாக இடிபாடுகளுக்கிடையே, இங்குதான் திருவள்ளுவர் வாழ்ந்தார் என்பதும், திருவள்ளுவர் இங்கேதான் அடக்கமானார் என்பதும் பிரச்சினைக்குரியதாக இருந்தது, யாரும் நாட்டம் செலுத்தாத அளவிற்கு இருந்த ஒரு இடத்தை இன்று புதுப்பித்து, அது உலகத்தார் அனைவரும் வந்து யாத்திரை செய்து, கண்டு களிக்கிற ஒரு இடமாக, திருக்குறளைப் புரிந்து கொள்கிற ஒரு இடமாக, திருவள்ளுவர் உலகத்திற்கே மறை யாத்தவர் என்ற உயர்ந்த காரியத்தைச் செய்வதற்குத் திருவள்ளுவருக்காக ஆலயம் ஒன்றை நிர்மாணிக்கப் பல லட்சக்கணக்கான ரூபாயிலே திட்டமிட்டு, அதற்குத் தமிழக அரசு தன்னாலான உதவிகளைச் செய்ய முன்வந்திருப்பதும் பேரறிஞர் அண்ணா அவர்கள் விருகம்பாக்கம் மாநாட்டில் பேசிய பேச்சின் எதிரொலியாகும் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

ஆகவே, இந்த அரசுக்குக் கொள்கை உண்டா? இல்லையா? என்ற கேள்வி எழுகிற நேரத்தில், இந்த அரசு எந்த அடிப்படைக் கொள்கையிலிருந்து ஆரம்பமாகியிருக்கிறது என்றால், விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணா பேசினாரே, தமிழ் இனம் காக்க, தமிழ் மாபு காக்க, தமிழ் செழிக்க, தமிழைப் பாதுகாக்க இந்த அரசு அமைகிறது என்று சொன்னாரே, அந்த ஒரு பெரும் கொள்கைக்காகத்தான் இந்த அரசு பாடுபட்டு வருகிறது.

(ஆரவாரம்.)

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

அடுத்து, மற்றக் கொள்கைகள். அடுத்த கொள்கைதான். சமுதாயத்தில் சமத்துவம் வேண்டும் என்பது. இது பேரறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்ன வேத வாக்கு. அந்தச் சமத்துவத்தை இந்த அரசு காரியத்தில் சாதித்துக் காட்டியிருக்கிறதா இல்லையா என்பதை இங்கு பேசிய ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், தோழமைக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எடுத்துரைத்திருக்கிறார்கள்.

ஹரிஜன மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் பேசிய நேரத்தில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தக்க பதில்களை எடுத்துச் சொன்னார்கள். பொதுவாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பொருளாதார உதவிகளைச் செய்வது ஒருபுறமிருந்தாலும், முதலில் சமுதாயத்தில் இருக்கிற இழிவைப் போக்கவேண்டும் என்பதுதான் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கம் கண்ட தந்தை பெரியார் இராமசாமி அவர்களுடைய கொள்கையும், அவருடைய தானைத் தலைவராக இருந்து பணியாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையுமாகும். ஆகவே, சமுதாய இழிவுகளை முதலில் நீக்கவேண்டும் என்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுதான் இன்று அர்ச்சனை செய்கிற தகுதி பெற்றிருக்கிற ஹரிஜனச் சகோதரராக இருந்தாலும் அவர்களும் ஆலயத்திற்குள் சென்று அர்ச்சிப்பதற்கு உரிமை படைத்தவர்கள் என்ற சட்டத்தைச் செய்திருக்கிறோம் என்றால், அது சாதாரண விஷயமல்ல. ஒரு ஹரிஜன சகோதரருக்கு அர்ச்சனை செய்கிற வேலைதான் பெரிய வேலையா என்று கேட்கலாம். ஆனால் அது எவ்வளவு பெரிய சமுதாயப் புரட்சி என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இன்றைக்கு அம்பேத்காருடைய பெயரால் சென்னை மாநகரத்தில் ஒரு கல்லூரியை உருவாக்குகிறோம். அந்தக் கல்லூரி உருவாவதற்கு—வேறு பல இடங்களில் கல்லூரிகள் உருவாகும் தேசத்தில் கட்டவேண்டிய மொத்தப் பணத்தை மற்றவர்கள் கட்டினால்தான் அங்கு கல்லூரிகளுக்கு அனுமதி கொடுப்போம் என்று நமது கல்வி அமைச்சர் அவர்கள் மிகவும் கண்டிப்பாக இருந்தாலும் கூட, அம்பேத்கார் கல்லூரி என்ற மாத்திரத்திலே அந்தக் கல்லூரியைக் கட்டிய வரையில் பணம் போதும், பிறகு கொஞ்சம் மெதுவாகப் பணம் கட்டலாம் என்ற சலுகை அளித்து இன்றைக்கு சென்னை மாநகரத்தில் அம்பேத்கார் பெயரால் கல்லூரி உருவாகி வருகிறது.

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

நில்லையாடி வள்ளியம்மையும் ஹரிஜன சகோதரிதான். அந்த அம்மையின் நியாகத்தை நினைவுபடுத்துவதற்காக இன்றைக்குத் நில்லையாடியிலே வள்ளியம்மை நகர் ஒன்று கண்டு அந்த அம்மையாரோடு தென் ஆப்ரிக்காப் போராட்டத்தில் ஈடுபட்டு உயிர்நீத்த ஹரிஜன சகோதரர்கள்—நாகப்பன், நாராயண சாமி இவர்களுக்கெல்லாம் அங்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பியிருப்பதும் இந்த அரசுதான் என்பதை மறந்துவிடக்கூடாது. ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிக்கும்போது அந்த அறங்காவலர்களில் ஒருவர் நிச்சயமாக ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்கவேண்டும் என்று சட்டம் செய்திருப்பதும் இந்த அரசுதான் என்பதை மறந்துவிடக்கூடாது.

அதைப்போலவே, பின்தங்கிய சமுதாய மக்களுக்காகப் பாடுபடும் இந்த அரசு அவர்களுக்காக ஒரு நலக் குழுவை அமைத்து, அதனுடைய சிபார்சுகளை எற்று எந்த அளவிற்கு நடைமுறைப்படுத்தி வந்திருக்கிறது என்பதையும் அனைவரும் நன்றாக உணருவார்கள்.

காகியில் பேசிய நண்பர் வடிவேலு அவர்கள் கூடச் சொன்னார்கள்—18 சத விகிதம் என்று ஹரிஜனங்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் அந்த 18 சத விகிதத்தை ஹரிஜனங்களால் உத்தியோகங்களைப் பெறமுடியவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்வேன். சில இடங்களில் ஹரிஜனத் தோழர்கள், சகோதரர்கள் வராமல் அந்த இடங்கள் நிறைவு செய்யப்படாமல் இருக்கிற குறை இருக்க முடியுமே தவிர, வந்து அவர்களுக்கு இல்லை என்ற குறை எங்குமே ஏற்பட்டது கிடையாது. ஓர் உதாரணம் உங்களுக்குச் சொல்ல முடியும்.

கடந்த நான்கைந்தாண்டுக் காலத்தில், நம்முடைய தமிழ் மாநிலத்தில் க்ரூப்—1 சர்வீஸ் எழுதுகிறார்களே, தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறதே, அதிலே எப்படிப்பட்டவர்கள் இன்றைக்கு டெப்டி கலெக்டர்களாக, டெப்டி சூப்பரின்டென்ட்டென்ட்களாக, ஜே.டி.ஓ.க்களாக, டெப்டி ரெஜிஸ்ட்ரார்களாக, அசிஸ்டென்ட் கமான்டென்ட்களாக (எஸ்.ஏ.பி.) டிஸ்ட்ரிக்ட் ரெஜிஸ்ட்ரார்களாக யார் யார் இந்த நான்கைந்தாண்டுக் காலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். வகுப்புகளைப் பிரித்துச் சொல்கிறேன் என்பதற்காக யாரும் வருத்தப்படக் கூடாது. மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன், வகுப்புகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிற காரணத்தால். பிரிக்கப்பட்டால்தான் பின்தங்கியோர், தாழ்த்தப் பட்டவர்கள் என்று தெரியும் என்கிற காரணத்தால் நான் அதைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

கிட்டத்தட்ட 98 அல்லது 99 பேர்கள் 1967-லிருந்து இந்த ஆண்டு வரையில் சர்வீஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகித்திராவிடர்கள்—தாழ்த்தப்பட்டவர்கள்—டெபுடி கலெக்டர் வேலைக்கு 5 பேர், டெபுடி சூப்பரிண்டென்டென்ட் ஆப் போலீஸ் 4, ஜே.சி.டி.ஓ. 3, டெபுடி ரிஜிஸ்டிரார் 4, அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் (எஸ்.ஏ.பி.) 1, டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 18 பேர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த 99 பேர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து, கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் 2, டி.எஸ்.பி. 1, ஜே.சி.டி.ஓ. 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, எஸ்.ஏ.பி. அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் 1, ஆக மொத்தம் 6 பேர் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

அடுத்து, மறவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் 1, டி.எஸ்.பி. 1, ஜே.சி.டி.ஓ. 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 2, ஆக மொத்தம் 5 பேர்கள்.

அடுத்து, அகமுடையார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர்கள் 5, ஜே.சி.டி.ஓ. 1, ஆக மொத்தம் 6 பேர்கள்.

வன்னியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர்கள் 4, டி.எஸ்.பி. 3, ஜே.சி.டி.ஓ. 3, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 11 பேர்கள்.

நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் 2, ஜே.சி.டி.ஓ. 5, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 8 பேர்கள்.

பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் ஒருவர்.

முஸ்லீம் (லப்பை வகுப்பைச் சேர்ந்தவர்கள் உள்பட): டெபுடி கலெக்டர்கள் 2, டி.எஸ்.பி. 2, ஜே.சி.டி.ஓ. 2, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஆக மொத்தம் 7 பேர்கள்.

செங்குந்தர்: டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1, அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் 1, ஆக மொத்தம் 3 பேர்கள்.

கௌரா என்ற மிகப் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள்: டெபுடி கலெக்டர் 1, டெபுடி ரிஜிஸ்டிரார் 1 (எஸ்.ஏ.பி.) அசிஸ்டெண்ட் கமாண்டண்ட் 1, ஆக மொத்தம் 3 பேர்கள்.

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

படகா : டெபுடி கலெக்டராக ஒருவர், வீரக்குடி வெள்ளாளர் : டெபுடி கலெக்டராக இரண்டு பேர், சலவைத் தொழிலாளி : டெபுடி கலெக்டராக இரண்டு பேர், பரக்கவ குல நத்தமான் : டெபுடி கலெக்டர் 1, டி.எஸ்.பி. 1, ஆக இரண்டு பேர், தளுவ வெள்ளாளர் : டெபுடி கலெக்டராக ஒருவர் குறும்பர் : டெபுடி கலெக்டராக ஒருவர் ; இதுவரை யாரும் குறும்பர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் டெபுடி கலெக்டராக இருந்ததே கிடையாது.

மூப்பனர் : டெபுடி கலெக்டர் 1, தொண்டமான் டெபுடி கலெக்டர் 1, வடுகர் டெபுடி கலெக்டராக ஒருவர், டி.எஸ்.பி. ஒருவர், ஆக இரண்டு பேர்கள்.

தேவாங்கர் : டி.எஸ்.பி. ஒருவர் ; வலையர் : டி.எஸ்.பி. ஒருவர் ; சக்கிலி : ஜே.சி.டி.ஓ. ஒருவர். யாதவர் : ஜே.சி.டி.ஓ. ஒருவர், டெபுடி ரிஜிஸ்டிரார் 2, டிவிஷனல் பையர் ஆபீசர் 1, ஆக மொத்தம் 4 பேர்கள் : சேணைத் தலைவர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1, செட்டி பாலாஜி : டெபுடி ரிஜிஸ்டிரார் 1, வேட்டுவக் கவுண்டர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1, மருத்துவர் : டெபுடி ரிஜிஸ்டிரார் 1, ஒட்டர் டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரார் ஒருவர். ஆக, இப்படி மிக மிகப் பின்தங்கிய சமுதாயத்தில் உள்ளவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்பதற்கு இதைவிட வேறு என்ன அடையாளச் சின்னம் வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசியவர்கள், இந்த ஆட்சி—பின்தங்கிய மக்களுக்காக, தாழ்த்தப் பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிறது என்பதற்கு என்ன அளவுகோல் என்று கேட்டார்களே, இதைவிட வேறு எந்த அளவுகோலை வைத்து, இந்த இயக்கம் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட, நடுத்தர மக்களுக்காகப் பாடுபடும் என்று முழக்கமிட்டு ஆரம்பிக்கப்பட்டதே, அந்த முழக்கம் இன்று செயல்படுத்தப்படு கிறதா இல்லையா என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும் ?

தமிழ் நாட்டில் நீதிமன்றம் உருவான பிறகு, நீதிமன்றச் சரித்திரத்திலேயே இந்த ஆட்சிக் காலத்தில்தான் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒரு சகோதரர் இன்றைக்கு நீதிபதியாக வீற்றிருக்கிறார் என்பதை யாராவது மறுக்க முடியுமா ? (ஆரவாரம்) இவைகள் எல்லாம் சமுதாயத்தில் சமத்துவத்தை உருவாக்க—சமுதாயத்தில் புரையோடியிருக்கிற பல கொடுமைகளை நீக்கு வதற்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் நின்று இந்த அரசு இது வரையில் நடத்தியிருக்கிற அருமையான சாதனைகளாகும்.

அண்ணாவின் அடுத்த கொள்கை சமதர்மம் ; சமதர்மத் திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோமா இல்லையா என்பதைச் சமதர்மத்தின் அடிப்படையில் நான் பல முறை இங்கே விளக்கியிருக்கிறேன். வரவு செலவுத் திட்டத்தைப்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

பற்றிப் பேசிய நேரத்திலும், முன்பு ஒரு முறை நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த நேரத்திலும், நான் வெகு விளக்கமாகச் சொல்லியிருக்கின்றேன். நிலச் சீர்திருத்தம், சமதர்மத்தின் அடிப்படையில்--ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்குப் பட்டா அளித்தது. இதற்கு முன்பு உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற ஒரு சட்டம். குடியிருப்பு மனைச் சட்டத்தின் மூலம் ஏறத்தாழ இரண்டு லட்சம் மக்களுக்குக் குடியிருப்பு மனையைச் சொந்தமாக்கியது. பஸ்களைத் தேசியமயமாக்கச் சட்டம் கொண்டு வந்தது, இத்தியாதியிலேயே முதன் முறையாகத் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கும் தீர்வாகத்தில் பொறுப்பும் தமிழ்நாட்டில் அளித்திருப்பது, பஸ் தொழிலாளர்களுக்கு ஊக்கப் போனஸ் திட்டத்தை அளித்து அவர்களுடைய பாராட்டைப் பெற்றிருப்பது, இவைகள் எல்லாம் சமதர்மத்தின் அடிப்படையில் நிறைவேற்றப் பட்டவைகளாகும்.

பல நண்பர்கள் எடுத்துச்சொன்னதைப் போல, கண்ணொளி வழங்குதல், பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வளித்தல், கைரிக்ஷாக்களை ஒழித்து இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குதல், இவைகளையெல்லாம் என்னுடைய பிறந்த நாள் விழாக்களில் நாம் சாதனைகளாகச் செய்து இருக்கிறோம்.

ஒரு நண்பர் கூடச் சொன்னார். அடுத்த ஆண்டு முதலமைச்சருக்குப் பிறந்த நாளே வரக்கூடாது; அது சொம்ப ஆபத்தாக இருக்கிறது என்றுகூடச் சொன்னார். நம்முடைய நண்பர் தம்பி தேவேந்திரன் அவர்கள், அவர் கூறியது பற்றிக்கூட சொம்ப வருத்தப்பட்டுக்கொண்டார், இப்படியெல்லாம் பேசலாமா என்று.

எனக்கு அடுத்த ஆண்டு பிறந்த நாள் வந்தாலும் பரவாயில்லை; அல்லது நினைவு நாள் வந்தாலும் பரவாயில்லை. ஆனால் அந்த நாளைக்குள்ளாக நாம் என்னென்ன செய்ய வேண்டும், என்னுடைய அமைச்சரவை நண்பர்களின் ஒத்துழைப்போடு தமிழ்நாட்டு மக்களுடைய ஆதரவோடு என்னென்ன செய்ய வேண்டுமென்று கருதுகிறேனென்றால், இப்போது நான் படித்துக்காட்டினேனே, இந்த இந்த மக்களுக்காக இந்த அரசு பாடுபட்டு வருகிறது என்று, "அது குற்றம், ஆகவே உங்கள் மீது நம்பிக்கை இல்லை, வெளியே போ" என்று சொன்னால்—நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன்—இந்தக் குற்றத்தை நான் தொடர்ந்து செய்து கொண்டேயிருப்பேன் (ஆரவாரம்).

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

இது குற்றமென்றால், இந்தக் குற்றம் இந்த நாட்டிற்குத் தேவையான குற்றம். இந்தச் சமுதாயத்தை வாழ வைக்கத் தேவையான குற்றம். நான், இந்தக் குற்றத்தை இந்த அமைச்சரவையில் ஒத்துழைப்போடு தொடர்ந்து செய்துகொண்டே இருப்பேன்.

சட்டம், ஒழுங்கு, அமைதி, நிலையான ஆட்சி இப்படியெல்லாம் இன்றைக்குத் தமிழக அரசு பாராட்டப்படுகிற நேரத்தில் இங்கு ஒன்றிரண்டு குறைகளும் சொல்லப்பட்டன.

அதிகாரிகளைப்பற்றிக் குறைகள் சொன்னார்கள். எந்தவொரு ஆசிலும் எல்லா அதிகாரிகளும் நல்லவர்களாகவே இருப்பார்கள் என்று நான் நிச்சயமாக வக்காலத்து வாங்கமாட்டேன். என்னுடைய அருமை நண்பர் சுப்பு அவர்கள் இங்கே பேசினார்கள்—அருமை நண்பர் என்று சொல்கிற காரணத்தால், அவருக்கு ஆபத்து வந்தாலும் வரலாம் (சிரிப்பு). அவர் அதிகாரிகளைப்பற்றி எல்லாம் சொன்னார். நான் அவைகளையெல்லாம் ஏற்றுக்கொள்கிறேன். எந்தெந்த அதிகாரிகள் தவறு செய்தாலும், அவர்கள் எப்படிப்பட்ட பெரிய இடத்தில் இருந்தாலும், அல்லது அவர்கள் சாதாரண அதிகாரிகளாக இருந்தாலும் அவர்கள் மீது புகார் கூறப்பட்டு, அவைகள் மெய்ப்பிக்கப்படுமானால், அவர்களுக்குத் தயவு தாட்சண்யம் காட்டுகிற அரசு இந்த அரசல்ல என்பதைப் பல முறை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறோம்.

இப்போதும் சொல்கிறேன், அதிகாரிகளோ, அல்லது ஆட்சியில் இருக்கிற நாங்களோ, குறைகள் செய்தால், சுட்டிக் காட்டப்பட்டால், திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அடுத்து, மிக முக்கியமாகப் பேசப்பட்ட விஷயம்; இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்களும், பிறகு வழி மொழிந்தவர்களும் மிக முக்கியமாக எடுத்துக் காட்டியது, நம்முடைய நண்பர் மதியழகன் அவர்களும் கடைசியாக எடுத்துக்காட்டியது, இன்று தமிழ் நாட்டிலே விலைவாசி வேகமாக உயர்ந்து விட்டது, உணவு நிலை திருப்திகரமாக இல்லை, என்கிற இந்தக் குறைபாடு இங்கே எடுத்துக்காட்டப்பட்டது.

ஆனால், விலைவாசி ஏற்றத்திற்கு யார் காரணம்? எந்த நிலை காரணம்? என்பதை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து தீர்மானத்தை வழி மொழிந்து பேசியவர்களே கூட மத்திய அரசுக்கும் ஓரளவு பொறுப்புண்டு என்பதை இங்கே ஒத்துக் கொண்டார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி பேசுகிற நேரத்தில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் விலைவாசி அதிகம், அதை நான் மெய்ப்பிக்க முடியும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

முதலில் உலகத்திலே விலைவாசி நிலவரத்தில் இந்தியா எங்கே இருக்கிறது என்று பார்ப்போம். பிறகு இந்தியாவில் தமிழ் நாடு எங்கே இருக்கிறது என்று பார்ப்போம். உலகத்தில் விலைவாசி நிலவரத்தைப்பற்றி ஐ.எல்.ஓ. என்று சொல்லப்படுகின்ற இன்டர்நேஷனல் லேபர் ஆர்கனிசேஷன் வெளியிட்டிருக்கின்ற புள்ளி விவரத்தைப் பார்ப்போம். 1963 மார்ச் முதல் 1972 வரை உலகத்திலுள்ள விலைவாசி நிலவரங்களை அது--ஐ.எல்.ஓ.—வெளியிட்டிருக்கிறது. தாய்லாந்து 21 சதவிகிதம், மொராகோ 22 சதவிகிதம், கென்யா 25 சதவிகிதம், ஈரான் 28 சதவிகிதம், எதியோபியா 32 சதவிகிதம், மெக்ஸிகோ 35 சதவிகிதம், இலங்கை 36 சதவிகிதம், பாகிஸ்தான் 45 சதவிகிதம், மேற்கு ஜெர்மனி 32 சதவிகிதம், கனடா 33 சதவிகிதம், அமெரிக்கா 35 சதவிகிதம், ஆஸ்திரேலியா 37 சதவிகிதம், இதாலி 39 சதவிகிதம், பிரான்ஸ் 43 சதவிகிதம், ஜப்பான் 55 சதவிகிதம், இங்கிலாந்து 46 சதவிகிதம், இந்தியா 35 சதவிகிதம். இது இண்டர் நேஷனல் லேபர் ஆர்கனிசேஷன்—வெளியிட்டிருக்கிற புள்ளிவிவரப் பட்டியலாகும்.

இதிலே இந்தியா 95 சதவிகிதம். எல்லாவற்றிலும் உயர்ந்து நிற்கிறது. அந்த இந்தியாவில் நம்முடைய தமிழ் நாட்டின் நிலவரம் என்னவென்றால் பொது விலைக் குறியீடு, உணவுக் குறியீடு ஜெனரல் இண்டெக்ஸ், ஃபுட் இண்டெக்ஸ் என்ற இரண்டையும் எடுத்துக்கொண்டால் மத்திய சர்க்கார் வெளியிட்டிருக்கிற அந்தப் பட்டியலின்படி இந்தியாவினுடைய பொதுவிலைக் குறியீடு ஜூலை 1972-ல் 205 புள்ளியாக இருந்தபொழுது சென்னையில் 201 புள்ளியாக இருந்திருக்கிறது. அதைப்போலவே உணவு விலைக் குறியீடு ஜூலை 1972-ல் 220 புள்ளியாக இருந்தபோது சென்னையில் 205.3 புள்ளியாக இருந்திருக்கிறது. நான் அதிலே அதிக விவரங்களைச் சொல்ல விரும்பவில்லை. மே மாதம் 1973-ல் பொது விலைக் குறியீடு அகில இந்தியாவிலே 228 ஆக இருந்தபொழுது சென்னையில் 217 ஆக இருந்திருக்கிறது. உணவு விலைக் குறியீடு மே 1973-ல் அகில இந்தியாவில் 273 புள்ளியாக இருந்தபொழுது, சென்னையில் 224.6 ஆக இருந்திருக்கிறது. ஆக, இந்த விவரங்களின்படி பார்த்தால் சென்னை உணவு விலைக் குறியீட்டு நிலை அகில இந்தியாவின் உணவு விலைக் குறியீட்டைவிடக் குறைவாக உள்ளது என்பதை நாம் மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

அத்தியாவசியப் பொருள்களின் மொத்த விலை நிலவரம் அல்லது சில்லரை விலை நிலவரம் ஆகியவற்றைத் தென் மாநிலங்களைப் பொறுத்தும், ஏனைய வட மாநிலங்களைப் பொறுத்தும் நாம் அறிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்கான விவரங்களையும் இந்த அவை அறிந்துகொள்ளவேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

அரிசி, நடுத்தர அரிசி, பச்சை அரிசி பங்களூர் மார்கெட்டில் குவிண்டால் ரூ. 212. இது 31—7—1973 அன்றைய நிலவரம். திருவனந்தபுரத்தில் 4—8—1973 அன்றைய நிலவரம் ரூ. 380 குவிண்டாலுக்கு. சென்னையில் 6—8—1973-ல் ரூ. 133.

புழுங்கல் அரிசி பங்களூரில் ரூ. 195 குவிண்டாலுக்கு, திருவனந்தபுரத்தில் ரூ. 365 குவிண்டாலுக்கு, சென்னையில் ரூ. 126 குவிண்டால்.

சோளம் பங்களூர் மார்க்கெட் ரூ. 139, திருவனந்தபுரத்தில் ரூ. 210, சென்னையில் ரூ. 92.

கம்பு பங்களூரில் ரூ. 138, திருவனந்தபுரம் மார்க்கெட் ரூ. 286, சென்னை ரூ. 89.

கேழ்வரகு பங்களூர் மார்க்கெட் ரூ. 112, திருவனந்தபுரம் ரூ. 205, சென்னை ரூ. 89.75.

கடலை பங்களூரில் ரூ. 177. அங்கு குறைவு. திருவனந்தபுரத்தில் ரூ. 235, சென்னையில் அதைவிடக் குறைவு ரூ. 202.

துவரை பங்களூரில் ரூ. 188, திருவனந்தபுரத்தில் ரூ. 210, சென்னையில் ரூ. 175.

பச்சைப் பயிறு பங்களூரில் ரூ. 288, திருவனந்தபுரத்தில் ரூ. 323, சென்னையில் ரூ. 207.

தேங்காய் எண்ணெய் பங்களூரில் ரூ. 837, திருவனந்தபுரத்தில் தேங்காய் அதிகம். அங்கே ரூ. 825. சென்னையில் அதைவிட அதிகம், இது ஒன்றில் ரூ. 941.

உளுந்து பங்களூர் மார்க்கெட் ரூ. 256, திருவனந்தபுரம் ரூ. 335, சென்னை ரூ. 195. இவை நிலவரங்கள்.

இதிலே மற்ற வடபுலத்தில் இருக்கிற மாநிலங்களோடு ஒப்பிட்டால், சில்லரை விற்பனை விலையைப் பார்த்தால் கூட, சென்னையில் அரிசி விலை ரூ. 1.22 ஒரு கிலோவுக்கு, அஹமதாபாத்-குஜராத்தில் ரூ. 3.25, அமிர்தசரஸ் பஞ்சாபில் ரூ. 2, ஜோத்பூர்-ராஜஸ்தானில் ரூ. 2.25, உத்தரப்பிரதேசம்-ஆக்ராவில் ரூ. 1.95, லிம்லாவில் ரூ. 2.60, உத்தரப்பிரதேசம்-கான்பூரில் ரூ. 1.75, மேற்கு வங்காளத்தில் ரூ. 2.25. இது அரிசியைப் பொறுத்தவரையிலாகும்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

சர்க்கரையைப் பொறுத்துச் சென்னையில் ரூ. 3.65, குஜராத்தில் ரூ. 3.95, பஞ்சாபில் ரூ. 3.85, ராஜஸ்தானில் ரூ. 3.75, ஆக்ராவில் ரூ. 3.70, லிம்லாவில் ரூ. 4, கான்பூரில் ரூ. 3.60.

நல்லெண்ணெய், சென்னையில் ரூ. 8.50, குஜராத்தில் ரூ. 9, பஞ்சாபில் ரூ. 8.80, ராஜஸ்தானில் ரூ. 8.50, ஆக்ராவில் ரூ. 9.25, லிம்லாவில் ரூ. 8.50, கான்பூரில் . ரூ. 9.50.

இந்தச் சில்லறை விற்பனையைப் பார்த்தாலும் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களையும்விட தமிழ்நாட்டில்தான் விலை அதிகம் என்ற அந்தக் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை, அல்லது தவருனவை என்பதை விளக்குவதற்குத்தான் நான் இந்த விவரங்களையெல்லாம் எடுத்துச் சொன்னேன்.

அவர்கள் பேசும்போது, மாநில அரசுக்கு அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் விலைகளை நிர்ணயம் செய்யும் முழு அதிகாரத்தையும் மத்திய அரசு அளித்திருக்கிறது என்று சொன்னார்கள். மதி அவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த அதிகாரங்களையெல்லாம் நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றெல்லாம் கூட எடுத்துக் காட்டினார்கள். மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் எப்படி வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்பதை புது டெல்லியிலிருந்து 1972-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ம் தேதி எழுதப்பட்டுள்ள அரசு ஆணையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சில உரிமைகளைக் கொடுத்து விட்டு

'That such powers shall be exercised by the State Government subject to such directions if any, as may be issued by the Central Government in this behalf. .' என்று சொல்லிவிட்டு, கீழே ஒரு 5, 6 விவரங்களைத் தருகிறார்கள். அவை எவை எவை என்றால் விலைக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு, கொள்முதல், போக்குவரத்துக் கண்டிரோல் இவைகளுக்கெல்லாம் மத்திய சர்க்காரினுடைய அதிகாரத்தை, அனுமதியைப் பெறுமல் எதுவும் செய்ய முடியாது என்கின்ற நிலைமையிலே தான் அவைகள் இருக்கின்றன.

விலைவாசிகள் ஏறியிருக்கின்றன, ஆகவே இந்த மந்திரிசபை பதவி விலக வேண்டும். இது எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து எடுத்து வைக்கப்பட்ட ஒரு வாதம். ஆனால் விலைவாசி எப்படி ஏறுகிறது, விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு காரணமா, மத்திய அரசு காரணமா என்ற இந்தக் கேள்விகளை நாம்

1973 ஆகஸ்ட் 10] *[டாக்டர் மு. கருணாநிதி]*

சேட்டு, அதற்கு ஒரு சரியான பதிலை நாம் வரவழைத்துக்கொள்ள வேண்டுமே அல்லாமல், மாநில அரசின் மீது குற்றம் சாட்டுவதற்கு இதைத் தவிர வேறு ஏதுமே இல்லை என்ற அளவில் மாநில அரசின் மீது குற்றம் சாட்ட இதை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை நான் நிச்சயமாக விரும்பவில்லை. மாநில அரசு விலைவாசி உயர்ந்திருப்பதை உணர்கிறது. நாங்கள் மறுக்கவில்லை. "அப்படித்தான் உயரும், சினிமாவுக்கு க்யூ நிற்கவில்லையா, அதைப்போல அரிசி வாங்க க்யூ நில்லுங்கள்" என்று இந்த அரசில் உள்ள அமைச்சர்கள் யாரும் பேசமாட்டார்கள். சினிமா டிக்கெட் விலை உயரவில்லையா, அந்த டிக்கெட்டை வாங்கி படம் பார்க்கவில்லையா, அதைப்போல உணவுப் பண்டங்களின் விலையும் உயர்ந்திருக்கிறது, ஆகவே, அதை வாங்கிச் சாப்பிடுங்கள் என்ற அலட்சியப் போக்கில் இந்த அரசிலே உள்ள யாரும் பேசுவதற்குத் தயாராக இல்லை. விலைவாசி உயர்ந்திருப்பதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் எல்லா மாநிலங்களும் இந்தியா முழுவதும் இப்படிப்பட்ட நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது என்பதை நாம் தயவுசெய்து மறந்துவிடக்கூடாது. அதை மறந்துவிட்டு இந்த மாநில அரசின் மீது மாத்திரம் பழி போடுவது சரியானது அல்ல என்பதற்காகத்தான் இந்த விவரங்களை நான் எடுத்துச் சொன்னேன்.

உற்பத்தி குறைந்து பணப் புழக்கம் அதிகமானால் விலைகள் ஏறும். அது ஒரு வாதம். உற்பத்தி அதிகரிக்கப்பட்டு பணப்புழக்கம் கட்டுப்படுத்தப் பட்டால் விலைகள் குறையும். அதுவும் ஒரு வாதம். உற்பத்தி என்பது வேளாண்மைத் துறையிலே மட்டும் குறிப்பிடப்படுவது அல்ல. தொழில் துறையிலும் உற்பத்தி தேவை என்பதைக் குறிக்கின்ற வாதம்தான் அந்த வாதம். வேளாண்மைத் துறையில் அதிக உற்பத்தி செய்ய வேண்டுமென்றால், அந்த உற்பத்திக்குத் தேவையான உரம், டிராக்டர், மற்றும் ஏனைய சாதனங்கள் எல்லாம் விவசாயத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைக்க வேண்டும். இத்தகைய மூலப் பொருள்களை, விவசாய உற்பத்திக்கு அத்தியாவசியமான பொருள்களை விநியோகிக்கிற அதிகாரத்தையும், அதுபற்றிய கொள்கைகளை வகுக்கின்ற உரிமையையும் படைத்திருப்பது யார்? மாநில அரசா? மத்திய அரசா? இந்தக் கேள்விக்கு நாம் பதில் காணவேண்டாமா?

அதேபோல் தொழில் உற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்கிற அல்லது செய்வதற்குரிய லீசென்ஸ் கொடுக்கின்ற அதிகாரமும், தொழில் கொள்கைகளை வகுக்கிற அதிகாரமும், இந்தத் தொழில்கள் பொதுத் துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ இருக்க வேண்டுமென்ற முடிவைச் செய்கின்ற அதிகாரமும் மத்திய அரசினுடைய கையிலே இருக்கிற

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

போது மாநில அரசு விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லையென்று கூறுவதில் நியாயம் இருக்க முடியுமா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே இதிலிருந்து நமக்குத் தெரிகிற உண்மை என்னவென்றால் உற்பத்தியை நிர்ணயித்து, கட்டுப்படுத்தி, பொருளாதார வளர்ச்சிக்குரிய சூழ் நிலையை ஏற்படுத்துகின்ற வாய்ப்பும் அதிகாரமும் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. நாணயப் புழக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரமும் மத்திய அரசின் கையிலேயே இருக்கிறது. நாணயப் புழக்கக் கட்டுப்பாடு, உற்பத்திப் பெருக்கத்தைப்பற்றிய கொள்கை, பொருளாதாரக் கொள்கை—இந்தப் பொருளாதாரக் கொள்கைகளைத் தெளிவாகவும், வெற்றிகரமாகவும் அமல் செய்கின்ற அரசு ஒன்றுதான் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும். எனவே நல்ல பொருளாதாரக் கொள்கை விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும். நல்ல நாணயக் கட்டுப்பாடு உள்ள பொருளாதாரக் கொள்கையில் கறுப்புப் பணத்திற்கு இடமே இல்லை என்ற கருத்தை தேசிய வளர்ச்சி மாநாடு நடை பெற்றபோதுகூட நான் தமிழக அரசின் சார்பில் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

இன்றைக்கு ரிசர்வ் வங்கி அவர்களிடம் இருக்கிறது. அது எனக்கு வேண்டு மென்று கேட்கிறோமா என்று யாரும் தயவுசெய்து எண்ணக் கூடாது. நிலைமையைச் சொல்கிறேன். அங்குதான் இருக்கவேண்டும். அவர்களிடம் இருக்கிறது. தேசிய வங்கிகள் அவர்களிடம் இருக்கின்றன. பெரிய வரி விதிப்புக் கருவிகள், ஆயுதங்கள் அவர்களிடம் இருக்கின்றன. நோட்டு அடிக்கிற அச்சு இயந்திரம் அவர்களிடம் இருக்கிறது. அண்மையில் அந்த அச்சு இயந்திரம் இரவு பகலாக வேலை செய்து கொண்டிருப்பதாகக்கூடப் பத்திரிகை யில் செய்தி பார்த்தோம். அதற்குத் தேவையான காகிதம் கூடக் கிடைக்காமல் வெளிநாடுகளிலிருந்து காகிதம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கி றார்கள் என்ற செய்தி கூட இந்தப் பத்திரிகையில் வந்தது. நாம் படித்தோம். அந்த அளவிற்கு அந்த அச்சு இயந்திரம் வேகமாக வேலை செய்து கொண்டிருக் கிறது. ஆகவே, மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கையில் நாம் ஆராய வேண்டியவைகளில் ஒன்று இந்த நாணயத்தை கட்டுப்படுத்து கின்ற முறை.

படுத்து. வரி விதிப்புக் கொள்கையை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். வரி விதிப்புக் கொள்கையில் இந்த ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட் 4,800 கோடி ரூபாய். அதிலே அவர்களுடைய வரிகளில் எக்சைஸ் வரி மூலம் மாத்திரம் திரட்டப்படுவது 2,741 கோடி ரூபாய். அதாவது பண்டங்களின் உற்பத்தியின் மீது விதிக்கப்படுகிற வரி 56 சதவிகிதம். அதை நாம் மறந்து விடக் கூடாது.

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

அண்மையில் ஒரு ஆராய்ச்சி மூலம் தெரியவந்த கருத்து, சுமார் ஆறு பொருள் களின் விலையில் 50 சதவிகிதம் முதல் 70 சதவிகிதம் வரை எக்சைஸ் வரியாக மத்திய அரசுக்குப் போகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாமர மனிதன் தினி வாங்குகிறான். இதில் 50 முதல் 75 சதவிகிதம் வரை எக்சைஸ் டியூட்டி, வாங்குகிற தினிக்குத் தருந்தவாறு போடப்படுகிறது. சர்க்கரை விலையில் 75 சதவிகிதம் எக்சைஸ் டியூட்டி. சிமின்ட் 60 முதல் 70 சதவிகிதம் வரை எக்சைஸ் டியூட்டி. ஸ்டீல் 50 முதல் 60 சதவிகிதம் வரை எக்சைஸ் டியூட்டி. இந்த ஆண்டு மத்திய அரசு நேர்முக வரிகளான வருமான வரி, சொத்து வரி, கம்பெனி வரியான கார்ப்பரேஷன் வரி ஆகியவற்றை உயர்த்த வில்லை என்பதை நாம் அறிவோம். எக்சைஸ் டியூட்டி, கஸ்டம்ஸ் டியூட்டி இது போன்ற மறைமுகமான வரியைத்தான் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். அதாவது இந்த ஆண்டு கணக்கிட்டுப் பார்த்தால், மொத்த வரி வருமானத்தில் 76 சதவிகிதம் எக்சைஸ் டியூட்டியும் கஸ்டம்ஸ் டியூட்டியும்தான் அவர்களால் விதிக்கப்பட்டிருக்கின்றன. பணக்காரர்கள் தருகிற நேர்முக வரியான வருமான வரி, கார்ப்பரேஷன் வரி, சொத்து வரி இவைகள் எல்லாம் 24 சதவிகிதம்தான் இந்த ஆண்டு போடப்பட்டிருக்கிறது. இதையும் நாம் மறந்து விடக் கூடாது. விலைவாசி உயர்விற்கு மத்திய அரசின் இந்த வரிக் கொள்கையும் ஒரு காரணம் தான் என்பதைத் தெளிவுபடுத்தத்தான் இந்த விளக்கத்தை எடுத்துச் சொன் னேன்.

இங்கு சொல்வது மாத்திரமல்ல. 1973 ஜனவரித் திங்கள் 19, 20 ஆகிய நாட்களில் டெல்லிப் பட்டணத்தில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட் டத்தில் முதலமைச்சர்கள் எல்லாம் கலந்து கொண்டபோது, நான் சொன் னேன்.

"நான், தமிழகத்தின் நிதியமைச்சராக இருக்கிறேன். தமிழகத்தினுடைய அரசின் வருவாயைப் பெருக்க வரி விதிக்க வேண்டிய நிலைமை என்னைப்போல நிதியமைச்சர்களுக்கு ஏற்படுகிறது. என்னைப்போலவே எல்லா மாநில நிதி யமைச்சர்களுக்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. வரியை உயர்த்தினால் உடனே விலைவாசி உயருகிறது, ஆகவே இவைகளை எல்லாம் ஆராய்ந்து ஏதாவது ஒரு கட்டத்தில் ஒரு நல்ல முடிவு எடுத்தால்தான், இந்த வரி விதிப்பில் ஒரு நல்ல கொள்கை முடிவு எடுத்தால்தான் விலைவாசி உயர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும்" என்ற கருத்தை நான் எடுத்துச் சொன்னேன். நான் பேசும்போது குறிப்பிட்டேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

"The increase in prices of commodities raises costs of production of goods in general and this has impact on prices which in turn impinges on our wage-level and State and Central resources. We would therefore urge that Government of India should set up a Comprehensive Taxation Enquiry Commission to look into this whole question and suggest solutions."

ஒட்டுமொத்தமான ஒரு வரிக் கொள்கைக்கான ஒரு ஆய்வுக் குழு அமைக்கப் பட்டாக வேண்டும் என்ற கருத்தை நான் தேசிய வளர்ச்சிக் குழு மாநாட்டிலே எல்லா முதலமைச்சர்களுக்கும் முன்பாக இந்தியப் பிரதமர் முன்னிலையில் எடுத்துச் சொன்னேன். அது நல்ல யோசனை என்ற பல மாநில முதலமைச் சர்களால் பாராட்டப்பட்டது. டெல்லியில் உள்ள பத்திரிகைகள் எல்லாம் எழுதின. தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகளும் அதைப்பற்றி எழுதின. மேலவையிலும் சட்டப் பேரவையிலும் அதை வரவேற்றுப் பலர் பேசியதாக எனக்கு நினைவு. ஆனால் இதுவரையில் அதைப்பற்றிய சிந்தனையே மத்திய அரசிலே உள்ளவர்களிடம் எழுந்ததாக எனக்குத் தெரியவில்லை.

உற்பத்தி பெருகினால் விலைவாசி குறையும் என்கிற ஒரு கருத்து உண்மையான கருத்துத்தான் என்றாலும் கூட, அதுமாத்திரம் போதாது என்பதற்கு ஒரு முன் உதாரணம் நமக்கிருக்கிறது.

இந்தியாவின் பிரதமராகத் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட நேரத்தில் 72.3 மில்லியன் டன்னிலிருந்து 107.81 மில்லியன் டன்னுக உணவு தானியங்களின் உற்பத்தி இந்தியாவில் உயர்ந்தது. ஆனால் அப்படி உற்பத்தி அதிகரித்தும் விலைவாசி குறைந்ததா என்றால் இல்லை. உணவு தானியங்களின் விலை, குறிப்பாக கோதுமையின் விலை மேலும் அதிகமாயிற்று. அவ்வளவு உற்பத்திக்குப் பிறகும். அதற்குக் காரணமென்ன ? அதிக உற்பத்தி செய்தால் மாத்திரம் போதாது. சரியான பொருளாதாரக் கொள்கை மானிட்டரி பாலிசி வகுக்கப்பட வேண்டும் என்பதைத்தான் அது கோடிட்டுக் காட்டுகிறது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவாக்கிட விரும்புகிறேன்.

வழங்களும் தேவையும் (சப்ளையும், டிமாண்டும்) என்று வடித்துக் கொண் கின்றன என்று நாம் வைத்துக்கொண்டு பார்த்தால் கூட, நோட்டு அடித்துக் குவித்துக் கொண்டிருப்பேமானால், பற்றாக்குறை நிதி நிலை (டெபிசிட் பைனான்சிங்) ஏற்படுகிறது. அப்படிப் பற்றாக்குறை நிதிநிலை ஏற்பட்டால் விளைவு என்ன ?

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

மிக அதிகமான பணப்புழக்கம் மிகக் குறைவான பண்டங்களைத் துரத்திக் கொண்டு போகிறது. அப்படித் துரத்தும்போது தானாகவே விலை உயருகிறது. இதை நாம் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். பண்டங்களின் உற்பத்தியைவிட, கரன்சி நோட்டுகளின் உற்பத்தி இன்று இந்தியாவில் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. 1961-லிருந்து 1972 வரை இந்தக் காலக்கட்டத்தில் பணப்புழக்கம் (Money Supply) இரட்டிப்பாக ஆகியிருக்கிறது. அதே நேரத்தில் விவசாயப் பண்டங்கள் போன்ற தேசிய தானாரப் பண்டங்களின் உற்பத்தி 52 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய்க்குக் குறைத்திருக்கிறது. நோட்டு அடிப்பது—பணப்புழக்கம் இரட்டிப்பாக உயர்த்திருக்கிறது. ஆனால் உற்பத்தி, தேசியப் பண்டங்களின் உற்பத்தி 52 கோடியிலிருந்து 40 கோடி ரூபாயாகக் குறைத்துவிட்டிருக்கிறது. எனவே பண்டங்களின் உற்பத்திக்கும் அதிகமாக நோட்டு அடித்துக் குவித்தால் விலை உயருமா உயராதா என்ற கேள்விக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். 1972 ஏப்ரல் 8-ந் தேதி 8,247 கோடியாக இருந்த பணப் புழக்கம், 1973 ஏப்ரல் 27-ந் தேதி 9,545 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதாவது 16 சதவிகிதம் பணப்புழக்கம் உயர்ந்திருக்கிறது.

இதை எல்லாம் கருதித்தான் அறிஞர் அண்ணா அவர்கள் "நாட்டு வாட்டம் போக்கிட, நோட்டடித்தால் போதாது" என்று அன்றைக்கே தன்னுடைய தேர்தல் பிரகடனத்தைச் செய்தார்கள். அப்போது நோட்டு, நோட்டு என்று அடிக்குச் சொல் எழுதுகிறார் அண்ணா என்று சிலர் கேலி செய்தார்கள், கிண்டல் செய்தார்கள். ஆனால் இன்று அது எவ்வளவு பொருத்தம் என்பதை மக்களுக்கு, உலகத்திற்கு விளக்கிக் கொண்டிருக்கிறது.

விலைவாசி உயர்ந்துவிட்டது என்று கூறி அன்று தாங்கள் மாநில சர்க்காரை எதிர்த்து போராட்டம் நடத்தவில்லையா என்று கேட்டார்கள். நடத்தினோம்.

எனினும், அப்போது யாரும், இதற்கு மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்று, எந்த அமைச்சர் பெருமக்களும் காரணங்களைச் சொன்னது கிடையாது. இன்றைக்குக் கூறியிருப்பதைப்போல சொல்லின்ற துணிவை அப்போதிருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் யாரும் பெற்றிருக்கவில்லை.

இன்றைக்கு என்ன நிலை? ஒரு தராசை எடுத்துக்கொண்டால் இரண்டு தட்டுகள் இருக்கின்றன. ஒரு தட்டில் உற்பத்தி நிலைமையையும் இன்னொரு தட்டில் கரன்சி நோட்டையும் வைத்துப் பார்க்கிறோம் என வைத்துக் கொள்வோம். கரன்சி நோட்டை அதிகமாக அடித்து உற்பத்தித் தட்டைப் பெருக்

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்

[டாக்டர் திரு. மு. கருணாநிதி] [1975 ஆகஸ்ட் 10

காமல் விட்டுவிட்டு, முள்ளோப் பிடித்துக்கொண்டிருக்கிற நம்மைப் பார்த்து, "ஒழுங்காகப் பிடிக்கவில்லே" என்றால் என்ன வேடிக்கை! தாராசு சமமாக இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. 'முள் ஆடுகிறதே' என்றால் அது மாநில அரசின் குற்றம் அல்ல.

இங்கிலாந்து நாட்டில் "பிரைஸ் போர்டு" என்று ஒன்று அமைக்க வேண்டுமென்று ஒரு யோசனை கூறப்பட்டது அது அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அனுமதியைப் பெற்றுதான் பலரும் விலையை நிர்ணயம் செய்ய முடியும், உயர்த்த முடியும் என்ற நிலையைச் சுட்டிக் காட்டி நீர்வாகச் சீர்திருத்தக் குழு —ஏ. ஆர். வி.—அதன் தலைவர் திரு ஹனுமந்தையா—இந்திய அரசுக்கு ஒரு சிபார்சு செய்தது. commission on prices, costs and tariffs என்ற ஒரு அமைப்பு இங்கே இருக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது. அதன் அனுமதி பெற்றுத்தான் ஆலைகளில் உற்பத்தியாகிற பண்டங்களின் விலையும், கச்சாப் பொருள்களின் விலையும் உயர்த்தப்பட வேண்டுமென்று ஏ. ஆர். சி. குழு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்து எவ்வளவு நாளாகிறது? இதுவரை மத்திய அரசு அதைப்பற்றி யோசனை செய்ததா என்றால் இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான் நாம் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய தமிழ் நாட்டு அரசின் சார்பில் நாங்கள் மாத்திரம் சொல்கிறோமா என்றால் அரசுதான், மாநில அரசு அல்ல என்று சொல்கிறோம். இந்த எண்ணத்தைத் இல்லை. இந்தியாவில் இருக்கிற எல்லா மாநில அரசுகளும் சொல்கின்றன.

இங்கே நம்மைப் பார்த்து கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களும் உறுப்பினர் களும்—விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசே காரணம் என்று சொல்கிற அதே நேரத்தில் நான் அவர்களுக்குக் கேரள அரசைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். கேரளாவில் எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. அச்சுதமேனன் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார். அவர் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி சேர்ந்தவர். அங்கே இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி மாநில சர்க்கார் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் அல்ல, மத்திய சர்க்கார்தான் காரணம் என்று போர்க்கொடி உயர்த்துகிற காட்சியை அங்கே காண்கிறோம். பந்த் நடைபெறுகிறது. 1,200 பேர்கள் சிறையில் அடைபடுகிறார்கள் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக இரண்டு பேரும், தனியாக ஒருவரும் கொல்லப்படுகிறார்கள். இவைகள் எல்லாம் கேரளத்தில் சென்ற வாரம் நடை பெறுகிற நிகழ்ச்சிகள்.

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மூ. கருணாநிதி]

என்ன காரணம்? விலேயேற்றம், உணவுப்பொருள் பற்றாக்குறை, பஞ்சம், வறுமை, வறட்சி இவைகளுக்குக் காரணம் மாநில அரசு அல்ல, மத்திய அரசு என்று அங்கிருக்கிற இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (சி.பி.ஐ.) போர்க்கொடி தூக்குகிற காட்சியை அங்குப் பார்க்கிறோம். அதற்கு ஆளும் காங்கிரஸ் கட்சிச் செயலாளர் "நீங்கள் முயல் போலவும் ஓடுகிறீர்கள்; வேட்டை நாய் போலவும் துரத்துகிறீர்கள்; பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள்" என்று அங்கிருக்கிற இந்திரா காங்கிரஸ்—ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செயலாளர் வி.பி.ஐ. கட்சியைப் பார்த்துக் குறை கூறுகிறார். கேரளாவில் ஆளுகின்ற கட்சியாக இருக்கிற சி.பி.ஐ. கூட விலேவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு அல்ல காரணம், மத்திய அரசுதான் காரணம் என்று மத்திய அரசினைச் சுட்டிக்காட்டுகிறது.

அதைப்போலவே கடந்த வாரத்தில் டெல்லியில் பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள் உட்பட ஒன்பது கட்சிகள் கொண்ட கூட்டத்தில், இங்கே விலேவாசி உயர்வுக்காக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற சுதந்திராக் கட்சியும் உள்ளிட்டு, விலேவாசி உயர்வுக்குக் காரணம் மத்திய அரசாங்கம்தான் என்பதாக அங்கே ஒரு தீர்மானத்தைப் போட்டு, திரு. கிருபலானி தலைமையில் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். பழைய காங்கிரஸ் கட்சி, தி.மு.க., சுதந்திராக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, எஸ்.எஸ். கட்சி, முஸ்லீம் லீக் மற்ற கட்சிகள் எல்லாம் கூடி ஒரு தீர்மானம் நிறைவேற்றி, வருகிற 26-ஆம் தேதி ஒருமுனையாக இந்தியா முழுவதும் மத்திய அரசைக் கண்டித்துக் கூட்டங்கள் நடத்த வேண்டும், அணிகளே நடத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி இருப்பதைக் காண்கிறோம். இதுகூட விலேவாசி ஏற்றத்திற்கு மத்திய அரசுதான் காரணம் என்பதைப் புலப்படுத்தவில்லையா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

விலேவாசி ஏற்றத்திற்கு மாநில அரசுதான் காரணம் என்று கூறுகின்ற எதிர்க்கட்சிக்காரர்களுக்குப் பதில் அளிக்கிற முறையில் கேரள மாநிலத்தில் நடைபெறுகின்ற கிளர்ச்சியும் டெல்லியில் அனேத்துக் கட்சித் தலேவர்கள் கூடி நிறைவேற்றியிருக்கிற தீர்மானமும் எடுத்துக்காட்டாக இருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைப்பதுபோல நிர்வாகச் சீர்திருத்தக் குழு இருக்கிறதே, ஹனுமந்தையா தலேமையில் அமைந்த ஏ. ஆர். வி.—நம்முடைய முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்குக் கூட அதில் ஈடுபாடு உண்டு. அவர்கள் அத்தனே பேரும் சேர்ந்து தயாரித்த அந்த ஏ. ஆர். சி. ரிப்போர்ட்டில் சென்டர்-ஸ்டேட் ரிலேஷன் பற்றிச் சொல்கிறபோது

In fact, it is the policies of the Central Government that are

responsible for inflation and increase in prices and the cost of என்று மத்திய அரசைக் குறை கூறித்தான் இது மத்திய அரசின் என்றுதான் நிர்வாக சீர்திருத்தக் குழு சுட்டிக்காட்டியிருப்பதையும் நாம் காண்கிறோம்.

இன்றைக்கு இந்தியாவிலேயே அமைதியாகத் திட்டங்களை ஒழுங்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிற, வறட்சி நிவாரணப் பணிகளைச் சரியாகச் செய்து கொண்டிருக்கிற மாநிலம் தமிழ்நாடுதான். உணவு நிலைமையில் தன்னிறைவு கண்டு இருக்கிற மாநிலமும் தமிழ்நாடுதான் என்ற சிறந்த பாராட்டுரையை சென்ற சில நாட்களுக்கு முன்னால் 7, 8 பாராளுமன்ற உறுப்பினர்கள், பல கட்சிகளையும் சார்ந்தவர்கள் அவர்களாகவே ஒரு குழு அமைத்து, இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்து தென்னக மாநிலங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டுச் செல்லும்போது அந்தக் குழுவின் தலைவராக வந்த திரு. ஜோதிர் மாய் பாசு—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பத்திரிகைக்கு அறிக்கை விடும் போது சொன்னார்—டைம்ஸ் ஆப் இந்தியா ஜூலை 30-ம் தேதி இஷ்யூவில் வந்திருக்கிறது. பசுமைப் புரட்சி என்பதற்குப் பதிலாக, வறட்சிப் புரட்சிதான் பல பகுதிகளில் நிலவி வருகிறது. இந்த வறண்ட பகுதிகளில் உத்தரப் பிரதேசம், பீகார், ஆந்திரா, ராஜஸ்தான் ஆகியவற்றில் 50 சதவிகிதத்திற்கு மேலாக வறட்சி நிவாரண வேலைகள் நடைபெறவில்லை. திட்டத்திற்கு மேலாக உற்பத்தி செய்து, பஞ்ச நிவாரண வேலைகளை முழுமையாக கடைப்பிடித்து வரும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்பதாக மார்க்சிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜோதிர் மாய் பாசு பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்த கருத்து ஜூலை 30-ம் தேதி டைம்ஸ் ஆப் இந்தியாவில் வந்திருக்கிறது.

இன்னும் விவசாயியைச் சரிப்படுத்த, உணவு நிலைமையைச் சரிப்படுத்தத் தவறி விட்டதற்குக் காரணங்களைச் சொல்லும்போது நமது பெரியவர் மணலி அவர்கள் கூடச் சொன்னார்கள். "கள்ளக் கடத்தல்காரர்களை நீங்கள் பிடிக்க வேண்டும், கள்ளக் கடத்தல்காரர்களை நீங்கள் விடக்கூடாது" என்று நண்பர் மதி அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். கள்ளக்கடத்தல்காரர்களை நீங்கள் பிடித்திருப்பதற்கு நாங்கள் பாராட்டுகிறோம், மகிழ்ச்சி தெரிவிக்கிறோம் என்றார்கள். இந்த அரசு கள்ளக் கடத்தல்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் 16 பேர்களைப் பிடித்திருக்கிறது. கோவையில் 13 பேர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 பேர்கள் இதுவரையில் பாதுகாப்புச் சட்டத்தின்படி பிடிக்கப் பட்டிருக்கிறார்கள். இதற்கு முன்பே இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி யிருக்கக் கூடாதா என்ற கேள்வி எழுந்தது.

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்தியாவிலேயே பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, பதுக்கல்காரர் களையும் கள்ளக்கடத்தல்காரர்களையும் பிடித்திருக்கிற மாநிலம் நம்முடைய தமிழக மாநிலம் ஒன்றுதான் என்று கருதுகிறேன். வேறு மாநிலங்களும் இருக்கக்கூடும் என்று சொன்னால் நான் திருத்திக்கொள்ளத் தயாராய் இருக்கி றேன். ஒருவேளை விவரமின்றிச் சொல்லக்கூடும். இந்தச் சட்டப்படி நமது மாநிலத்தில் இன்றையதினம் 16 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்வேன், திரு. மலை அவர்களுக்கும், மற்றவர் களுக்கும், கள்ளக் கடத்தல்காரர்கள் நூற்றுக்கணக்கில் இருந்தாலும், பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவர்களைப் பிடித்து சிறையில் அடைக்க இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது, தயங்காது என்று உறுதியாகக் கூறுவேன். அவர்களைவிடச் சமுதாய விரோதிகள் இப்படிப்பட்ட நேரத்தில் வேறு யாரும் இருக்க முடியாது.

நமது நண்பர் திரு. வெங்கடசாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதிகாரிகளையும், மற்றவர்களையும் கண்டிக்கிறீர்கள். ஆனால் ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் சில விவகாரங்களில் தலையிடுகிறார்கள். அப்படித் தலையிடுவது சரியா? அப்படித் தலையிடுவது நிறுத்தப்படவேண்டாமா? என்று கேட்டுவிட்டு, "நீங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய மகாநாட்டில் பேசும்போது ஒன்றைக் கூறினீர்கள்" என்பதாகவும் சொல்லி யாரும் தலையிடக் கூடாது என்று சொல்லியிருப்பதில் இருந்த இதுவரை தலையிடு இருந்திருக்கிறது என்பதாக என் எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற வாதத்தை நண்பர் வெங்கடசாமி அவர்கள் நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகின்றபோது எடுத்துச் சொன்னார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் குறிப்பிட்டது, இந்த அவைக் குறிப்பிலும் ஏறவேண்டும் என்பதற்காக இங்கேயும் குறிப்பிடுகிறேன்.

"தனிப்பட்ட குறைகளைத் தீர்க்க மனுநீதித் திட்டமும், கிராமங்களின் அல்லது ஒருசாராரின் பொதுவான குறைகளைத் தீர்க்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்பு முறைகளும் இருக்கின்றபோது, இடையிலே சிபாரிசு செய்ய ஆட்கள் தேவையில்லை. எனினும், ஜனநாயக அமைப்புகளின் வாயி லாக அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர இயலாத சில பொதுப் பிரச் சினைகளும் இருக்கக்கூடும். அவைகளுக்குத் தீர்வுகாண மக்களின் பிரதிநிதி களோ, தனிப்பட்டவர்களோ அதிகாரிகளை அணுகுவதில் தவறில்லை. நியாயத் திற்கு முரண்பாடான சில காரியங்களைச் சாதித்துக்கொள்ள, செல்வாக்குப் பெற்றவர்கள் அதிகாரிகளை அணுகக் கூடும். அவர்களது முறையீட்டில் அல்லது

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

பரிந்துரையில் நியாயமிருந்தால், செய்யுங்கள்; நியாயமில்லையெனில் அப்படிப் பட்ட பரிந்துரைகளைச் செய்பவர்கள் எவ்வளவு பெரிய இடத்தில் இருந்தாலும், அதைச் செய்ய இயலாது என்று கண்டிப்பாகவே கூறிவிடலாம்.

சில நேரங்களில் நியாயங்களைச் செய்வதற்குக் கூட வீண் கால தாமதமும் அந்தத் தாமதத்தைத் தவிர்ப்பதற்கு இடையிலே நேர்மையற்ற சில காரியங் களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து விடுகின்றன. அந்தத் தவறுனக் காரியத்தைச் செய்யச் சாடை காட்டுகிற அதிகாரிகளாஞலும், அல்லது அந்தத் தவறுன காரியத்தைச் செய்ய அதிகாரிகளைத் தூண்டுகிறவர்களாஞலும், இரு சாராருமே சமூகத் துரோகிகளாகக் கருதப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை".

அதுபோலவே, அதிகாரிகள் சிலர் தங்கள் சொந்த நலனுக்காக, செல்வாக்கு பெற்றவர்களிடம் அல்லது மக்கள் பிரதிநிதிகளிடம் அணுகி அவர்கள் மூலமாக அரசுக்கு நிர்ப்பந்தங்களைத் தருவதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு தங்கள் நலன்களுக்கு பரிந்துரையாளர்களை ஏற்பாடு செய்துகொள்கிற அதிகாரிகள் யாராஞலும் அவர்கள் கண்டிப்பாக ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதையும் நான் திடமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மக்களுடைய பொதுப் பிரச்சினைகள் தவிர, வேறு எந்தப் பிரச்சினைக்கும் நேரிடையாக அரசாங்க அதிகாரிகளை அணுகாமல், நியாயத்திற்குப் புறம்பான செயல்கள் எங்கே நடைபெற்றாலும் அவைகளை மக்களின் பிரதிநிதிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும்; அவர்கள் அரசு அதிகாரிகள் குறித்து எந்தவிதமான பரிந்துரைகளையும் அரசுக்குக் கொண்டு வரக்கூடாது என்பதை நான் பல தடவை வலியுறுத்திக் கூறியுள்ளேன். அந்தக் கருத்தில் இந்த அரசு மேலும் அழுத்தந் திருத்தமாக இருக்கும் என்பதை அறிவித்துக்கொள் கிறேன்" என்று நான் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மகாநாட்டிலே சொல்லி, யாரும் தனிப்பட்டவர்களுக்கு, நியாயமற்ற காரியங்களுக்கு, தனிப்பட்ட காரி யங்களுக்கு அதிகாரிகளை நாடக்கூடாது என்று சொன்னேன். அதை வைத்துக் கொண்டு சில உறுப்பினர்கள், திரு. வெங்கடசாமி உட்பட, சொன்னார்கள். "இதிலிருந்து இவர்கள் ஏற்கெனவே அப்படித் தலையிட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லையா?" என்று சொன்னார்கள். அதற்கு அதுவா அர்த்தம்? நீ கண்ணகிபோல் வாழ்க என்று சொன்னால், அவள் ஏற்கெனவே பாஞ்சாலிபோல் வாழ்ந்தாள் என்ற அர்த்தம்? நீண்ட பயணம் போகிறவரைப் பார்த்து, "போகிற பாதையிலே ஒரு குறுக்குப் பாதை வரும், அந்தப் பாதைப் பக்கம்

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

போகாதே" என்று கூறினால், அவன் அந்தப் பாதையிலே, போனான் என்ற அர்த்தம்? செய்யாதே என்றால், சொல்கிறவன், அதை ஏற்கெனவே செய்தான் என்று அர்த்தமாகாது. நான் தெளிவாகச் சொல்கிறேன், அப்படி யாராவது செய்திருந்தாலும் அது தவறுதான்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பண்ணுருட்டி நகராட்சித் தலைவர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கடிதம் கொடுத்து அனுப்பினர் என்று. அது தவறு, நான் கண்டிக்கிறேன். ஆனால், ஒன்றை நான் சொல்கிறேன். அந்தக் கடிதத்தினைப் பெற்ற அதிகாரி எவரும் அந்தக் கடிதத்தின்படி நடந்து கொள்ளவில்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுத்திருப்பதாகத்தான் நான் அறிகிறேன். கடிதம் கொடுத்தது தவறு. நான் அதற்காக வருந்துகிறேன். அப்படி கடிதத்தின்படி நடந்திருந்தால், நிச்சயமாக அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும். நல்லவேளையாக அதிகாரி அப்படி நடந்துகொள்ளவில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுவேன்.

இன்று மிக முக்கியமாகப் பேசப்பட்ட மற்றொன்று மதுவிலக்குப் பிரச்சினை. மதுவிலக்கை ரத்து செய்துவிட்டதாக சிலர் சொன்னார்கள். அந்த வார்த்தையைத் திருத்தமாகப் பயன்படுத்துவது நல்லது. மதுவிலக்கை இந்த அரசு ஒத்தி வைத்திருக்கிறது என்றுதான் சொன்னேனே அல்லாமல், ரத்து செய்து விட்டது என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு எதிர்த்தரப்பிலே அமர்ந்திருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர், அந்தக் கட்சியினுடைய தலைவர் உட்பட, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது, என்ன நடந்தது? கோயம்புத்தூர் பொதுக் குழுவிலே, மதுவிலக்கை ஒத்தி வைப்பதைத் தவிர, இப்போதுள்ள நிலைமையில் வேறு வழியில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அந்தக் கட்சியினுடைய தலைவரே அதை விளக்க ஒரு மணி நேரம் பொதுக் குழுவில் பேசி, அதுவும் போதாதது என்று ஆனந்த விகடன் பத்திரிகையிலே "என் முதலமைச்சர் இந்த முடிவெடுக்க நேரிட்டதது?" என்பதை விளக்கிப் பல கட்டுரைகளும் எழுதி, அதற்குப் பிறகு நாம் மதுவிலக்கை ஒத்தி வைத்தோம்.

இந்த அரசு எதிலும் விடாப்பிடியாகத்தான் இருக்கும், சில குறைகள் சுட்டிக்காட்டப்பட்டால் திருத்திக்கொள்ளாது என்று யாரும் நினைப்பதற்கு இடம் இல்லாத வகையில், எவ்வப்போது குறைகள் சுட்டிக் காட்டப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் இந்த அரசு அவற்றைத் திருத்திக் கொண்டிருக்கிறது என்பதற்கு ஒரு பெரிய அடையாளம்தான், ஒத்தி வைத்த

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

மதுவிலக்கை மீண்டும் கொண்டுவாருங்கள் என்று குரல் எழுப்பியதும், தமிழ் நாட்டு மக்களுடைய குரலே மதித்து இன்றைக்கு முதல் கட்டமாகக் கள்ளுக் கடைகளை எல்லாம் மூடுவோம் என்று அறிவித்திருக்கிறோம்.

கள்ளுக்கடைகளை மூடிவிட்டால் போதுமா, சாராயக் கடைகளை மூட வேண்டாமா என்றால், சாராயக் கடைகள் எப்போதுமே இருந்துவிடும் என்று யார் சொன்னார்கள்? அவையும் மூடப்படும். முதல் கட்டம் என்று சொல்லுகிறபோதே, முடிவான கட்டம் என்று பொருள் அல்லவே. இரண்டாவது கட்டம் இருக்கிறது என்றுதானே பெருள். ஆகவே, சாராயக் கடைகளும் மூடப்படும். இருக்கிற பொருளாதாரச் சூழ்நிலையில், ஏற்கெனவே வரவு-செலவுத் திட்டம் வகுத்துவிட்ட சூழ்நிலையில் நாம் மெல்ல மெல்லத்தான் அந்தப் புனிதமான காரியத்தை மீண்டும் இங்கே புகுத்த வேண்டும் என்ற அளவில்தான் முடிவெடுத்தோமே தவிர வேறல்ல.

இங்கே உறுப்பினர்கள் சொன்னார்கள். என்னுடைய நண்பர் வேலப்பன் அவர்கள் கூடச் சொன்னார்கள். இங்கே, நான் சொன்ன உதாரணத்தை அவருக்கு உரிய பாணியிலே கேலி செய்து பேசினார். நான் வரவு-செலவுத் திட்ட உரையிலே பேசும்பொழுது குறிப்பிட்டேன். 'கொழுந்துவிட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ்நாடு எத்தனை நாள் இருக்க முடியும்?' என்று கேட்டேன். இந்த உதாரணங்களெல்லாம் நான் அண்ணாவிடமிருந்து கற்றுக்கொண்டவை. ஆகவேதான், 'கொழுந்து விட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள் கொளுத்தப்படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாள் இருக்க முடியும்' என்று கேட்டேன். மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று சொன்னவர்களே கூட அன்றைக்கு அந்த உதாரணத்தை ரசித்ததை நான் பார்த்தேன். ஆனால், நண்பர் வேலப்பன் அவர்கள் அந்த உதாரணத்திற்கு நேர் மாறாக, நேற்றையதினம், ஓர் உதாரணம் சொன்னார் ' "சுற்றிலும் இருக்கிற பெண்கள் எல்லாம் கெட்டுவிட்டார்கள் என்பதற்காக நம் வீட்டுப் பெண்ணையும் விட்டுவிடுவதா?" என்று. இந்தப் பேரவையில், ராஜாஜியின் படமும், வள்ளுவரின் படமும், எங்களை வளர்த்த பேரறிஞர் அண்ணாவினுடைய படமும், அண்ணல் காந்தி அடிகளுடைய படமும் அலங்கரித்திருக்கின்ற இந்த அவையில், அவர் அந்த உதாரணத்தைச் சொன்னார். அவரவர்கள் இயல்புக்கேற்ற உதாரணம். அண்ணா அவர்கள் சொல்வார். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமிருக்கும் என்று. ஆகவே, மாற்றாரிடம் இருக்கிற நல்லவைகளையும் வரவேற்போம், என்ற கருத்தில், 'மாற்றான் தோட்டத்து மல்லிகையிலும் மணம் இருக்கும் என்று கூறுவார்'—இது அண்ணாவினுடைய இயல்புக்கேற்ற உதாரணம். உடனே

1973 ஆகஸ்ட் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

திரு. வேலப்பன் எழுந்து, மாற்றான் தோட்டத்து மல்லிகையில் மாத்திரம்தான் மணம் இருக்குமா? மாற்றான் தோட்டத்தில் மலரும் இடத்திலே கூட ஒருவித மணம் இருக்கும். அதற்காக அவைகளை ஏற்றுக் கொள்ள முடியுமா? என்று கேட்கலாம். உதாரணம்தானே? அதைப்போல் அவர் நேற்று நான் சொன்ன உதாரணத்திற்கு, ஒரு அருமையான உதாரணத்தைச் சொன்னார்? அப்படிப்பட்ட உதாரணங்கள், கையாளப்படுகிற நேரத்தில் உள்ளபடியே எவ்வளவு ஜாக்கிரதையாகக் கையாளப்பட வேண்டுமென்பதை நண்பர்கள் எண்ணிப் பார்த்து, யோசித்துப் பார்த்து, கையாளுவது நலம் என்று கருதுகிறேன்.

இல்லைக்கு மதுவிலக்கு, பரிபூரணமாக அமல்படுத்தப்படவேண்டுமென்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. மதுவிலக்கு பரிபூரணமாக வரவேண்டும். அதே நேரத்தில் நான் ஒன்று கேட்கிறேன். மாநில சுயாட்சி என்றால் என்ன சுயநலம் என்கிறீர்கள்? தமிழ்நாடு என்றால் அது என்ன சுயநலம் என்கிறீர்கள்? ஆனால், மதுவிலக்குக் கொள்கை மாத்திரம்—தமிழ் நாட்டிலே மாத்திரம்தான் இருக்க வேண்டும்; அதில் இந்தியாவிலே உள்ள மற்ற மாநிலங்களைப்பற்றி எல்லாம் கவலையில்லை என்கிறீர்களே, என்ன காரணம்?

நான் இங்கேயிருக்கிற பழைய காங்கிரசை, ஆளும் காங்கிரசை, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியை, தமிழரசுக் கழகத்தை, தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சியை, சுதந்திராக் கட்சியை, முஸ்லீம் லீக்கை—எல்லாக் கட்சிகளையும் அழைக்கிறேன். அடுத்த ஆண்டு, சாராயக் கடைகளையெல்லாம் மூடிவிட்டு, அதற்குப் பிறகு மத்திய சர்க்காரை எதிர்த்து, இந்தியா முழுவதும் மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவா என்கிற ஒரு போராட்டத்தை நாம் தொடங்குவோம். அத்தனை பேரும் அதில் இணைய வேண்டுமென்று நான் எல்லாக் கட்சிக்காரர்களையும் கேட்டுக்கொள்வேன். (ஆரவாரம்.)

அதற்கிடையே, பழைய காங்கிரஸ், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டு கட்சி ஆகிய கட்சிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுகிறேன். ஸ்ரீரங்கத்திலே புதுச்சேரியிலே பொதுத் தேர்தல் வர இருக்கிறது. அங்கே உங்கள் தேர்தல் பிரகடனத்திலே, "நாங்கள் ஜெயித்தால் புதுச்சேரியிலே கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் மூடுவோம்" என்று வீரமாக அறிவியுங்கள். வீரமாக அறிவித்து மற்றவர்களுக்கெல்லாம் வழி காட்டியாக வேண்டும். (சிரிப்பு).

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 10

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, நான், நாவலர், பேராசிரியர் அன்பழகன், என்.வி.என்., சத்தியவாணிமுத்து மற்றும் இங்கே அமர்ந்திருக்கிற கழக அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று இரண்டு மூன்று நாட்களாகச் சொல்லி சொல்லிப் பார்த்துவிட்டீர்கள். நீங்கள் சொன்னதையெல்லாம் கேட்டுவிட்டோம். மன்றுடியாரை விடுதலை செய்ய வேண்டுமென்றீர்கள்; விடுதலை செய்தோம். கன்னியாகுமரியில் கைதான வர்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டீர்கள்; 2 நாளைக்கு முன்பே விடுதலை செய்தோம். ஆனால், இதை மாத்திரம் கேட்க முடியவில்லை. வருத்துகிறோம். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY: Mr. Speaker Sir, the Hon. Chief Minister was giving a reply. . . .

DR. H. V. HANDE: On a point of Order, Sir. We have had three or four 'No Confidence Motions' in this House during the last three or four years. The usual practice is that the Hon. Chief Minister does not want that we should interfere while he is making a speech. After he finished his speech, his reply, the normal courtesy is that we seek one or two clarifications on certain points which are left uncovered by the Hon. Chief Minister. Accordingly I want to seek a clarification. . . .

MR. SPEAKER: No point of order.

THIRU B. VENKATASWAMY: Sir, so far the Hon. Chief Minister has given replies . . . .

DR. H. V. HANDE: Sir, I am asking for a clarification.

இரவு 7-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தால் தான் உங்களுக்கு கிளாரிபிகேஷன் கேட்க இடம் உண்டு. தலைவரின் அனுமதி இல்லாததால் நீங்கள் கிளாரிபிகேஷன் கேட்க முடியாது.

DR. H. V. HANDE: I raise a point of clarification . . .

THIRU B. VENKATASWAMY: The Hon. Chief Minister has replied to the charges made by the Opposition parties. . .

(Dr. H. V. Hande was standing in his seat.)

THIRU K. A. MATHIALAGAN : On a point of order, Sir. சாதாரணமாக முதலமைச்சர் பதில் சொல்லும்போது பல பேர்கள் இளாரி பிகேஷன் கேட்பார்கள். அவர்கள் கொஞ்சம பலமாகக் கேட்டார்கள். சிலர் அமைதியாகக் கேட்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களும் கேட்க முன் வருவார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : இஷ்டப்பட்ட உறுப்பினர்கள் கேட்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியென்றால் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் கேட்பார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : நான் கேட்கவில்லை, அவர்கள் கேட்பதற்கு அனுமதியளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் இளாரிபிகேஷன் கேட்க யாருக்கும் உரிமை இல்லை. ஆகவே, பாயின்ட் ஆப் இளாரிபிகேஷனுக்கு அனுமதி கொடுக்கவில்லையென்பதற்காக பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது. பேரவைத் தலைவர் விரும்பினால்தான அனுமதி கொடுக்கலாம். இப்பொழுது பேரவைத் தலைவர் அனுமதி கொடுக்கவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இதுவரையிலும் அனுமதித்தீர்களே, இப்பொழுது என்ன புதிய முறை?

You used to allow us and Ministers used to answers to our questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய பேரவையின் விதிமுறைகளிலே அப்படி அனுமதிக்க வேண்டுமென்று விதியில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : என்ன என்ன இம்பார்ட்டண்ட் பாயின்ட்கள் சொன்னேமோ அதற்கு எல்லாம் பதில் சொல்லாமல் விட்டுவிட்டு ஒரு லெக்சர் அடித்துவிட்டுப் போய்விட்டால் எப்படி?

If you say we cannot get clarification, how is it?

DR. H. V. HANDE : Sir, I am raising another point of order. Mr. Speaker, Sir, this is also my submission. (Interruption) Yes. There are some rules and regulations governing the proceedings of

this House. We have yielded whenever the Chief Minister wanted, out of shear respect and we have not disturbed him. If you are going to conduct the business in an entirely different manner . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹான்டே அவர்கள் அவர்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள என்றும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டைக் சொல்லக்கூடாது. பாயின்ட் ஆப் ஆர்டர் எப்படி சட்ட மன்ற விதிமுறைகளிலே ஒழுங்கு முறைகளிலே எதாவது மீறியிருந்தால் தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். எது மீறப் படடிருக்கிறது என்று சொல்லாமல் உங்களுடைய சப்மிஷன் என்று சொல்லி, குற்றச்சாட்டுச் சொல்கிறீர்கள், அதற்கு இடம் இல்லை. ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லாததை எழுப்பினால் அந்தப் பகுதிகள் அவைக் குறிப் பேட்டிலிருந்து நீக்கப்படுமென்று சொல்லியிருக்கிறேன். பத்திரிகைகளும் அவற்றை வெளியிடக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, நீங்கள் சொல்வது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, the Hon. Chief Minister has given his reply to the charges made by the opposition parties who have brought the No-confidence motion as well as the Censure motion brought forward by Thiru K. T. K. Thangamani. I repeat the words that the people of Tamil Nadu have lost faith and sympathy in this D.M.K. Government because of their misrule.

Sir, the prices are going up very speedily. We are not in a position to control them. The Chief Minister gave so many exemples, of other States also. Ht said that in Kerala, Andhra, Gujarath and in so many other States the prices are higher and in Tamil Nadu the prices are lower than that. But what I want to stress is this. In the Conference of Chief Ministers at Delhi, he has given some suggestions. He has given the suggestions. What are the concrete steps taken by this Government to check the rise in prices? What is the use of our repeating that prices are soaring up? What effective measures have been taken by this Government except blaming the Central Government? This Government has not done anything to arrest the rise in prices. This abnormal price is suffocating the people. I suggest to the Chief Minister that a resolution be passed by this House announcing that we would agitate against the Central Government regarding

1973 ஆகஸ்ட் 10] [Thiru B. Venkataswamy]

soaring prices. If such a resolution is brought forward I will accept it; I accept the argument that because of printing of notes, the prices are going up. However we must see that essential commodities are given to peoplt at reasonable price. Let a resolution be passed by the House calling upon the Centre to take effective steps and let us announce that we would agitate for that.

The Chief Minister in his reply did not refer to police excesses. We are not satisfied with his replies. Some of the hon. Members, like Manali Kandaswami and the member from Muslim League have also mentioned many points. No reply has been given to them.

Regarding unemployment, what is the policy of the Government, what are they going to do to create employment opportunities to the educated and the uneducated?

Regarding prohibition, we are very happy about the first phase. this is, closing of toddy shops. I hope the Government will scrap arrack also soon. We are very happy about it.

Regarding educational policy also I have mentioned in my first speech that so many lecturers and professors have not been appointed. That is leading to student unrest. The Chief Minister has not said anything about it in his answer.

Then there is interference in religion. Government is interfering in religious gatherings. For example, in the recent Christian Association Conference which was conducted with police permission, some anti-social elements got in and raised slogans like 'Anna Vazhga', etc. They then began destroying the cameras and threatened the participants. What is the protection given to minorities by this Government?

Even the Muslim League member was telling in the morning that Urdu speaking people were not given protection. Likewise, the Telugu training school which was the only one is being closed. This will not be giving protection to minorities. I expect that all minorities, Telugu and Urdu training schools would be revived and all minorities given protection which they deserve.

The Hon. Chief Minister also misleads the House. In the case of Udavakumar incident, the Chief Minister said that he was not at all Udayakumar.

[Thiru B. Venkataswamy] [1973 ஆகஸ்ட் 10

The Hon. Chief Minister has misled the House. The Hon. Chief Minister has not given answers to all the points that have been raised by the Opposition members.

With regard to interference by the party people, he has cited an example of ladies and he has not given any other replies. I have specifically given some instances with regard to Police excesses and the way in which the officers were dictating according to their whims and fancies. I request the Hon. Chief Minister to give direct answers to my points. Finally, I would say that the Hon. Chief Minister has not answered all the charges that were levelled by the Opposition members. Therefore, I press my ' No-confidence Motion ' and demand the resignation of the Ministry immediately. Thank you, Sir.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த விவாதத்திற்கு அரசின் சார்பிலே முதலமைச்சரவர்கள் பதில் சொன்ன பிறகு எனக்கு இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவள் என்ற முறையிலே பதில் சொல்வது என்ற முறையிலே வெகு எளிதாக இருக்கிறது. காரணம் என்னவென்றால் பல குற்றச்சாட்டுக்களை நாங்கள் கொடுத்தோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

முதலமைச்சருடைய பிரசங்கத்தைக் கேட்டபொழுது அதைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு மாநில மாநாட்டுப் பிரசங்கம் என்று சொல்லலாம் அல்லது ஒரு இலக்கிய மாநாட்டுப் பிரசங்கம் என்றும் சொல்லலாமே தவிர, பல விஷயங்கள் என்னாலும், திரு. வெங்கடசாமி அவர்களாலும், திரு. மதி அவர்களாலும், திரு. நாடார் அவர்களாலும் இங்கே எழுப்பப்பட்டன, அவைகளுக்கெல்லாம் நேரடியாகப் பதில் சொல்லப்பட வில்லை என்பதை நான் முதன் முதலாகச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசுக்குப் பொறுப்பு உண்டா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை என்ன என்பதைப்பற்றி அவர்கள் கொம்பவும் ஆவேசமாகக் கேட்டார்கள். பலரும் அந்த விஷயத்தைச் சொன்னார்கள். இதைப் பொறுத்தவரையில் என்னுடைய கட்சியின் நிலை கொம்பத் தெளிவாக இருக்கிறது என்பது அவருக்கே தெரியும் என்று நினைக்கிறேன். இந்த பார்லிமெண்ட் கூட்டம் சென்ற மாதம் 23-ம் தேதி ஆரம்பித்த அன்றே விலைவாசி உயர்வைக் கண்டித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தது என்னுடைய கட்சியின் தலைவர் திரு. இந்திரஜித் குப்தா அவர்கள்

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

தான். இந்திரஜித் குப்தா அவர்கள் பேசும்பொழுது, இந்த விலைவாசி எந்தெந்த நாடுகளிலே உயர்ந்திருக்கிறது என்று ஐ.எஸ்.ஓ.வின் விவரத்தைச் சொன்னார்களே, அதேபோல் ஐ.நா.வில் இன்னொரு விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அந்த விவரத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 1963-லிருந்து 1972 வரையிலும் சோஷலிஸ்ட் நாடுகள் எந்த நாட்டிலே எடுத்தாலும் விலைவாசி உயரவில்லை, அதேநேரத்தில் அவர்களின் வருமானம் உயர்ந்தது, வாங்கும் சக்தி உயர்ந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் கொடுத்த விவரமெல்லாம் சில முதலாளி நாடுகளிலே விலைவாசி உயர்ந்தது என்றும், அதன் உச்சக் கட்டத்திலே இந்தியாவும், அதற்கடுத்து ஜப்பானும் இருந்தது என்றும் தெரிவித்தார்கள். அப்படித் தெரிவித்த அவர்கள் இந்த விஷயத்தையும் குறிப்பிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். இந்த விஷயத்தை இந்திரஜித் குப்தா அவர்கள் தெளிவாகக் குறிப்பிட் டார்கள்.

இப்பொழுதுள்ள விலைவாசி உயர்வுக்கு இந்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கை, இந்திய அரசு நடத்தும் பொருளாதாரக் கொள்கைதான் காரணம் என்பது வாஸ்தவம்தான். அந்தப் பொருளாதாரக் கொள்கைதான் இங்கேயும் நடக்கிறது. அவர்கள் சொல்லும் சில காரியங்களைக்கூட, அவர்கள் சொல்லும் நல்ல காரியங்களைக் கூடச் செய்யவில்லை என்று நான் ஆரம்பத் திலேயே சொன்னேன். அதற்கு உதாரணமாக, மொத்த வியாபாரத்தை அரசு ஏற்க வேண்டும் என்று மத்திய சர்க்காரே சொன்ன விஷயத்தைத் தமிழக அரசு இன்னும் நடவடிக்கைக்குக் கொண்டுவரவில்லை. பிரதம மந்திரி அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூட்டிப் பேசும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே பங்கெடுத்த இரா. செழியன் அவர்கள் என்ன சொன் னார்கள். அரசு மொத்த வியாபாரத்தை நடத்தக் கூடாது என்று சொன்னார் களா? அல்லது ஏற்று நடத்த வேண்டும், நாங்கள் எதிர்க்க மாட்டோம் என்று சொன்னார்களா என்று தெரிய வேண்டும். அவர்கள் என்ன சொன்னார்கள் என்று எங்களுக்குத் தெரியும், தமிழ்நாட்டிலே, வேறு எந்த இடத்திலே மொத்த வியாபாரத்தை அரசு நடத்திலும் நாங்கள் ஆட்சேபிக்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இங்கே மொத்த வியாபாரத்தை ஏற்று நடத்தத் தயாரா? அப்படி நடத்தத் தயாராக இல்லை. அதற்கான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

அதேநேரத்திலே விலைவாசி உயர்வை எதிர்த்து இந்தியா பூராவிலும் எங்கள் கட்சி இன்றைக்குப் போர்க்கொடி உயர்த்தியிருக்கிறது. பல இடங் களிலேயும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 10

தான் கேரளாவிலே நடத்துகிறார்கள். அப்படி நடத்தும்பொழுது ஒரு பகுதி மாநில அரசுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று மாநில அரசையும் கண்டித்துப் போராட்டம் நடத்துகிறார்கள் நான் கேட்கிறேன். தமிழ் நாட்டில் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த விலைவாசி உயர்வை எதிர்த்துப் போராட்டத்தில் சேரத் தயாரா, தமிழ்நாட்டில் நடத்தும் இயக்கத்தில் சேரத் தயாரா? நாங்கள் ஆளும் மாநிலத்தில் எங்கள் கட்சியைச் சேர்ந்த அச்சுதமேனன் அவர்களே எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கிறோம். ஆட்சியின் அமைப்பிலே சில காரியங்களைத் தான் செய்ய முடியும். சில காரியங்களைச் செய்ய முடியாமல் இருக்கிறது.

தமிழ்நாட்டிலே உள்ள விலைவாசி ஏற்றத்திற்குத் தங்களுக்கு எந்தவித மான பொறுப்பும் இல்லாதது மாதிரி சொல்கிறார்கள். நீங்கள் எப்படிப் பொறுப்பாக இருக்கிறீர்கள் என்று ஆரம்பத்திலேயே சொன்னேன். இன்னும் வேண்டுமானாலும் சொல்கிறேன். விலைவாசி உயர்விற்கு நீங்கள் கொடுத்த விவரமே ,இங்கே தமிழ்நாட்டிலே இன்றைக்கு ஒரு கிலோ அரிசி 1.22-க்கு எல்லோருக்கும் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அது உண்மையா? 1.22-க்கு எல்லோருக்கும் தமிழ்நாட்டிலே அரிசி கிடைக்கிறது என்பது மூதலமைச்சர் கொடுத்திருக்கும் புள்ளி விவரம். அப்படித்தான் இருக்கும் புள்ளி விவரங்கள். புள்ளி விவரத்தில் நிபுணர்கள் நாங்கள். புள்ளி விவரத்தை வைத்தே தெளிவாக்கக்கூடிய கட்சி நாங்கள். இன்றைக்கு ஒரு குளத்திலே ஆழத்தைப் பார்த்து ஒரு இடத்திலே ? அடி ஒரு இடத்தில் 10 அடி, ஒரு இடத்திலே 12 அடி என்று பார்த்து கடைசியிலே 5 அடி என்று சொல்லி அதை நம்பிக்கொண்டு நீந்த ஆரம்பித்தால் என்ன ஆகும்? ஆகவே, இதிலே புள்ளி விவரத்தில் மூழ்கி திசை திருப்பும் முறையிருந்தால் தெளிவாக எதையும் வைக்க முடியாத என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, அந்தப் புள்ளி விவரத்திற்குப் போகாமல் குறிப்பாக விலை சம்பந்தமாக அந்தப் புள்ளி விவரத்திற்குப் போகாத நிலைமையிலே வேறு இடத்திற்கு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

வாஞ்சு கமிட்டியின் சிபார்சு, ஆண்டு ஒன்றுக்கு 1,100 கோடி ரூபாய் கறுப்புப் பணம் உதயமாகிறது என்று சொல்லியிருக்கிறது. இந்த நாட்டிலே ஐயாயிரம் கோடி கறுப்புப் பணமா, பத்தாயிரம் கோடி, பதினைந்தாயிரம் கோடி கறுப்புப்பணமா என்று நமக்குத் தெரியாது. ஆனால் இருக்கிறது என்பது மட்டும் தெரிகிறது. இதை வெளியே கொண்டு வருவதற்கு வாஞ்சு கமிட்டி சிபார்சு செய்திருக்கிறார்கள். அந்த சிபார்சை அமல் நடத்த வேண்டு

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி.. கே. தங்கமணி]

மென்று தமிழக அரசின் சார்பாகத் தீர்மானம் கொண்டுவரத் தயாரா? மத்திய அரசு வாஞ்சு கமிட்டி சிபார்சை அமல் நடத்த வேண்டும். அப்படியென்றால் இந்தக் கறுப்புப் பணம் இருக்கிறதே அதை வெளியே கொண்டு வருவதற்கு வாஞ்சு கமிட்டி சிபார்சை அமல் நடத்த வேண்டும். அப்படி அமல் நடத்தினால் நாங்கள் தமிழ்நாட்டிலும் செய்யத் தயார் என்று, இந்தச் சட்டசபைக் கூட்டம் முடிவதற்குமுன், வீலேவாசியைக் குறைக்க மத்திய சர்க்காருக்குத்தான் பொறுப்பு உண்டு என்ற கருத்தை சீரியஸாக வைத்திருந்தால் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வாருங்கள், எகோபித்த முறையில் அந்தத் தீர்மானத்தைப் போட்டு மத்திய அரசுக்கு அனுப்புவோம், அதைச் செய்யத் தயாரா?

இன்னொன்று, எசென்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட் 1955, . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தயாரா என்று கேட்பதற்காகச் சொல்கிறேன், குறுக்கிட வேண்டுமென்பது அல்ல. கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவருவதற்குத் தீர்மானம் போட வேண்டுமென்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன், நானைய தினமே அப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைப்போட அரசு தயாராக இருக்கிறது. அந்தத் தீர்மானத்தில் அப்படி கறுப்புப்பணம் வைத்திருப்பவர்களைப் பிடிக்கும் அதிகாரமும் மாநில அரசுக்கு வேண்டுமென்ற தீர்மானத்தையும் இணைக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தை நாளைக்கு நிறைவேற்றலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நன்றி. அதே மாதிரியாக இன்றைக்குப் பதைக்கல் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: கறுப்புப் பணத்தைப் பிடிக்க வேண்டுமென்றால் அதிகாரத்தை எங்கள் கையில் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே இருக்கின்ற அதிகாரங்களையே துஷ்பிரயோகம் செய்கிறீர்களே என்று தான் சொல்லுவோம். இவர்கள் கையில் அந்த அதிகாரத்தையும் கொடுத்துவிட்டால் என்ன ஆகும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் பயப்பட வேண்டாம். (ஆரவாரம்)

திருமதி த. ந. அனந்தநாயகி: அம்மையார் ஒன்றும் பயப்படவேண்டிய அவசியத்தில் இல்லை. நீங்கள் இருக்கக்கூடிய அதிகாரத்தையே துஷ்பிரயோகம் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதிகாரத்தைக் கேட்காமல் வாஞ்சு கமிட்டி தீர்மானத்தை அமல் நடத்த வேண்டுமென்று தீர்மானம் போட்டால் நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம்.

[1973 ஆகஸ்ட் 10

திரு கே. டி. கே. தங்கமணி: இன்றைக்கு வாஞ்சு கமிட்டி தீர்மானத்தை அமல் நடத்த தமிழ்நாட்டுக்கு அதிகாரம் வேண்டுமென்று கேட்பது சரிதான்.

அடுத்து, இன்றைக்குப் பதுக்கலை எதிர்க்கக்கூடிய இயக்கம் நடக்கிறது. அப்படிப் பதுக்கலை எதிர்த்து இந்த இடத்தில் இன்னவற்றை வைத்திருக்கிறார்கள் என்று பெயரைத் தெரிவித்தால் அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு, பதுக்கலை எடுப்பதற்கு, பதுக்கல செய்தவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு முன் வருவார்களா என்பதையும் அறிய விரும்பு கிறேன். இதுவரையில் அப்படி இல்லை. இதுவரையில் பார்த்தால் கள்ளத் தனமாகச் சென்ற லாரிகளைத் தடுத்தால் அந்த லாரிகளைத் தடுத்து நிறுத்திய மக்களுக்குத் தடியடிப் பிரயோகம் கிடைத்திருக்கிறது. இதிலே, கொள்கை மாறுமா என்று தெரிய வேண்டும். இதுவரையில் பதுக்கல் செய்தவர்களுக்குத் தான் பாதுகாப்பு என்ற முறையில் நடந்து கொண்டு வருகிறது.

நானேக்கு இந்த மாதிரி பதுக்கல் எங்கெங்கு இருக்கிறது என்று காண்பிக் கிறோம். போலீசாருக்குத் தகவல் சொல்லுகிறோம். இவ்வளவு அரிசி பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது, இவ்வளவு சீனி பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது, இவ்வளவு சிமென்ட் பதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைச் சுட்டிக் காட்டுகிறோம். உடனடியாக, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் போனால மக்களை அழைத்துச் சென்று, பதுக்கல் சாமானை வெளியே கொண்டு வந்து 35 ரூபாய் விற்கக்கூடிய சிமென்ட் மூட்டையை 12½ ரூபாய் என்றும், கிலோ 4 ரூபாய் 5 ரூபாய் என்று விற்கக்கூடிய அரிசியை 2.15 ரூ. என்றும் கொடுப்போம். அரிசி 5 ரூபாய் என்று விற்றால் நாங்கள் அரிசியை எடுத்து நீங்கள் சொன்ன ரூ. 1.22 காசு வீலைக்கோ ஒரு ரூபாய்க்கோ கொடுப்போம். அப்படி வருகிறபோது அரசு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். இதுவரை கிடைத்த அனுபவம் அந்த மாதிரி உதவி கிடைத்ததாகத் தெரிய வில்லை.

இன்னொரு முக்கியமான விஷயம் இந்த விவாதத்தில் தீர்மானத்தைக் கொண்டு வந்தேன் என்ற முறையில், பங்கெடுத்துக் கொண்டவர்கள் எடுத்துச் சொன்ன விஷயங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை இருக்கிறது என்ற முறையில் எனக்கு நீங்கள் சற்று நேரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலில் மொடக்குரிச்சி தொகுதியைச் சேர்ந்த நண்பர் ஒரு விஷயத்தை எழுப்பினார்கள். அவர்கள் எழுப்பிய விஷயம் என்னவென்றால் இப்போது மன்றுடியார் தலைமையில் இருக்கக்கூடிய இயக்கத்திற்கு நாங்கள் ஆதரவு

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அவிக்கலாமா என்பதாகும். விவசாயிகள் என்ன என்ன சொன்னார்கள். இன்றைக்கு நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த அரசோ அல்லது வேறு அரசோ உடனடியாக சோஷலிசத்தைக் கொண்டு வருகிறோம் என்று சொல்வார்களானால் அது ஏமாற்றிக் கொண்டு வாக்கு கூடிய ஒன்றுதான். அந்த அஸ்திவாரமே வேறு. சோஷலிசம் என்று சொன்னால் அடிப்படையில்— Means of production must be in the hands of the community அதற்கு நீங்கள் தயாரா? அந்த அளவுக்கு இன்றைக்கு நிலைமை இருக்கிறதா? ஒரு பக்கத்தில் டி.எஸ்.டி., இந்தப் பக்கத்தில் ஏ.பி.டி., இன்னும் பெரிய முதலாளிகளை எல்லாம் வைத்துக் கொண்டு அவர்களுக்கும் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டு நாங்கள் சோஷலிசத்தைக் கடைப்பிடிக்கிறோம் என்று சொல்வது அல்லது அரசாங்கமே இன்று ஏற்று நடத்தக்கூடிய பஸ் தொழிலில் தொழிலாளர் சமுதாயத்தில் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய அந்த பஸ் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுப்பது என்பது— (negation of socialism) சோஷலிசத்தின் அடிப்படை இதுவல்ல. பெரிய சோஷலிசத்தைக் கொண்டு வருவது போல் எதற்காகக் காட்டிக் கொள்ள வேண்டும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சோஷலிசத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைத் தந்து கொண்டிருக்கிறார்கள். சமுதாயத்தின் நலன் அரசாங்கத்தின் முதலீட்டுப் பகுதியினால் பாதுகாக்கப்படுகிற தொழிலாளர்களும் அந்தத் தொழிலில் உரிமை பெற்று முதலீட்டின் மூலமாக, இன்றையதினம் சட்டத்தின் மூலமாகப் பங்குதாரர்களாகப் போடவும், அதைத்துச் சலுகைகளைப் பெறுகின்ற உரிமையாளர்களாக ஆக்க வேண்டுமென்பதுதான் உலக நாடுகளிடையே கூட சோஷலிசத்தை அமல்படுத்துகின்ற கண்ணோட்டமாகும். அத்தகைய உணர்ச்சி—இண்டஸ்ட்ரியல் டெமாக்ரசி என்ற உணர்வு வளர்ந்து வருகிறது. அண்மையில் கூட, நேற்றையதினம் இதே சட்டமன்றத்தில் பிரைவேட் எலக்ட்ரிசிடி அண்டர்டேக்கிங்ஸ் அக்விசிஷன் பில் பற்றிய புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே, அத்தகைய தனியார் மின்சார நிறுவனங்களை எல்லாம் எடுத்து ஒரே நிறுவனமாக, எப்படிப் போக்குவரத்துத் சமூகத்தை ஆக்கினோமோ, அதைப்போல் ஆக்க வேண்டுமென்றும் அப்படி ஆக்கினால் மட்டும் போதாது. நிர்வாகப் பொறுப்பில் தொழிலாளர்களுக்குப் பங்கும், அதே போல் இந்த நிறுவனமும் லாபம் ஈட்டுமானால் அந்த லாபத்தின் அடிப்படையிலே டிவிடெண்டும் தொழிலாளர்களுக்கும் கொடுக்கின்ற வகையில் தொழிலாளர்களுக்கு உரிமைகள், பங்குகள் வழங்க வேண்டுமென்று

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும் அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 ஆகஸ்ட் 10

நாங்கள் அல்ல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. கல்யாண சுந்தரம் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அது உங்களுடைய விளக்கமாக இருக்கலாம். அதிலே பெரிய விவாதத்திற்குப் போகவில்லை. எங்களுடைய நிலை சொம்ப விளக்கமாக, தெளிவாக இருக்கிறது. இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுப்பது என்பது—

The very act itself is a negation of socialism and that is our position.

அதைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் சில சமயங்களில் வரவேற்றலும் அதையே சரி என்று சொல்லக்கூடிய நிலையில் நாங்கள் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கார்ல் மார்க்ஸ் தத்துவத்தின்படி —

Means of production should be owned by the society and not necessarily by the State. Even in the Communist Society, State is not envisaged. If the land is owned by the tillers and if the industry is owned by the workers and the society can organise itself in such a way that the products are evenly distributed, that is the real spirit and form of Marxism.

திரு. கே. டி. கே தங்கமணி: மார்க்சியத்தைப் பற்றி அமைச்சர் அவர்களிடத்தில் வகுப்பு கேட்க வேண்டிய நிலையில் இல்லை, என்று சொல்லிக் கொள்கிறேன். நாங்கள் அதிலேயே மூழ்கியவர்கள். உங்களிடம் வந்து பாடம் கேட்பதற்கு ஒன்றும் இல்லை. நான் சொல்லுவது நவருக இருக்கலாம். அது என்னுடைய அபிப்பிராயம்.

இப்போது மன்றுடியாரைப் பற்றிச் சொன்னீர்கள். மன்றுடியார் பள்ளியில் இறங்குவது என்று அன்று முடிவு செய்தோம்—1970-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம். அதற்கு கே. டி. ராஜா தலைமை தாங்கினார். அங்கே போகக் கூடாது என்று கைது செய்தது யார்? இதே திராவிட முன்னேற்றக் கழக அரசுதானே. அதற்குப் பின்னால், விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டும், பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காக யார் முன்வந்தாலும் அவர்களை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தேச விடுதலைப் பணிக்காக டாட்டாவும் வந்தார், பிர்லாவும்

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

வததார், அவர்களும் சேர்ந்துதான் விடுதலை இயக்கத்தில் இருந்தார்கள். அந்த மூலையில் விவசாயிகள் நன்மைக்காகப் பாடுபட, போராட யார் முன் வந்தாலும் அவர்களை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். விவசாயிகள் என்று சொன்னால் யார்? There is the landlord நிலப் பிரபுக்கள் என்றால் பெரிய நிலப் பிரபுக்கள் இருக்கிறார்கள், சிறிய நிலப் பிரபுக்களை இருக்கிறார்கள். மிடில் பெசன்ட்ஸ் இருக்கிறார்கள், ஸ்மால் பெசன்ட்ஸ் இருக்கிறார்கள். அக்ரிகல்சுரல் லேபரர்ஸ் இருக்கிறார்கள், ரிச் பெசன்ட்ஸ் இருக்கிறார்கள். இப்படிப் பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். நிலப் பிரபு என்று சொல்லக் கூடிய ஆள்தான் நேரடியாகப் போகாமல் ஆட்களை வைத்து விவசாயம் செய்கிறவன். பெரும் நிலப் பிரபுக்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாமல் ஆக்க வேண்டுமென்பது முக்கியந்தான். படிப்படியாகத் தான் அந்த சோஷலிசத்திற்குப் போக வேண்டுமே தவிர ஒரே சமயத்தில் செய்துவிட முடியாது. ஐந்து ஏக்கர் வைத்திருப்பவனையும் நிலப்பிரபு என்று ஒதுக்கி விட்டால் எப்படி? The stage of revolution has not reached that position என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் அடிப்படை விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

அதேமாதிரி ஓரத்தநாடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அடிப்படையாக கம்யூனிஸ்ட் தத்துவங்கள் பற்றி சில விஷயங்களை எழுப்பினார்கள். எங்கள் கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். எங்கள் கட்சிக்குக் கொள்கை இல்லை என்று சொன்னார்கள். எனக்குத் தெரியும் அவர் பேச ஆரம்பித்தபோதே 'Communist party is a reactionary party' என்று முடிக்கப் போகிறார் என்று நினைத்தேன். அப்படியே முடித்தார்கள். ஆனால் இது மக்கள் மத்தியில் எடுக்காது. எந்தக் கட்சியாக இருந்தாலும் சி.பி.ஐ அல்லது சி.பி.எம்.-உடன் இருந்தால்தான் அவர்களுக்கு லெப்ட் இமேஜ் கிடைக்க முடியும். தொழிலாளர்களுக்கு அல்லது விவசாயிகளுக்கு நாங்கள் விரோதிகள் என்ற தோற்றத்தை மக்கள் மத்தியில் எழுப்புவது கஷ்டம். கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள், சாதாரண ஊழியர்கள் கூட தொழிலாளர்கள், விவசாயிகள் மத்தியில் வேலை செய்து அவர்களுக்காகக் கஷ்டப்பட்டவர்களே தவிர அப்படியல்லாமல் வேறு விதமான முறையில் பணம் சம்பாதித்தவர்கள் அல்ல. எங்கள் கட்சியைச் சேர்ந்த பெரிய தலைவர்கள் அம்மாதிரி ஊழல் செய்தது, ஆட்சியில் இருப்பவர்களைக் கூடச் சொல்வேன், ஊழல் செய்த பணம் சேர்த்தார்கள் என்றால் நாங்கள் லேசில் அதை அனுமதிக்கமாட்டோம். கடுமையான நடவடிக்கைகள் எடுப்போம். ஊழல் செய்து பணம் சேர்த்தவர்கள்

1973 ஆகஸ்ட் 10] *[திரு. கே. டி. கே. தங்கமணி]*

கம்யூனிஸ்ட் பார்டியில் இருக்க முடியாது. எங்கள் கட்சி கடுமையாகக் கண் காணிக்கும். அப்படி ஊழல் செய்து பணம் சேர்த்தவர்களை பின்னர் அவரை பதவியில் இருந்தே எடுத்து விடுவோம். கடுமையான நடவடிக்கைகள் எடுப் போம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிகுப்பம்):* வலது கம்யூனிஸ்ட்ஸ் இடது கம்யூனிஸ்ட்களை ரிஆக்ஷனரி பார்டி என்று சொல்கிறார்கள். இடது கம்யூனிஸ்ட்ஸ் வலது கம்யூனிஸ்ட்களை ரிஆக்ஷனரி பார்டி என்று சொல்கிறார் கள். இருவரும் ஒருவரை ஒருவர் உண்மையாகப் புரிந்து வைத்திருக்கிறீர்கள். எனவே இருவரும் ரிஆக்ஷனரிஸ் என்று நம்புகிறோம். அதில் தப்பில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: உறுப்பினர் அவர்கள் நல்ல முறையில் சட்டம் தெரிந்தவர். விதிகள் எல்லாம் தெரிந்தவர். வலது கம்யூனிஸ்ட் இடது கம்யூனிஸ்ட் என்று இருப்பதாக எனக்குத் தெரியாது. கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆப் இந்தியா, கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் பார்ட்டி என்றிருக்கிறது. இடது, வலது என்று சொல்வதை யாரும் விரும்பமாட்டார்கள். ஒரத்தநாடு உறுப்பினர் அவர்கள் dogmatic revisionist என்று சொல்லியிருக் கிறார்கள், யாரும் ரிஆக்ஷனரிஸ் என்று சொல்லவில்லை. ரிஆக்ஷனரி பார்டீஸ் என்று சொல்லாது நாங்கள் சிலவற்றை அப்படி வைத்திருக்கிறோம். இந்தியாவிலே சில பார்டிகளை ரி ஆக்ஷனரீஸ் என்று சொல்கிறோம். நீங்கள் அவர்களோடு உறவு கொள்கிறீர்கள். அவற்றை விலக்க வேண்டுமென்று தான் பெரிய முன்னணி அமைத்து, தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் அதில் சேர்ந்தது என்று தான் நாங்கள் கருதுகிறோம்.

வேழவேந்தன் அவர்கள் சொன்னார்கள், "1971-ல் உங்களுக்கு இந்தப் புத்தி வரவில்லையே" என்று. அவர்கள் சொல்ல வந்தது 1971-ல் எங்களோடு சேர்ந் திருந்ததால்தான் நீங்கள் சட்டசபைக்கு வந்தீர்கள். 1967ல் சேரவில்லை ஆகவே வரவில்லையென்று சொல்ல வந்தார்கள்.

I am not going to deny him that pleasure. Let him have that pleasure அது அவ்வளவு லிம்பிள் அல்ல. கட்சியோடு கட்சி இணைவது என்பது ஒன்றிரண்டு சீட்களுக்கு மட்டும் ஒரு கட்சி இருக்கிறது என்றால் ஒவ்வொரு கட்சியின் சரித்திரத்தையும் பார்த்தால் அவர்களுக்கு சங்கடமாகப் போய்விடும். 1957-ல் இன்று ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகம் டெப்பாஸிட்களை பல இடங்களில் இழந்தது இந்தியாவிலேயே மாக்ஸிமம் நம்பர் ஆப் டெப்பாஸிட்டை இழந்தது

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கழகம்தான். அப்போது சிறிய கட்சியாக இருந்தது. 1967-ல் ஆட்சிக்கு வருவோம் என்று எதிர்பார்த்தார்களா? ஆட்சிக்கு வந்தார்கள். 1971-ல் இந்த அளவிற்கு ஸீட்ஸ் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்களா, அப்படி எதிர்பார்க்கவில்லே. அடுத்தாற்போல் என்ன நடக்கும் என்று யாராலும் கணிக்க முடியாது. ஆகவே சிறிய கட்சி பெரிய கட்சியாகலாம், பெரிய கட்சி சிறிய கட்சியாகலாம். இவையெல்லாம் சாதாரணமாக ஒவ்வொரு நாட்டிலும் ஏற்படக்கூடியதே. எங்களால்தான் ஜெயித்தீர்கள் என்ற முறையில் சொன்னர்கள், அபக்குவமாகப் பேசுகிறார்கள். இதை ஒரு பெரிய சாலஞ்சாக வைத்துப் பதில் அளிக்கவேண்டியதில்லே. அந்த உதாரணங்களேக் கொடுத்திருக்கவேண்டியதில்லே. முதல் அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது நல்ல சரியான உதாரணங்களேச் சொல்லவேண்டும். அவர்கள் சொல்கிறபோது கண்ணகி என்று சொன்னர்கள், பாஞ்சாலி என்றும் சொன்னர்கள். அந்த உதாரணம் கூட எனக்கு மனதில் ஒருமாதிரி சுருக் என்று பட்டது. நன்னிலம் தொகுதி உறுப்பினர் அவர்கள் நான் சொம்ப மதிக்கக் கூடியவர், மட்டி அறியுமோ மகிழம்பூ வாசனே என்றார்கள். இப்படியெல்லாம் இந்த சபையில் பேசப்பட்டது. அண்ணு அவர்கள் சொன்னர்களாம், எல்லோரும் சொன்னர்கள் மாற்றுன் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று சொல்வார்கள் என்று. நாங்கள் எல்லாம் மட்டிகள்தான். எங்களுக் கெல்லாம் மகிழம்பூ வாசனே தெரியாதுதான்.

திரு. அ. தேவந்திரன்: தன்னிலே விளக்கம். கே. டி. கே. தங்கமணி அவர்களே நான் அந்த அளவிற்குக் கருதக்கூடியவன் அல்ல. அந்த அளவிற்கு உங்களேப் பேசவில்லே என்பதைத் தன்னிலே விளக்கமாகத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லா எதிர்க்கட்சிகளேயும் சொன்னது மாதிரி இருந்தது. அறியுமோ அறியுமோ ஆவாரம்பூ வாசனே, மட்டி அறியுமோ மகிழம்பூ வாசனே என்றெல்லாம் இப்படிப்பட்ட உதாரணங்களே சட்டசபை யிலா பேசுவது ஆளும் கட்சியில் இருப்பதால்?

திரு. கே. டி. கே. தங்கமணி: ஓரத்தநாடு உறுப்பினர் அவர்கள் சொன் னர்கள் நீங்கள் மாறிக் கொண்டு போகிறீர்கள் என்று. அவர்கள் சொம்பவும் சிரமப்பட்டு தயாரித்திருக்கிறார்கள் என்பதால் அவர்கள் சொன்ன பல விஷயங் களுக்கு மதிப்புக் கொடுத்து பதில் சொல்ல நினேக்கிறேன்.

திரு. வி. எஸ். நியாகராஜ முதலியாரைப் பற்றிச் சொன்னர்கள். அவர்கள் தஞ்சை மாவட்டத்திலேயே வெறுக்கப்படக்கூடிய ஒரு நிலச்சுவான்தார். அவர் பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை ஒதுக்கிக்கொண்டு தஞ்சைத் தரணியில் யாரும்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 10

கரும்பு போட்டதில்லே, அங்கு கரும்பு போட்டார்கள் என்று சொன்னார்கள். இல்லையா என்ற விஷயத்திற்குள் போகவில்லே. இதே ஸ்டேட் கவர்ன்மென்டின் சலுகை கொடுத்திருக்கிறது என்பது எங்கள் குற்றச்சாட்டு. எங்கேயாவது நீங்கள் கேட்டதுண்டா. அரசாங்கத்தின் சீப் செகரட்டியாக இருந்தவர் சுப்ரீம் கோர்ட்டில் குற்றச்சாட்டு சாட்டியுள்ளார். அந்தக் குற்றச்சாட்டில் இப்பேர்பட்ட விஷயங்கள் வருகின்றன. அந்தக் குற்றச்சாட்டு சரியானதா இல்லையா என்ற விஷயத்திற்குள் போகவில்லே. இதே ஸ்டேட் கவர்ன்மென்டின் பேரில்தான் முன்னுள் சீப் செகரட்டரியாக இருந்தவர் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு தாவா தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த வழுல் குற்றச்சாட்டில் இது ஒன்று. தியாகராஜ முதலியாருக்கு இந்த அரசு சலுகை செய்திருக்கிறது என்பதாகும். அதை சுப்ரீம் கோர்ட் சரியா இல்லையா என்று சொல்லட்டும். தியாகராஜ முதலியாருக்கு சலுகை செய்யக்கூடிய அளவிற்கு இந்த சர்க்கார் வந்திருக்கிறது என்று நான் சொல்கிறேன்.

அதேமாதிரி பஸ் முதலாளியாக இருக்கக்கூடிய மகாலிங்கம் போன்றவர்களுக்கு சலுகைகள் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறோம். ஆக, இன்றிப்பது நான்-கம்யூனிஸ்ட், நான்-காங்கிரஸ் ப்ரண்ட் என்பதுதான் கிருபாளனி ப்ரண்ட். கிருபாளனி ப்ரண்டில் யாரும் சேரலாம். கிருபாளனி ப்ரண்ட்தான் இன்று சரியான ப்ரண்ட் என்ற முறையில் இன்று திராவிட முன்னேற்றக் கழகம் செல்கிறது. அகில இந்திய ரீதியில் பிற்போக்கு ரீதியில் இருக்கக் கூடிய கட்சிகளே இழுத்துப் போகும் போக்கின் பிரதிபலிப்பு தமிழ் நாட்டில் ஆழமாக இருந்துகொண்டிருக்கிறது.

அடுத்தாற்போல் சில விஷயங்கள் பற்றிச் சொன்னேன். அவற்றிற்கு நேரடிப் பதில் இல்லே. அமைச்சர் மாதவன் அவர்கள் சில விஷயங்களைச் சொன்னார்கள். மின்சார வெட்டு இருந்தது. மின்சார வெட்டு இருந்த காலத்தில் மின்சாரத்தைத் தப்பாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று கட்டுரை வந்திருக்கிறது. இதையே ஒரு குற்றச்சாட்டாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அதற்கு ஒரு முறையான பதில் வரும் என்று எதிர்பார்த்தேன். பல விவரங்களைக் கொடுத்தார்கள். அந்த விவரங்களைக் காட்டுகிறபோது எங்களுக்கு மின் உற்பத்தி இவ்வளவு தான். இவ்வளவு மின் உற்பத்தியைச் செய்து விட்டு எப்படி, எந்த முறையில் விநியோகம் செய்தீர்கள். கொஞ்சம் பேருக்கு 25 சதவீதம், கொஞ்சம் பேருக்கு 55 சதவீதம் என்று சொன்னால் போதாது. நாங்கள் தெளிவான குற்றச்சாட்டைச் சொல்கிறோம். இந்த

1973 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி.. கே. தங்கமணி]

அரசு 75 சதவீதம் என்று வெட்டு வைத்தது சரியல்ல என்று சொல்கிறேன். அதற்கு அஸ்திவாரமாக 'பைனான்சியல் டைம்ஸ்' கட்டுரை இருக்கலாம். எங்களுக்குக் கிடைத்த விஷயத்தை வைத்து சரியல்ல என்று சொல்கிறேன். அப்படியானால் உண்மை நிலை என்ன என்று சொல்வதற்கு நீங்கள் தயாராக இல்லை, என்னுடைய குற்றச்சாட்டு அப்படியே இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே மாதிரி ஊழலைப் பற்றிச் சொல்கிறேன், லஞ்சத்தைப் பற்றிச் சொல்கிறேன். சில அதிகாரிகள் வேறு யாருக்கோ கொடுக்கவேண்டிய நிலைமையைப் பட்டது என்று சொன்னால், தீர்மானம் போடுகிறபோது சொன்னால், சில மொத்த வியாபாரிகள், இந்த சர்க்காரின் திட்டங்களுக்கு அப்பாற்பட்டு இருக்கும் திட்டங்கள், கண்ணெளி வழங்கும் திட்டம், மற்ற திட்டங்கள் இருக்கின்றனவே அந்த திட்டங்களுக்காக பணம் வசூலிக்கிறபோது தாராளமாகக் கொடுக்கிறார்கள். அப்படி தாராளமாகக் கொடுக்கிறபோது அவரிடத்தில் போய் 'லெவி அரிசி' கண்டிப்பாகக் கொடுக்கவேண்டுமென்றால் எப்படிக்கொடுப்பார்கள்? அவர்களால் எப்படி விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும்? ஆதலால் தான் சொன்னேன். இப்படி சில வியாபாரிகளுக்கு சலுகை என்று வருகிறபோது, அந்த ஊழலால் விலைவாசி ஏறுகிறது. விலைவாசி ஏற்கனவே உயர்வது இருக்கட்டும். இந்த ஊழலால் அளவுக்கு மேல் உயர்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். அதே மாதிரி சீனி விநியோகத்திலும் பல தடவை இப்படி நடந்து இருக்கிறது. சட்ட மன்றத்தில் எழுத்து மூலமாக பதில் சொல்லப் பட்டிருக்கிறது. குற்றச்சாட்டு எண் நெ. 31. அவர்களுடைய பதில் ஆங்கிலத்தில் பக்கம் 203ல் இருக்கிறது.

The factories had pointed out that since free sugar was also being sold for abou the same price as levy sugar and since levy sugar was not being lifted by nominated wholesalers appointed to distribute

இது உண்மைதானே, இப்படி இருக்க முடியுமா. எத்தக் காலத்தில் லெவி சுகர் 2 ரூபாய் விலை விற்றது? அதனால் லெவி சுகரை விநியோகம் செய்யமுடியாமல் போய் விட்டது. காரணம் என்ன தாருங்கள்? ஓபன் மார்க்கெட்டில் இருந்த விலைக்கு கிட்டத்தட்ட அதே விலைக்கு லெவி சுகர் விலை இருந்ததால் விநியோகம் செய்ய முடியவில்லையாம். அதே நேரத்தில் மாதம் ஒன்றுக்கு 10,000 டன் கிடைத்தது. ஆனால் நான் குறிப்பிடுகிற காலத்தில் அதை எப்படி விநியோகம் செய்தீர்கள்? அந்த சர்க்கரை கூட்டுறவு மூலம் விநியோகிக்கப்பட்டதா? இதை சபையிலேயே கேட்டு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 10

இருக்கிறேன். ஏன் இது கூட்டுறவு மூலமாக வினியோகம் செய்யப்படவில்லே. கூட்டுறவு மூலம் செய்யப்படவில்லே என்று ஏற்கன்வே பதில் சொல்லிறபோது சொல்லப்பட்டிருக்கிறது, வினியோகத்தில் கூட இந்த அரசாங்கம் மத்திய அரசரங்கம் ஏதாவது கொடுத்தால் அதை விவியோகம் செய்வதில் இவ்வளவு பெரிய ஊழல்கள், இவ்வளவு பெரிய தவறுகள், அந்தத் தவறின் காரணமாக விலேவாசி மேலும் மேலும் உயர்ந்து கொண்டு போயிருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்னெரு விஷயத்தையும் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கே வந்தபிறகு எனக்குக் கூட கொஞ்சம் கவிதை வர ஆரம்பித்து இருக்கிறது. விவசாயிகளிடத்தில் பழகியதால் ஏற்பட்டு இருக்கிறது.

மழையின்றி மானுவாரி பயிர் போனது

கரண்ட் இன்றி இறவை பயிர் போனது

இப்போது மழையும் வந்து, கரண்ட் வந்தால்

பம்ப்செட் இன்றி பயிர் போனது என்று சொல்லிருர்கள். விவசாயிகள் சொல்லும் விஷயம் என்னவென்ருல், மழையும் வந்தாகிவிட்டது, மின்சாரமும் வந்தாகிவிட்டது, அதற்கான பம்ப் செட்டுகளேயெல்லாம் காணேம். அந்தப் பம்ப் செட்டுகளேயெல்லாம் எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: ஒரு கவிதை சொன்னர்கள். (குறுக்கீடு) அதிலே ஒரு விளக்கம். (குறுக்கீடு) என்ன அரங்கேற்றமா நடத்தப்போகிறேம் ? " மழையின்றி மானுவாரி பயிர் போனது, கரண்ட் இன்றி இறவை பயிர் போனது " என்று சொன்னர்கள் சரி. இப்போது மழை வந்ததற்குப் பிறகு பம்ப் செட் எதற்காக ? (சிரிப்பு)

திரு. கே. டி. கே. தங்கமணி: இருக்கட்டும், சரி சைட். உண்மையிலேயே நான் கொடுத்த குற்றச்சாட்டுக்கு வேறு யாரும் இவ்வளவு சாமர்த்தியமாக பதிலேத் திருப்பிச் சொல்ல முடியாது. இதிலும் கூட ஒரு ஊனம் கண்டு பிடித்தது ஒரு சாமர்த்தியம் என்று ஏற்றுக்கொள்கிறேன்.

கடைசியாக நான் சொல்ல விரும்புவது மத்திய சர்க்கார் நமக்கு ஒதுக்கிய கோதுமையைப்பற்றி. அதற்கு ஏதாவது பதில் வரும் என்று எதிர்பார்த்தேன். அதற்குப் பதில் வரக் காணேம். நான் அது சம்பந்தமாக தெரிந்தவர்களிடத்தில் விசாரித்து வந்தேன். அங்கே என்ன நிலேமை? மில்லர்ஸ்

இருக்கிறார்கள். சென்னையில் மட்டும் 10 மில்லர்கள் இருக்கிறார்கள். மொத்தமாக 23 பேர் இருக்கிறார்கள். ஏற்கனவே அந்த மைதா, சூஜி போன்றவற்றைக் கொடுக்காமல் ஓபன் மார்க்கெட்டில் விற்று, அதற்கு சிலர் ஏஜென்ட்டாக இருந்தவர்கள் லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதித்து இருக்கிறார்கள். சர்க்கார் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக எடுத்துக்கொண்ட பிறகு இந்த மில்லர்கள் என்ன செய்கிறார்களோ தெரியவில்லை. இதன் காரணமாகத்தான் கன்ட்ரோல் விலையில் கிடைக்கவேண்டிய பொருள்கள் கூட அந்த விலைக்குக் கிடைக்காமல் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இங்கே விலை வாசி உயர்வுக்குப் பல காரணங்களைச் சொன்னார்கள். அந்தக் காரணங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் தான். இங்கே மாநில அரசு கொடுக்கும் புள்ளி விவரங்களுக்கும், ஆல் இந்தியா காஸ்ட் ஆப் லிவிங் இன்டக்ஸ் கொடுப்பதற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது.

MR. SPEAKER : Rule 75 (3) says—

A Member when replying shall confine himself to matters raised during the debate and shall not introduce new debatable matter.

THIRU K. T. K. THANGAMANI : I am not introducing any new subject at all. This is a point which I raised during the fifth minute of my speech. If you go through the proceedings, you will find it. I waited patiently for a reply. Again I may say that my accusation stands.

இங்கே ஒருவர் சொம்ப வருத்தப்பட்டுக்கொண்டார், அடிக்கடி நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறது என்று. அடிக்கடி ஒன்றும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரவில்லை. சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தது. 9, 10, 11, 12 தேதிகளில் வந்தது. அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு பின்னணி என்ன? ஏற்கனவே எப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் முதுகளத்தூர் சம்பவம் பற்றி, விலைவாசி உயர்வைப் பற்றி இங்கே பக்தவத்சலம் ஆட்சியிருந்தபோது வந்ததோ, அதே மாதிரி விவசாயப் போராட்டத்தின் போது 17 விவசாயிகள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள், 2 பேர் சிறையில் செத்தார்கள், ஒருவர் லத்தி சார்ஜில் அடித்துக்கொல்லப்பட்டார், கிட்டத்தட்ட 25,000 பேர் சிறை சென்றார்கள் என்ற பயங்கரமான சம்பவம் நடந்ததற்குப் பின்னல் நடக்கக்கூடிய சட்டமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்தது. அதே மாதிரி ஆகஸ்ட் மாதம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பிறகு நிராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து பிரிந்து

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1973 ஆகஸ்ட் 10

அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்ததற்குப் பின்னுல் பல சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. பல துப்பாக்கிப் பிரயோகங்கள், பல சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன. அந்தச் சம்பவங்களின்போது என்ன வாதம் சொல்லப்பட்டது என்ருல், இன்று புதிதாக அமைந்து இருக்கும் கட்சி தேர்தலில் நின்று ஒரு கட்சி என்று நிரூபிக்க முடியுமா என்று சொன்னுர்கள். அந்த மாதிரியான ஒரு தேர்தல் முக்கியமான தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலின் முடிவு என்ன? தமிழ் நாட்டு மக்கள் மட்டுமல்ல, இந்தியா பூராவுமே அந்த முடிவைப் பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட தீர்ப்பு வந்ததற்குப் பிறகு அந்தத் தீர்ப்பின் பிரதிபலிப்பாக நாங்கள் சொல்கிறோம் நம்பிக்கையில்லே இந்த அரசின்மீது என்று. நீங்கள் அந்தத் தீர்ப்பால் ஒன்றும் எங்களுக்கு பாதகம் இல்லே. நாங்கள் எப்போதும் போல் தான் இருக்கிறோம். மே மாதம் 19ம் தேதி எந்த நிலேயில் இருந்தோமோ அந்த நிலேயில் இருக்கிறோம் என்று சொன்னுல் நீங்கள் இருந்து கொண்டேயிருங்கள். சமுதாயம் என்பது நிலேயானது அல்ல. மாறுதல் வந்து கொண்டேயிருக்கும். அந்த மாறுதல் கிரமமான மாறுதல். ஆகவே சொல்கிறோம் அந்த மாறுதலேப் புரிந்து கொண்டு செயலாற்றுங்கள் என்று. வேறு ஒன்றும் சொல்லவில்லே. ஏற்கனவே 1971-ல் மெஜாரிட்டி இருந்தபோதே சட்டமன்றத்தைக் கலேக்கவில்லேயா? மெஜாரிட்டியிருந்தாலும் சட்டமன்றத்தைக் கலேக்கும் அதிகாரம் முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அந்த முறையில் சட்டசபையைக் கலேத்து விட்டு ஒரு 6 மாத காலத்திற்குள் மறுதேர்தல் கொண்டு வாருங்கள். அந்தத் தேர்தல் வருகிறபோது தெளிவான முறையில் எந்தக் கட்சி எப்படிச் சேருகிறது என்பதைப் பார்ப்போம். தமிழக மக்கள் நல்ல ஒரு தீர்ப்பைக் கொடுக்கட்டும். சாதனேயைச் செய்வதாகச் சொல்கிறுர்கள், எதிர்க்கட்சிகள் தமிழ்நாட்டில் இல்லே என்கிறுர்கள், அந்த நிலேமையைப் பார்க்கவேண்டுமென்ருல் . . .

The easiest method is to resign or in the alternative dissolve this Assembly and seek another new election.

ஆகவே நாங்கள் இந்த இரண்டு காரணங்களே வைத்துக்கொண்டு எங்களுடைய நிர்மானம் சரியான தீர்மானம் என்பதை நான் மீண்டும் வலியுறுத்திக் கொண்டு, நாங்கள் கிளப்பிய முக்கியமான விஷயங்களுக்கு எல்லாம் இந்த அரசு சரியான பதில் தரவில்லே என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தங்களுடைய அனுமதியின் பேரில் இந்தக் கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதிலே எங்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் பூரண ஒத்துழைப்புத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம் என்ற அறிவிப்பினே இப்பொழுது கூறிக்கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 10]

THIRU B. VENKATASWAMY: On behalf of the Swathantra Party, we shall also co-operate with the Government in unearthing black-money.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் அதிகமாக பேச விரும்பவில்லை.

THIRU K. T. K. THANGAMANI: Is there a reply to reply?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் தீர்மானம் கொண்டு வந்திருப்பவர்களின் எல்லா பிரச்னைகளுக்கும் பதில் சொல்லவில்லை என்கின்ற குறைபாடு தெரிவிக்கப்பட்டது. அவ்வப்பொழுது அவரவர்கள் சில பிரச்னைகளை அணுகும்பொழுது நானும் மற்ற அமைச்சர்களும் அதற்கான பதில்களைச் சொல்லியிருக்கிறோம். வேறு பல விஷயங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பற்றி ஆராய்ந்து, பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். இதைத் தவிர நான் ஒரு நீண்ட உரை இப்பொழுது ஆற்றுவதற்கு விரும்பவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டாவது உரை உண்டா என்று கேட்டார்கள்.

Rule 75 says—

(1) A member who has moved a substantive motion may speak again by way of reply, and the mover of an adjournment motion under rule 42 shall have a right of reply; if the Private motion is moved by a member, the Minister to whose department the matter relates shall after the mover has replied, have the right of speaking whether he has previously spoken in the debate or not.

என்று விதி தெளிவாக இருக்கிறது.

இப்பொழுது திரு. வெங்கடசாமி அவர்களின் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி:

"That this House expresses its want of confidence in the Council of Ministers headed by Hon. Dr. M. Karunanidhi."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. தங்கமணி அவர்களின் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"That this House disapproves the policy of the Ministry which led to high prices of essential articles of life and to food crisis invoking widespread agitation."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.52 மணி அளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(7) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*—'Nil'.

B. *Reports, Notifications and Other Papers.*

45. Report of the Committee on Public Accounts on the Excesses Over Voted Grants and Charged Appropriations for the year 1969–70.

46. Final Report of the Committee on Rules of the Tamil Nadu Legislative Assembly constituted in 1973.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
19 NOV 1973
MADRAS